வரு.76 இல. 41 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
දිනකරන් වාරමඤ්ජරී

2024 ஒக்டோபர் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
October 20 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-






03
கையறுநிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்



05
கடந்த காலங்களில் அரசியல்வாதிகளின் குடும்பங்களும் உறவினர்களுமே முன்னேறினர்

12
ஹமாஸ் தலைவர்களின் மரணம் இஸ்ரேல்–ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வருமா?






## தோட்டப்புற பாடசாலைகள் தரம் உயர்வு

# இந்திய அரசின் நிதி உதவி இரட்டிப்பு

## இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க 600 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பு



மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலுள்ள தோட்டப்புற பாடசாலைகளை தரம் உயர்த்துவதற்கான இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி இரட்டிப்பாக்கப் படவுள்ளது.

இதன்படி 9 தோட்டப்புற பாடசாலைகளை தரம் உயர்த்துவதற்கான இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியை இரட்டிப்பாக்குவது தொடர்பான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் இராஜதந்திர கடிதங்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலக்கா ஜயசுந்தர ஆகியோர் கையெழுத்திட்டு பரிமாறிக்கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தின் தோட்டப் பகுதிகளில் 6 பாடசாலைகளும் 06

## 25 கோடி ரூபா பெறுமதியான

# ஐஸ் போதைப்பொருளுடன் மலேசியாவிலிருந்து வந்த வர்த்தகர் ஒருவர் கைது



சுமார் 25 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இலங்கை வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று முன்தினம் (18) இரவு கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு, தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 06




மலையகத்தில் மரக்கறி வகைகளின் விலைகள் சற்று குறைவடைந்துள்ள போதும், புரோக்கோலியின் விலை 2,000 ரூபா முதல் 3,000 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. அக்கரப்பத்தனையின் ஹோல்புரூக் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள புரோக்கோலி தோட்டத்தை படத்தில் காணலாம்.
*(பட உதவி ஜே. மதுஷாகர்)*

## எங்கள் கருத்து

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

### பொதுப்பரீட்சைகளுக்குள் ஊடுருவும் விஷமிகள்?

இவ்வருடம் நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையின் சில வினாக்கள் வெளியே கசிந்துள்ளதாகக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த விவகாரமானது பெற்றோர் மத்தியில் மிகுந்த அதிருப்தியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

தரம்-5 புலமைப்பரிசில், க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை போன்ற தேசியப் பரீட்சைகளின் வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியே கசியும் விவகாரம் எமது நாட்டுக்குப் புதியதல்ல. கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்றிருக்கின்றன. எனினும் இவ்வாறான குற்றச்செயல் இன்னுமே நின்றபாடாக இல்லை.

வினாக்கள் முன்கூட்டியே வெளியே கசிந்து விடுகின்ற குற்றத்தை முற்றாகத் தடுத்து நிறுத்துவதற்கு கடந்தகால அரசாங்கங்கள் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பின், இதுபோன்ற சம்பவங்கள் இன்றும் தொடர்வதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. எனினும் வினாத்தாள் கசிவு தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

இது போன்ற குற்றத்துக்குப் பொறுப்பான சூத்திரதாரிகள் கல்வித்துறையுடன் சம்பந்தப்பட்ட சில விஷமிகளே தவிர, வெளிநபர்கள் இல்லையென்பதை 06



# யாழ்தேவி ரயில் சேவை நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை நாளை திங்கட்கிழமை 21ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது. நாளை மாலை கொழும்பு, கோட்டையிலிருந்து 6.30 மணிக்கு யாழ்தேவி ரயிலை இயக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

மஹவ முதல் அநுராதபுரம் வரையான ரயில் பாதை திருத்தப்பணி நிறைவடைந்ததை அடுத்து நாளை முதல் வடக்கு பாதையில் ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளதாக தினகரன் வாரமஞ்சரியிடம் ரயில்வே திணைக்களத்தின் 06



# பெருந்தோட்டத்துறையினர் தினக்கூலிகளாக இருக்கும் நிலை மாற்றப்பட வேண்டும்

## NPP வேட்பாளர் அம்பிகா

**வாசுகி சிவகுமார்**

பெருந்தோட்டத்துறை மக்கள் தினக்கூலிகளாக இருக்கும் நிலை மாற வேண்டும். ஏனைய மக்களை போன்று மாதச் சம்பளம் பெறுவோராக மாற்ற வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் அம்பிகா சாமுவேல் தெரிவித்தார். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே கூறியுள்ளார். அவர் மேலும் கருத்துத் 06

## ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்

# அரசியல் ஆதாயம் தேட வேண்டாம்

## முன்னாள் எம்.பி. உதய கம்மன்பிலவிடம் அருட்தந்தை சிறில் காமினி கோரிக்கை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையை தொடர குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இடமளிக்க வேண்டுமெனவும் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கில் அதில் தலையிட வேண்டாமெனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவிடம் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பிரதம ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி கோரிக்கை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையில் பல இரகசிய அறிக்கைகள் தன்னிடம் உள்ளதாகவும் புதிய அரசாங்கம் அந்த அறிக்கைகளை பகிரங்கப்படுத்தாவிட்டால் ஏழு நாட்களுக்குள் அந்த அறிக்கைகளை வெளியிடுவதாகவும் முன்னாள் எம்.பி. உதய கம்மன்பில அண்மையில் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணைக் குழுவை நியமிக்குமாறு முன்னாள் ஜனாதிபதியிடம் கத்தோலிக்க திருச்சபை ஒரு போதும் கோரவில்லையெனவும், முன்னாள் எம்.பி. 06

University of Staffordshire
A·P·I·I·T
Inspire love for learning
AFTER A/Ls
EARN A BRITISH DEGREE IN
BUSINESS / COMPUTING / LAW
Colombo - 0765 788 788
No. 388, Union Place, Colombo 2, Sri Lanka
Kandy - 0773 577 877
No. 542, Peradeniya Road, Kandy, Sri Lanka
www.apiit.lk



# 20 க்கு ஆதரவாக வாக்களித்தவர்களை இணைத்துக் கொள்ள முடியாது

## மு.காவுடன் இணையாமைக்கு அதுவே காரணமென்கிறார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி



**பாராளுமன்றத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அதிகப்படியான ஆசனங்களை பெற்று பிரதமராக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனே தாம் அரசியலில் களமிறங்கியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் சட்டத்தரணியுமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.**

**நாட்டில் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில், தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே எம்.எஸ்.எஸ்.அமீர் அலி இதனை தெரிவித்தார்.**

**இந்த நேர்காணலின் முழு வடிவம் பின்வருமாறு,**

> தமிழ் கட்சிகள் எவ்வாறு பிரிந்து நின்று செயற்படுகின்றனவோ, அவ்வாறுதான் முஸ்லிம்களுக்குள்ளும் இந்த பிரச்சினை ஆழமாக வேரூன்றி காணப்படுகின்றது

**கேள்வி: நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்களுடைய கட்சி ஆதரித்த வேட்பாளர் வெற்றிபெறவில்லை. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தற்போதைய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படும் திட்டங்கள் உள்ளனவா?**

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையிலேயே அவருக்கு ஆதரவு வழங்கினோம். அவர், கடந்த காலங்களில் பெற்றுகொண்ட வாக்குகளின் அடிப்படையில், இந் நாட்டுக்கு ஜனாதிபதி என்கின்ற அந்தஸ்தை சஜித் பிரேமதாசவால் பெற்றுக்கொள்ள முடியும் என்கின்ற ஒரு வேலைத் திட்டத்தின் கீழ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அவரை ஆதரித்தது. துரதிர்ஷ்டவசமாக மக்களின் தீர்ப்பால் அவர் தெரிவு செய்யப்படவில்லை.

எக் கட்சியாக இருந்தாலும் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாது என்ற எதிர்பார்ப்பு தற்போதுள்ளது.

தேர்தலின் பின்னர், இந் நாட்டிலுள்ள அனைத்து பெரும்பான்மை, சிறுபான்மை கட்சிகள்கூட நாட்டு நலன் என்கின்ற விடயத்திலேயே இணையவுள்ளன. அது நாட்டுக்கு நல்லதாகவும் சமூகங்களுக்கிடையிலான ஒரு ஐக்கியத்தையும், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பொருத்தமானதாகவும் இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

அதனடிப்படையிலேயே, நாட்டு நலன் கருதி, எமது கட்சியின் தீர்மானத்துக்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து தீர்மானங்கள் எடுக்கப்படும்.

விசேடமாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, இம்முறை பாராளுமன்ற தேர்தலில், அதிகப்படியான ஆசனங்களை பெற்று பிரதமராக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனே நாம் அனைவரும் இந் நாட்டின் அரசியலில் களமிறங்கியுள்ளோம்.

இது நடைபெறாமல்போனால், நான் முன்னரே கூறியதைப்போன்று நாட்டு நலன் என்ற அடிப்படையில், கட்சிகளோடு இணைந்து எடுக்கப்படும் தீர்மானத்துக்கமைய, அழைப்புகள் வருமாயின், அது குறித்து நிச்சயம் பரிசீலிக்கப்படும்

> எமது கட்சி அந்த தீர்மானங்களை எடுக்கும் நேரத்தில் எனது கட்சியினுடைய தலைவர் இந் நாட்டின் கடந்த கால ஆட்சியாளர்களினால் மிகவும் துன்புறுத்தப்பட்டார்

**கேள்வி : பாராளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி அதிகளவான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்குமாயின் உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அதிக ஆசனங்கள் கிடைக்கும் என்பதும், அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்பதும் எதிர்பார்ப்புதான். அனைத்து கட்சிகளும் எதிர்பார்க்கின்ற விடயமே இது.

இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்கள் பெற்று, அவர்கள் ஆட்சியமைப்பாளர்களாயின், நிச்சயம் ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அமர்ந்து அவர்களுக்கும் வழிகாட்டி, மக்களுக்கு வழங்கப்பட்ட ஆணைகளை நிறைவேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை எம்மால் செய்ய முடியும். முக்கியமாக, சிறுபான்மை கட்சிகளின் தலைவர்களும், 'மாற்றம் வேண்டும்' என்று பரிபூரணமாக நம்புகின்றார்கள். அதனடிப்படையிலே எமது கட்சிக்குள் செய்ய வேண்டிய மாற்றங்களையும் செய்து, சிறந்த எதிர்க்கட்சியாக பொறுப்பு வகித்து, எமது பங்களிப்பை சிறப்பாக செய்ய முடியும் என நான் நம்புகிறேன்.

**கேள்வி : மட்டக்களப்பில், உங்களது கட்சி தனித்து போட்டியிடாமல், எதற்காக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது?**

மட்டக்களப்பு மாவட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி இதற்கு முன்னர் தேசிய கட்சிகளோடு இணைந்துதான் போட்டியிட்டு வந்திருக்கின்றது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் தனித்து நின்று போட்டியிட்டது கிடையாது.

> ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தயார் என்று எனது கட்சியின் தலைவர் ரிசார்ட் பதியுதீன், தெளிவாக கூறியிருந்தார்.

கடந்த காலங்களில், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணாமலை, வன்னி மாவட்டங்களில் எவ்வாறு தனித்தும் சேர்ந்தும் செயற்பட்டு தேர்தல்களுக்கு முகம் கொடுத்தோமோ, அது போன்றுதான் இம்முறையும் அம்பாறை மாவட்டத்தில் தனித்தும் மட்டக்களப்பு, வன்னி திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இணைந்தும், மொத்தமாக எட்டு மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடுகின்றோம். மேலும், கடந்த காலத்தில் எமது கட்சி தேசிய கட்சிகளுடன் இணைந்து எவ்வாறுபோட்டியிட்டதோ அவ்வாறே இம்முறையும் இணைந்து போட்டியிடுகின்றது.

**கேள்வி : பாராளுமன்றத் தேர்தலில், உங்களுடைய அகில இலங்கை மக்கள் காங்கிரசும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து போட்டியிட முடியாமல் போனது ஏன் ?**

இது ஒரு நல்ல கேள்விதான். ஆனால் இந் நாட்டில் சிறுபான்மையினருக்குள் ஏற்பட்டிருக்கின்ற பிளவுகளும், பிரிவுகளும் ஏதோ ஒரு வகையில் தவிர்க்க முடியாமல்போன விடயமாகும். என்னுடைய தனிப்பட்ட எதிர்பார்ப்பு என்பது வட, கிழக்கிலே இருக்கின்ற தமிழ் உறவுகளும், முஸ்லிம் உறவுகளும், ஒன்றிணைந்து ஒரு கட்சிப் பார்வையோடு செயற்படுகின்ற அமைப்பு எதிர்காலத்தில் வர வேண்டும் என்பதுதான்.

ஒவ்வொரு தேர்தலிலும், இவ்விரு கட்சிகளும் வெவ்வேறு கொள்கைகளோடு செயற்படுபவை. எவ்வாறு தமிழ் கட்சிகள் பிரிந்து நின்று செயற்படுகின்றனவோ, அவ்வாறுதான் முஸ்லிம்களுக்குள்ளும் இந்த பிரச்சினை ஆழமாக வேரூன்றி காணப்படுகின்றது.

இந்த நிலைமைகள் எதிர்காலத்தில் மாற்றப்படவேண்டும். இந்த விடயத்திலும் மாற்றம் "சிஸ்டம் சேஞ்ச்" வரவேண்டும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

ஆனால், எமது கட்சி இம்முறை தீர்க்கமான முடிவை எடுத்திருந்தது. கடந்த பாராளுமன்றத்திலே 20 ஆவது அரசியலமைப்பு சட்டத்தைக்கொண்டு வந்தபோது யார் யாரெல்லாம் அதனை ஆதரித்தார்களோ, அவர்களில் ஒரு சிலரை கட்சியிலிருந்து நீக்கி, நீதிமன்றத்துக்கு சென்றோம்.

நேர்கண்டவர் : வ.சக்திவேல்...

---

## மதுபானசாலை அனுமதிப் பத்திரம்

# பெயர்ப் பட்டியலை தேர்தலுக்கு முன்னர் வெளியிட வேண்டும்

## வடக்கு மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

> தேர்தல் முடிவடைந்த பின்னர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டால் பட்டியலில் உள்ள சிலர் பாராளுமன்றில் இருக்கலாம். பாராளுமன்றம் சென்றவர்கள் சென்றவர்களாகவே இருப்பார்கள்.



பாராளுமன்ற தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ள நிலையில், வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது பேசுபொருளாக உள்ளது "பார் பொமிட்".

அதாவது யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக மதுபான சாலைகளை அமைப்பதற்கான அனுமதிப் பத்திரங்களை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டார்கள், அல்லது அவர்களது சிபாரிசில் வேறு நபர்கள் பெற்றுக்கொண்டார்கள் என்பதே ...

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அண்மைக்காலத்தில் புதிதாக 26 மதுபான சாலைகளுக்கான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 18, யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 08 வழங்கப்பட்டுள்ளன.

### தாமதமாகும் அனுமதி

இந்த 26 மதுபான சாலைகளில் 18 மதுபான சாலைகளை திறப்பதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 08 மதுபான சாலைகளை திறப்பதற்கான அனுமதிகள் தாமதமாகின்றன.

குறித்த பிரதேசங்களில் புதிய மதுபான சாலைகளை திறப்பதற்காக பிரதேச செயலகங்களில் அனுமதி கோரப்பட்ட நிலையில் கிளிநொச்சியின் 18 மதுபான சாலைகளில் 17 மதுபான சாலைகளை திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒன்றுக்கான அனுமதி தாமதப்படுகிறது.

அதேபோன்று யாழ்ப்பாணத்தில் 08 மதுபான சாலைகளில் ஒன்றுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 07க்குமான அனுமதிகள் இன்னமும் கிடைக்கவில்லை.

அனுமதிகள் தாமதமாவதற்கு மக்கள் எதிர்ப்பு, ஆலயங்கள், பாடசாலைகளுக்கு அருகில் அவை இருப்பது போன்ற பல்வேறு காரணங்கள் உள்ளன. அவ்வாறான காரணங்களை நிவர்த்தி செய்த பின்னர் அனுமதி வழங்கப்படும்.

### யாழில் ஒன்றுக்கே அனுமதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கானை, தெல்லிப்பளை, உடுவில் மற்றும் கரவெட்டி ஆகிய பிரதேச செயலக பிரிவில் தலா ஒரு மதுபான சாலைக்கும், நல்லூர் மற்றும் கோப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவில் தலா இரண்டு மதுபான சாலைகளுக்குமான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மாத்திரம் மக்கள் எதிர்ப்பு இல்லாததால் ஒரு மதுபான சாலையை திறப்பதற்கான அனுமதியை பிரதேச செயலர் வழங்கியுள்ளார். ஏனைய 07 மதுபான சாலைகளுக்கும் மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், அவற்றுக்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை.



### கிளிநொச்சியில் 17 மதுபான சாலைகளுக்கு அனுமதி

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 12க்கும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 04க்கும் பளை மற்றும் பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளில் தலா ஒரு மதுபானசாலைக்குமான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றில் கரைச்சியில் 12க்கும் கண்டாவளையில் 04க்கும் பளையில் ஒன்றுக்கும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. பூநகரியில் மாத்திரம் மக்கள் எதிர்ப்பால் அனுமதி வழங்கப்படவில்லை.

புதிதாக மதுபான சாலைகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுவதால், கலாசார சீரழிவுகள், பொருளாதார பாதிப்புகள் ஏற்படும் என பிரதேச செயலர்கள் அறிக்கையிட்டுள்ளதால் அனுமதிகள் தொடர்பில் மீள் பரிசீலினை செய்யுமாறு யாழ் . மாவட்ட செயலர் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு

இவ்வாறான நிலையியே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமது பெயர்களில் மதுபான சாலைகளை பெற்று வேறு நபர்களுக்கு அவற்றினை விற்பனை செய்துள்ளதாகவும் , சிலர் மதுபான சாலைகளை பெறுவதற்கான சிபாரிசு கடிதங்களை வழங்கியமையால் அவர்களின் சிபாரிசில் வேறு நபர்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மதுபான சாலைகளுக்கான அனுமதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி தேர்தல் காலத்தில் பரபரப்பாக பேசப்பட்டது.

### வடக்கில் குற்றச்சாட்டுக்கு உள்ளானோர்

வடக்கில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் மதுபான சாலைக்கான அனுமதியினை பெற்றுக்கொண்டதாக தகவல்கள் வெளியாகின.

அது தொடர்பில் அவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட போது, தான் மதுபான சாலை அனுமதிப் பத்திரத்தை பெறவில்லை எனவும், தாய் தந்தையை இழந்த பெண்ணொருவர் மதுபான சாலைக்கான அனுமதியினை பெறுவதற்கான சிபாரிசு கடிதம் கேட்ட போது தான் அதனை வழங்கியதாகவும் ஒப்புக்கொண்டார். அதேபோன்று பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனும் மதுபான சாலைக்கான அனுமதியை தான் பெறவில்லை எனவும் , முல்லைத்தீவு பகுதியில் உள்ள ஒருவருக்கு சிபாரிசு கடிதம் வழங்கியதாகவும் கூறினார்.

பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரான கு. திலீபன் மதுபான சாலைக்கான அனுமதியை பெற்றுக்கொண்டதாக ஊடகம் ஒன்றில் செய்திகள் வெளியான நிலையில், மதுபான சாலைக்கான அனுமதியை தான் பெறவில்லை எனவும், அதொரு பொய்யான செய்தி எனவும் அவர் மறுத்ததுடன், அவ்வாறு செய்தி வெளியிட்ட ஊடக நிறுவனத்தின் ஆசிரியர் மற்றும் செய்தியாளர் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடும் செய்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது தந்தையின் பெயரில் மதுபான சாலைக்கான அனுமதியை பெற்றுக்கொண்டதாக சமூக ஊடகங்களில் சில ஆவணங்கள் பகிரப்பட்ட , செய்திகள் பகிரப்பட்டன.

அது தனது தந்தையின் பெயரில் முன்னரே இருந்த மதுபான சாலை எனவும், அதனை புதுப்பிக்க கையளிக்கப்பட்ட ஆவணங்களே தவறான நோக்குடன் பகிரப்பட்டதாகவும், தனது சிபாரிசில் மதுபான சாலைக்கான அனுமதிகளை பெற்றுக்கொடுக்கவில்லை என சத்திய கூற்று முடித்து, அதனை அவர் சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளதுடன், பொய்யான செய்திகளை சமூக

(17 ஆம் பக்கம் பார்க்க...)

மயூரப்பிரியன்...



# கையறுநிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

எல்லாத்திசைகளிலிருந்தும் அநீதி இழைக்கப்பட்டால் உங்களால் என்ன செய்ய முடியும்? அதுவும் மீள முடியாத பாதிப்பில் நீங்களிருக்கும்போது? ஆனால், அப்படியான அநீதியினால் தொடர்ந்தும் பலியிடப்படுகின்றனர் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள். அவர்களுடைய கடந்த காலப்பாதிப்புகள் படைத்தரப்பு, இயக்கங்கள், கட்சிகள் எனப் பல தரப்புகளாலும் நடந்தவை. ஒவ்வொரு தரப்பும் அவர்களுடைய புதல்வர்களை அல்லது கணவர்களை அல்லது தந்தையர்களைக் காணாமலாக்கினார்கள். எல்லாவற்றுக்கும் காரணம் அரசியல் வஞ்சம். அல்லது அரசியல் அதிகாரப்போட்டியே.

அப்படிக் காணாமலாக்கப்பட்டோரைத் தேடி ஆண்டுக்கணக்காக அலையும் உறவுகளுக்கு இப்பொழுதும் அநீதி இழைக்கப்படுகிறது. இதற்கும் காரணம் வெட்கம் கெட்ட, மிக மோசமான அரசியல் அதிகாரமும் அரசியல் போட்டிகளுமேயாகும். இது எந்தளவுக்கும் கீழிறங்கச் செய்யும். அதுவே நடந்து கொண்டிருக்கிறது.

ஜெனீவாவில் மனித உரிமைகளுக்கான கூட்டத்தொடர் நடக்கின்ற காலப்பகுதியில் தமது பிரச்சினைகளின் மீதான கவனத்தை ஈர்க்க முடியும் என்ற நம்பிக்கையில் காணமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தை நடத்துவதற்கு அழைப்பு விடுத்திருந்தனர். தங்களுடைய இந்தப் போராட்டத்துக்கு சகலரும் ஆதரவும் ஒத்துழைப்பும் தர வேண்டும் என்றும் அவர்கள் கேட்டிருந்தனர். அரசியல் கட்சிகள் அனைத்தையும் கூட பேதமின்றி அவர்கள் அழைத்திருந்தனர். தமக்கான நீதி கிடைப்பதற்கு அனைவருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை என்பதே அவர்களுடைய எண்ணம். இதுவே அவர்களுடைய நிலைப்பாடு.

ஏற்பாட்டின்படி போராட்டத்தை காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நடத்தின. அவர்களுக்கு ஆதரவாக சில தனி நபர்கள் இருந்தனர். அதற்கப்பால் இதை எந்த அரசியற் தரப்புகளும் திரும்பியும் பார்க்கவில்லை. கிளிநொச்சியில் மட்டும் சிறியதொரு ஊர்வலம் நடந்தது.

> **காணாமலாக்கப்பட்ட உறவுகளின் கண்ணீரோ துயரமோ அலைச்சல்களோ யாருக்கும் பொருட்டல்ல. அவர்களும் அவர்களுடைய போராட்டமும் ஏறக்குறையக் கைவிடப்பட்ட நிலைக்குள்ளாகிவிட்டன.**

மற்றும்படி காணாமலாக்கப்பட்ட உறவுகளின் கண்ணீரோ துயரமோ அலைச்சல்களோ யாருக்கும் பொருட்டல்ல. அவர்களும் அவர்களுடைய போராட்டமும் ஏறக்குறையக் கைவிடப்பட்ட நிலைக்குள்ளாகி விட்டன. ஆனால், முன்னர் நிலைமை வேறு. அப்போது ஏட்டிக்குப் போட்டியாக அரசியற் கட்சிகள் வந்து நின்று முகம் காட்டும். படம் பிடிக்கும். ஊடகங்களில் காட்சியளிக்கும். எல்லாமே அதிகாரத்துக்கான போட்டியே தவிர, மக்களின் துயரைத் துடைப்பதற்கானதாகவோ, அவர்களுக்கு ஆதரவாகவோ இருந்ததில்லை. அதாவது தமக்கான அரசியல் அதிகாரம். அதிகாரத்துக்கான போட்டி. அவ்வளவு தான்.

ஆகவே பாதிக்கப்பட்டோரின் கண்ணீரில் தமக்கான அரசியல் ஆதாயங்களைத் தேட முற்பட்டனர்.

ஆனால், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு இதிலெல்லாம் கவனமோ அக்கறையோ இல்லை. அவர்கள் தங்கள் உறவுகளை நினைத்துக் கதறிக் கொண்டிருந்தனர். தங்களுக்கு ஏற்பட்ட பிரிவுத் துயரை ஆற்ற முடியாமல் தவித்தனர். ஆண்டுக்கணக்காக அலைந்து கொண்டிருக்கும் தங்களுக்கு ஏன் இந்த உலகம் நீதி வழங்கத் தயங்குகிறது என்று கேட்டழுதனர். தங்களுக்கு ஏன் இந்தத் தண்டனை என்று ஆவேசத்தோடு கேட்டனர். இந்த உணர்ச்சிகரமான சூழ்நிலையில் பலர் மயக்கமடைந்து விழுந்தனர். சிலர் நடக்க முடியாமல் அல்லாடினர். முதிய பெற்றோரும் பெண்களும் மிகச் சிரமப்பட்டனர். ஆனாலும் அவர்கள் தங்களால் முடிந்த அளவுக்குத் தங்களின் குரலை உயர்த்த முற்பட்டனர். உண்மையில் அது எவராலும் இலகுவில் தாங்கிக் கொள்ள முடியாதவொரு துன்பியல் கணம்.

அவர்களுடைய முழுக்கவனமும் தங்களுடைய நீதியைக் கோரும் குரல் உலக அரசியல் பரப்பில் ஒலிக்க வேணும். நீதி வழங்குவதற்கான செவிகளைச் சென்றடைய வேண்டும் என்பதாகவே இருந்தது – இருக்கிறது.

> **முன்னர் நிலைமை வேறு. அப்போது ஏட்டிக்குப் போட்டியாக அரசியற் கட்சிகள் வந்து நின்று முகம் காட்டும். படம் பிடிக்கும். ஊடகங்களில் காட்சியளிக்கும். எல்லாமே அதிகாரத்துக்கான போட்டியே தவிர, மக்களின் துயரைத் துடைப்பதற்கானதாகவோ, அவர்களுக்கு ஆதரவாகவோ இருந்ததில்லை.**

இதனால் அவர்களால் இந்த உள்ளூர் அரசியல் சதுரங்க வீரர்களைப் பற்றிபொருட்படுத்த முடியவில்லை. பதிலாக எல்லாத்தரப்பினரும் வந்து தமக்காக, தமது போராட்டத்துக்கு ஆதரவாக நிற்கின்றனர் என்றே நம்பினார்கள். அந்தவகையிலேயே அவர்கள் வந்த அனைவரையும் எந்தப் பேதங்களுமில்லாமல் வரவேற்றனர். இன்னும் அதற்குத் தயாராக உள்ளனர்.

இப்போது காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் பல புதிய சிக்கல்களை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். ஒன்று, அவர்கள் இன்னும் இந்தப் பிரச்சினையை, இந்தப் போராட்டத்தை எவ்வளவு காலத்துக்கு நீடித்துச் செல்வது என்பது. அடுத்தது, அரசினால் உருவாக்கப்பட்டுள்ள ஓ.எம். பியில் முறையீட்டைச் செய்து – பதிவுகளைச் செய்து நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதா இல்லையா என்பது. இதற்கிடையில் நிறையப்பேர் இவ்வாறு முறைப்பாட்டை – பதிவைச் செய்து நிவாரணத்தைப் பெற்றுள்ளனர் என்று மாவட்டச் செயலக புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

இதைப்பற்றியெல்லாம் தமிழ் அரசியற் தரப்புகள் எதுவும் சொல்வதில்லை. அவை கடந்த காலத்தில் தேங்கி விட்டதால் நிகழ்காலத்தைப் பற்றி அவற்றுக்கு எந்தச் சிரத்தையும் இல்லை.

ஆனாலும் ஒரு தரப்பினர் எங்களுக்கு உறவுகளே வேண்டும். ஓ.எம்.பி வேண்டாம் என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் குரல் எழுப்புகின்றனர்.

இப்படி இரண்டு மாறுபட்ட குரல்கள் ஒலிக்கும்போது போராட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு அதிர்ச்சியும் குழப்பமும் உண்டாகிறது. அதிலும் பாதிக்கப்பட்டவர்கள்

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஓ.எம்.பி வேண்டாம் என்று சொல்லும்போது அதை மறுத்து இன்னொரு அணி ஓ.எம்.பி வேண்டும் என்றால்...!

இத்தகையதொரு குறித்த விடயத்தை மையப்படுத்திய போராட்டத்தில் எப்படி இரண்டு விதமான நிலைப்பாடு, ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு விதமான குரல்கள் எழலாம்? ஜனநாயக அடிப்படை அதுவாக இருக்கலாம். அப்படி எழுமானால் அது அந்தப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துமே தவிர, ஒருபோதும் அதனுடைய இலக்கை எட்டுவதற்கு உதவாது.

போராட்டத்தைத் திட்டமிடும்போது இதைக்குறித்து தெளிவானதொரு நிலைப்பாட்டுக்கு வரமுடியாமல் போவது ஏன்? இந்த அடிப்படையில்தான் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்ற அறிவிப்போடு செய்யப்பட்டிருக்குமானால் மேற்படி குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

அல்லது போராட்டத்தைக் குழம்பும் விதமாக எதிர்ச்சக்திகளால் இவ்வாறு திட்டமிடப்பட்டுக் குழப்பங்கள் உண்டாக்கப்பட்டதாக இருக்குமானால், அதற்கெதிராகத் தமது கண்டனத்தைக் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வெளிப்படுத்த வேணும்.



எது எவ்வாறோ, பாதிக்கப்பட்டோரின் குரலே இங்கே முக்கியமானது. அவர்களே வலியைச் சுமந்து கொண்டிருப்பவர்கள். அவர்களே இழப்புகளைத் தாங்க முடியாமல் தாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். அவர்களுக்கே நீதியும் நிவாரணமும் (நியாயமும்) வேண்டும். ஆகவே அவர்களுடைய குரலும் நிலைப்பாடுமே இங்கே முக்கியமானது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

**கருணாகரன்...**






சீரடி சாயி பாபாவின் மகா சமாதி தினத்தை முன்னிட்டு, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில், சீரடி பாபா பற்றி விஷேட சொற்பொழிவாற்றிய கலை மாமணி தேச மங்கையர்க்கரசியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, சாயி அறக்கட்டளையகத்தின் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகனின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி.குமார் இரட்னம், சொற்பொழிவாளருக்கு சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம். நிகழ்வில், பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதி மற்றும் ஏனைய அறங்காவலர்களும் பங்கேற்றனர்.







## சவுதி அரேபியாவில்

# இலங்கை சமையற்கலை நிபுணர்களுடன் தூதுவர் அமீர் அஜ்வத் கலந்துரையாடல்





சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் சவுதி அரேபியாவில் பணியாற்றுகின்ற இலங்கையைச் சேர்ந்த சமயற்கலை நிபுணர்களுடன் ஒரு சந்திப்பினை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பானது இலங்கையின் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கலாசாரம் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு துறைகளை மேம்படுத்துவதற்காக நம்நாட்டுத் தொழில் வான்மையாளர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக தூதரகம் மேற்கொண்டு வருகின்ற முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையைச் சேர்ந்த சமையற்கலை நிபுணர்களைக் கருத்திற்கொண்டு தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பு நேரடியாகவும், நிகழ்நிலை வழியாகவும் கலந்து கொண்ட அதிகளவான பங்குபற்றுநர்களைக் கொண்ட மிகப் பெரியதொரு சந்திப்பாக அமைந்தது. இதன் போது உரையாற்றிய தூதுவர் அமீர் அஜ்வத், தூதரகம் மேற்கொண்டு வருகின்ற சுற்றுலா மேம்பாட்டுச் செயற்திட்டத்தில் இலங்கையின் சமையற்கலைப் பண்பாட்டினூடாகப் பங்களிப்புச் செய்ய முன்வருமாறு அழைப்பு விடுத்தார்.

மேலும் விருந்தோம்பல் துறையில் வாண்மையுடைய இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவது தொடர்பிலும் தூதரகத்திற்கு உதவுமாறு வேண்டிக் கொண்டார். அத்துடன் தூதுவர் அவர்கள் சவுதி அரேபியாவில் பணிபுரிகின்ற சமையற்கலை நிபுணர்களை மேலும் வலுப்படுத்துவதற்கான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு உதவுவதாகவும் குறிப்பிட்டார். மேற்படி நிகழ்ச்சியின் போது சவுதி அரேபியாவில் வாழ்கின்ற ஓர் இலங்கை முயற்சியாண்மையாளராகிய திருமதி கீதானி பத்மினியால் தயாரிக்கப்பட்டதும் "ஸன்சைன்" என்று பெயரிடப்பட்டதுமான ஒரு மூலிகைப் பானம் தூதுவரு அன்பளிப்பு செய்யப்பட்டது.

**இலங்கைத் தூதரகம் – ரியாத்**

## வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட

# அனைத்து மக்களதும் அரசியல் மையமாக தேசிய மக்கள் சக்தி



**தற்போது நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க பதவியேற்றுள்ளார். எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி பொதுத்தேர்தலும் நடைபெற விருக்கிறது.**

**இவ்வாறான சூழலில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினரும் வடக்கு இணைப்பாளருமான பிமால் ரத்நாயக்க தினகரன் வார மஞ்சரிக்கு அளித்த பேட்டி வருமாறு...**

**டி.எஸ். சேனநாயக்கா, எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம் போன்றோர் அதிகாரத்திற்காக இனவாதத்தைப் பயன்படுத்தினர்**

**கேள்வி: கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பல தொகுதிகளில் அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. இது பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவாலாக அமையுமெனக் கருதுகிறீர்களா?**

பதில்: இல்லை. பொதுத்தேர்தலையும் நிச்சயமாக நாம் வெற்றி கொள்வோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதிக்கு தேசிய மக்கள் சக்தி என்ற அடிப்படையில் வாக்கு கிடைக்கப்பெற்றது. ஜனாதிபதிக்கு கிடைக்கப்பெற்ற 57 இலட்சம் வாக்குகளும் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கப் பெற்றவையே.

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை விடவும் 13 இலட்சம் குறைவான வாக்குகளையே ஐ.ம.சக்தி பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, மாத்தறை என அனைத்து மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தியாகவே போட்டியிட்டோம். ஆனால் ஐ.ம. சக்தி வடக்கில் தமிழரசு கட்சியுடனும் கிழக்கில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸூடனும் மலையகப் பிரதேசங்களில் மலையக மக்கள் முன்னணி உள்ளிட்ட கட்சிகளுடனும் தெற்கில் சம்பிக்க ரணவக்க உள்ளிட்டவர்களுடனும் இணைந்து தான் தேர்தலில் போட்டியிட்டது.

பொதுத்தேர்தலில் தமிழரசு கட்சி தனியாகப் போட்டியிடுகிறது. சம்பிக்க ரணவக்க தேர்தலில் இருந்து ஒதுங்கியுள்ளார். ஸ்ரீ ல.மு.கா, அ.இ.ம.கா கட்சிகள் சில மாவட்டங்களில் தனித்தும் சில மாவட்டங்களில் இணைந்தும் போட்டியிடுகின்றன. அத்தோடு இன்று அதிக பிரச்சினைகளும் நெருக்கடிகளும் நிறைந்த கட்சியாக மாறியுள்ளது ஐ.ம.சக்தி. இவை பொதுத்தேர்தலில் ஐ.ம. சக்தியின் வாக்குகளில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும்.



**கேள்வி: பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை பொறுப்பெற்றுள்ள ஜனாதிபதியால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென நம்புகிறீர்களா?**

பதில்: ஆம். எம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் தான் நாம் நாட்டைப் பொறுப்பேற்றுள்ளோம். அதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்வைத்துள்ளோம். இருந்தும் சிலர் நாம் ஆட்சிக்கு வந்ததும் டொலர் 400 ரூபாவாகும். எரிபொருளுக்கு வரிசையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும். பொருட்களின் விலைகள் உயரும் எனக் கூறினர். ஆனால் எமது ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து, வாழ்க்கைச் செலவும் இருந்ததை விடவும் குறைவடைந்து, பங்கு சந்தையிலும் சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தற்போதைய பொருளாதார ஸ்திரநிலையைப் பேணியபடி கட்டம் கட்டமாக முன்னேற்றப்பாதையில் நாட்டை இட்டுச் செல்வது எமது முதல் முயற்சியாகும். அதன் பயனாக நாட்டில் பொருளாதாரம் குறித்து நிலவிய நம்பிக்கையற்ற தன்மை நீங்கியுள்ளது.

எமது நாட்டின் சனத்தொகையில் 55 சதவீதமானோர் பொருளாதார சிரமங்களுக்கு பெரிதும் முகம் கொடுத்துள்ளனர். 26 சதவீதமானோர் ஏழைகளாக இருக்கின்றனர். அதனால் பொருளாதார ஸ்திர நிலையைப் பேணியபடி மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறோம். அதற்கேற்ப ஜனாதிபதி, நிதியமைச்சர் என்ற வகையில் பெரும்போகத்திற்குரிய பசளைக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார். அதனை வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளரும் அனுமதியளித்துள்ளார்.

கடற்றொழிலாளர்களுக்கும் எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**கேள்வி: ஜனாதிபதி பதவியேற்றதும் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள்?**

பதில்: காலம் தாழ்த்தாது முன்னெடுக்கக் கூடிய வேலைத்திட்டங்களாக வீண்விரயத்தைக் குறைத்தல், சிக்கனப் பயன்பாடு, வளங்களை முறைகேடாகப் பாவிக்காதிருத்தல் என்பன முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்திற்கு மாத்திரமல்லாமல் அமைச்சரவை, ஆளுநர்கள் பதவி ஏற்பு வைபவங்களுக்கும் எவ்வித நிதியும் செலவிடப்படவில்லை. ஆனால் கடந்த காலங்களில் இத்தகைய வைபவங்களுக்கு கோடிக்கணக்கில் செலவிடப்பட்டன.

மேலும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்புக்காக ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர். அவர்களைக் கட்டம் கட்டமாகக் குறைத்து உரிய பொலிஸ் நிலையங்களிலும் இராணுவ கட்டமைப்புக்களிலும் கடமையில் ஈடுபட ஏற்பாடு செய்துள்ளோம்.

அதேநேரம் கடந்த கால ஜனாதிபதிகள் சில அமைச்சுகளுக்குரிய வாகனங்களை ஜனாதிபதி செயலகத்தின் கீழ் கொண்டு வந்திருந்தனர். அதனால் அத்தகைய அமைச்சுகள் வாடகை வாகனங்களையே பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளன. இதன் விளைவாகவும் நாட்டில் பெருமளவில் செலவு ஏற்பட்டிருந்தது. தற்போது அத்தகைய அமைச்சுகளுக்கு வாகங்களைப் பகிர்ந்தளித்து வாடகை வாகனங்களுக்கான செலவை நிறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி செயலகத்திற்கு மாத்திரம் பெருந்தொகையில் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களையும் நாம் குறைத்துள்ளோம்.

இவ்வாறு எமது ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் எவ்வளவு நிதியை நாம் சேமித்துள்ளோம் என்பதை நாட்டு மக்கள் முன் வைக்க எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த காலங்களில் மூடிமறைக்கப்பட்ட வழக்குகளை மீண்டும் விசாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மத்திய வங்கி மோசடி, படுகொலை செய்யப்பட்ட தராக்கி சிவராம் வழக்கு, லலித் மற்றும் குகனைக் கடத்தி படுகொலை செய்தமை போன்றவாறான விசாரணைகள் குறிப்பிடத்தக்கவை.

**கேள்வி: புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் பெருமளவில் கடன்கள் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறதே?**

பதில்: நாம் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணிய படி பயணத்தை ஆரம்பித்துள்ளோம். ஆனாலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு செலவுத் திட்டமே இன்னும் செயற்பாட்டில் உள்ளது. அவரது வரவு செலவுத் திட்டம் மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒன்று வரிச் சுமையை ஏற்றுதல், மற்றையது கடன் பெறுதல், மூன்று அரச சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகியனவாகும். அவற்றில் அரச சொத்துக்களை விற்பனை செய்வதை நாம் நிறுத்தியுள்ளோம்.

என்றாலும் வரிச் சுமையை ஜனாதிபதியால் குறைக்க முடியாது. அதற்கான அதிகாரம் பாராளுமன்றத்திடம் உள்ளது. அதனால் புதிய அரசாங்கம் அமைந்த பின்னர் சில வரிகளை குறைக்க வேண்டும். குறிப்பாக நாம் அறிவித்துள்ள படி உணவு, கல்வி, மருந்துப் பொருட்கள் என்பவற்றுக்கான வற் வரியை சட்டமொன்றை நிறைவேற்றி குறைக்க உள்ளோம்.

கடன் பெறுவதற்காகவே ரணில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளார் என்பதை அவரது நண்பர்கள் அறிவர்.

அதனால் நாம் கடன் பெறுவதாக சமூக ஊடகங்களில் குறிப்பிடுகின்றனர். எமது அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் புதிய பாராளுமன்றம் அமைந்த பின்னர் சமர்ப்பிக்கப்படும்.

**கேள்வி: நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையின் படி, தற்போதைய புவிசார் அரசியலுக்கு மத்தியில் இந்தியா, சீனாவுடனான உறவுகள் தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

பதில்: நாம் எல்லா நாடுகளுடனும் வெளிப்படையானதும் சுதந்திரமானதுமான உறவுகளைப் பேணி வருகின்றோம். அந்த வகையில் கடந்த சில தினங்களாக ஜனாதிபதி 25க்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்களையும் உயர் ஸ்தானிகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அவற்றில் இந்தியா, சீனா, அமெரிக்கா, பலஸ்தீன், சவுதி அரேபியா, கியூபா உள்ளிட்ட பல நாடுகள் இடம்பெற்றிருந்தன. அந்தந்த நாடுகளின். ஊடாக இலங்கையின் அபிவிருத்திக்கும் சுபிட்சத்திற்கும் உச்சளவிலான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவே நாம் எதிர்பார்க்கிறோமே தவிர முன்னணி நாடுகளுக்கு மத்தியில் நிலவும் உலகளாவிய அதிகார முரண்பாட்டுக்குள் இணையவல்ல. நாம் அணிசேராக் கொள்கைப்படி செயற்படுகிறோம்.

**கேள்வி: உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் குறிப்பிடுங்கள்?**

பதில்: எமக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையில் உயிர்த்த ஞாயிறு விசாரணையும் ஒரு முக்கிய பகுதி. இது இலங்கை மனசாட்சியின் பிரச்சினையாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளுக்கு சட்டப்படி தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் 300 அப்பாவி கிறிஸ்தவ மக்களை படுகொலை செய்திருக்கிறார்கள். இல்லாவிடில் அது இதயத்தில் ஓட்டையுள்ளது போன்று அமையும். அதனால் அந்த ஓட்டையை அடைப்பது இன்றியமையாததாகும்.

அதேநேரம் அத்தாக்குதலால் நாட்டில் அநீதிக்கும் ஒதுக்கத்திற்கும் பாதிப்புக்கும் இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தினர் பெரிதும் உள்ளாகினர். இத்தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை வெளிப்படுத்துவதும் அவர்களுக்கு சட்டப்படி தண்டனை பெற்றுக்கொடுப்பதும் கூட நாட்டின் எந்தவொரு அரசாங்கமும் தவிர்த்துக்கொள்ள முடியாத பொறுப்பேயாகும். இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் இவை அனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்தார். ஆனால் எமது ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை தொடர்பில் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

**கேள்வி: அரசியலமைப்பின் 13 வது திருத்தமான மாகாண சபை முறைமை குறித்து குறிப்பிடுவதாயின்?**

பதில்: இலங்கையில் தேசிய ஐக்கியமின்மை மற்றும் சமத்துவமின்மை அல்லது இலங்கையர் என சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியாதுள்ளமை குறித்து நாம் மிகத் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை எடுத்துப் பார்த்தால் 1948 முதல் இலங்கை தேடிய விடயமொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அது தான் யாழ்ப்பாணத்தையும் கல்முனையையும் மாத்தறையையும் கொழும்பையும் ஒன்றாக இணைக்கக்கூடிய தேசிய அரசியல் இயக்கத்தின் தேவையாகும்.

1948 இல் பதவிக்கு வந்த டி.எஸ். சேனநாயக்கா முதல் எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம் போன்றோர் கடந்த 76 வருடங்களாக அதிகாரத்திற்காக இனவாதத்தைப் பயன்படுத்தினர். முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கு பதிலாக மலையக மக்களின் வாக்குரிமையை நீக்கினார். சுதந்திரத்தோடு நாடு அரசியல் ரீதியாகப் பிரியத் தொடங்கியது.

**நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கு பதிலாக மலையக மக்களின் வாக்குரிமையை நீக்கியவர் டி.எஸ். சேனநாயக்கா – பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரம் அனைத்து வழிகளிலும் பலப்படுத்தப்பட வேண்டும்**

இத்தேர்தல் முடிவுகளை எடுத்து நோக்கும் போது இன்று வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்கள், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரதும் முக்கிய அரசியல் மையமாக தேசிய மக்கள் சக்தி மாறிவருகிறது.

பாராளுமன்றத் தேர்தலின் ஊடாக முழு நாட்டையும் ஒன்றிணைக்கக்கூடிய ஒரு தேசிய இயக்கத்தை கட்டியெழுப்ப எதிர்பார்க்கிறோம். தேசிய ஐக்கியமின்மைக்கு 13வது திருத்தத்தை விடவும் முதல் தரத் தீர்வாக அது இருக்கும்.

நாம் அடுத்த வருட முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம். அது வரைக்கும் ஆளுநர்கள் ஊடாக மாகாண சபை நிர்வாகங்கள் முன்னெடுக்கப்படும். ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எமது ஆட்சிக்காலத்தில் வட மாகாண ஆளுநர் தமிழ் மொழியில் தான் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இதற்கு முன்னர் எல்லா ஆளுநர்களும் ஆங்கில மொழியில் சத்தியப் பிரமாணம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள படி புதிய அரசியலமைப்பை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம். அனைத்து மக்களதும் சமய, கலாசார, அரசியல் உரிமைகளையும் அபிலாஷைகளையும் உறுதிப்படுத்தி மேம்படுத்தும் வகையில் எல்லா மக்களும் ஐக்கியமாக ஒரே நாட்டில் வாழக்கூடிய மிகவும் நியாயமான அரசியலமைப்பாக அது அமைய வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

**அடுத்தாண்டு முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் – ஜனாதிபதித் தேர்தலை விடவும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வீழ்ச்சியைச் சந்திக்கும்**

**கேள்வி: யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவது குறித்து எத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன?**

பதில்: அது தொடர்பில் எமது கட்சியிலும் அரசிலும் உச்சபட்ச கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இங்கு முதலில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். அது தொடர்பிலான வேலைத்திட்டங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். குறிப்பாக வடக்கு மக்களின் வாழ்வாதார பொருளாதார பலத்தை மேம்படுத்துதல் அவற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அதேபோன்று அவர்கள் தமது தாய்மொழியில் பணிகளை மேற்கொள்வதில் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான துரித வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதிலும் விஷேட கவனம் செலுத்தியுள்ளோம். அதேநேரம் கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக உள்ள பாதையை பல வருடங்களாக மூடி வைத்திருந்தது போன்று வடக்கு கிழக்கு பிரதேசங்களிலும் பாதைகள் மூடப்பட்டிருக்கலாம். அத்தகைய பாதைகள் தொடர்பில் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினரின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தி அச்சுறுத்தல் அற்ற பாதைகளை விடுவிக்கவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**கேள்வி: மலையக பெருந்தோட்ட மக்களின் சம்பள கோரிக்கைக்கு இன்னும் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படாதுள்ளதே?**

பதில்: ரணில் விக்கிரமசிங்கவின் ஏமாற்று அரசியலின் விளைவே இது. நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள சூழலில் பெருந்தோட்ட உரிமையாளர்களுடனும் தொழிலாளர்களுடனும் பேசி அவர்களது கோரிக்கைக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுத்திருக்க வெண்டும். அந்த மக்களுக்கு அரசினால் சம்பளம் வழங்கக்கூடிய நிலைமை இல்லை. பெருந்தோட்ட கம்பனி உரிமையாளர்கள் தான் அதனை வழங்க வேண்டும். இலங்கையில் மிகவும் ஏழ்மையில் வாழும் மக்களே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தான். அவர்களது பொருளாதாரம் பலப்படுத்தப்பட வேண்டும். அதனை சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக மாத்திரமல்லாமல் பொருட்களின் விலைக்குறைப்பு, அவர்களுக்கான வீடமைப்பு, அவர்கள் சமூக, கலாசார ரீதியில் முகம் கொடுக்கும் நெருக்கடிகளுக்கு தீர்வு என்றவாறு அமைக்க வேண்டும். அவர்கள் இருக்கும் இடங்கள் கிராமங்களாக உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு பல கோணங்களிலும் கவனம் செலுத்தி மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்.

**கேள்வி: பொதுத்தேர்லின் பின்னர் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளை அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ளப்படுமா?**

பதில்: நாம் நாட்டின் சுபீட்சத்திற்காக பாராளுமன்றத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுடனும் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளோம். மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு வரும் பிரதிநிதிகள் அவர்களுக்கு வாக்களித்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாவர். அதனை நாம் மதிக்கிறோம். ஆனால் மக்கள் வலுவான ஆணையை எமக்கு வழங்கும் போது அக்கட்சிகளை அரசாங்கத்திற்குள் எடுப்பது மக்களின் அபிப்பிராயத்திற்கு எதிரானதாகும். நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்னெடுக்கவே மக்களிடம் ஆணையைக் கோருகிறோம். ஏனைய அரசியல் கட்சிகள் வேறு வேறு வேலைத்திட்டங்களை முன்வைத்து எம்மை தோற்கடிக்கவே மக்களிடம் வாக்குகளைக் கேட்கின்றனர். தேர்தலில் இரண்டு பாதைகளில் சென்ற இருவர் தேர்தலின் பின்னர் ஒன்றிணைவதற்கு விஷேட காரணங்கள் இருக்க வேண்டும். மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டு அந்த ஆணைக்கு எதிராக செயற்படும் மோசமான அரசியல் கலாசாரம் இது.

**கேள்வி: நிறைவாக நீங்கள் கூற விரும்புவதென்ன?**

பதில்: இந்நாட்டு சிங்கள மக்கள் நாம் தான் முற்போக்குவாதிகள், நாம் தான் மாற்றத்திற்கு அதிகம் பங்களிக்கிறோம். வடக்கு, கிழக்கு, மலையக மக்கள் வழமை போன்று ஆட்சிக்கு வரும் அரசுகளுடன் சேர்ந்து கொள்வதாகவும் பதவிகளை பகிர்ந்து கொள்வதாகவும் அந்த மக்கள் தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகளுடன் இணைந்திருப்பதாகவும் கருதி வந்தனர். அதற்கு காரணங்கள் இல்லாமலும் இல்லை. ரவுப் ஹக்கீம், ரிசாட் பதியுத்தீன், தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா போன்றோர் எல்லா அரசுகளிலும் அமைச்சர்களாக இருந்து வருவதே இதற்கு சிறந்த உதாரணமாகும்.

என்றாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் பின்னரும் வடக்கு, கிழக்கு, மலையகப் பிரதேச மக்கள் மத்தியில் பாரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் பாரம்பரிய அரசியல் கட்சிகளை விடவும் தேசிய மக்கள் சக்தியையே நம்பிக்கைக்குரிய கட்சியாகப் பார்க்கின்றனர். அவர்கள் பாரம்பரிய அரசியல் கட்சித் தலைவர்களை நம்பத் தயாரில்லை என்பதை வெளிப்படையாகவே கூறுகின்றனர். இந்த அரசியல் மாற்றத்திற்கு சிங்கள மக்கள் மாத்திரமல்லாமல் வடக்கு, கிழக்கு, மலையைப் பிரதேசங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களும் பாரிய பங்களிப்பை நல்கியுள்ளனர். நாட்டின் மோசமான அரசியல் கலாசாரத்தில் இருந்து வெளியே வர எல்லா மக்களும் பாரிய பங்களிப்பை நல்கியமையையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

பேட்டி கண்டவர் : மர்லின் மரிக்கார் ...




## கடந்த காலங்களில்

# அரசியல்வாதிகளின் குடும்பங்களும் உறவினர்களுமே முன்னேறினர்

## வாக்களித்த மக்கள் எவ்வித பிரயோசனமும் அடையவில்லை

## கொழும்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் டொக்டர் ரிஸ்வி சாலிஹ்



**கே. உங்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுங்கள்**

ப. நான் ரிஸ்வி சாலிஹ். கொழும்பு இசிபத்தான கல்லூரியில் கல்வி கற்றேன். எனக்கு இரண்டு பிள்ளைகள். மகள் இலண்டனில் விசேட வைத்திய நிபுணராக கடமையாற்றுகிறார். மகன் பொறியியலாளராக கொழும்பில் கடமையாற்றுகிறார். எனது மனைவி ஓர் ஆங்கில ஆசிரியை.

நான் வைத்தியராக முதன் முதலில் அரச வைத்திய அதிகாரியாக நுவரெலியா வைத்தியசாலையில் கடமையாற்றினேன். அங்கு 4 வருடங்களாக மலையக மக்களது சுகாதார தேவைகளுக்காக காலை 7 மணி தொடக்கம் அதிகாலை 2 மணி வரை அந்த மக்களோடு இருந்து சேவையாற்றினேன். மருத்துவமும், மனிதாபிமான சேவையும் என் இரத்தத்தில் இரண்டறக் கலந்தவை. அதனால் பணம், நேரம் எதுவும் பார்க்காமல் வைத்திய சேவையை வெற்றிகரமாக செய்து வருகின்றேன்.

மருத்துவ அதிகாரியாக அல்பிட்டிய இந்துரவவில் ஒரு வருடம் கடமையாற்றினேன். அதன் பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பின்லாந்து அரசாங்கம் செயற்படுத்திய விபத்துச் சேவைப் பிரிவில் இணைந்து கடமையாற்றினேன்.

37 வருடங்களாக வைத்தியத்துறையில் சேவையாற்றி வருகின்றேன். இப்பிரதேச மக்களுக்கு என்னால் முடிந்தளவு சேவையாற்றுகின்றேன். மூன்று தலைமுறைகளாக என்னிடம் பிரசவ வைத்தியம் பார்த்த குடும்பத்தினர் இங்குள்ளனர். மருதானை, மாளிகாவத்தை, தெமட்டகொட, குணசிங்கபுர எனப் பல பிரதேசங்களைச் சேர்ந்த மத்தியதர வருமானம் கொண்ட சாதாரண மக்களும் பணவசதி இல்லாத ஏழை மக்களும் என்னைத் தேடி வருவார்கள். நான் கடமையில் இல்லையென்றால் மீள வீடு சென்று விடுவார்கள்.

அவர்களிடம் நான் பணம் எதிர்பார்த்து மருத்துவம் செய்வதில்லை. அவர்கள் கஷ்டமான சூழ்நிலையில் கொழும்பில் வாழ்பவர்கள். பரம்பரை பரம்பரையாக என்னிடம் வருபவர்கள். அவர்களது வாழ்க்கைத் தரம், கல்வி, வருமானம், வீட்டு வசதிகள், உயர ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணினேன். அரசியல் அதிகாரம் இருந்தால் அதனூடாக அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். நாம் உண்டோம், குடித்தோம், வாழ்ந்தோம். நாம் நமது நாட்டுக்கு நமது சுற்றத்தாருக்கும் நம் சமூகத்தாருக்கும் என்ன செய்தோம்? கடந்த கால அரசியல்வாதிகளை எடுத்துக் கொண்டால் அவர்கள் குடும்பங்கள் அவர்களது உறவினர்கள் அபிவிருத்தியடைந்தார்களே தவிர, வாக்களித்த மக்கள் எவ்வித பிரயோசனமும் முன்னேற்றம் அடையவில்லை. அந்த மக்கள் இன்றும் அதே சேரிப்புற வீடுகளிலும் ஒரு வீட்டில் பல குடும்பங்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களது பிள்ளைகளை பாடசாலையில் கூட சேர்த்துக் கொள்ள முடியாமல் உள்ளார்கள். பிள்ளைகள் படித்தாலும் வறுமை காரணமாக இடை நடுவில் கல்வியை கைவிடுகின்றார்கள். கடைகளுக்கும் கூலித் தொழில்களுக்கும் செல்கின்றார்கள்.

ஒரு நாட்டின் இதயம் தலைநகரம். கொழும்பு வாழ் மக்கள் கல்வியில், தொழில் வர்த்தகம், சுகாதாரம், இருப்பிட வசதி என்பனவற்றில் அபிவிருத்தி காண வேண்டும். இங்கு வாழும் மக்கள் அரச தொழில், வர்த்தகம், சிறந்த கல்வி வசதிகளை பெற வேண்டும். அதற்காகவே நான் ஊழலற்ற, சிறந்ததொரு ஒழுக்கமுள்ள தேசிய மக்கள் சக்தியை தேர்ந்தெடுத்து, இம்முறை தேர்தலில் போட்டியிட்டு, மக்களுக்கு என்னால் முடிந்த சேவையை செய்ய ஆசைப்படுகிறேன்.

**கே. ஏன் தேசிய மக்கள் சக்தியில் ஆர்வம் ஏற்பட்டது. அதில் எப்போது இணைந்தீர்கள்?**

ப. நான் 10 வருடங்களுக்கு முன்புதான் பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பி கட்சி அலுவலகத்திற்கு சென்றேன். எனக்கு சட்டத்தரணி நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவரது 4 பிள்ளைகளின் பிரசவத்திலும் நான்தான் மருத்துவர். அதில் நட்பு ஏற்பட்டு அவர்கள் அன்று தேசிய மக்கள் சக்தித் தலைவர் தலைவர் அநுர குமாரவைச் சந்திப்பதற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றேன். அவர்களுடன் நிறைய கலந்துரையாடினேன். அதன் பின்னர் அவர்கள் அலுவலகத்திலேயே அவரவர் தட்டை எடுத்து சாப்பிட்டு அந்த தட்டைக் கழுவி உரிய இடத்தில் வைப்பது, மீதியின்றி முற்றாக சாப்பிடும் முறை எல்லாவற்றையும் கண்ணுற்றேன். இது எமது இஸ்லாம் மதத்திலும் உள்ளது. இவ்வாறு அவர்களின் எளிமையான வாழ்க்கை முறை எனக்கு பிடித்திருந்தது. அன்றிலிருந்து அவர்கள் கட்சியில் இணைந்திருந்தேன். அதன் பின்னர் கடந்த முறைத் தேர்தலில் வாக்கு கேட்க அழைத்தார்கள். அத்தருணத்தில் நான் விபத்தொன்றில் சிக்கியிருந்தேன்.



இம்முறை அவர்களாகவே என்னை அழைத்து கொழும்பு மாவட்ட முஸ்லிம்கள் சார்பாக என்னையும் தமிழ் வேட்பாளர் சார்பாக சிவாவையும் நியமித்திருக்கிறார்கள். எனது மருதானை கலீல் வைத்தியசாலை கட்டடத்திலேயே கடந்த 3 வருடமாக கட்சி அலுவலகம் ஒன்று உள்ளது. இங்கு ஜனாதிபதி அநுரகுமார அடிக்கடி கட்சி அலுவல்கள் சம்பந்தமாக ஆராய வந்துள்ளார்.

**கே. தற்பொழுது உங்கள் கட்சியின் பிரசார நடவடிக்கைகள், கொழும்பு மாவட்டத்தில் எவ்வாறு உள்ளன?**

ப. எமது கட்சி கொழும்பு மாவட்டத்தில், பிரதமர் ஹரிணி தலைமையில் வேட்பாளர்களை நியமித்துள்ளது. நாங்கள் ஒருபோதும் விருப்பு வாக்குக்காக பணம் செலவழித்து இன்னொருவரின் வெற்றி வாய்ப்பைப் பறிப்பதில்லை. உதாரணமாக எனக்கு முஸ்லிம் மக்கள் வாக்களிப்பது போன்று சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும். அதேபோன்று சிங்கள, தமிழ் மக்கள் ஏனையோருக்கு தமது 3 விருப்பு வாக்குகளை இடல் வேண்டும். நான் தெஹிவளை முஸ்லிம் பிரதேசங்களுக்குச் செல்லும் போது என்னுடன் எங்கள் சிங்கள வேட்பாளரும் வருவார். கொழும்பு மத்திக்கு செல்லும் போது சிவா போன்ற வேட்பாளர்களை அழைத்துக் கொண்டு செல்வோம் அதில் எங்களது பிரதமர் ஹரிணிக்கும் எமது ஆதரவாளர்கள் விருப்பு வாக்கினைச் செலுத்துவார்கள். நாங்கள் பெரிதாக சுவரொட்டி, கட்அவுட் என்பனவற்றுக்கு பாரியளவில் பணம் செலவழிக்காமல், கட்சிக்காக நாம் இலங்கையர் என்ற ரீதியில், கூடுதலான விருப்பு வாக்குகளை எடுக்க வேண்டும். கொழும்பு மாவட்டத்தில் எமது கட்சியில் நான் மட்டுமே முஸ்லிம் வேட்பாளர். அதனால் சிறந்த ஆட்சி மாற்றம், ஊழல் அற்ற ஆட்சி என்பனவற்றை விரும்புபவர்கள் எங்களுக்கு வாக்குப் போடுவார்கள். மக்களுக்கு சீரான சேவைகளை வழங்க நாம் இம்முறை அமோக வெற்றி பெறுவோம். அதே போன்று 20க்கும் மேற்பட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது கட்சி ஊடாக வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் அனைவரும் வெற்றி பெறுவார்கள் என நினைக்கின்றேன்.

குறிப்பாக சிறுபான்மை மக்கள் ஓர் புதிய அரசியல் கலாசாரத்தை நோக்கி பயணியுங்கள். நமது எதிர்கால சந்ததியினருக்காக புதிய சிந்தனை கொண்ட இளைய அரசியல் பிரதிநிதிகளை மக்கள் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்.

**நாங்கள் சுவரொட்டி, கட்அவுட் என்பனவற்றுக்கு பாரியளவில் பணம் செலவழிக்காமல், கட்சிக்காக நாம் இலங்கையர் என்ற ரீதியில், கூடுதலான விருப்பு வாக்குகளை எடுத்தல் வேண்டும்**

**நாங்கள் ஒருபோதும் விருப்பு வாக்குக்காக பணம் செலவழித்து இன்னொருவரின் வெற்றி வாய்ப்பைப் பறிப்பதில்லை. உதாரண- மாக எனக்கு முஸ்லிம் மக்கள் வாக்களிப்பது போன்று சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும். அதேபோன்று சிங்கள, தமிழ் மக்கள் ஏனையோருக்கு தமது 3 விருப்பு வாக்குகளை இடல் வேண்டும்**

**நமது எதிர்கால சந்ததியினருக்காக புதிய சிந்தனை கொண்ட இளைய அரசியல் பிரதிநிதிகளை மக்கள் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்.**

---

# இந்திய–கனடா உறவுகள் மீண்டும் முறுகல் நிலையில்!




## காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு கனடா இடமளிப்பதாக இந்தியா குற்றச்சாட்டு!

கடந்த ஆண்டு கனடாவில் இந்தியாவின் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டது தொடர்பான சர்ச்சை மீண்டும் தலைதூக்கியுள்ளது. இது இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே இராஜதந்திரச் சிக்கலை உருவாக்கியுள்ளது.

இப்போது, நிஜ்ஜார் கொலை வழக்கில் கனடாவுக்கான இந்தியத் தூதர் சஞ்சய் வர்மாவின் பெயரையும், மற்றைய இந்தியத் தூதரக அதிகாரிகளின் பெயரையும் கனடா தொடர்புபடுத்தியுள்ளது.

கனடாவின் குற்றச்சாட்டுகளை நிராகரித்த இந்தியா, டெல்லியில் இருக்கும் இந்தியாவுக்கான கனடா தூதர் ஸ்டீவர்ட் ராஸ் வீலர் உள்ளிட்ட 6 பேரை வெளியேற்ற முடிவு செய்திருந்தது.

இந்தியா, கனடாவுக்கான தனது தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் பிற தூதரக அதிகாரிகளை நாடு திரும்புமாறு கேட்டுக் கொண்டதாகக் கூறியிருக்கிறது. ஆனால் கனடா அவர்களை வெளியேற்றியதாகக் கூறியுள்ளது.

கனடாவில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மீதும் தூதரக அதிகாரிகள் மீதும் குறிவைத்து குற்றம் சாட்டியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் இந்தப் பதற்றத்திற்கு மத்தியில், ஒருவரது பெயர் அடிக்கடி தலைப்புச் செய்திகளில் அடிபடுகிறது. அவர்தான் கனடாவுக்கான இந்திய தூதரான சஞ்சய் வர்மா.

கனடாவிலிருந்து இந்தியாவினால் திரும்ப அழைக்கப்பட்ட ஆறு அதிகாரிகளில் இந்தியத் தூதர் சஞ்சய் வர்மாவும் ஒருவர்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், சஞ்சய் வர்மா இந்தியாவின் மூத்த இராஜதந்திரி என்றும், அவர் 36 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார் என்றும் கூறியிருக்கிறது.

அதேநேரம், தூதரக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட இராஜாங்கச் சட்ட விலக்கினை (diplomatic immunity) நீக்கவும், விசாரணைக்கு ஒத்துழைக்கவும் இந்தியா மறுத்துவிட்டதாகவும், அதன் பின்னரே அவர்களை வெளியேற்ற முடிவு எடுக்கப்பட்டதாகவும் கனடா கூறுகிறது.

30 ஆண்டுகளுக்கும் மேலான சஞ்சய் வர்மாவின் இராஜதந்திரப் பணி ஹொங்கொங்கில் உள்ள இந்திய உயர் ஆணையத்தில் இருந்துதொடங்கியது. அதன் பிறகு சீனா, வியட்நாம் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் அவர் பணியாற்றினார்.


கனடாவுக்கான இந்திய தூதர் சஞ்சய் வர்மா

இத்தாலியில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரியாகப் பணியாற்றுவதற்கு முன்பு, அவர் சூடானுக்கான இந்திய தூதராக இருந்தார்.

சூடானில் இருந்து இந்தியா திரும்பிய அவரை, இந்திய அரசு முதலில் வெளியுறவு அமைச்சகத்தின் இணைச் செயலாளராகவும், பின்னர் கூடுதல் செயலாளராகவும் நியமித்தது.

இதன் பிறகு, 2019ஆம் ஆண்டு மே மாதம், அவர் ஜப்பானுக்கான இந்தியத் தூதரானார். 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை அப்பணியில் இருந்தார்.

அதன் பிறகு, கனடாவுக்கான இந்திய உயர் ஆணையராக வர்மா நியமிக்கப்பட்டார்.

பெங்காலி பேசும் சஞ்சய் வர்மா, ஹிந்தி, ஆங்கிலம், மற்றும் சீன மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

இந்த ஆண்டு ஜூன் மாதம், கனடா நாடாளுமன்றக் குழு அறிக்கை ஒன்று, கனடாவின் ஜனநாயகத்திற்கு சீனா மிகப்பெரிய அச்சுறுத்தல் என்றும், இரண்டாவது பெரிய வெளிநாட்டு அச்சுறுத்தல் இந்தியா என்றும் விபரித்திருந்தது.

கனடா தேசியப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழுவின் நாடாளுமன்ற அறிக்கையில், கனடாவில் இந்தியாவின் தலையீடு படிப்படியாக அதிகரித்து வருவதாகக் கூறப்பட்டிருந்தது.

கனடா தலைவர்கள், ஊடகங்கள் மற்றும் இந்திய - கனடா கலாசார சமூகங்களை இந்தியா குறிவைப்பதாக அந்த அறிக்கை குற்றம் சாட்டியிருந்தது.

அப்போது கனடாவுக்கான இந்தியத் தூதர் சஞ்சய் வர்மா அந்தச் செய்தியை நிராகரித்திருந்தார்.

நியாயமான விசாரணைக்கு இந்தியாவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும், சாட்சிகளைக் குறுக்கு விசாரணைக்குக் கூட அனுமதிக்கவில்லை என்றும் அவர் அதில் கூறியிருந்தார்.

“இந்த அறிக்கை இந்தியாவுக்கு எதிரான சக்திகளின் தூண்டுதலால் வெளியிடப்பட்டது. நீங்கள் ஆதாரத்தை வழங்க வேண்டும். ஆனால் இதில் நான் அப்படி எதையும் பார்க்கவில்லை” என்று அவர் கூறியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்றும், கனடாவின் அமைப்புகள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைச் சேதப்படுத்த விரும்புவதாகவும் அவர் கூறியிருந்தார்.

ஊடகமொன்றிடம் பேசிய வர்மா, “காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு நிறைய அரசியல் இடத்தை கனடா வழங்கியுள்ளது. எனவே அவர்கள் தங்கள் பினாமிகள் மூலம் இந்த முழுச் செயல்முறையையும் தூண்டியிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்” என்று கூறியிருந்தார்.

இருநாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் தீவிரமடைந்துள்ளதனால், இந்தியா மீது கனடா பொருளாதாரத் தடைவிதிப்பதற்கு எதிர்காலத்தில் வாய்ப்பிருப்பதாக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

எஸ்.சாரங்கன்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

## மிக முக்கிய ஆவணங்களை கையளிப்பதற்கு தயார்

**அமைச்சர் விஜிதவுக்கு முன்னாள் எம்.பி. உதய கம்மன்பில கடிதம்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான தன்னிடமுள்ள மிக முக்கியமான பாதுகாப்பு விடயங்கள் அடங்கிய ஆவணங்களை கையளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்திப்பதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அனுமதி கோரியுள்ளார்.

இதனை அடுத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆவணங்களை மறைத்த விவகாரத்தில் திடீர் திருப்பம் தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அடிப்படையில் மிகவும் முக்கியமான ஆவணங்களை பகிரங்கப்படுத்துவதற்கு தயாரில்லையென தெரிவித்துள்ள முன்னாள் எம்.பி. உதய கம்மன்பில, இதன் காரணமாக அமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் அமைச்சருக்கு குறுஞ்செய்தியை அனுப்பியதாகவும் அதற்கும் பதில் இல்லை. இந்நிலையில் அவரை தொடர்பு கொள்வதற்கான அனுமதி கோரி பதிவு தபால் மூலம் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தன்னிடமுள்ள ஆவணங்களை பொறுப்பான முறையில் கையளிக்க விரும்புவதாகவும் முன்னாள் எம்.பி. உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

இடைநிறுத்தி வைக்கப்பட்ட

## கொழும்பு – மட்டக்களப்பு ரயில் சேவைகள் மீண்டும் வழமைக்கு

மட்டக்களப்புக்கான எண்ணெய் தாங்கி சரக்கு ரயிலுடன் காட்டு யானைகள் மோதி விபத்துக்குள்ளானதை தொடர்ந்து கொழும்பு, கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் இடைநிறுத்தப்பட்ட ரயில் சேவைகள் நேற்று சனிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

கல்லோயா மற்றும் ஹிங்குராக்கொட ரயில் நிலையங்களுக்கிடையில் நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் எரிபொருள் ரயிலுடன் காட்டு யானைகள் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்ததுடன், ரயிலும் தடம்புரண்டது. இந்த விபத்தின் பின்னர் மட்டக்களப்பு கொழும்பு பிரதான ரயில் பாதையில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. இந்நிலையில் தடம்புரண்ட ரயில் சீர்செய்யப்பட்டதை அடுத்து தற்போது மட்டக்களப்பு கொழும்பு பிரதான ரயில் பாதையில் ரயில் சேவைகள் மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாகவும், அத்திணைக்களம் மேலும் தெரிவித்தது.

HPV தடுப்பூசி செலுத்துவதால்

## தென்படும் அறிகுறிகளால் அச்சமடைய தேவையில்லை

**சுகாதார அமைச்சு**

கர்ப்பப்பைவாய் புற்றுநோயை தடுக்கும் நோக்கில் *Human Papillomavirus (HPV)* தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் தென்படும் அறிகுறிகள் தொடர்பாக பாடசாலை மாணவிகள் வீணாக அச்சமடைய தேவையில்லையென, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"களுத்துறை பிரதேசத்திலுள்ள ஆரம்ப பாடசாலையொன்றில் கல்வி கற்கும் ஐந்து மாணவிகளுக்கு *Human Papillomavirus (HPV)* தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் அம்மாணவிகளுக்கு வயிற்றுவலி, குமட்டல் மற்றும் தலைவலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டன. எவ்வாறாயினும் சுகயீனமுற்ற அவர்களுக்கு உரிய வைத்திய சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் அவர்கள் குணமடைந்துள்ளனர்.

தடுப்பூசி செலுத்தப்படும் போது மாணவிகளுக்கு ஏற்படும் அச்சம் காரணமாகவே இவ்வாறான நிலைமை ஏற்படுகிறது" எனக் குறிப்பிட்டுள்ளது.

## மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவுதினம்

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று யாழ். ஊடக அமையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். ஊடக அமையத் தலைவர் கு.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிமலராஜனின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, சுடர் ஏற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

போர் சூழல் நிலவிய காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து ஊடக பணியாற்றிய இவர், பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவைகள், வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களுக்கும் பணியாற்றியிருந்தார். 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி துப்பாக்கி பிரயோகத்தில் இவர் உயிரிழந்திருந்தார்.

## இந்திய விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

### கட்டுநாயக்கவில் அவசர தரையிறக்கம்



மும்பையிலிருந்து கொழும்புக்கு வந்த விஸ்தாரா விமானத்துக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்து விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதென விமான போக்குவரத்து பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு 14.51 மணிக்கு வரவிருந்த விஸ்தாரா விமானத்தில் வெடிகுண்டு மிரட்டலையடுத்து அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன், விமானத்தின் கேப்டனுக்கு வெடிகுண்டு மிரட்டல் குறித்துஅநாமதேய தொலைபேசி அழைப்பு கிடைத்துள்ளது.

இந்த அச்சுறுத்தல் குறித்து அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து, சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவசர நிலை அறிவிக்கப்பட்டது.

96 பயணிகள் மற்றும் 08 பணியாளர்களுடன் விமானம் 14.49 மணிக்கு விமான நிலையத்தில் நேற்று பத்திரமாக தரையிறங்கியது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து பயணிகளும் விமானத்திலிருந்து விரைவாக வெளியேற்றப்பட்டு பயணிகள் முனையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அனைத்து பயணிகளின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டது.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட் (ஏஏஎஸ்எல்) மற்ற அதிகாரிகளுடன் சேர்ந்து இதுபோன்ற சம்பவங்களுக்காக நிறுவப்பட்ட நிலையான நெறிமுறைகளைப் பின்பற்றியது மற்றும் அனைத்து பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தது.

## கல்முனையில் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நடமாடும் சேவை

(நற்பிட்டிமுனை நிருபர்)



அம்பாறையின் கல்முனை பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களுக்கான நடமாடும் சேவை கடந்த புதன்கிழமை நற்பிட்டிமுனை பொது நூலக முன்னரங்கில் இடம்பெற்றதோடு, இதில் முப்பது பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அரச கால்நடை வைத்தியர் டாக்டர் எஸ்.எம்.நபீர் தலைமையில் தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் புதிய பண்ணை வளர்ப்பாளர்களுக்கான ஆலோசனை, நோய் வாய்ப்பட்ட கால்நடைகளுக்கான மருந்து ஏற்றும் முறை, புதிய பண்ணைகளை பதிதல், இலவச மருந்து வழங்கல் ஆகிய செயற்பாடுகள்இடம்பெற்றன. அரச கால்நடை வைத்தியர் எஸ்.எம்.நபீரிடம் கேட்டபோது, பொதுமக்கள் நலன் கருதி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பயனாளிகளின் நேரம் மற்றும் பண விரயரத்தை தடுப்பதே இந்த நடமாடும் சேவையின் நோக்கமெனக் கூறினார். கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை பிரதேச பண்ணையாளர்கள் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான மோ. சைக்கிள்

(ஓமந்தை விசேட நிருபர்)



பரந்தன் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று நேற்று சனிக்கிழமை அதன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இந்நிலையில் மேற்படி மோட்டார் சைக்கிள் கடைக்குள் நுழைந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியிலுள்ள நகை கடையொன்றுக்குள் அக்கடை கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு நுழைந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

### எங்கள் கருத்து...

## பொதுப்பரீட்சைகளுக்குள் ஊடுருவும் விஷமிகள்?

முதலில் புரிந்து கொள்வது அவசியம். வினாத்தாள்கள் கசிவதற்கு எந்தத் தரப்பினர் காரணமாக இருக்கிறார்களோ, அங்குள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வினாத்தாள் தயாரிப்புடன் சம்பந்தப்பட்ட எவராவது ஒருவரின் சம்பந்தமின்றி வினாக்கள் வெளியே கசிவதற்கு வாய்ப்பே கிடையாது. எனவே வினாத்தாள் தயாரிப்புக்குப் பொறுப்பானவர்களைத் தெரிவு செய்வதில் கண்டிப்பான நடைமுறைகள் பின்பற்றப்படுவது அவசியமாகின்றது.

இவ்விடயத்தில் குற்றம் இழைப்போருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதும் முக்கியம்.

ரியூசன் ஆசிரியர்களுக்கிடையிலான போட்டாபோட்டிகள்தான் வினாத்தாள் கசிவதற்கான பிரதான காரணமென்று கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளை ஒதுக்கிவிட முடியாதிருக்கின்றது. தங்களிடம் கற்கின்ற மாணவர்களை திறமையாக சித்திபெறச் செய்வதன் மூலம், தங்களின் ரியூஷன் மாணாக்கர்களை கவர்ந்திழுத்துக் கொள்ளலாமென்று ஆசிரியர்கள் பலர் எண்ணுகின்றனர். பணஉழைப்புதான் இங்கு குறியாகின்றது.

அதேசமயம், தங்களது பிள்ளைகளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்வதற்கு எந்தத் தியாகத்தையும் செய்வதற்கு பெற்றோர் பலர் தயாராக உள்ளனர். பெற்றோரின் பலவீனத்தைப் புரிந்தவாறு சில ஆசிரியர்கள் பணத்துக்காக தவறான காரியங்களில் ஈடுபடுகின்றனரோ என்ற சந்தேகமும் இங்கே நிலவுகின்றது.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்ற இலட்சியத்துடன் மாணவர்கள் அல்லும்பகலும் படாதபாடு படுகின்றனர். இவர்களில் ரியூஷன் வகுப்புக்குச் செல்ல முடியாத வறிய மாணவர்களும் உள்ளனரென்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறிருக்க, குறுக்குவழியினால் மாணவர்கள் சித்தியடைவதென்பது நியாயமானதல்ல. அதனைப் பாவச்செயலென்றே கொள்ள வேண்டும்.

சிரமப்பட்டுக் கற்கின்ற மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதற்கு இடமளிக்கலாகாது.

கல்வியை காசாக்க நினைக்கும் குற்றச் செயல்களைக் களைந்தால்தான் பரீட்சைகள் மீது மாணவர்களுக்கு முழுதான நம்பிக்கை ஏற்படுமென்பதை மறந்து விடலாகாது.

### அரசியல் ஆதாயம்...

உதய கம்மன்பில வெளியிடவுள்ள அறிக்கையில் கத்தோலிக்க திருச்சபைக்கு எவ்வித அக்கறையும் இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.

எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை அரசியலுக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டாமெனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையை தொடர இடமளிக்குமாறும் அருட்தந்தை சிறில் காமினி மேலும் தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சனல் ஃபோ ஒளிபரப்பிய ஆவணப்படம் நிகழ்ச்சியில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மூவர் அடங்கிய குழுவை நியமித்திருந்த போதிலும், அது தொடர்பான அறிக்கை இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. அந்த அறிக்கை காணாமல் போயுள்ளதாகவும் சில தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### பெருந்தோட்டத்துறையினர்...

தெரிவிக்கையில், "தேசிய மக்கள் சக்தியின் சங்கமான ஐக்கிய இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைத்துள்ளோம்.

பெருந்தோட்டத் தொழிலாளரின் அடிப்படை சம்பளம் தற்போது 1,350 ஆக உள்ளது.1,700 எல்லோராலும் முடியாது.

ஆனால் இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு அதுவும் போதாது. அவர்களின் சம்பளம் குறைந்தது 2,000 ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தோட்ட மக்கள் பல்வேறு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். ஆனால் இலங்கையைத் தவிர எல்லா இடங்களிலும் அவர்கள் நல்ல நிலையில் வாழ்கின்றனர். அவர்கள் இன்னும் 200 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் அடிமைகளாகவும் தினக்கூலிகளாகவும் இருக்கின்றனர். அந்த நிலை மாற வேண்டும். தேசிய மக்கள் படை தினக்கூலிகள் என்ற நிலையை மாற்றி மற்றவர்களுடன் சமமாக குடிமக்களாக வாழ வைக்க முயற்சிக்க வேண்டும். எமக்கு வாக்களித்தாலும் இல்லாவிட்டாலும் கடந்த 76 வருடங்களில் மலையக மக்களுக்கு யாரும் வழங்காத அங்கீகாரத்தை தேசிய மக்கள் படை நிச்சயம் வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இந்திய அரசின்...

ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் தலா ஒரு பாடசாலையும் அடங்குகின்றன.

இதன் மூலம் இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைளை தரம் உயர்த்தும் திட்டத்துக்கு இந்தியா 600 மில்லியன் ரூபாவை வழங்கும்.

இலங்கையின் கல்வித்துறையில் இந்தியாவால் மேற்கொள்ளப்படும் பல கூட்டு முயற்சிகளின் பட்டியலில் இந்தத் திட்டம் சேர்க்கப்படும். உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உபகரண விநியோகத்துக்கான உதவியை தவிர பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு என்பனவும் இவற்றில் அடங்கும்.

இந்திய வம்சாவளி தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 750 மில்லியன் ரூபா பல்துறை நிதி உதவியின் கீழ் தோட்டப் பாடசலைகளுக்கான (STEM) *Science, Technology,Engineering, and Mathematics* அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித பாடங்களில் 3 மாத ஆசிரியர் பயிற்சித் திட்டமும் அண்மையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிறந்து 45 நாட்களேயான சிசு உயிரிழப்பு

யாழ். விசேட நிருபர்

பிறந்து 45 நாட்களேயான சிசுவொன்று உயிரிழந்துள்ள சம்பவம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த துஸ்யந்தன் மற்றும் தனுசியா தம்பதியினரின் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது

இந்த சிசுவுக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் கடந்த 14ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இச்சிசு மாற்றப்பட்டது. இந்நிலையில் நேற்றையதினம் சிகிச்சை பலனின்றி இச்சிசு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஐஸ் போதைப்பொருளுடன்...

35 வயது வர்த்தகரே கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த வர்த்தகர் மலேசியாவிலிருந்து நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இந்நிலையில் வர்த்தகர் விமான நிலையத்தின் *Green Channel* வழியாக வெளியேற முயன்ற போது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதன்போது வர்த்தகர் கொண்டு வந்த பயணப்பொதிகளை திறந்து பார்த்த போது தேயிலை பொதிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

தேயிலை பொதிகளில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்ட 10 கிலோ 179 கிராம் ஐஸ் போதைப்பொருளை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.இதனை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைக்காக விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

### யாழ்தேவி ரயில் சேவை...

உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்நிலையில் நாளை ரயில் சேவையை ஆரம்பிக்கும் நோக்குடன் நேற்று மஹவ முதல் அநுராதபுரம்வரை பரீட்சார்த்த ஓட்டம் நடத்தப்பட்டது.

இதனை அடுத்து ரயிலை எந்தளவு வேகத்தில் இயக்குவது என்பது தீர்மானிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹவ முதல் அநுராதபுரம்வரை சுமார் 40 கிலோமீற்றர் வேகத்தில் இயக்குவதற்கும் அநுராதபுரம் முதல் காங்கேசன்துறைக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் இயக்க முடியுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு ரயில் பாதையில் சமிக்ஞை முறைமைகள் ஸ்தாபிக்கப்படாததன் காரணமாக பாதுகாப்பற்ற முறையில் ரயில்களை இயக்குவதற்கு ரயில் சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் நிலைய அதிபர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

மஹவ முதல் அநுராதபுரத்துக்குமிடையிலான ரயில் பாதையில் 7 ரயில் கடவைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு பயணிகள் பஸ்கள் தொடர்ச்சியாக பயணிப்பதாகவும், மக்களும் தொடர்ந்து பயணிப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடவைகள் முற்றிலும் பாதுகாப்பற்றவையென்றும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால் முதற்கட்டமாக இந்த ரயிலை மணிக்கு 40 கி.மீ வேகத்தில் இயக்க ரயில்வே துறை எதிர்பார்த்துள்ளது.

இந்திய கடன் உதவியின் கீழ் ரயில்கள் மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் செல்லும் வகையில் இந்தப் பாதை புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் வாக்குகளை வசீகரிக்க முட்டிமோதும் தமிழ்க் கட்சிகள்!




**தமிழ் தேசியக் கூட்டணி பல கூறுகளாக பிளவுண்டு போனது ஒருபுறமிருக்க, அதன் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சியும் இரு துருவங்களாகி தேர்தல் களத்தில்!**

**பொதுத்தேர்தலுக்கு இன்னமும் ஒரு மாதத்தை விடக் குறைந்த நாட்களே உள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் வாக்கு வேட்டைக்கான போட்டியில் தமிழ்க் கட்சிகள் முட்டிமோதத் தொடங்கியுள்ளன.**



அண்மைக்கால அரசியல் வரலாற்றில் தமிழ்க் கட்சிகள் தமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாமல், பல அணிகளாகப் பிரிந்துநின்று வாக்குக் கேட்கும் ஒரு தேசியத் தேர்தலாக இத்தேர்தல் அமைகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்த ஆசனங்களில் இம்முறை ஒரு ஆசனம் குறைவடைந்திருக்கும் நிலையில், வாக்குக் கேட்கும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மை மற்றும் சுயநலத் தன்மை என்பவற்றின் வெளிப்பாடாகவே இந்தப் பிரிவுகளைப் பார்க்க முடிகின்றது. பொதுத்தேர்தல் என வரும்போது, வேட்பாளர் தெரிவின் காரணமாக கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படுவது என்பது சாதாரண விடயம். பிரதான கட்சிகள் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன. இது போன்று வேட்பாளர் தெரிவினால் பூசலைச் சந்தித்துள்ள கட்சியாகத் இலங்கைத் தமிழரசுக் கட்சி காணப்படுகின்றது.

ரணிலுக்கு ஆதரவு வழங்கினர். இதற்கும் அப்பால், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்துவிட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த மாவை சேனாதிராசா, கட்சியின் தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாசவுக்கு முதலாவது விருப்பத் தெரிவையும், ரணிலுக்கு இரண்டாவது விருப்பத் தெரிவையும் வழங்கியுள்ளேன் எனக் கூறியிருந்தமை சமூக ஊடகங்களில் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது.

இவ்வாறு ஏற்கனவே பிளவுகளைக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியானது பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு விடயத்தில் முற்றாகச் சிதைவடைந்து விட்டது. ஏற்கனவே தலைமைத்துவத்துக்கு குறிவைத்திருந்த எம்.

## பிளவுபட்டுள்ள வீடு:

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்திற்கான தெரிவு விடயத்தில் ஆரம்பமான உட்கட்சிப் பூசல் பொதுத் தேர்தலில் பூதகரமாகி பிளவு நிலைக்குச் சென்றுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதில் சிவஞானம் சிறிதரனுக்கும், எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. தமக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ள இரு தரப்பினரும் கட்சிக்குள்ளேயே பிரசாரங்களை முன்னெடுத்தனர்.

இதனால் தமிழரசுக் கட்சி இரு அணியாக உடைந்தது. கடும் போட்டியின் மத்தியில் நடைபெற்ற வாக்கெடுப்பில் சிறிதரன் வெற்றிபெற்றாலும், பொதுச்செயலாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு இடம்பெற்ற தெரிவில் குளறுபடி நடந்தமையால், அனைத்துத் தெரிவுகளையும் இரத்துச் செய்வதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்தார்.

இதனால் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டாலும் அப்பதவியில் செயற்பட முடியாத நிலைக்கு சிறிதரன் தள்ளப்பட்டார். இதற்கு எதிராக நீதிமன்றம் சென்றபோதும், பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க இணங்கப்பட்டது.








இவ்வாறான பின்னணியில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் மீண்டும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இது கருத்து முரண்பாடு என்பதற்கு அப்பால் ஒவ்வொருவரும் தமக்கு விருப்பமான முடிவுகளை எடுத்துக் கொண்டு செயற்பட்டனர் என்று கூறுவதே பொருத்தம்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க அரசியல் குழு தீர்மானித்ததாக சுமந்திரன் ஊடகங்களுக்கு அறிவித்தபோதும், ஆரம்பம் முதலே பொதுவேட்பாளருக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை சிறிதரன் கொண்டிருந்தார். குறித்த கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளாத போதும், தனது நிலைப்பாட்டை எழுத்துமூலம் அறிவித்திருந்தார்.

எனினும், சுமந்திரனின் அறிவிப்புப் பற்றியோ, கட்சி எடுத்த முடிவு பற்றியோ தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறிய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கட்சிக்குள் இருக்கும் குழப்பத்தை பொதுவெளிக்கு அம்பலப்படுத்தினார். கட்சி ரீதியான முடிவுகள் எட்டப்பட்ட பின்னர் ஜனாதிபதி வேட்பாளராகவிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மாவையும் அவருடைய மகனும் தனியாகச் சந்தித்திருந்தனர்.

மாவை சேனாதிராசா மாத்திரமன்றி தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் விநோனோகராதலிங்கம் ஆகியோரும் சந்தித்து

ஏ.சுமந்திரன், தனக்கு ஆதரவானவர்களையே வேட்பாளர்களாகத் தெரிவு செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கள் பலதரப்பில் இருந்தும் சுமத்தப்படுகின்றன.

இருந்தபோதும், சிறிதரனையும் யாழ் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கியிருந்தார். சிறிதரனைத் தவிர ஏனைய அனைவரும் சுமந்திரனுக்கு ஆதரவானவர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதற்கிடையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து தான் விலகுவதாகவும், தனக்குப் பின்னர் தலைவராகச் செயற்படுமாறு சிறிதரனைக் கோருவதாகவும் மாவை சேனாதிராசா கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் சிறிதரன் மாவை சேனாதிராசாவிடம் ஆசிபெற்றார். அதேநேரம், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின தலைவராக இருந்த சட்டத்தரணி தவராசாவும் வேட்பாளர் தெரிவில் அதிருப்தியடைந்த நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஐங்கரநேசன் போன்றவர்களை இணைத்துக்கொண்டு சுயேச்சையில் களமிறங்கியுள்ளனர்.

இவர்களும் மாவை சேனாதிராசாவைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். பழம்பெரும் கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராசா கட்சியைக் கட்டுக்கோப்பாக வழிநடத்திச் சென்றிருந்தால் தமிழரசுக் கட்சி பிரிவுகளைச் சந்தித்திருக்காது. அது மாத்திரமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்பட்ட காலத்திலும் தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான முடிவுகளாலேயே கூட்டமைப்பிலிருந்து பங்காளிக் கட்சிகள் விலகிச் சென்றிருந்தன.

அமரர் இரா.சம்பந்தன் கூட்டமைப்பை இழுத்துப்பிடித்து ஒற்றுமையாக்கி வைத்திருந்தபோதும், இறுதிக் காலத்தில் அவருடைய உடல்நிலை சீர்குலைந்ததும் தமிழ்க் கூட்டமைப்பின் ஒற்றுமையும் சீர்குலைந்து தற்பொழுது பல பிரிவுகளாகி தமிழரசுக் கட்சியும் பிளவுகளைச் சந்தித்துள்ளது.

## பங்காளிக் கட்சிகள்:

தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் முரண்பாடுகள் ஒருபுறமிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் ஆகியவை தமிழரசுக் கட்சி தொடர்பில் அதிருப்தி கொண்டவையாக இருந்தன.

புலிகள் இயக்கத்தால் 2004 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மேற்குறிப்பிட்ட கட்சிகளுடன், அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும் பங்காளியாக இருந்தது. யுத்தம் முடிவடைந்ததும் தமிழரசுக் கட்சியிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் முதலில் வெளியேறியது, அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப் வெளியேறியது.

ரெலோ, புளொட் ஆகியவை கூட்டமைப்பாகச் செயற்பட்டாலும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடத்தப்படவிருந்த தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட முயற்சித்தமையால் ஏனைய கட்சிகள் புதிய கூட்டணியொன்றை அமைத்தன. அதில் ஈ.பி.ஆர்.எல்.எப், சிவாஜிலிங்கம், சிறிகாந்தா, சி.வி.விக்னேஸ்வரன் எனப் பலரையும் ஒன்றிணைத்துக் கூட்டணி அமைத்தனர். இந்தக் கூட்டணியினரே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரையும் களமிறக்கியிருந்தனர்.

இந்தக் குழுவினர் தற்பொழுது பொதுத் தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றனர். பொதுவேட்பாளருக்கு வழங்கப்பட்ட சங்கு சின்னத்தை அவர்கள் அபகரித்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டு அவர்கள் மத்தியில் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் ஒற்றுமையை சர்வதேசத்துக்குப் பறைச்சாற்றப் போகின்றோம் எனக் கூறிப் பொதுவேட்பாளரைக் களமிறக்கிய இத்தரப்பினர் சுயநலமாகச் செயற்பட்டு மக்களைப் பிழையாக வழிநடத்தி சங்கு சின்னத்தை அபகரித்து, தற்பொழுது பொதுத் தேர்தலில் போட்டியிடுவதாக அவர்கள் மீது குற்றச்சாட்டு வைக்கப்படுகின்றது.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் உறுப்பினரான மறைந்த ரவிராஜின் மனைவிக்கு தமிழரசுக் கட்சி போட்டியிட சந்தர்ப்பம் வழங்காத நிலையில், சங்கு சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியுடன் காணப்படும் பழைய கணக்கைத் தீர்க்கும் வகையில் இவர்கள் செயற்படுவது போட்டியான அரசியல் என்பதற்கு அப்பால் சுயநல அடிப்படையிலான அரசியல் என்றே கூற வேண்டும்.

## பாராளுமன்றத்தைப் புறக்கணிக்காத கஜேந்திரர்கள்:

கடந்த ஜனாதிபதித் தேர்தலை முற்றாகப் புறக்கணித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுத்தேர்தலில் வழமை போல தனித்துப் போட்டியிடுகின்றது.

கடந்த பொதுத்தேர்தலில் ஒரு ஆசனத்தை வெற்றிபெற்றும் தேசியப் பட்டியல் மூலம் மற்றுமொரு ஆசனமும் அவர்களுக்குக் கிடைத்தது. இம்முறையும் இரு கஜேந்திரர்களையும் முன்னிலைப்படுத்தி வாக்குக் கேட்கின்றனர்.

எதிர்ப்பு அரசியலை மாத்திரம் இவர்கள் முன்னெடுப்பதாக வடக்கு தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்கள், தேர்தல் காலத்தின் போது மாத்திரம் மக்களை உசுப்பேற்றும் அரசியலைச் செய்வதாக மக்கள் மத்தியில் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. ஆளுமை மிக்க அரசியல் தலைவராக வருவார் என எதிர்பார்க்கப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் ஆரம்ப காலகட்டங்களில் இரா.சம்பந்தனின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவராகத் திகழ்ந்தார். ஆனால் அவர் பின்னாளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தார். அவரின் வெற்றிடத்திற்கே பின்னாளில் சுமந்திரன் பொருந்திக் கொண்டார்.

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த செல்வராஜா கஜேந்திரன் கடந்த காலங்களில் 'பொங்கு தமிழ்' போன்ற இளைஞர்களை உருவேற்றும் செயற்பாடுகளாலேயே பாராளுமன்றம் சென்றவர் என்ற அபிப்பிராயம் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் என அவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தீர்மானம் எடுத்திருந்தனர். எனினும், பாராளுமன்றத் தேர்தலில் அவர்கள் களமிறங்கியிருப்பது சுயநல ரீதியான அரசியலாகவே பார்க்கப்படுகின்றது. இருந்தபோதும், மக்கள் அவர்கள் மீது எவ்வாறான நம்பிக்கையைக் கொண்டுள்ளார்கள் என்பதைத் தேர்தல் முடிவுகளை வைத்துத்தான் பார்க்க வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சிகள் இவ்வாறு பலகூறாகப் பிரிந்து தேர்தலில் நிற்பதால் யாருக்கு வாக்களிப்பதென்ற குழப்பத்தில் தமிழ் மக்கள் உள்ளனர். தமிழ்ப் பிரதிநிதித்துவம் குறைவதற்கான அறிகுறியும் தென்படுகின்றது.

# ஜம்மு–காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா முன்இருக்கும் சவால்கள்?




இந்திய அரசியலில் எதிர்பார்ப்பை உண்டாக்கிய ஜம்மு காஷ்மீர் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்று ஜம்மு, காஷ்மீர் யூனியன் பிரதேசங்களின் தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத் தலைவரான உமர் அப்துல்லா முதலமைச்சராக பதவியில் அமர்ந்துள்ளார். ஜம்மு, காஷ்மீரில் மொத்தமுள்ள 90 தொகுதிகளுக்கு மூன்று கட்டங்களாக நடைபெற்ற பேரவைத் தேர்தலில் தேசிய மாநாட்டுக் கட்சி காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

தேசிய மாநாட்டுக் கட்சி 42 இடங்களிலும் காங்கிரஸ். 6 இடங்களிலும் மார்ச்சிஸ்ட் கட்சி ஓரிடத்திலும் வெற்றி பெற்றன. இந்நிலையில் இக்கூட்டணிக்கு 4 சுயேச்சைகளும் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த ஒருவரும் ஆதரவு தெரிவித்ததால் இந்த கூட்டணிக்கு சட்டப்பேரவையில் பலம் 54 ஆக உயர்ந்துள்ளது. ஆட்சியமைக்க முழுமையான ஆதரவு இருப்பதால் ஜம்மு, காஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி தலைமையில் ஆட்சி அமைந்திருக்கிறது.

முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள உமர் அப்துல்லாவுக்கு சவால்கள் நிறைய இருப்பதோடு ஆட்சியை எவ்வாறு வழி நடத்துவார்? மத்தியில் பா.ஜ.க தலைமையிலான அரசு ஜம்மு, காஷ்மீருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யுமா? என்ற எதிர்பார்ப்பும் கூடியிருக்கிறது. ஜம்மு, காஷ்மீர் மக்கள் பா.ஜ.கவுக்கு முழுமையான ஆதரவு தருவார்கள் என்ற எதிர்பாப்பு இருந்த நிலையில் அங்கு தோல்வியுற்றதால் பா.ஜ.க ஆட்சியமையாத மாநிலங்களின் மீதுள்ள பார்வை போல ஜம்மு, காஷ்மீரையும் பார்க்குமோ என்று ஆரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

ஜம்மு, காஷ்மீரில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய மாநாட்டுக்கட்சியின் அரசு அமைந்துள்ளது. உமர் அப்துல்லாவைத் தொடர்ந்து தேசிய மாநாட்டுக் கட்சியில் உள்ள மெந்தர் ஜாவேத் அகமது ராணா, ஜாவித் அகமது தர், சாகினா இட் டூ , சதீஷ் சர்மா ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். முதலமைச்சராக பதவியேற்றுள்ள உமர் அப்துல்லா காவல் துறையினருக்கு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளார்.

முதல்வர், அமைச்சர்கள், முக்கிய பிரமுகர்கள் வீதிகளில் செல்லும் போது போக்குவரத்தை நிறுத்துதல், பொதுமக்களை தொந்தரவு செய்தல் இருக்கக் கூடாது. இதேபோல முதலமைச்சராக நான் செல்லும் பாதைகளிலும் போக்குவரத்தை தடைசெய்யக்கூடாது. பொதுமக்களுக்கு ஏற்படும் தொந்தரவு மிகவும் குறைந்துவிட வேண்டும். வாகனங்களில் சைரன்களை ஒலிப்பதை குறைக்க வேண்டும். இதையே என்னுடைய அமைச்சர்களும் பின்பற்றுவார்கள் என்று வலியிறுத்தியுள்ளார்

மக்களுக்கு சாதகமான வகையில் நாங்கள் நடந்து கொள்வோம். நாங்கள் மக்களுக்கு சேவை செய்யவே வந்துள்ளோம். அவர்களை தொந்தரவு செய்வதற்கு அல்ல என்றும் தெரிவித்துள்ளார். இது வரவேற்கக் கூடியது என்றாலும் நடைமுறை சாத்தியங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் ஜம்மு, காஷ்மீர் பகுதிகளில் ஏற்பட்ட துயரங்கள் மீண்டும் ஏற்படாது என்பதற்கு



எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. ஆட்சியாளர்கள் நல்வழியிலேயே பயணிக்க வேண்டும் என்று நினைத்தாலும், மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பது போல மீண்டும் மக்களை அச்சுறுத்தாமல் இருக்கவும் பாதுகாப்பான சுதத்திரடனும் மக்கள் வாழ வேண்டும் என்பதிலும் தற்போதுள்ள ஆட்சியாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். தீவிரவாதம் தலை தூக்காமல் இருக்க காவல் துறையினருக்கு கட்டுப்பாடுகளை விதிக்காமல் கண்காணிப்புடன் இருக்க வலியுறுத்த வேண்டும்.

தேசிய மாநாட்டுக் கட்சிக்கு சுயேட்சுகள் 4 பேர் ஆதரவு வழங்கியுள்ளதால் காங்கிரஸ் கட்சியின் அதரவு இல்லாமலே ஆட்சியமைக்க பெரும்பான்மை இருப்பதால் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் பங்கு கொள்ளாமல் வெளியில் இருந்து ஆதரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில் ஆட்சியில் அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சிக்கு ஒரேயொரு இடம் ஒதுக்க தேசிய மாநாட்டுக் கட்சி முன் வந்ததாகவும் காங்கிரஸ்கட்சி அதை ஏற்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆட்சியில் பங்கு பெறாமல் இருப்பதால் ஜம்மு, காஷ்மீரில் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தலாம் என்றும் காங்கிரஸ் நினைக்கலாம். ஆனால், மாநில கட்சி பலமாக இருக்கும் போது காங்கிரஸால் என்ன செய்ய முடியும்? என்ற வினாவும் எழுகிறது. மத்தியில் எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியால் ஜம்மு காஷ்மீருக்காக குரல் கொடுக்கலாம் வேறு என்ன செய்து விட முடியும் என்று தேசிய மாநாட்டுக் கட்சியும் நினைக்கலாம்

ஜம்மு, காஷ்மீர் யூனியன் பிரதேச மக்கள் ஜனநாயகத்தை பெருமைப்படுத்தக் கூடிய வகையில் அதிக எண்ணிக்கையில் வாக்களித்துள்ளனர். புதிய அரசாங்கத்திடம் நிறைய எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக நிம்மதியாக வாழ விரும்புகின்றனர், வாழ்வாதாரம், வேலையில்லாத் திண்டாட்டம், போதைப்பொருள் அச்சுறுத்தல், அதிக மின்சாரக் கட்டணம், மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி போன்ற முக்கிய பிரச்சினைகளில் தற்போது அமைந்துள்ள அரசு கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கின்றனர்.

உமர் அப்துல்லாவின் ஆட்சியில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஜம்மு, காஷ்மீரின் மாநில அந்தஸ்தை மீட்டெடுக்க தேசிய மாநாட்டுக் கட்சி போராடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதனை எந்தவிதமான சிக்கலும் இல்லாமல் நடைமுறைப்படுத்தினால் மக்கள் மத்தியில் இவருக்கு இன்னும் கூடுதல் செல்வாக்குக் கிடைக்கலாம், ஆனால், கத்தி மீது நடப்பது போன்ற நிலைமை இருக்கும் போது, இதை எப்படி சாத்தியப்படுத்துவார் என்ற வினாவும் இருக்கிது.

தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றினால் ஜம்மு, காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய சட்டப்பிரிவு 370 ஐ நீக்கிய மத்திய அரசின் முடிவுக்கு எதிராக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுவோம் என்று, தேர்தலுக்கு முன்பாக உமர் அப்துல்லா பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். தற்போது ஆட்சியமைத்திருக்கும் நிலையில் இதில் கவனம் செலுத்துவாரா? என்ற எதிர்பார்ப்பும் மக்களிடம் இருக்கிறது.

ஜம்மு, காஷ்மீர் முதலமைச்சர் உமர் அப்துல்லா முன் மேற்கண்ட சவால்கள் நிறைய இருக்கின்றன. இதை எப்படி எதிர்கொண்டு நல்லாட்சி தரப் போகிறார் என்பதையே அரசியல் நோக்கர்கள் எதிர்பார்க்கின்றனர். தன்னை வெற்றி பெற வைத்த மக்களுக்கு அவர்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு அனைத்து முயற்சிகளை உமர் அப்துல்லா எடுப்பார் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. அந்த துன்பியல்அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு மீண்டெழுவதே முழுமையான வெற்றியைத் தரும் அந்த வெற்றியின் பயன்கள் ஜம்மு, காஷ்மீர் மக்களுக்கு கிடைக்கும் என்றும் நம்புவோம்.

**ஜனாதிபதித் தேர்தலில் அநுர அலையின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட பின்னணியில் நடத்தப்படும் பொதுத்தேர்தலுக்கான களம் விறுவிறுப்படைந்து வருகின்றது. 225 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் இந்தத் தேர்தலில் 8821 பேர் மொத்தமாகப் போட்டியிடுகின்றனர்.**

# ஐக்கிய மக்கள் சக்தி மீது பிரபலங்கள் பலருக்கு விரக்தி தோன்றியது ஏன்?






பொதுத்தேர்தலுக்காக 786 வேட்புமனுக்கள் விண்ணப்பிக்கப்பட்டு அதில் 70 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் தேசியப் பட்டியல்கள் உள்ளடங்கலாக 5464 பேரும், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 3354 பேரும் போட்டியிடுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

29 தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மொத்தம் 469 பேரின் பெயர்களின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் நாடு முழுவதிலும் மொத்தமாக 7452 பேர் போட்டியிட்டிருந்த நிலையில் இம்முறை தேர்தலில் போட்டியிடுபவர்களின் எண்ணிக்கை 1,369 இனால் அதிகரித்துள்ளது.

அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் மாவட்டமாக கொழும்பு காணப்படுகின்றது. இதில் மொத்தமாக 966 பேர் போட்டியிடுவதுடன், கட்சிகள் சார்பில் 567 பேரும், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 399 பேரும் அடங்குகின்றனர். பதினெட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கே இந்தளவு பேர் போட்டியிடுகின்றனர்.

இதற்கு அடுத்தபடியாக 19 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கம்பஹா மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் சார்பில் 528 பேரும், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 374 பேருமாக மொத்தம் 902 பேர் போட்டியிடுகின்றனர். ஐந்து ஆசனங்களைக் கொண்ட பொலன்னறுவை மாவட்டத்திலேயே ஆகக் குறைந்த வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இங்கு அரசியல் கட்சிகள் சார்பில் 104 பேரும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 16 பேருமாக 120 பேர் போட்டியிடுகின்றனர்.

அதேநேரம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 28 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 2,041 பேர் போட்டியிடுகின்றனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 396 பேரும், வன்னி மாவட்டத்தில் 423 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 392 பேரும், திகாமடுல்லை மாவட்டத்தில் 640 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 217 பேரும் போட்டியிடுகின்றனர்.

பொதுத்தேர்தல் களம் பல்வேறு கட்சிகளுக்கு சவாலைக் கொடுத்துள்ளது. பலர் தேர்தலில் குதிக்க ஆர்வம் காட்டியமையால் மாவட்டங்களுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயார்படுத்துவது ஒரு சில கட்சிகளுக்குக் கடும் சிக்கலான காரியமாக அமைந்துவிட்டது. குறிப்பாக அநுர அலை இன்னும் தொடர்வதால் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடிப்பதற்கு கடுமையான போட்டி நிகழ்ந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திசாநாயக்கவுக்கு ஆதரவாகக் களத்தில் நின்று செயற்பட்ட பலரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பினர். எனினும், முக்கியஸ்தர்கள் பலருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம்கிடைக்காமல் போய்விட்டது. தேசிய மக்கள் சக்தி கட்டுக்கோப்பான அரசியல் கலாசாரத்தைப் பின்பற்றி வருவதால் அதிலுள்ள வேட்பாளர்கள் மத்தியில் விருப்பு வாக்குகளுக்கான

## வேட்பாளர் தெரிவின் போது நிகழ்ந்த கசப்பான சம்பவங்கள்!

போட்டிகள் இல்லை. இதனால், வேட்பாளர் பட்டியலில் இடம்கிடைக்காத சிலருக்கு அதிருப்தி காணப்பட்டாலும், அவர்கள் தாம் கொண்டுள்ள கொள்கையில் காணப்பட்டுள்ள பற்றுறுதி காரணமாக தொடர்ந்தும் தமது அமைப்பில் செயற்படுகின்றனர்.

இதற்கு அடுத்ததாக வேட்பாளர் பட்டியலால் சவாலை எதிர்கொண்ட கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி காணப்படுகின்றது. பிரதான எதிர்க்கட்சியாக வரலாம் என எதிர்பார்க்கப்படும் கட்சி என்பதால் இதில் போட்டியிட விரும்புபவர்களின் கேள்வியும் அதிகமாகவே இருந்தது. இதனால் கட்சியின் பங்காளிகள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலரும் விரக்தியடைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சியாகவிருக்கும் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி தேர்தலில் போட்டியிடுவதில்லையெனத் தீர்மானித்தது. சஜித்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேட்பாளர்களுக்கு ஐக்கிய மக்கள் கூட்டணி வாய்ப்பு வழங்காமையால் தேர்தலில் போட்டியிடுவதில்லையென அக்கட்சி தீர்மானித்தது. பங்காளிக் கட்சிகள் மாத்திரமன்றி, தமது கட்சியின் உறுப்பினர்களுக்கே ஐக்கிய மக்கள் சக்தி பாரபட்சமாக நடந்திருப்பது சினிமை நடிகை தமித்தாவின் விடயத்தில் பகிரங்கமானது.

பெயர் பெற்ற நடிகையான தமித்தா கடந்த அரகலய போராட்ட காலத்தில் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றார். பின்னர் தன்னை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைத்து சஜித்துக்காகப் பணியாற்றியிருந்தார். அவரை இம்முறை கேகாலை மாவட்டத்தில் வேட்பாளராகக் களமிறக்குவதற்கு இணங்கி அவர் வேட்புமனுவிலும் கைச்சாத்திட்டிருந்தார். ஆனால் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் அவருடைய பெயர் நீக்கப்பட்டிருந்தது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட தலைமை வேட்பாளர் ஹேஷா விதானகே காரணம் என தமித்தா குற்றஞ்சாட்டியிருந்தார்.

கட்சியின் தலைமைத்துவத்தைப் பிழையாக வழிநடத்தியிருப்பதாகவும் அவர் கூறியிருந்தார். இணைந்து செயற்படுவோம் எனக் கூறிய ஹேஷா விதானனே தனக்குத் துரோகம் இழைத்திருப்பதாகத் தெரிவித்து தொலைபேசி உரையாடல் ஒலிப்பதிவொன்றையும் தமித்தா ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார். தனக்கும் தெரியாமல் இவ்விடயம் இடம்பெற்றிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியிருந்தார்.

தமித்தாவின் இந்தப் பரபரப்பு ஓய்வதற்கு முன்னர் கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துப் பரபரப்பை ஏற்படுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்டத்தின் அமைப்பாளராகச் செயற்பட்ட தன்னை குறித்த பதவியிலிருந்து நீக்கிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த ஒருவரை அப்பதவிக்கு நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மான்னப்பெரும இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தார். வேட்புமனுவில் கைச்சாத்திட்ட பின்னர் கட்சியின் தலைமைத்துவம் தனக்கும் அறிவிக்காமல் இத்தீர்மானத்தை எடுத்ததாகவும், இதுபற்றிக் கலந்துரையாட சஜித் பிரேமதாசவை தொலைபேசியில பலமுறை தொடர்புகொண்டபோதும் முயற்சி பயனளிக்கவில்லையென்றும் மான்னப்பெரும ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தித் தெரிவித்திருந்தார்.

பிரச்சினைக்கு முகங்கொடுத்து தீர்வை வழங்க முடியாது ஒளிந்து ஓடும் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்ற முடியாது என்பதால் தேர்தலில் போட்டியிடாது விலகியிருக்கத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதேநேரம், அஜித் மான்னப்பெரும கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு ஆதரவாக இருந்தாலும் ரணிலின் பக்கத்திலும் மற்றொரு காலை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியிருந்தார். இது மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதாக ஹிருணிகா பிரேமச்சந்திரவும் அறிவித்திருந்தார்.

பொதுத்தேர்தலில் முழுக் கவனத்தையும் செலுத்தும் நோக்கில் இத்தீர்மானத்தை எடுத்திருப்பதாக அவர் கூறியிருந்தார். எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித்திற்கும் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கும் இடையிலான டீல் தொடர்பில் ஹிருணிகா அதிருப்தியடைந்திருந்தார் என்றும், ஹறின் பெர்னாண்டோவின் பாராளுமன்ற வெற்றிடத்திற்கு ஹிருணிகாவை நியமிக்காமல் தடுப்பதில் குறித்த தனியார் தொலைக்காட்சி செயற்பட்டமையால் அவர் அதிருப்தியடைந்திருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுமாத்திரமன்றி, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவாக இருந்த சிலரைத் விருப்பு வாக்குப் போட்டியில் தோல்வியடையச் செய்வதற்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குள் முயற்சிகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக பொருளாதார நிபுணர் ஹர்ஷ.டி சில்வாவுக்கும் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுபோன்று மேலும் பலர் மீதும் கட்சியின் தலைமைத்துவம் அதிருப்தியடைந்திருப்பதாகவும், அவ்வாறானவர்கள் சிலர் கட்சியினாலேயே தோற்கடிக்கப்படலாம் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு வேட்பாளர்களுக்குப் போட்டியை எதிர்கொண்டுள்ள கட்சிகளுக்கு மத்தியில், அரசியலில் இருந்து தான் ஓய்வுபெறவில்லையென்றும், தற்காலிகமாக இளைப்பாறுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான நாமல் ராஜபக்ஷ கடும் தோல்வியைச் சந்தித்த நிலையில், பொதுத்தேர்தலில் ஷசீந்திர ராஜபக்ஷ தவிர வேறெந்த ராஜபக்ஷக்களும் நேரடியாகப் போட்டியிடவில்லை. நாமல் ராஜபக்ஷவின் பெயர் மாத்திரம் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாவட்ட ரீதியில் ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளாவிட்டாலும் ஒட்டுமொத்தமாக நாட்டில் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியல் ஆசனமொன்று கிடைக்கும் வாய்ப்பு இருப்பதால் இதன் ஊடாக நாமலைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பலாம் என அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்தப் பின்னணியில், அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுள்ளீர்களா என மஹிந்தவிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், தான் தற்காலிகமாக இளைப்பாறுவதாகவும், அரசியல்வாதிகளுக்கு ஓய்வு என்பது கிடையாது என்றும் கூறியுள்ளார். இதனால் மீண்டும் மஹிந்த தீவிர அரசியலில் களமிறங்கப் போகின்றாரா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

பி.ஹர்ஷன்...

# இஸ்ரேலின் பாதுகாப்பைப் பலப்படுத்த ஆயுதங்களை அள்ளிவழங்கும் அமெரிக்கா!



## காசா யுத்தம் ஆரம்பமான ஒரு வருடத்திற்குள் அமெரிக்காவினால் இஸ்ரேலுக்கு 17.9 பில். டொலர் உதவி!



இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நட்புறவு முதலாம் உலக மகாயுத்த காலம் முதல் நீடிக்கின்றது. அந்தப் பின்னணியில் இஸ்ரேலை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரித்த முதல் நாடாக விளங்கும் அமெரிக்கா, வருடா வருடம் 3.8 பில்லியன் டொலர்களை இஸ்ரேலுக்கு உதவியாக வழங்கி வருகிறது. கடந்தாண்டு ஒக்டோபர் 07 ஆம் திகதி காசா மீதான யுத்தம் ஆரம்பமான பின்னரான ஒரு வருட காலப்பகுதிக்குள் மாத்திரம் 14 பில்லியன் டொலர்களை மேலதிகமாக இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது அமெரிக்கா. இவற்றில் பெரும்பாலானவை ஆயுதத் தளவாடங்களாகும்.

இஸ்ரேலுக்கு அதிநவீன ஆயுதங்களை வழங்கும் முதன்மை நாடாக விளங்கும் அமெரிக்கா, காசா மீதான யுத்தம் ஆரம்பமான பின்னர் இஸ்ரேலை ஆயுத தளவாடங்கள் ரீதியில் பலப்படுத்துவதில் முன்னுரிமை அளித்து செயற்படுகின்றது.

காசா மீதான யுத்தத்தை நிறுத்துமாறு கோரி லெபனானின் ஹிஸ்புல்லாஹ், யெமனின் ஹூதிக்கள் மற்றும் சிரிய, ஈராக்கின் சில போராளிக்குழுக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன. ஆன போதிலும் அமெரிக்கா, 'இஸ்ரேலை இரும்புக்கவசம் கொண்டு பாதுகாப்போம்' என ஏற்கனவே அறிவித்துள்ளதோடு, 2000 இறாத்தல் நிறை கொண்ட குண்டுகள், பதுங்கு குழிகளை தாக்கியழிக்கும் குண்டுகள் உள்ளிட்ட அதிநவீன ஆயுத தளவாடங்களை வாரிவழங்கி வருகிறது.

இவ்வாறான சூழலில், தற்போது தாட் (Terminal High Altitude Area Defense THAAD) என்ற அதிநவீன வான் பாதுகாப்பு கட்டமைப்பை இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது அமெரிக்கா. இது உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. இப்பாதுகாப்பு கட்டமைப்பு இவ்வார நடுப்பகுதியில் டெல் அவிவ் நகரை வந்தடைந்துள்ளதோடு, அதனை இயக்கவென 100 அமெரிக்க வீரர்களும் இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இஸ்ரேலிடம் ஏற்கனவே அயன் டோம், டேவிட் ஸலிங்க், எரோ 2 , எரோ 3 என மூன்று வகையான வான் பாதுகாப்பு கட்டமைப்புகள் உள்ளன. அவற்றில் அயன் டோம் என்பது மிகவும் பிரபலமான ஒன்று. இது குறுந்தூர ரொக்கட்டுகள் மற்றும் ஏவுகணைகளில் இருந்து பாதுகாப்பு அளிக்கக்கூடியது. அத்தோடு 4 கிலோ மீற்றர் முதல் 70 கிலோ மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட குறுந்தூர ரொக்கெட்டுகளையும், குண்டுகள் மற்றும் மோட்டார்களையும் இடைமறித்து தாக்கி அழிக்கும்.

டேவிட் ஸ்லிங் என்பது நீண்ட தூர ரொக்கெட்டுகள், குரூஸ் ஏவுகணைகள் மற்றும் மத்திய அல்லது நீண்ட தூர பிளாஸ்டிக் ஏவுகணைகளை 300 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து இடைமறித்து அழிக்கும்.

அரோ 2 மற்றும் அரோ 3 வான் பாதுகாப்பு கட்டமைப்புகள் 2,400 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் போது மத்திய மற்றும் நீண்ட தூர பிளாஸ்டிக் ஏவுகணைகளைத் தாக்கியழிக்கும்.

இத்தகைய மூன்று வகையான வான் பாதுகாப்பு கட்டமைப்புகளை இஸ்ரேல் தன்னகத்தே கொண்டிருந்தும் கூட, கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி 180 பிளாஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தி ஈரான் தாக்குதல்களை முன்னெடுத்தது. இத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஏவுகணைகளில் 90 சதவீதமானவை உரிய இலக்குகளை அடைந்ததாக ஈரான் இஸ்லாமிய புரட்சிக்காவலர் படைப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். ஆனால் இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர், ஈரான் பயன்படுத்திய பெரும்பாலான பிளாஸ்டிக் ஏவுகணைகள் இடைமறித்து தாக்கியழிக்கப்பட்டதாகவும், பெரும்பாலான ஏவுகணைகள் வெற்றுப் பகுதிகளில் விழுந்து வெடித்ததாகவும் கூறினார்.



ஈரான் மேற்கொண்ட பிளாஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலால் இஸ்ரேலுக்கு சேதங்களும் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அமெரிக்காவின் வோல் ஸ்ட்ரிட் ஜேர்னல், இத்தாக்குதலுக்கு ஈரான் பயன்படுத்திய பிளாஸ்டிக் ஏவுகணைகள் இஸ்ரேல் வரலாற்றில் முதன் முறையாக முகம்கொடுத்தவையாகும் என்றுள்ளது.

ஈரான் பயன்படுத்திய 180 ஏவுகணைகளில் 32 ஏவுகணைகள் எப் 35 விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இஸ்ரேலின் மிகப் பெரிய நெவாடிம் விமானத் தளத்தைத் தாக்கி சேதப்படுத்தியுள்ளன. இவ்விமானத் தளத்தில் 3 ஓடுதளங்கள் உள்ளன. அந்தத் தளங்களிலும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்தும் செயற்கைக்கோள் படங்களும் வெளியாகியுள்ளன.

ஈரானிய ஏவுகணைகள், படைத் தளங்களுக்குள் இருந்த அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பிற பராமரிப்புப் பகுதிகளை சேதப்படுத்தியதாகவும், அவை இஸ்ரேலிய விமானப்படையின் செயற்பாடுகளை பாதிக்கவில்லை. எந்த விமானமும் சேதமடையவுமில்லை என்றும் இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார். ஈரானின் இத்தாக்குதலின் போது ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கவென பெருந்தொகை நிதியை இஸ்ரேல் செலவிட்டுள்ளது. இதன் பொருட்டு அரோ 2, அரோ 3 வான் பாதுகாப்பு கட்டமைப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. ஒரு அரோ கட்டமைப்பு ஒரு ஏவுகணையை இடைமறித்து அழிக்க 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். இதன்படி ஈரானிய ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கவென 450 மில்லியன் டொலர் செலவு இஸ்ரேலுக்கு ஏற்பட்டதாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'ஜெரூஸலம் போஸ்ட்' குறிப்பிட்டது. இத்தாக்குதலுக்கு ஈரான் செலவிட்டதை விடவும் இது இரு மடங்கு அதிகமாகும்.

இவை இவ்வாறிருக்க, ஈரான் முன்னெடுத்த ஏவுகணைத் தாக்குதலால் இஸ்ரேலுக்கு 40 முதல் 53 மில்லியன் டொலர் வரை சொத்து சேதங்கள் ஏற்பட்டதாக சொத்து வரி தரவுகளை மேற்கோள்காட்டி எடியோத் அஹ்ரொநொத் என்ற இஸ்ரேலிய பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் ஈரானுக்குப் பதிலடி கொடுக்கப் போவதாக இஸ்ரேல் கூறி வருகிறது. அதற்கான ஆயத்தங்களிலும் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக ஈரானின் அணுசக்தி நிலையங்கள், எண்ணெய்க் களஞ்சியங்கள், ஆன்மீகத் தலைவரின் இல்லம், இஸ்லாமிய புரட்சி காவலர் படை தலைமையகம் என்பவற்றை தாக்க திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் எண்ணெய்க் களஞ்சியங்களையும் அணுசக்தி நிலையங்களையும் தாக்கக்கூடாதென அமெரிக்கா இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளது.

## THAAD என்ற அதிநவீன வான் பாதுகாப்பு கட்டமைப்பு செயற்படத் தொடங்கியதும் எவ்வேளையிலும் ஈரான் தாக்கப்படலாமென அச்சம்!

ஆனால் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாசி அராக்சி, 'எம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டால் எமது தாக்குதல்கள் கடுமையாகவும் தீவிரமாகவும் இருக்கும். நாம் யுத்தத்தை விரும்பவில்லை. ஆனபோதிலும் எமது மக்களைப் பாதுகாக்க எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருக்கின்றோம். நாம் சிவப்பு கோடுகளைப் பார்க்க மாட்டோம்' என்றுள்ளார்.

இவ்வாறு ஈரான் இஸ்ரேலுக்கு இடையில் உச்ச கட்ட யுத்தப் பதற்றம் ஏற்பட்டுள்ளதால் ஈரான் மீது தாக்குதல் முன்னெடுக்கப்படும் போது ஈரானும் பதிலுக்கு இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடாத்தவே செய்யும். அதனால் ஈரானின் பிளாஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து இஸ்ரேலைப் பாதுகாப்பதைப் பிரதான நோக்காகக் கொண்டு தாட் வான் பாதுகாப்பு கட்டமைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இது ஒரு மேம்பட்ட ஏவுகணை பாதுகாப்பு கட்டமைப்பாகும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளை இடைமறித்து முறியடிக்கக்கூடிய இக்கட்டமைப்பு பல சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றில் ரடார் கட்டமைப்பு, தீ கட்டுப்பாட்டு அமைப்பு, தொடர்பாடல் பாகம், ஏவுகணை லோஞ்சர்கள், இடைமறிப்புக்கள் என்பன அடங்கியுள்ளன.

இதேவேளை இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த பத்தா ஹைப்பர்சொனிக் என்ற ஏவுகணையை ஈரான் முதல் தடவையாகப் பயன்படுத்தியதாக ஈரான் அறிவித்துள்ளது. ஆனால் இந்த ஏவுகணை இற்றை வரையும் அமெரிக்காவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படாததாகும். அதனால் இந்த தாட் கட்டமைப்பு மூலம் இந்த ஏவுகணையை இடைமறிக்க முடியுமா என பரீட்சிக்கவும் அமெரிக்கா எதிர்பார்ப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கட்டமைப்பின் ஏவுகணைகள் 150 முதல் 200 கிலோ மீற்றர்கள் (93 முதல் 124 மைல்கள்) வரை சென்று இடைமறித்து தாக்கி அழிக்கக்கூடியவையாக விளங்குகிறது. அத்தோடு இது ஒரு தற்காப்பு ஆயுதமாகவும் பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா வழங்கியுள்ள டாட் ஏவுகணைப் பாதுகாப்பு கட்டமைப்பு செயற்படத் தொடங்கியதும் ஈரான் மீது எந்த வேளையிலும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் 'இவ்வான் பாதுகாப்பு கட்டமைப்பை நம்பி தாக்குதல் நடத்த முற்பட வேண்டாம். இது 2019 இல் வழங்கப்பட்ட ஒன்று. அப்படி இருந்தும் எமது தாக்குதல்கள் சேதங்களை ஏற்படுத்தியுள்ளதை இஸ்ரேல் மறந்து விடக்கூடாது' என்று ஈரான் எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.



மர்லின் மரிக்கார்...

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

14ஆம் திகதி ஒக்டோபர் 2024

# உலக கட்டளைகள் தினம்

## சிறந்த உலகுக்கான பகிரப்பட்ட தொலைநோக்கு

## AI யுகத்தில் SDG9 - கைத்தொழில் புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு

### கௌரவ பிரதமரின் ஆசிச் செய்தி



2024 ஒக்டோபர் 14 ஆம் திகதி இடம்பெறும் உலக தர நிர்ணய தினத்திற்கு இணையாக சிறந்த உலகுக்கான கூட்டு நோக்கு SDG 9 – செயற்கை நுண்ணறிவு (AI) யுகத்தில் கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்ற தொனிப்பொருளில் இந்தச் செய்தியை வழங்குவதற்கு முடிந்ததுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இலங்கை மற்றும் மற்ற 192 நாடுகளுடன் இணைந்து 2030ஆம் ஆண்டாகும்போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள 17 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளும் (SDG) 2015 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. ஒன்பதாவது பேண்தகு அபிவிருத்தி இலக்கு என்பது பேண்தகு அபிவிருத்திக்கான தீர்க்கமான காரணிகளாக இருப்பதோடு அதன்மூலம் புத்தாக்கத்திற்காக முதலீடு செய்வதற்கு, கைத்தொழில் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு மற்றும் சர்வதேச உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்கு எம்மை வழிச்செலுத்துகிறது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன் வாய்ப்புகள் மற்றும் பொறுப்புகளும் திறக்கப்படுவதோடு இந்தத் தொழில்நுட்பங்கள் தார்மீக ரீதியாகவும் பயன்தரும் வகையிலும் செயற்படுத்துவதற்கு சர்வதேச தரநிலை அவசியமாகும்.

உலக தர நிர்ணய தினத்தில், நாம் சர்வதேச தரங்களின் முக்கியத்துவம் மாத்திரம் அன்றி, அதன்மூலம் எமது தேசிய நன்மைக்கு ஏற்படுத்தும் ஆழமான தாக்கத்தையும் கொண்டாடுவோம். புத்தாக்கத்தை மேம்படுத்தல், மீள்திறன் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஒன்பதாவது பேண்தகு அபிவிருத்தி இலக்கிற்கு (SDG 9) இணையாக ஒருங்கிணைப்பதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் (SLSI) நிறைவேற்றப்பட்ட முக்கியமான பணிகள் தொடர்பில் அறிவூட்டுவதற்கு நான் விரும்புகிறேன்.

எமது தேசிய தரத்தின் பாதுகாவலரான இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) உலகளாவிய அளவுகோல்களை பூர்த்தி செய்வதற்கு இலங்கையின் கைத்தொழில்களை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாகும். தரம், பாதுகாப்பு மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்கு அதன் பின்வாங்காத முயற்சிகள், எமது நாட்டு எல்லைக்குள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மாத்திரமன்றி, சர்வதேச அரங்கில் போட்டியாளர் ஒருவராக இலங்கை கைத்தொழில் துறையை நிலைநிறுத்துவதற்கு பெறும் பங்காற்றுகிறது. செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்துடன் தேசிய மற்றும் சர்வதேச தரங்களை ஒன்றிணைத்தல், அனைத்து இலங்கையர்களுக்காகவும் தரமான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு நியாயமான வாயில் ஒன்றை வழங்கும் கட்டமைப்பு ஒன்றை கட்டியெழுப்பும் பிரதான அடித்தளமாகும்.

இம்முறை உலக தர நிர்ணய தினத்தில், செயற்கை நுண்ணறிவு (AI) யுகத்தில் இலங்கை கட்டளைகள் நிறுவனம் எமது தொழில்துறை பிரிவின் தரத்தை உயர்த்துவதற்கு காண்பிக்கும் முயற்சிக்கான அர்ப்பணிப்பு தொடர்பில் நான் பாராட்டைத் தெரிவிக்கிறேன். 2024 உலக தர நிர்ணய தினத்தை கொண்டாடுவதற்காக எடுத்திருக்கும் முன்னேற்றப் படிகள் மற்றும் தேசிய தரநிலை வாரத்தில் சிறந்த உலகத்திற்கான கூட்டு நோக்கு என்ற தொனிப்பொருள் தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டுவதற்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடத்துவது தொடர்பில் நான் இலங்கை கட்டளைகள் நிறுவனத்துக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, சிறந்த உலகுக்கான கூட்டு நோக்கிற்காக எமது அர்ப்பணிப்புகள் வெறுமனே உலகளாவிய எதிர்பார்ப்புகளை நிறைவெற்றுவது மாத்திரமன்றி, புத்தாக்க ஊக்குவிப்பு மற்றும் முழு இலங்கை மக்களுக்கும் சுபீட்சமான, முன்னேற்றகரமான நாடு ஒன்றை கட்டியெழுப்பும் நோக்கமுடையதாகும்.

**கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்கள்**
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர்
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

### தேசிய தர வாரம் 14 – 20 ஒக்டோபர் 2024




### இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) தரநிலையின் பாதுகாவலர்

இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) என்பது தரப்படுத்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் (ISO) இலங்கையை பிரதிநிதித்தும் செய்யும் தேசிய தரநிலை நிறுவனம் என்பதோடு, அது 1964 இன் 38 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை தரநிலை செயற்திறன் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இந்தச் சட்டம் 1984 இன் 6 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை கட்டளைகள் நிறுவன சட்டத்தின் மூலம் ரத்துச் செய்யப்பட்டு மீளமைக்கும் வரை, கட்டளைகள் நிறுவனம் இலங்கை கட்டளைகள் பணியகமாக செயற்பட்டது. இது இலங்கை பொருளாதாரத்தில் அனைத்து துறைகளினதும் தரத்தை உயர்த்துவதற்கு மற்றும் தேசியத் தரத்தை அமைப்பதற்கான பொறுப்பை ஏற்கும் முதன்மையான நிறுவனமாகும். இலங்கை தேசிய கட்டளைகள் நிறுவனமானதன் காரணமாக SLSI ஜெனிவாவில் அமைந்துள்ள தரப்படுத்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (ISO) உறுப்பினராகும். ஐஎஸ்ஓ வின் உறுப்பினர்களாக, தேசிய கட்டளைகள் நிறுவனம் அவர்களின் தேசியத் தரநிலையின் பிரதிகளை அன்னியோன்யமான முறையில் பரிமாறிக்கொள்வதோடு தரம், தொழில்நுட்ப ஒழுங்குமுறைகள் மற்றும் தரம் சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் தகவல்களை தேசிய மட்டத்தில் மக்களுக்கு பகிரும் பொறுப்பை ஏற்கிறது.

பரந்த பரப்பில் விசேட சேவை வழங்கலில் 60 ஆண்டுகள் அனுபவத்துடன் SLSஐ தேசத்தின் தரநிலையின் பாதுகாவலராக செயற்படுகிறது.

- தேசத்தின் தரத்தை உயர்த்துவதற்கு தேசிய தரநிலையை தயாரித்தல்
- சான்றளிப்பு மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உறுதி செய்தல்
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உற்பத்திகளின் தரத்தைப் பாதுகாத்தல்
- செல்லுபடியாக அளவீட்டின் பயன்பாடு மற்றும் அளவீட்டு சேவையை மேம்படுத்தல் மற்றும் வழங்கல்
- ஆய்வு சேவையை வழங்கல் மற்றும் தேசிய அய்வுத் திறனை மேம்படுத்தல்
- முகாமைத்துவ கட்டமைப்புகளுக்கு அமைய மதிப்பீடு
- தரம், தரப்படுத்தல், தரநிலை மற்றும் முகாமைத்துவ அமைப்புகள் தொடர்பான கொள்ளளவை கட்டியெழுப்புதல்

### செயலாளரின் ஆசிச் செய்தி



"சிறந்த உலகுக்கான கூட்டு நோக்கு – SDG 9 – செயற்கை நுண்ணறிவு (AI) யுகத்தில் கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்" என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு 2024 ஒக்டோபர் 14ஆம் திகதி இடம்பெறும் உலக தர நிர்ணய தினம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ஒக்டோபர் 14 தொடக்கம் 20ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டிருக்கும் தேசிய தரநிலை வாரத்தில் இந்த செய்தியை வழங்குவது பெரும் மகிழ்ச்சியுடனாகும்.

SDG 9 என்பது கைத்தொழில் அபிவிருத்தி மாத்திரமன்றி இலக்கு வைக்கப்பட்ட நோக்கம் இல்லை என்பதோடு இது பேண்தகு பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடாகும். நீண்டகால பொருளாதார சுபீட்சத்தை எட்டுவது, உற்பத்தித் திறனை அதிகரிப்பது, தொழில் வாய்ப்புகளுக்கான வலுவான மற்றும் நவீன கைத்தொழில் அடித்தளம் ஒன்று அவசியமாகும்.

இதனை வெல்வதற்கு நாம் சர்வதேச தரத்திற்கு அமைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்துறைக்காக முதலீடு செய்ய வேண்டும் என்பதோடு செயற்கை நுண்ணறிவு உட்பட புதிய தொழில்நுட்பங்களை இதற்காக பயன்படுத்த வேண்டும்.

சர்வதேச தரத்துக்கு அமைய பல்வேறு தொழிற்துறைகள் மற்றும் உற்பத்தித் துறைகளின் நிலைத்தன்மை, தரம், பாதுகாப்பு மற்றும் இடைவினை செயற்பாடுகளை உறுதி செய்வதற்கு உலகளாவிய அளவில் மேம்படுத்தி அடையாளம் கண்டுள்ள நிறுவப்பட்ட மற்றும் இணங்கிய வழிகாட்டல், அளவுகோல் அல்லது பண்புக்குறிகளாகும். அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இடையே அனுபவம் மற்றும் அறிவை பகிர்ந்து கொள்வதற்கு அவை தயாரிக்கப்படுவது சர்வதேச தகவல் தொழில்நுட்ப ஆணைக்குழு (IEC) தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு (ISO) மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு அமைப்பினாலாகும் (ITU).

தேசிய தேவைகள் மற்றும் வரம்புகள் தொடர்பில் முறையான அவதானத்தைச் செலுத்தி இலங்கை கட்டளை நிறுவனம் (SLSI) தரங்களை அமைத்தல் மற்றும் பின்பற்றுவதற்காக பொறுப்புக் கூறும் தேசிய நிறுவனம் ஒன்றாக பங்குதாரர்களின் ஆதரவுடன் சர்வதேச தரத்திற்கு அமைய தேசிய தரநிலையை அமைப்பது போன்றவற்றை மேற்கொள்கிறது. அவ்வாறான தேசிய தரநிலைகள் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கான காரணமாவது மாத்திரமன்றி உலகமயமாதலை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சந்தைக்காக போட்டிரீதியாக முகம்கொடுப்பதற்கு எமது தேசத்தை தயார்படுத்துகிறது. என்றபோதும் அவ்வாறான செயற்பாட்டில் வெற்றியை எட்டுவதற்கு கூட்டு நோக்கு மாத்திரமன்றி, அனைத்து தரப்பினரதும் கூட்டுப் பொறுப்பும் அவசியமாகும்.

உலக தர நிர்ணய தினத்தில் இலங்கைக்குள் தரநிலையை அமைத்தல் மற்றும் மேம்படுத்தும்போது பெற்றுக்கொண்ட அனைத்து வெற்றிக்காகவும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு வாழ்த்துகளை தெரிவிப்பதோடு இலங்கை புத்தாக்கம் மற்றும் கைத்தொழில் மேம்பாட்டின் மூலம் முதன்மையான இடத்தை பேணுவதற்கு தேசிய தரநிலை அமைப்பு மற்றும் மேம்படுத்தும் செயற்பாட்டுக்கு எப்போதும் ஒத்துழைப்பு வழங்குவதாக நான் உறுதி அளிக்கிறேன்.

**ஜே.எம். திலகா ஜயசுந்தர**
செயலாளர்
கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

### பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி



சிறந்த கூட்டு நோக்கு: SDG 9 செயற்கை நுண்ணறிவு (AI) யுகத்தில் கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை நடைபெறும் உலக தர நிர்ணய தினம் என்பது சர்வதேச தர நிர்ணயத்தில் உள்ள முக்கியத்துவத்தை குறித்து காண்பிக்கும் நிகழ்வாகும். மேலும் அது எமது வாழ்வு, எமது தேசம் மற்றும் எமது சமூகத்தின் உலகளாவிய நோக்கு தொடர்பில் அவர்களின் தாக்கத்தை நினைவூட்டும் தினமாகும். சர்வதேச மின்னியல் தொழில்நுட்ப ஆணைக்குழு (IEC) மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் (ITU) உடன் தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு (ISO) மூலம் சர்வதேச தர நிர்ணயங்களாக அறிவிக்கப்பட்ட தன்னார்வ தொழில்நுட்ப ஒப்பந்தங்களை மேம்படுத்தவதற்கு உலகெங்கும் பரந்திருக்கும் பல நிபுணர்களின் ஒன்றிணைந்த முயற்சி மூலம் தமது அறிவை பகிர்ந்து கொள்ளும் அனைத்து நிபுணர்களின் அர்ப்பணிப்பை நினைவுகூரும் வகையிலாகும்.

இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பின் (ISO) இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் தேசிய கட்டளை நிறுவனம் என்பதோடு இலங்கை தரநிலையை (SLS) தயாரிக்கும் பொறுப்பை வகிக்கிறது. 2024 ஒக்டோபர் 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான வாரம் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் சிறந்த உலகுக்கான கூட்டுப் நோக்கு: SDG 9 – செயற்கை நுண்ணறிவு (AI) யுகத்தில் கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்புகள் ஆகிய தலைப்பின் கீழ் தேசிய தரநிலை வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்பதாவது பேண்தகு அபிவிருத்தி இலக்கு (SDG 9) என்பது தொழில்துறையை பலப்படுத்துவதற்கும், புத்தாக்கத்தின் மேம்பாடு மற்றும் மீள்திறன் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்கு எம்மை ஊக்கப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் செயற்பாடாகும். அது வெறுமனே உலகளாவிய அர்ப்பணிப்பை அடிப்படையாகக் கொண்டிராது, பேண்தகு அபிவிருத்திக்காக பொதுவான இலக்கில் இருந்து செய்யும் அர்ப்பணிப்பாகும். இந்த இலக்கை வெல்வதற்கு, நாம் தொழில்துறை நடைமுறைகள், பாதுகாப்பு, தரம் மற்றும் புத்தாக்கத்திற்கு பொதுவான கட்டமைப்பு ஒன்றை வழங்கும் சர்வதேச தரநிலை அடிப்படையில் செயற்படுவோம்.

இலங்கை கைத்தொழில் துறை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் சர்வதேச அளவுகோல்களுடன் சமநிலைப்படுத்துவதற்கு எமது தேசத்தின் தரநிலையில் பாதுகாவலரான இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) முன்னின்று செயற்படுகிறது. தரம், பாதுகாப்பு மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்கு பின்வாங்காத முயற்சிகள் எமது நாட்டு எல்லைக்குள் கைத்தொழில் நடைமுறைகளை மேம்படுத்தியது மாத்திரமன்றி கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உலகளாவிய தரங்களைப் பின்பற்றிய நாடு ஒன்றாக இலங்கை நிறுவப்பட்டுள்ளது.

சர்வதேச தரங்கள் தொழில்துறைகளின் பேண்தகு அபிவிருத்தியை ஊக்குவிக்கும், ஆய்வு மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்தும் மற்றும் செயற்கை நுண்ணறிவை (AI) அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு வசதிகளை வழங்கும் உலகளாவிய கட்டமைப்பு ஒன்றை உறுதி செய்கிறது. நவீன உட்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடல், தயாரித்தல் மற்றும் பராமரிப்பது தவிர பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் நம்பிக்கைக்குரிய தொழில்துறையை கட்டியெழுப்புதற்கு நாடுகளுக்கு உதவுவதற்கு அவை முக்கியமானதாகும். இந்தத் தரநிலைகள் உலக மக்கள் தொகையின் பரந்த அளவானோருக்கு பேண்தகு, நவீன மற்றும் மீள்தன்மை கொண்ட தொழில்துறையை நோக்கிச் செல்ல முடியும் என்பதை உறுதி செய்கிறது.

நவீன மற்றும் மீள்திறன் கொண்ட உலகம் ஒன்று தொடர்பில் எமது கூட்டு நோக்கை வெற்றிபெறச் செய்வதற்கு சர்வதேச தரங்களில் உள்ள முக்கியத்துவத்தை குறித்துக் காண்பித்து நாம் ஒன்பதாவது பேண்தகு அபிவிருத்தி இலக்குடன் (SDG 9) ஒன்றிணைவதற்கு முயற்சிப்பது முக்கியம். இந்தத் தரங்களை பின்பற்றுவதன் மூலம், பேண்தகு கைத்தொழில் அபிவிருத்தி ஒன்று மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கத்திற்கான அனைத்து இலங்கையர்களுக்கும் பிரவேசிக்க முடியுமான எதிர்காலம் ஒன்றக்காக எமக்கு வழி ஏற்பட்டுள்ளது.

ஒன்பதாவது பேண்தகு அபிவிருத்தி இலக்குடன் ஒன்றிணைவதற்கு உற்பத்திகளுக்கான சான்று அளிக்கும் கட்டமைப்பை உறுதி செய்வது, பயிற்சி, அளவீடு, தகவல் சேவை மற்றும் ஆய்வுகூட சேவை போன்ற மற்ற பல சேவைகளும் நாட்டுக்கு வழங்குவதோடு, தேசிய தரநிலையை தயாரிப்பது தொடர்பில் இலங்கை கட்டளைகள் நிறுவனம் பெருமை கொள்கிறது.

சிறந்த உலகுக்கான கூட்டு நோக்கிற்காக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கிய நிபுணர்கள் மற்றும் பங்களிப்புச் செய்த அனைத்து தரப்பினரினதும் பங்களிப்பு எனது பாராட்டுக்கு உரியது. இம்முறை உலக தர நிர்ணய தினத்தில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி வெறும் இலக்காகவன்றி உண்மையானது என்பதை உறுதி செய்து கைத்தொழில் அபிவிருத்திக்காக எமது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வோம்.

**கலாநிதி சித்திகா ஜி செனரத்ன**
பணிப்பாளர் நாயகம்.: தலைமை நிர்வாக அதிகாரி
இலங்கை கட்டளைகள் நிறுவனம்

### பேண்தகு அபிவிருத்தி

எதிர்கால சந்ததியினருக்கு தமது தேவைகளை நிறைவேற்றும் திறனுக்கு பாதிப்பு இல்லாத வகையில் தற்போதைய தேவைகளை நிறைவு செய்யும் அபிவிருத்தியே பேண்தகு அபிவிருத்தி என்பது விரிவான பொருளாகும். ஆனால், வெளிப்படையாகப் பார்க்கும்போது பெரும்பாலானவர்கள் பேண்தகு அபிவிருத்தி சுற்றுச்சூழலுக்கு மட்டுப்படுத்தியபோதும், அதற்கு இணையாக சமூக நியாயம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆழ ஊடுருவியுள்ளது. பேண்தகு அபிவிருத்தி என்பது சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதாரம் ஆகிய மூன்று பரிமாணங்களின் இணைப்பாகும். பேண்தகு சுபீட்சம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு ஒன்றிணைந்த பிரவேசமாகும்.

### பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

2015 செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் சிறந்த எதிர்காலம் ஒன்றை அடையும் திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டது. அடுத்த 15 ஆண்டுகளுக்குள் கடுமையான வறுமையை ஒழிப்பதற்கு, ஏற்றத்தாழ்வு மற்றும் அநீதிக்கு எதிராக போராடுவதற்கு மற்றும் எமது பூமியை பாதுகாப்பதற்கான பாதை ஒன்று அமைக்கப்பட்டது. இந்த 2013 நிகழ்ச்சி நிரலின் அடிப்படை விடயமாக, 17 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளாக உள்ளதோடு (SDGs) அதன்மூலம் எமக்குத் தேவையான உலகம் மிக தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. எவரும் விடுபடாத வகையில், அனைத்து சமூகங்களுக்கும் இது பொருந்தும்.

### SDG 9 - கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்

பல நாடுகளில் பேண்தகு அபிவிருத்தி ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் சமூகத்தை வலுவூட்டுவதற்கு உட்கட்டமைப்பு வசதிகள் - போக்குவரத்து, நீர்ப்பாசனம், வலுசக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான முதலீடுகள் மிக முக்கியமானது. உற்பத்தித் திறன் மற்றும் வருவாய் அதிகரிப்பு மற்றும் சுகாதார மற்றும் கல்வி விளைவுகளை மேம்படுத்தலுக்காக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மேற்கொள்ளும் முதலீடுகள் தேவை என நீண்ட காலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை கட்டளைகள் நிறுவகம்
17 விக்டோரியா பிளேஸ் எல்வட்டிகல மாவத்தை கொழும்பு 08
தொலைபேசி : 011 201 9600, 011 201 9603, 011 2 01 9604, 011 201 9602
மின்னஞ்சல் :slsi@slsi.lk இணையம் : slsi.lk




கட்டார் நாட்டை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'ஸ்கை' ஊடக அமைப்பின் உலகத் தமிழ் விருது விழா நேற்று மாலை தெஹிவளை கேட்போர் கூடத்தில் எம் . வாஸீத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை பல்துறை ஆளுமைகள் பலரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட்ட பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஈழத்து கலைஞர்களுக்கு உரிய வாய்ப்பை விரைவில் வழங்குவோம்

## தயாரிப்பாளர், நடிகர் வரகுணன் பஞ்சலிங்கம்



தயாரிப்பாளர்
வரகுணன் பஞ்சலிங்கத்துடன்
நேர்காணல்

**கேள்வி : உங்களை பற்றியும் உங்களது தயாரிப்பு நிறுவனம் பற்றியும் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில் : என்னுடைய பெயர் வரகுணன் பஞ்சலிங்கம். நான் தற்போது பிரித்தானியாவில் வசித்து வருகிறேன். மிக நீண்ட காலம் இலங்கையிலே ஊடகத்துறையில் பணிபுரிந்து பின்னர் புலம் பெயர்ந்து பிரித்தானியாவுக்கு சென்று நாடகத்துறை சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களையும் சினிமாத்துறைசார்ந்த பல்வேறுபட்ட விடயங்களையும் நான் இங்கே மேற்கொண்டுவருகிறேன். குறிப்பாக ஒரு நடிகராகவும் இயக்குனராகவும் தயாரிப்பாளராகவும் என்னுடைய பணியினை மேற்கொண்டு வருகிறேன். இந்த தயாரிப்பு நிறுவனத்தை Trending Arts Productions என்ற பெயரில் 2021ஆம் ஆண்டு நாங்கள் மூன்று சகோரதர்கள் இணைந்து உருவாக்கினோம். என்னுடைய இளைய சகோதரர்கள் இருவர். ஒருவர் நோர்வையிலே வசித்து வருகின்ற ஹரிகரன் பஞ்சலிங்கம் மற்றையவர் இலங்கையிலே வசித்து வருகின்ற மதுரதன் பஞ்சலிங்கம். நாங்கள் இணைந்து இந்த தயாரிப்பு நிறுவனத்தை 2021 ஆம் ஆண்டு ஆரம்பித்தோம். எங்களுடைய தந்தை அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம், ஈழத்தின் மிகச் சிறந்த நாடகக் கலைஞர். அதனால் தான் எங்களுக்கும் இந்த கலை ஆர்வம் ஏற்பட்டது. அதனாலேயே அவரது பிள்ளைகளான நாங்கள் இந்த நிறுவனத்தை நிறுவி கலைப்படைப்புக்களை இதனூடாக தயாரித்து வருகிறோம்.

**கேள்வி : இதுவரை நீங்கள் எவ்வாறான படைப்புக்களை உருவாக்கியுள்ளீர்கள்? சமூகத்தில் அவற்றுக்கான அங்கீகாரம் எத்தகையது?**

பதில் : எங்களுடைய தயாரிப்பு நிறுவனத்தின் ஊடாக தயாரிக்கப்பட்ட படைப்புக்களை பொறுத்த மட்டில் 2021ஆம் ஆண்டு Paradise Island என்ற பெயரில் உருவான தமிழ் குறுந்திரைப்படம் தான் நாங்கள் முதன்முதலில் உருவாக்கியது. இந்த குறுந்திரைப்படம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பல்வேறு ரசிகர்களின் வரவேற்பை பெற்றது.

பின்னர் 2022 ஆம் ஆண்டு In the Closet என்ற ஒரு ஆங்கில குறுந்திரைப்படத்தை நாங்கள் தயாரித்திருந்தோம். அது பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்டது.

### இலங்கையில் எதிர்வரும் 25ஆம் திகதி வெளிவருகிறது ஆரகன்

எனது இயக்கத்திலும் எனது நடிப்பிலும் உருவாக்கப்பட்ட ஒரு குறுந்திரைப்படமாகும்.

அது சர்வதேச திரைப்பட விருதுக்காக அனுப்பப்பட்டு பல்வேறு சர்வதேச விருதுகளை தட்டிச்சென்றது. குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் சர்வதேச விருதுகளை தட்டிச் சென்றது. வெகுவிரைவில் இக்குறுந்திரைப்படத்தை நீங்கள் கண்டு மகிழமுடியும்.

**கேள்வி : நீங்கள் தயாரிக்கின்ற ஆரகன் திரைப்படம் பற்றி குறிப்பிடமுடியுமா?**

பதில் : ஆரகன் என்ற முழு நீள திரைப்படம் எங்களால் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதலாவது முழுநீள திரைப்படம்.

2022ஆம் ஆண்டு படப்பிடிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி இந்தியாவின் திரையரங்குகளில் வெளியாகி பல ரசிகர்களின் வரவேற்பை பெற்ற ஒரு Fantasy Thriller ஆக ஆரகன் திரைப்படம் அமைந்திருக்கிறது. சமூக வலைத்தளங்களில் நீங்கள் பார்த்தால் தெரிந்திருக்கும்.




**கேள்வி : இந்த திரைப்படம் இலங்கை திரையரங்குகளில் எப்போது வெளியாகும்?**

பதில் : இலங்கையின் திரையரங்குகளில் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரகன் திரைப்படத்தை வெளியிட காத்திருக்கின்றோம்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

அ. கனகசூரியன்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வர்த்தகம்

209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கந்தான நகரில் புகையிரத நிலைய வீதியில் முழுமையான சலூன் வாடகைக்கு உண்டு. (சலூன் துணைப்பாகங்களுடன்) 077 1618500, 071-0725123. 070745

233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

நெல் அறைக்கும் 'லீமா' வகை எலிவேட்டர் தூண்கள் -08 கியர் பொக்ஸ் மொடல்/ 4 தட்டு கிரேடர் 1 மோட்டருடன் டீஸ்டோனர், டோன் உடன் விற்பனைக்கு. 0711-311848. 071071

### வேலைவாய்ப்பு

301 வேலை வாய்ப்பு வேலை வாய்ப்புகள்/சேவைகள்

வாகன சேர்விஸ் உபகரணம் திரீவீல், கார், வேன் மற்றும் கனரக வாகன ஜெக், எ யார் கம்பிரசர், ஹைபிரசர் நீர் பம்பி ஏனைய சகல உபகரணங்கள் 05 வருட உத்தரவாதத்துடன் பொருத்தித் தருவதற்கு அழையுங்கள் ஆரியதாச இன்டஸ்ட்ரீஸ் கலகெடிஹேன வீதி, வேயன்கொட. 077 2474226, 076-5745380. 071133

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

மின் தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் உதவியாளர்கள் கொழும்புக்கு அருகில் வேலைக்கு (சம்பளம் 2800) 077 9503657, 071-7215368. 070758

318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

10 ஓட்டுநர்களுக்கான வெற்றிடங்கள் போக்குவரத்து விதிகள் பற்றிய நல்ல அறிவு, 50 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள், வாடிக்கையாளர் சேவை திறன்கள், ஆங்கிலம் பேசும் எழுதும் திறன், மாற்றிக் கொள்ளக் கூடிய பணி நேரங்கள். கூடுதல் நேரம் உணவு மற்றும் காப்பீட்டு கொடுப்பனவுகளுக்கு உரிமை உண்டு. இந்த விளம்பரம் கிடைத்த 10 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பத்தை info@eptt.lk அல்லது தபால் மூலம் அனுப்பவும். HR Department, Executive Premium Transport & Travels (Pvt) Ltd, 6th Floor, Marino Mall Tower, 590, Galle Road, Colombo 03. தொடர்புக்கு - 076 5565504. 070789

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

எஹலியகொட வீட்டில் தங்கி வேலைசெய்ய 50 வயதிற்குக் குறைந்த ஆரோக்கியமான பெண் தேவை. சம்பளம் 40,000/ - 071-9994517, 036-2259776. 071252

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பிலுள்ள உணவகமொன்றிக்கு சிங்களம் தெரிந்த துப்பரவுத் தொழிலாளர் ஒருவர் வேலைக்கு தேவை. சம்பளம் 35, 000. உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம். தொடர்புகளுக்கு - 075 8717757, 0777 350505 071413




325 தொழில்துறை பொது

அலுமினியம் துணைப்பாகங்கள் விற்பனை நிலையத்திற்கு சம்பளம் 55000/- இற்கு குறையாத தங்குமிட வசதிகளுடன் 55 வயதிற்கு குறைந்தவர்கள் விரும்பின் 0710-489895ஐ திங்கள் முதல் வெள்ளி காலை 8.30 -5.30, சனிக்கிழமை காலை 8.30 - 2.00 வரை அழையுங்கள். 071393

கொழும்பில் பல்மாடி கட்டிட நிர்மாண தளத்தில் பணியாளர்களுக்கான உடனடி வேலை வாய்ப்புகள். சப்கொண்ட்றெக்ரஸ் (Sub-contractors), மேசன் (Mason), பிளம்பர்ஸ் (Plumbers), பெயின்டர்ஸ் (Painters ), கூலியாட்கள் (Labours) தேவைப்படுகிறார்கள். தொடர்புகளுக்கு - 076-3333930. Slave Island. 070678

கொழும்பு 08இல் தங்கி வேலை செய்யும் பெண் தகைமையான தாதி/ தகைமையுள்ள கண்காணிப்பாளர் (NVQ4) வீட்டுப்பணிப்பெண்/ சமையலாளர் தேவை. வயது 40 இற்குக் கீழ் அழையுங்கள் 070 5363099. 071461




மிளகாய் அரைக்கும் ஆலைக்கு வேலையாள் தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். மளிகை கடைக்கும் வேலைக்கு ஒருவர் தேவை. நிட்டம்புவ. 075 5593030. 071075

### காணி/தோட்டம்

623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

ஹப்புத்தளை இடல்கஸ்சின்ன புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சிமெண்ட் பாறையை எதிர்கொள்ளும் முகமாக எல்லா வசதிகளும் கைவசம் இருக்கும் மற்றும் கிராமப்புறத்தின் காட்சிகள், கவரக்கூடிய இடங்கள் ஹப்புத்தளையில் இருந்து' சிறிது தூரத்தில் இருக்கும் மென்மையான வாழ்கையை அனுபவிக்கவும், மின்னும் ஏரிகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பிரமிக்க வைக்கும் சிகரங்கள் எப்பொழுதும் நாட்டுப்புற வாழ்கை முறைகளுடன் மதிப்புமிக்க நில அடுக்குகளால் உங்களை அலங்கரிக்கவும் (வசதியான கட்டணத் திட்டங்கள் உள்ளன.) 40P நிலம், 4M முதல் 25% ஆரம்ப கட்டணமாக இரண்டு வருடங்களுக்கு 1% மட்டும் வட்டியில்லாமல் செலுத்துங்கள். இடம் - https:/ / maps.app.goo.gl/ PSUAAMru ML ZyTHnB8 இன்றே எங்களை அழைக்கவும். இந்து +9471 6282307. 071261

633 வீடு சொத்து திருகோணமலை மாவட்டம் விற்பனைக்கு

திருகோணமலை மத்திய வீதியில் டயலொக் நிறுவனத்திற்கு முன்னால் 18.7 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு. சங்கர் - 077 4324591. 077 2336867. 071211

adz.lk
it's what you want
The Trusted Market place for Buying & Selling
Contact Us:-
- 011 2 429 369
- 077 7 270 067
- 077 7 270 845
- adzsuo@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## PETTAH 5th Cross Street
COLOMBO-11
COMMERCIAL PROPERTY FOR SALE
5 Storey, about 13000 sq.ft., Wider Frontage Building with Basement on 12.5 Perches land is FOR SALE
Tel: 0704 424 747

## අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
(Zinc Aluminium Sheet)
0777 394 679 | 070 663 33 88

## හර්නියා
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර
ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මගින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721

## RAJAGIRIYA - BUTHGAMUWA
MAIN ROAD FACING
COMMERCIAL BUILDING FOR LONG TERM LEASE
2 storey
5 large office rooms with AC
5 large toilets
Ample parking for 20 vehicles With a large Garden.
AUTOMATIC 45 KVA SILENT GENERATOR (DIESEL)
IN CASE OF A POWER FAILURE.
SOLAR HOT WATER
2 KITCHENS
1 separate maids toilet.
1 outdoor office can be given to the security or other purposes.
Best business area.
As the location is very close to central Colombo. Ideal for banks, Office use, restaurants, coffee outlets or any type of business
FOR FURTHER DETAILS
0777 760 121
Can be given Semi furnished also

## LAND FOR SALE NEAR THE HIGH-LEVEL ROAD
(WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA, NUGEGODA) EGODAWATTA ROAD, BETWEEN 2ND LANE AND WEERA MAWATHA. FACING A PADDY FIELD 8 PERCH BARE LAND FOR SALE.
2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to high-level road and Sri Jayawardenapura Campus, Close proximity to all convenience. Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

## Sun Lanka — SANY

Brand New
stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

## Navavi
MENS FASHION STORE
TAILORING / READY MADE & IMPORTED SUITINGS
WIDE SELECTION
MENS SUIT
LADIES SUIT
Hot Line : 072 7000023

## NEGOMBO HOUSE FOR SALE
Old Style House On 13.25 Perch Land.
2 Bedrooms & 2 Washrooms, Large Veranda, Sitting & Dining Area.
Facing Main Street, Opposite Post Office
LKR 6 Million Per Perch
Genuine Buyers Only
Contact - 077 897 3677

## SALES ASSISTANT,
SALES EXECUTIVE & LIGHT VEHICLE DRIVERS
FOR GEMS & JEWELLERY SHOWROOM IN COLOMBO
Foreign languages are added qualification
Selected Candidate
Giving For Over Seas Sales Training
Salary + Commissions
0777 313 118
0774 978 979
rizly_salim@hotmail.com
lankagemJewellery@gmail.com

## MATALE DISTRICT
WATAGODA WATTA, ALWATTA
12.5 ACRES OF PRIME LAND FOR SALE

OWN 12.5 ACRES PREVIOUSLY USED AS A CATTLE FARM, JUST 12 KM FROM MATALE TOWN.
IDEAL FOR CROPS LIKE TEA, VANILLA, AND CINNAMON, WITH ABUNDANT WATER AND ELECTRICITY AVAILABLE.
CONTACT US FOR MORE DETAILS AND TO SCHEDULE A VIEWING
Mobile and WhatsApp
+94 777 485 651

## VICTORIAN GUEST
Bandarawela victorianbungalow.lk
බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර සිහිවටනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
2km Away from Railway Station & Bandarawela Town
077 3 711 196 | 070 2 536 896

## WANTED
FOR SALE OR RENT
10 Perches Stores building With 3 Phase Electricity and Water in
KIRULAPONE, NUGEGODA, KOHUWALA areas.
Contact : 0771 092 498

## BLINDS
WATER PROOF
INDOOR & OUT DOOR
Plastic blinds
monsoon blinds
MONSOON BLINDS LANKA
0776 571 748

## தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு
600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342

## ABSONS EXIM


இல. 185. B, ஒபேசேகரபுர வீதி, ராஜகிரிய, இலங்கை.
Tel : 0114 322 651 Website : www.absonsonlne.lk
077 109 2502



## Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343




கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்



# பாராளுமன்றம் உழைப்பதற்கான இடமாக இனிமேலும் இருக்கப் போவதில்லை

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் காட்டில் மழை என்று தான் சொல்ல வேண்டும். பொதுத்தேர்தல் அறிக்கப்பட்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பிரதான எதிர்க்கட்சியாகிய சஜித் பிரேமதாசாவின் கூட்டணியின் முக்கியமான வேட்பாளர்கள் சிலர் போட்டியிலிருந்து விலகியிருக்கிறார்கள். உட்கட்சிப்பூசல்கள் அப்பதவி விலகல்களுக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.

**பாராளுமன்றத்தில் தூங்குவதில் பேர்பெற்ற கிழவர்கள், ஊழல்வாதிகள் என்று பேரெடுத்தவர்கள் பலர் இம்முறை கிடையாது.**

அவ்வாறு விலகிக் கொண்டவர்கள் அதற்கான காரணங்களை பொது வெளியில் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். கட்சித் தலைவரின் மோசமான நடவடிக்கைகளும் குடும்பச் செல்வாக்கும் கட்சி உறுப்பினர் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். இதனால் அக்கட்சிக்கு கிடைக்கவிருந்த வாக்குகள் வேறு திசைநோக்கித்திரும்பும் நிலை அல்லது வாக்களர் வாக்களிக்காது விடும் நிலை உருவாகியுள்ளது. அவர்களுடன் கூட்டணி சேர்ந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியிலும் இது சலசலப்பை ஏற்படுத்தலாம்.

தேர்தலுக்கு குறுகிய காலமே இருக்கும் நிலையில் அவை தேசிய மக்கள் சக்தியை நோக்கி நகரக் கூடிய வாய்ப்புகள் அதிகம். அது மட்டுமல்லாது ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கும் பிரேமதாசவுக்கும் வாக்களித்த பலரும் இப்போது தே.ம.ச நோக்கி நகர்ந்திருப்பது தெரிகிறது. குறிப்பாக வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் இவ்வாறு மக்களின் வாக்குகள் மாறும் நிலை பிரகாசமாகவே தென்படுகிறது. இலங்கை நாட்டில் முடிசூடா மகாராசாவாக கருதப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக ஏற்கெனவே அறிவித்து விட்டு இப்போ தான் தற்காலிகமாக ஓய்வு அறிவித்ததாகச் சொல்லுகிறார்.

புதவியில் இருந்த ஜனாதிபதி ரணில் தான் பதவி எதற்கும் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்தார். அது எவ்வளவு காலம் செல்லுபடியாகுமோ செல்லுமோ தெரியாது. மஹிந்த இளவல் தேர்தலில் போட்டியிடப் பயந்து தேசியப்பட்டியலில் வருகிறார். ராஜபக்ஷ சாம்ராஜ்ஜியத்தின் தூண்கள் எதுவும் இம்முறை போட்டியில் இல்லை. ஆக தேசிய கட்சிகள் பலவற்றின் பழைய முகங்கள் இம்முறை தேர்தல் களத்தில் இல்லை. ஆனால் அவர்கள் இப்போதைக்கு பம்முகிறார்கள் களநிலவரம் சாதகமான பின் மீண்டும் வருவார்கள். ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை காணவில்லை என சிஐடி தேடுகிறது.

பாராளுமன்றத்தில் தூங்குவதில் பேர்பெற்ற கிழவர்கள் ஊழல்வாதிகள் என்று பேரெடுத்தவர்கள் பலர் இம்முறை கிடையாது. பல புதுமுகங்கள் களம் வந்திருக்கிறார்கள். தமிழ் தேசியப்பரப்பிலே கட்சிகள் மத்தியிலும் புதுமுகங்கள் முளைத்திருக்கின்றன. பழைய பாக்கியராஜ் திரைப்படம் ஒன்றிலே அமாவாசைக்கும் ஒரு ஆசை வாத்தியாருக்கும் ஒரு ஆசை என்றொரு வசனம் வரும்.

இப்போ வாத்தியார்களுக்கும் பாராளுமன்ற ஆசை வந்துவிட்டது. தமது மாணவர்களைத் திரட்டி வைத்துக்கொண்டு பாராளுமன்றம் செல்ல ஆசைப்படுகிறார்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் தமது பதவிகளைத் துறந்து விட்டு தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்கள் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்திருந்தாலும் உபவேந்தர் நினைத்தால் தேர்தலிலே அவர்கள் தோற்றால் அவர்கள் சமர்ப்பித்த பதவி விலகல் கடிதத்தை மீளப்பெற்று பதவியில் தொடரலாம் என்றொரு வாய்ப்புண்டு என்ற உள் வீட்டுத் தகவல் கசிந்துள்ளது.

**இலங்கை நாட்டில் முடிசூடா மகாராஜாவாக கருதப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக ஏற்கெனவே அறிவித்து விட்டு இப்போ தான் தற்காலிகமாக ஓய்வு அறிவித்ததாகச் சொல்லுகிறார்**

சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்ன? அது மட்டுமல்ல வைத்தியர்கள், சட்டத்தரணிகள், வியாபாரிகள் என்று பலரும் களத்துக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் ஏன் பாராளுமன்றம் செல்ல ஆசைப்படுகிறீர்கள் என்ற கேள்விக்கு தெளிவான பதில் எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

மக்களுக்கு சேவை செய்ய என்று அலுத்துப்போன பதிலை தேய்ந்த இசைத்தட்டு மாதிரி திரும்பத்திரும்ப உச்சரித்தாலும், கிடைக்கிற வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர ஏன் என்ற கேள்விக்கு உளச்சுத்தியுடனான விடை இல்லை.

பாராளுமன்றம் சென்றால் உழைக்கலாம் என்று எவராவது இனி நினைப்பார்களாயின் இப்போதே அவர்கள் போட்டியிலிருந்து விலகி விடுவது நல்லது. ஏனென்றால் அனுர குமார அரசாங்கம் அதற்கான வாய்ப்பை வழங்காது.

புதிய வேட்பாளர்களின் பெரும் எண்ணிக்கையிலான உட்பாய்ச்சல், பழையை தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள் வயிற்றிலே புளியைக் கரைத்திருக்கிறது. அவர்கள் முகங்களிலே ஈயாடவில்லை. பயம் தொற்றிக் கொண்டிருக்கிறது.

மக்கள் தம்மைத் தெளிவாக மறுதலித்து விடுவார்களோ என்ற அவநம்பிக்கையும் சந்தேகமும். ஆனால் மக்களுக்கு வேலை செய்த ஒரு சிலர் நம்பிக்கையோடு இருக்கிறார்கள் எந்த அலை வீசினாலும் மக்கள் தம்மைக் கைவிட மாட்டார்கள் என்ற துணிச்சலுடன். தே.ம. சக்தி, வடபுலத்திலும், கிழக்கிலும், மலையகத்திலும் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது. இளைஞர்கள் மத்தியில் அதற்கு நல்ல செல்வாக்கும் இருக்கிறது. இந்த நிலை ஏற்கெனவே செல்வாக்கு மிக்க கட்சிகளின் வாக்கு வங்கியை கணிசமாகப் பாதிக்கும் என நம்பப்படுகிறது.

இவ்வாறு தேசிய நீரோட்டக்'கட்சிகளின் செல்வாக்கு அதிகரிப்பு தமிழ் தேசியவாத சிந்தனைகளுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது வெளிப்படையானது மட்டுமல்ல ஆரோக்கியமானதும் அல்ல. இலங்கை சுதந்திரம் பெற்ற போது தேசிய நீரோட்டக் கட்சிகளுடனேயே தமிழ் முஸ்லிம் தலைவர்களும் இருந்தார்கள். இனரீதியான அரசியல் இந்த நாட்டிலே தானாகத் தோன்றிய ஒன்றல்ல.

ஒடுக்குமுறை புறக்கணிப்பு வன்முறை போன்றவற்றின் விளைவாகவே இனத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் உருவாகின. இப்போது அநுர அரசாங்கம் இலங்கையர்கள் அனைவரும் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சமஉரிமை உண்டு. இன, மொழி, மத பேதமின்றி அனைவரும் சமமாக நோக்கப்படுவார்கள் என்று அறிவித்தாலும் அது நடைமுறையில் இடம்பெறுமா என்பதற்கான நம்பிக்கையான சமிக்ஞைகள் இதுவரையில் இல்லை.

மாறாக ஜே.வி.பியின் டில்வின் சில்வா தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினை என்று தனியாக ஒன்றில்லை, பொருளாதாரப் பிரச்சினை மாத்திரமே உள்ளது என்று ஒரு அலுத்துப்போன அரதப்பழசான ஒரு எரிச்சலூட்டும் செய்தியைச் சொல்லியிருக்கிறார். ஆகவே அதுவும் மக்களுக்கு சந்தேகத்தை தோற்றுவித்திருக்கிறது. ஆகவே மக்கள் தங்கள் மண்டையில் உள்ள மூளை என்ற வஸ்துவை உபயோகிக்க வேண்டிய தேவை உள்ளதாக தேசியவாத சிந்தனை கொண்டவர்கள் சொல்கிறார்கள் ஆனால் அது எவ்வளவு தூரம் எடுபடும் என்று தெரியவில்லை.

ஆக அநுர குமாரவின் மக்கள் சக்திக்கு வெற்றி வாய்ப்புகள் பிரகாசம். ஆனால் இலங்கையின் வாக்காளர்கள் அப்படியே அள்ளித் தருவார்கள் என்று நம்ப முடியாது.

**தேசிய கட்சிகள் பலவற்றின் பழைய முகங்கள் இம்முறை தேர்தல் களத்தில் இல்லை.**

113 ஆசனங்களைப் பெற்றாலே அது மாபெரும் வெற்றியாகப் பார்க்கப்படும். அதனை டில்வின் சில்வா போன்றவர்கள் தங்கள் எதிர்மறைக் கருத்துகள் மூலம் மழுங்கடிக்கக் கூடாது.



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ஹமாஸ் தலைவர்களின் மரணம்
# இஸ்ரேல்- ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வருமா?

**ஹமாஸின் அடுத்த தலைவர் யாஹ்யா சின்வாரின் சகோதரர் முகமது சின்வாரா?**

**போர்க்களத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ள இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பினர் இறுதி விளைவுகள் வரையில் போரை நகர்த்துவதற்கான ஆர்வத்துடன் செயற்படுவதையே, போர் நிலவரங்கள் உறுதி செய்கின்றன**

உலக ஒழுங்கு, கொவிட் பெருந்தொற்றுக்கு பின்னர் ஒரு நிலையான இடத்தை பெறமுடியவில்லை. அமெரிக்கா தலைமையிலான ஒற்றைமைய உலக ஒழுங்கிற்கு மாற்றீடாக இருதுருவ அரசியல் அல்லது பல்துருவ அரசியல் ஒழுங்குகள் சீரமைக்கப்படுவதாக அறிஞர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் உருவாகியுள்ளது. எனினும் உலக ஒழுங்கினை நிலையான கணிப்புகளுடன் தீர்மானிக்க முடிவதில்லை. சிறு போர்களாக ஆரம்பிக்கப்பட்ட போர்கள் யாவும், கற்பனைக்கு எட்டாத அளவில் முடிவிலியாக தொடர்கின்றது. ஏற்கனவே 2022இல் ஆரம்பிக்கப்பட்ட உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு போர் இரு வருடங்களை கடந்து பயணிக்கிறது. அவ்வாறே 2023இல் ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரேல் – ஹமாஸ் போரும் எதிர்பார்க்காத வகையில் ஓராண்டுகளை கடந்துள்ளது. ஹமாஸ் தலைவர்கள், ஹமாஸ் ஆதரவுக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் ஹமாஸ் ஆதரவு ஈரான் இராணுவ தலைவர்கள் மீது இஸ்ரேல் இராணுவ தாக்குதல்களை மேற்கொண்டு கொலை செய்துள்ள போதிலும், அமைதிக்கான வழித்தடம் மங்கலாகவே உள்ளது. இக்கட்டுரை இஸ்ரேல் ஹமாஸ் போரில் ஹமாஸின் தலைவராக வழிநடத்தியிருந்த யாஹ்ஹா சின்வாரின் மரணம், இப்போரின் போக்குகளில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

**ஹமாஸ் சரணடைய மறுத்ததற்கு உந்து சக்தியாக சின்வார் கருதப்பட்டார்.**

அக்டோபர் 17அன்று, ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வார் இஸ்ரேலிய படையினால் கொல்லப்பட்டர் என்ற செய்தி பரவியது. மறுநாள் அக்டோபார் 18அன்று, சின்வாரின் மரணத்தை ஹமாஸ் அமைப்பினர் உறுதிப்படுத்தியுள்ளனர். அக்டோபர் 16அன்று, தல் அஸ்சுல்தான் ரபாவில் இடம்பெற்ற போரில் அவர் இறந்ததாக தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு ஜூலை மாதம் ஹமாஸின் அரசியல் குழு தலைவர்களான இஸ்மாயில் ஹனியே தெஹ்ரானிலும், மூத்த இராணுவ தளபதி முகமட் டெய்ப் காசாவிலும் கொல்லப்பட்டதை தொடர்ந்து, சின்வார் காசாவில் ஹமாஸின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 22ஆண்டுகள் இஸ்ரேலிய சிறையில் இருந்து, 2011ஆம் ஆண்டு கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுதலை செய்யப்பட்டிருந்தார். காசா மீதான இஸ்ரேலிய போருக்கு ஹமாஸின் பதிலடி மற்றும் போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை சின்வாரே வழிநடத்தியதாக கூறப்படுகிறது. அல்ஜசீரா செய்தி தரவுகளின்படி, “கடந்த ஓராண்டில், இஸ்ரேலிய இராணுவம் காசா பகுதியில் எஞ்சியிருந்த பகுதிகளை சமன் செய்து 42,000க்கும் அதிகமான மக்களைக் கொன்றது. அக்டோபர் 7, 2023அன்று 1,139 பேர் கொல்லப்பட்ட மற்றும் சுமார் 250 பேர் சிறைபிடிக்கப்பட்ட, இஸ்ரேல் மீதான ஹமாஸ் தலைமையிலான தாக்குதலைத் திட்டமிட்டதாகக் கூறி சின்வாரைக் கொல்ல இஸ்ரேல் முயற்சித்து வந்தது” எனக்குறிப்பிடப்படுகின்றது.

ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வாரின் மரணத்தை தொடர்ந்து, இஸ்ரேல் ஹமாஸ் போரில் புதியதொரு திருப்பம் சர்வதேச அரசியல் பரப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக, காசா பகுதியில் ஹமாஸுடனான போரில் இஸ்ரேல் தரப்புக்கு இது ஒரு பெரிய வெற்றியாக மேற்கு ஊடகங்களில் புகழப்படுகின்றது. சின்வாரின் தலைவிதி, ஆரம்பத்திலிருந்து காசா பகுதியில் நடைபெறும் போரின் தலைவிதியுடன் பிணைந்ததாகவும், அவரது மரணத்தின் மூலம்; புதியதொரு சமாதான ஒப்பந்தத்திற்கான பாதை திறக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றார்கள். அக்டோபர் 18அன்று, பேர்லினில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், “சின்வாரின் மரணம், நீதியின் ஒரு தருணம். ஹமாஸ் இல்லாத காசாவில் சிறந்த எதிர்காலத்திற்கான வாய்ப்பு" என்றும் கூறினார்.

**ஏறத்தாழ 14 முக்கிய தலைவர்களை காசா போரின் ஓராண்டுகளில் ஹமாஸ் மற்றும் அதன் அணி இழந்துள்ளது.**



மேலும், காசாவைப் பாதுகாப்பது மற்றும் போருக்குப் பிந்தைய திட்டமிடல், பல மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த போர்நிறுத்தப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கான முயற்சியைப் பற்றி விவாதிக்க, அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஆண்டனி ஜே. பிளிங்கனை வரும் நாட்களில் இஸ்ரேலுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

சின்வாரின் மரணத்திற்கு பின்னரான, ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் தலைவர்களின் அறிவிப்புகள், மேற்கின் தன்னார்வ எண்ணங்களை நிராகரிப்பதாகவே அமைகின்றது.

சின்வார் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்திய தொலைக்காட்சி ஒளிபரப்பில், ஹமாஸின் தலைமை பேச்சுவார்த்தையாளர் மற்றும் சின்வாரின் துணைவர் கலீல் அல்ஹயா, “சின்வாரின் இந்த இழப்பு ஆயுதக் குழுவுக்கோ அல்லது இஸ்ரேலுடனான அதன் போருக்கோ எதையும் மாற்றவில்லை” என்று தெரிவித்திருந்தார். மேலும், “நாங்கள் ஹமாஸின் பாதையைத் தொடர்கிறோம். கொல்லப்பட்ட தலைவரின் கனவு விழாது" என மிடுக்காக தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தரப்பிலும் அமைதிக்கான ஒப்பந்தங்கள் சார்ந்து அக்கறையின்மையையே இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் அறிவிப்பு அடையாளப்படுத்துகின்றது. ஹமாஸ் சரணடைய மறுத்ததற்கு உந்து சக்தியாக சின்வார் கருதப்பட்டார்.

சின்வார் கொல்லப்பட்ட பிறகு, “ஹமாஸைத் தொடர இஸ்ரேலிய இராணுவத்தை தொடர்ந்து வழிநடத்துவேன்” என நெதன்யாகு தெளிவுபடுத்தினார்.

மேலும், “இது காசாவில் போரின் முடிவு அல்ல. இது முடிவின் ஆரம்பம்” எனவும் காணொளி செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் ஜனநாயக கட்சி அரசாங்கம், எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், இஸ்ரேல் – ஹமாஸ் போரினை முடிவுக்கு கொண்டு வருவதனூடாக அமைதிக்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது.

எனினும் போர்க்களத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ள இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பினர் இறுதி விளைவுகள் வரையில் போரை நகர்த்துவதற்கான ஆர்வத்துடன் செயற்படுவதையே, போர் நிலவரங்கள் உறுதி செய்கின்றது. ஹமாஸும் புதிய தலைவர் தெரிவை அறிவிப்பதில் மும்முரமாக உள்ளது. இஸ்ரேலிய செய்தி நிறுவனமான தி ஜெருசலேம் போஸ்ட், ஹமாஸின் அடுத்த தலைவர் யாஹ்யா சின்வாரின் சகோதரர் முகமது சின்வார் என்று பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டது.

இருப்பினும், ராய்ட்டர்ஸ் பின்னர் நிபுணர்களை மேற்கோள் காட்டி அல்ஹயா அவரது வாரிசாக இருக்கலாம் என்று கூறியது.

(17 ஆம் பக்கம் பார்க்க )

# மலையக அரசியல்வாதிகளுடன் போட்டி போடுவதில் எனக்கு எந்தப் பயமும் இல்லை

## பதுளையில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் அம்பிகா சாமுவேல்

**"நான் பிறந்த நாள் முதல் இன்று வரை மலையகத்தில் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றேன். இத்தனை நாள் ஆட்சி செய்தவர்கள் இப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுத்திருந்தால் நான் அரசியலுக்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது" என்கிறார் பதுளையில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் அம்பிகா சாமுவேல். அவர் தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வி...**



**கே : தற்போதைய அரசு ஊழல் ஒழிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உங்கள் தேசிய மக்கள் சக்தி என்னென்ன திட்டங்களை கொண்டிருக்கிறது?**

முதலாவதாக மலையக மக்களுக்கு அங்கீகாரத்தை வழங்க வேண்டும். ஏனைய சமூகத்துடன் ஒப்பிடுகையில் மலையக மக்கள் இன்னும் பின்தள்ளப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். 200 வருட அடிமைகளாக, சர்வஜன வாக்குரிமையை மட்டும் வழங்கிவிட்டு, இந்நாட்டின் பிரஜைகளாகவே மலையக மக்கள் கண்டுகொள்ளப்படவில்லை. ஏனைய சமூகங்களைப் போன்று மலையக மக்களும் அங்கீகரிக்கப்பட்ட சமூகமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அதன்படி, மலையக மக்களுக்கான, அவர்கள் மலையக தமிழர்கள் என்ற அடையாளத்தை வழங்குவதே தேசிய மக்கள் சக்தியின் முதலாவது திட்டமாகும்.

அடுத்ததாக, அம் மக்களின் பிரதான பிரச்சினைகளாக காணப்படுகின்ற சம்பளப் பிரச்சினை, நிலம், வீட்டுரிமை, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வு தொடர்பாக தேசிய மக்கள் சக்தியால் வெளியிடப்பட்ட மலையகம் 200 ஹட்டன் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கே : மலையகத்தில் பல வருட கால அனுபவம் கொண்ட அரசியல்வாதிகளுடன் நீங்களும் இம்முறை தேர்தலில் குதிக்கிறீர்கள் உங்களுக்கான வெற்றி வாய்ப்பு எவ்வாறு இருக்கப் போகிறது?**

76 வருடகாலமாக மலையக அரசியல் வாழ்க்கையில் இருந்தவர்கள் பிரபலமானவர்களே. ஆனால் அவர்களால் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

அதாவது, சரியான, முறையான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. உதாரணமாக வீடமைப்பு திட்டத்தை எடுத்துக்கொண்டால், இந்திய வீட்டுத்திட்டத்தினூடாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் அந்த வீடுகளுக்கான உறுதி வழங்கப்படவில்லை. இதுவரைகாலமும் மலையகத்தை ஆட்சி செய்த தலைவர்களால், எந்தவொரு பிரச்சினைக்கும் முழுமையான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

அந்த தலைவர்கள், தேர்தல் காலங்களில், பிரசார நடவடிக்கைகளுக்காகவும், அவர்களின் பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காகவும், மலையக மக்களின் பிரச்சினைகளையும் தொழிற்சங்கங்களையும் பயன்படுத்திக்கொண்டார்களே தவிர, பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

தத்தமது பதவியை பாதுகாத்துக் கொள்வதற்காக, ஆங்காங்கே தாவிக் கொண்டு, கொள்கையற்ற அரசியல் வாதிகளாகவே மலையக அரசியல் வாதிகள் இருக்கின்றார்கள். மலையகத்தை ஆட்சி செய்த அனைத்து தலைவர்களுக்கும் இவ்விடயம் பொருந்தும்.

இவர்கள் மலையக மக்களுக்காக சேவையாற்ற ஆளுங்கட்சியுடன் இணைந்திருப்பதாக தெரிவிப்பார்கள். பதுளை மாவட்டத்தின் அனைத்து மலையகத் தலைவர்களும் முன்னாள் ஜனாதிபதியுடனே இணைந்திருந்தார்கள்.

இவர்கள் அனைவருக்கும், காணி பிரச்சினை, வீட்டுப்பிரச்சினை, கல்வி, சுகாதாரம் மற்றும் சம்பளப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்பும் சந்தர்ப்பமும் அதிகமாக இருந்தன. எனினும் அவர்கள் அதனைச் செய்யவில்லை.

மலையக மக்களின் வாழ்வியலை மாற்றவேண்டும், அவர்களுக்கான எழுச்சியினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் இந்த அரசியல் வாதிகளுக்கு கிடையாது.

பதவி இருந்தால் மட்டும் போதும் என நினைக்கும் இவர்களைப் போன்றஅரசியல்வாதிகளுடன்போட்டிபோடுவதில் எனக்கு எவ்வித பயமும் இல்லை. ஏனெனில் நான் வெற்றிபெறுவது உறுதி என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நான் பிறந்த நாள் முதல் இன்று வரை மலையகத்தில் உள்ள கஷ்டங்களை அனுபவித்து வருகின்றேன். இத்தனை நாள் ஆட்சி செய்தவர்கள் இப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுத்திருந்தால் நான் அரசியலுக்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

பாராளுமன்ற உறுப்புரிமையை பெறாவிட்டாலும் மக்களின் பிரச்சினைகளுக்காக மக்களுடன் சேவையாற்றி வருகின்றேன். எனது அரசியல் பயணத்துக்கு தேசிய மக்கள் சக்தி வாய்ப்பளித்துள்ளது.

அடிமட்டத்திலிருந்த நான் படிப்படியாக தேசிய மக்கள் சக்தியினூடாக மாவட்ட மட்ட நிறைவேற்ற குழு உறுப்பினர் என்ற மட்டத்துக்கு வளர்ந்துள்ளேன்.

நான் மக்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பதனால் அவர்களின் பிரச்சினைகளை அறிவேன். இந்த தேர்தலில் எனக்கு போட்டி கிடையாது ஏனெனில் மக்களின் பிரதிநிதியாகவே நான் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

அரசியல் தலைவர் ஒருவர் சிங்கள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், பெற்றோர்கள் பிள்ளைகளின் பேச்சைக்கேட்டு வாக்களிக்க வேண்டாமென தெரிவித்திருப்பதை நான் அவதானித்தேன்.

முந்தைய காலத்தைப்போன்று தொழிற்சங்கவாதிகள் மற்றும் தலைவர்களின் வார்த்தைகளை கேட்டு வாக்களித்த காலம்போய், தற்போது, கல்வியில் சிறந்த சமூகமாக எமது மலையக சமூகம் மாறிக்கொண்டு வருகின்றது. இன்றைய சமூகத்தினர் சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றார்கள். இன்று சுயமாக சிந்திக்கின்றார்கள். முன்னைய காலத்தைப்போன்று அரசியல் தலைவர்களின் வார்த்தைகளை நம்பி தலையை சொறிந்துக்கொண்டு வாக்களித்த காலம் மலையேறி விட்டது. எனவே, தற்போது யாருடைய அழுத்தத்துக்கும் உட்பட்டு மலையக மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். அவர்களின் எதிர்கால சந்ததியினரின் நலனை சிந்தித்தே அம் வாக்களிப்பார்கள் என்பதை என்னால் உறுதியாக கூற முடியும்

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே, நாம் வெற்று பெறுவதை உறுதி செய்து கடந்த வருடத்திலிருந்தே, மலையக மக்கள் வாக்களிப்பார்களா? இல்லையா? என்பதை பற்றி சிந்திக்காது, 76 வடங்களாக ஆட்சி செய்தவர்கள் அங்கீகாரத்தை வழங்காத நிலையில், தேசிய மக்கள் சக்தி அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்கவும் அடிப்படை பிரச்சினைகளை நிவர்த்தி செய்யவும் தயாராகவுள்ளது.

இவ்வளவு காலமும் ஏமாற்றப்பட்ட நாம் இனியும் ஏமாறாது தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பயணத்தை மேற்கொள்வோமாயின் ஏனைய சமூகங்களைப் போன்றே எமது மலையக சமூகமும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கௌரவமான சமூகமாக வாழ்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

எனவே, மலையக சமூகத்தின் விடியலுக்கான காலம் நெருக்கிவிட்டது. தேசிய மக்கள் சக்தி அதன் பிரகடனத்தை நிச்சயமாக நிறைவேற்றும். மலையக பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு நான் செல்வதும் உறுதியாகிவிட்டது. அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதற்கும் அவற்றை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன். என்னால் முடிந்த அனைத்தையும் செய்வதற்கு நான் தயாராகவுள்ளேன். ஆகையால் செய்த தவறுகளை மீண்டும் செய்யாது, மலையக மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்



> **இதுவரையான தலைவர்கள், தேர்தல் காலங்களில், பிரசார நடவடிக்கைகளுக்காகவும், அவர்களின் பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காகவும், மலையக மக்களின் பிரச்சினைகளையும் தொழிற்சங்கங்களையும் பயன்படுத்திக்கொண்டார்களே தவிர, பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.**

**கே : மலையக பெண்களின் பிரச்சினைகளாக எவற்றைக் கூறுவீர்கள்?**

மலையக பெண்களின் பிரச்சினைகளுக்கு வரையறை கிடையாது. முக்கியமாக தொழில் ரீதியாக அப் பெண்கள் காலை 8 மணிமுதல் மாலை வரை தொடர்ச்சியாக உழைத்துக்கொண்டே இருக்கின்றார்கள்.

மாதவிடாய் காலங்கள் அப் பெண்களின் சுகாதார சலுகைகள் கேள்விகுறியாகவே காணப்படுகின்றது. அத்துடன் உணவுகளை, வேலை செய்யும் இடங்களில் அமர்ந்தவாறு உண்ணும் சூழ்நிலையே உள்ளது. எந்துவொரு பாதுகாப்பு அறையோ மலசல கூட வசதிகளோ கிடையாது. அடிப்படை உரிமைகள் புறக்கணிப்பட்ட சமூகமாக இருக்கும் தோட்டத்தொழிலாள பெண்களுக்கு, 76 வருடகாலமாக ஆட்சி செய்தவர்கள் எந்தவொரு வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை.

முக்கியமாக லயன் குடியிருப்புக்களில் ஒரு வீட்டில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அநேகமான பெண்கள் லயன் வாழ்க்கையை மாற்றித்தருமாறு என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர். லயன் அறைகளால் அநேகமான பெண்கள் தங்கள் குடும்பங்களை, இல்லறத்தை, தொலைக்க வேண்டியிருக்கிறது. கணவனின் சந்தேகத்துக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. தனக்கு மூத்த மூன்று பெண் பிள்ளைகள் இருப்பதாகவும், தனது கணவர் இல்லற வாழ்க்கைக்காக தன்னை அழைக்கும்போது, தமது பிள்ளைகளை பற்றி சிந்தித்து அதிலிருந்து விலகிக்கொள்ளவதாகவும் பெண்ணொருவர் தெரிவித்தார். இதனால் தனக்கும் தனது கணவருக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படுவதாக அப் பெண் குறிப்பிட்டார்.

இது தோட்டத்தொழிலாளர்களிடையே பொறுத்தமட்டில் லயன் குடியிருப்புகளில் வாழும் அநேகமான குடும்பங்களில் நிகழும் சம்பவமாகும்.

எனவே, பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலத்தை வழங்க வேண்டுமாயின் வீட்டு வசதிகளை நிச்சயமாக ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அத்துடன், அநேகமான பெண் பிள்ளைகள் வீட்டுக்குள்ளேயே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.

வாழ்க்கைச்சுமை அதிகரிக்க அதிகரிக்க அநேகமான பெண்களும், பெண்பிள்ளைகளும் வெளிமாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் தொழிலுக்காகச் செல்கின்றனர். இதனால் அவர்களின் வாழ்க்கை சீரழிகின்றது.

முறையான பயிற்சிகள் வழங்காது வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் பெண்கள் அங்கு சித்திரவதைக்குளாகின்றார்கள். சில பெண்கள் உயிரிழக்க நேரிடுகின்றது.

**கே : இறுதியாக நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

இத்தனை வருடகாலமும் ஆட்சி செய்தவர்கள் எவ்வித தூர நோக்குடனும் தமது சேவையை செய்யாதமையினாலேயே இவ்வாறான சம்பவங்கள் நிகழ்கின்றன.

தேசிய மக்கள் சக்தியூடாக இந்தபிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழப்படும் என்பது உறுதி. சாக்கடையாக இருந்த அரசியல் தற்போது தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கலாசார அரசியலாக மாறியுள்ளது.

எனவே இளைஞர் யுவதிகளும் தலைமைத்துவத்தை ஏற்க நிச்சயமாக முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

**வாசுகி சிவகுமார்**

# தேசிய அவதாரம் எடுக்கும் நடேச ஐயர்

## பெருமை தரும் தேசிய மக்கள் சக்தியின் பிரகடனம்



நடேச ஐயர் (1887 – 1947)

நவீன அடிமைகள் எனப்படுபவர் யாவர்? ஏமாற்று வழிகள் மூலம், நியாயமற்ற முறையில் அழைத்து (கடத்தி) வரப்பட்டு, நிர்ப்பந்த ஊழியம், கடுமையான உழைப்புச் சுரண்டல். குறைந்த கூலி, ஏமாற்று முறைமைகள், அதிகார துஷ்பிரயோகம், குறிப்பிட்ட சூழ்நிலையிலிருந்து விடுபட்டு வெளியேற முடியாத, கண்ணுக்குத் தெரியாத கட்டுகள் போன்ற நிலைமைக்கு உட்படுபவர் நவீன அடிமைகளாகக் கருதப்படுவர். இந்தியாவிலிருந்து இங்கு அழைத்துவரப்பட்ட எமது மூத்த குடிகளுக்காகவே வரையப்பட்ட ஒரு வரைவிலக்கணமாக இக்கூற்று தென்படுகிறது. இந்த நிலைமை இன்றுங்கூட முற்றுமுழுதாக விலக்கப்பட்டுவிட்டதாகக் கொள்ள முடியாது. இல்லையென்று வாதிப்போர் இரத்தினபுரியில் கலைச்செல்வியை தரையில் கிடத்தி காலால் உதைத்த சம்பவத்தை எந்த வகைக்குள் அடக்குவர். இலங்கையின் சிரேஷ்ட சமூகவியலாளர் கலாநிதி குமாரி ஜெயவர்தன மலையகத்தில் இன்னும் அடிமைத்தனம் நிலவுகின்றதென்று அறுதியிட்டு கூறுகிறார். (தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கலாநிதி சிவப்பிரகாசம் லண்டனில் ஒளிபரப்பப்பட்ட அவரது உரையில் 'மலையகத்தின் நவீன அடிமைகள்' என்ற பதத்தை பலமுறை பிரயோகித்தார்.)

21 ஆம் நூற்றாண்டில் நிலைமை இதுவென்றால் 20 ஆம் நூற்றாண்டில் மலையக நிலைமைகள் ஊகித்துணரக்கூடியதுதான்.

வெள்ளைக்கார துரைமார்களின் அராஜகம் பெரிய கங்காணிமாரின் அடாவடித்தனம், இக்கெடுபிடிகளிலிருந்து வெளியேற நினைத்தாலும், அவர்களை சிக்க வைத்த கடன் பொறிமுறை என்ற விசச் சூழலில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மனித கூட்டத்திற்கு அபயமளிக்க வந்த ஒரு துருவ நட்சத்திரம் தோ. நடசஜயர்.

கொழும்பு நகர வர்த்தக பிரமுகர்களால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியக் காங்கிரஸ் அதன் உயர்தட்டு அபிலாசைகளைக் கொண்டிருந்தபோது, நடேச ஐயர் தோட்ட கூலிகளின் குரலாக ஒலித்தார்.

ஜவகர்லால் நேரு, நடேச ஐயரை ஒரு கூட்டத்திற்கு அழைத்தபோது கூட அதில் பெரிய ஆர்வம் காட்டாமல், அட்டனை மையப்படுத்திய தனது தொழிற்சங்க அமைப்பில் முனைப்போடு ஈடுபட்டதாக ஒரு செய்தியும் உண்டு.

இவ்வாறான ஒரு மலையக ஆளுமையை தேசிய மக்கள் சக்தி இந்த நாட்டின் தோட்ட தொழிலாளர் நலனுக்காக மாத்திரம் உழைத்த மனிதராக மட்டுமின்றி இந்த நாட்டின் முழு தேசிய உருவாக்கத்திற்கும் பங்களிப்பு வழங்கிய ஒரு முற்போக்கு தலைவராக அடையாளம் கண்டிருப்பது, மலையகத்தைச் சார்ந்த எங்களை பெருமை கொள்ளச் செய்கிறது.

அதன் முழு பிரகடனமும் வருமாறு :

இன்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் குடியேற்றவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்திய தொழிலாளர்களை பெருந்தோட்டக் கைத்தொழிலுக்காக இந்நாட்டுக்கு கொண்டு வந்து சேவையில் ஈடுபடுத்துகின்ற செயற்பாட்டிற்குள் அவர்கள் மிகுந்த சுரண்டலுக்கு இலக்காகினர். சுதந்திரத்திற்கு பின்னரும் இந்நாட்டு பொருளாதாரத்தில் கட்டமைப்புச் சார்ந்த மாற்றத்தை செய்யாமல் அவ்வண்ணமே பேணி வந்த சுதேச ஆளுகைப் பிரபுக்களுக்கும் இந்த மக்கள் அனுபவிக்கின்ற துன்பகரமான வாழ்க்கைத் தரத்தில் பாரதூரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை நிலவவில்லை. முதல் தடவையாக மலையக தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மேற்கொண்ட பாரதூரமான இடையீடு நடேச ஐயராலேயே மேற்கொள்ளப்பட்டது.

1921 இல் இந்நாட்டின் முதலாவது தமிழ் தினசரிச் செய்தித்தாளான 'தேசநேசன்' செய்தித்தாளை ஆரம்பித்த நடேசய்யர் இந்நாட்டின் மலையகத் தமிழ் சமுதாயத்தின் சிக்கல்கள் பற்றி தேசிய மட்டத்தில் அச்சு ஊடகம் மூலமாக கலந்துரையாடத் தொடங்கினார். அக்காலக்கட்டத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்கள், வெளியாட்கள் எவருக்குமே பிரவேசிக்கக்கூட தடை செய்திருந்த அடிமை வலயமாக பேணிவரப்பட்டுக் கொண்டிருந்த தோட்டங்களுக்குள் மாறுவேடம் தரித்து உட்புகுந்து தொழிலாளர்களுடன் உறவுகளை கட்டியெழுப்பி அவருடைய மக்களை விளிப்புணர்வூட்டுகின்ற செயற்பாங்கினை ஆரம்பித்தார். தோட்டத் தொழிலாளர்களுக்காக "தேச பக்தன்" எனும் செய்தித்தாளை அவர் ஆரம்பித்ததோடு அதனை இரகசியமாக வெள்ளைக்காரத் தோட்ட ஏகாதிபத்தியம் பூராவிலும் மக்கள் மத்தியில் தமது உரிமைகள் பற்றிய புதிய புத்துணர்ச்சியை உருவாக்கியே பகிர்ந்தளித்தார். தனது செயற்பாடுகளை பெருந்தோட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் பொதுவாக இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தை ஒழுங்கமைப்பதற்காக தோற்றினார். 1927 இல் இலங்கை தொழிலாளர் சங்கத்தினால் நெறிப்படுத்தப்பட்ட துறைமுக வேலைநிறுத்தத்திற்கு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதில் நடேச ஐயர் வெற்றிபெற்றார். இந்நாட்டின் ஒரு சில தொழிலாளர் தலைவர்களால்கூட இந்திய தொழிலாளர்கள் இந்நாட்டுத் தொழிலாளர்களின் தொழில் வாய்ப்புகளை குறைந்த சம்பளத்திற்காக சேவையாற்றி பறித்தெடுக்கின்ற குழுவினராக நோக்குகையில் இந்த மண்ணில் வசிக்கின்ற அனைவரதும் எதிர்காலம் நாட்டின் அபிவிருத்தியிலேயே தங்கியிருக்கின்றது என்பது நடேச ஐயரின் தூரநோக்காக அமைந்தது. அதனால் அனைவரும் ஒன்றுசேர்ந்து பிளவுப்படாமல் அதற்காக போராடவேண்டுமென்பது அவருடைய கருத்தாக அமைந்தது.

தலைசிறந்த பேச்சாளரான அவர் தனது கருத்துக்களால் பெருந்தொனையான மக்களை கவர்ந்திருப்பதில் வெற்றி பெற்றதோடு தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை ஆரம்பித்தார். 1936 இல் ஹற்றன் தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து அரசு கழகத்திற்கு தெரிவாகிய அவர் உலகச் சந்தையில் தேயிலை விலைக்கு அமைவாக தொழிலாளர்களின் சம்பளம் தீர்மானிக்கப்படுகின்ற அனைத்து முயற்சிகளையும் தோற்படிப்பதில் முன்னின்று செயலாற்றினார். 1930 இல் தசாப்தத்தில் பிற்பகுதியில் பதுளை வேவெஸ்ஸ தோட்டத்தில் தொழிலாளர்கள் தோட்டத்தின் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டதால் ஏற்பட்ட நிலைமைக்குள் இந்நாட்டின் பெருந்தோட்டத்துறைக்கான முதலாவது கூட்டு உடன்படிக்கையை கையொப்பமிடுவதில் தனித்துவமான வகிபாகத்தை நடேச ஐயர் ஈடேற்றினார்.

1930 இல் மலையகத்தின் முதலாவது அச்சகமான "சகோதரி" அவரால் ஆரம்பிக்கப்பட்டதோடு அதனூடாக பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள்கள் தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கையில் தீர்மானகரமான மாற்றத்தைக் குறித்துநின்றது. நடேச ஐயர் மலையக தமிழ் இலக்கியத்தின் தந்தை என பாராட்டப்படுகின்றார்.

**லண்டன் ஆர். இராமலிங்கம்**

# மலையகம் இங்கிருந்து எங்கே?

## இராகலையில் 26ஆம் திகதி வெளியீடு





கல்விமான் இர. சிவலிங்கத்தினால் அறிமுகப் படுத்தபட்ட ஓய்வுநிலை கல்விபணிப்பாளர் பீ. மரியதாஸ் எழுதிய மலையகம் இங்கிருந்து எங்கே? வரலாற்று ஆய்வு நூலின் மற்றும் ஒரு வெளியீட்டு விழா 26.10.2024 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இராகலை பாரதி கலை அரங்கத்தில் கவிஞர் மைபா தலைமையில் நடைபெறும். மலையகத்தின் சமூக அரசியல் செயற்பாட்டாளர்களும் சிரேஷ்ட சட்டத்தரணிகளுமான S. தாயுமானவன், A.P. கணபதிப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

கலைஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளையின் சார்பில் பேராசன் மு. நித்தியானந்தன் மற்றும் எச். எச். விக்கிரமசிங்க ஆகியோர் இந்நூலைப் பதிப்பித்துள்ளனர். நூல் பற்றி K. ராஜலிங்கம், P. ராஜதுரை, K. மெய்யநாதன் ஆகியோர் கருத்துரை வழங்க, அதிபர் N. நாகராஜ், S. சரவனபிரகாசம் ஆகியோர் நூல் விமர்சன உரையை ஆற்றுகின்றனர். பெ. அருள்மொழிசெல்வன் நூல் ஆசிரியரை அறிமுகம் செய்கிறார். வரவேற்புரையை S. ஜனார்த்தனும், ஏற்புரையை P. மரியதாஸூம் வழங்க, நன்றியுரையை மணிவண்ணன் வழங்குகிறார்.




# பேராசை...

பேரண்டத்தில் பெருநஷ்டம்
பேராசையன்றி வேறேது...
ஆசை அது அடங்காதது..
அதுவாக அடங்கினால் அது
அகிலத்திற்கே நல்லது...

பேராசை பேராபத்தானது...
ஆசைபோல் அது
அடங்கிப்போகாதது...

ஆசையின்றி மனிதனில்லை
பேராசை கொண்டால்
அவன் மனிதனே இல்லை..

போராசையும்...
பேராசையும்
பேரண்டத்தில் பெரு
நஷ்டங்களே....

ஆவி அடங்கும் வரை
ஆசைகள் அடங்குவதில்லை..
பேராசை கொண்டால்
ஆவி அவசரமாய்
அடங்கிப்போகுமே...

நான் எனும் அகம்பாவமும்
எனக்கு எனும் பேராசையும்
வேரறுக்க வேண்டிய
வேதனை தரும் பண்புகளே...

ஆசை அதிகமாகி
பேராசையாய் பெருக்கெடுத்தால்
பேரவதி பெறுவது இலவசமே..

பேராசைப் பிணி
பனி போல் கரைந்தோடணும்..
பேரணியாய் உனைத் தொடரின்
பெரு நட்டம் பெற்றிடுவாய்...

ஆதி பிதா ஆதமின்
அழகிய வாழ்வு
அஸ்தமித்துப்போக
பேராசைதானே
பெரும்பங்கானது..

பேரிடி வந்திடினும்
போராடி வென்றிடணும்...
பேராசையின்றி எம் வாழ்வு
கழிந்திடணும்....

பேராசை கொண்ட உள்ளங்கள்
உனதானதல்லவே...
அழிந்தோடும் உலகில்
பேராசை தேவையில்லையே...

பேரண்டம் உனை போற்றிட
பெருநதியாய் பாய்ந்தோடிடு..
பேராசையோடு போராடிடு...
பேர் புகழ் வான் தொடட்டுமே...

ஆறடியில் அடங்கிப்போகும்
உன் கூடு
அதனால் பேரண்டம்
பெற உனக்கேன்
பேராசை....

**நுஸ்ரத் மஹ்ரூப்**
மாதம்பை

# பொன் நிலாவுக்கு என் வாழ்த்து...

எட்டாத தொலை
தூரத்திலே இருந்து
மண்ணுலகிற்கு
ஒளி தரும்
வெள்ளி நிலாவே

பூவுலகில் வாழும்
புலவர்கள் எல்லாம்
நீலவானில் பவனி
வரும் பால்நிலாவே
உன்னையே பெண்களின்
வதனத்திற்கு
ஒப்பிட்டு ஒப்பிட்டு
உவமை கூறி
கவிகள் புனைந்து
கவிப் பிரியர்களை
வசியப்படுத்தி
காலம் தள்ளுகின்றனர்

புலவர்கள்
அழகு நிலாவே
மனம் ஒருமித்த
காதலர்களும்
உன்னையே சாட்சியமாக
வைத்து “நிலாவே நீ சாட்சி”
என்று சத்தியம் செய்து
காதலில் விழுகின்றனர்.

காதலில் தோற்றவர்களும்
“நிலாவே வா செல்லாதே வா”
என்றும்
“வண்ணம் கொண்ட
வெண்ணிலவே வானம்”
விட்டு வாராயோ”
என்றும் நெஞ்சம்
உருக சோகராகம்
இசைந்து வாழ்வை
வீணடிக்கின்றனர்
அக்காலத்தில் அன்னையர்கள்
எல்லாம் அதோ
“அம்புலிமாமா” என்று
உன்னைக் காட்டி
குழந்தைகளுக்கு
அமுதூட்டி
ஆனந்தம் கொண்டனர்

கூடி வாழ்ந்த
கூட்டுக் குடும்பங்கள்
முற்றத்து வெளியில்
அமர்ந்து உன்னொளியில்
நிலாச்சோறுண்டு
ஆனந்தமாக இனிதே
வாழ்ந்தனர்.

மின்சாரம் இல்லா
அக்காலத்தில்
உன் ஒளியில்
படித்து மேதையானோர்
பலர் உண்டு
ஓலைக் குடிசையில்
வாழும் ஏழைகளுக்கு
இலவசமாய் ஒளி
பாய்ச்சி உன்னத
சேவை செய்கிறாய்
பொன் நிலவே

அண்மையில் காலமான
ஆம்ஸ்ரோங் முதன்
முதலில் (1963)இல்
உன்னை தொட்டு
சந்திரனை தொட்ட
சாதனை மனிதரானார்
பிறையாக இருந்து
பூரண நிலவாகி
மாதமொருமுறை
பூரண நிலவாகும்
ஈர நிலாவே

மண்ணுலகில் வாழும்
சின்ன புத்தி
கொண்ட சில
மனிதர்கள்
உன்மீதும் களங்கம்
சுமத்தி அகமகிழ்கின்றர்
அவனியில்
மண்ணில் உள்ள
மாந்தருக்கு இத்தனை
மகிமைகள் புரியும்
பால் நிலாவே
பைந்தமிழில்
இனிய சொல்லெடுத்து
உன்னை
வாழ்த்திய வணங்குகிறேன்
வட்ட நிலாவே

**(பிறை fm ஊவா fm இல் ஒலிபரப்பானது 2017.3.11)**



பலாங்கொடை
**வேணி**

# துதித்திறைஞ்சி...

திசையின் விடியல்
திடமாக அமைய

திவ்விய ஒளி
தேசமெங்கும் பரவ

திண்ணமான கொள்கைகள்
திரையின்றிப் பெருக

தீமைகள் அறுந்து
தூய்மை நிலைபெற

தாங்கிய துயரங்கள் மீண்டும்
தரிக்காமல் தூரமாக

தாகித்த நெஞ்சங்களில்
தயவாட்சி அமைதிதர

தரமான மாற்றத்தில்
தாயகம் அருள் பெற
திருத்தங்கள் அமைந்து
தம்மக்கள் செழிக்க

தலைமைத்துவம் நேராகித்
தூரநோக்கு திறம்பட

திக்கெங்கும் நிறைந்திருக்கும்
தேவைகள் நிரப்பமாக

திருப்பங்களில் திருப்தியுற்று
தேடல்கள் வெற்றிபெற

தலைவர்க்கெலாம்
தலையாய தலைவன்
அல்லாஹ்வை

தன்னிகரில்லா
அருளாளன் அவனை
துதித்திறைஞ்சித்
துஆ செய்வோம்

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்



# இதுதான் ‘நான்’

நிலையற்ற இன்பத்தில்
நெடுங்காலம் மூழ்கிவிட்டேன்
போதை தெளிந்தபின்னும்
புறப்பட மனமில்லை

தூசிக் காற்றும்
காய்ந்த சருகும்
பறவையின் எச்சமும்
படிந்தபோதிலும்
அந்நியமும் ஆணவமும்
அதிகாரத் திமிரும்
மானுடத்தை மறுதலிக்கும்
அராஜக தந்திரமும்
அடங்கவில்லை எனக்குள்

போதிமரத்தின் கீழ்
பொழுதெல்லாம் தூங்கியதால்
‘நான்’ எனும் நயவஞ்சகமே
விசுவரூபம் எடுத்தது
நீதி
நேர்மை
நேயம்
சமத்துவம்
எல்லாம் என்னை
உரத்த குரலில் அழைத்தபோதும்
காக்கையின் கூட்டை விட்டு
வெளியேற மறுக்கும்
குயில் மாதிரி
‘மரநிழலே எனக்கு
சொர்க்கம்’ என்றாயிற்று

கனடாவிலிருந்து
**இனியவன் இசாறுத்தீன்**



# அவள் வீசிய காதலன்....

காத்திருந்து களவு
கொடுத்த கல்லறைக்
காதலன் நான்.

பத்திரமாக பார்த்துக்
கொண்ட நினைவு
பக்குவமாய் கூறி
போகிறது பத்தினி
அவள் எனது
காதலி என்பதால்

ஏமாற்றத்தோடு நிறைந்த
வலிகள் உனதென்று.

அன்பாக பேசிய
வார்த்தைகள் கானல்
நீராய் கரைந்து
போனது ஏனோ,
பத்திரமாக பார்த்துக்
கொண்ட காதலென்பதாலா
எனத் தெரியாது.

பாசமாய் பேசினால்
பாவமெனப் பார்க்காது
பாவியென வீசினால்
காதலோடு சேர்ந்து
என் நினைவுகளையும்
இன்று.

ஞாபக மறதியால்
பேசியிருப்பாலென நினைத்தேன்
அன்று தான்
தெரிந்தது ஞாபகத்தில்
இல்லாதவனாய் நானிருக்கிறேன்
என்று அவளிடத்தில்.

ஏனோ அவளிடத்தில்
என் ஞாபகமும்
என் வார்த்தைகளும்
மௌனம் நிறைந்த
வார்த்தைகளாய் போனது.

இருந்தும் பரவாயில்லை
அவள் எனக்கான
காதல் என்பதால்
எனக்கான வாழ்வினையும்
சேர்த்து அழகாய்
வாழ்ந்திட எனது
பிரார்த்தனைகளும்
அவளிடத்தில்.



பொத்துவில்
**அஜ்மல்கான்**

# என் வகுப்பாசிரியை

கல்வியெனும் வித்தை
மொத்தமாய் தந்தீர்......
ஓர் நாள் போதவில்லை
உம்மைப் பற்றி
சொல்லி முடிக்க

அன்பான ஆசிரியரே
உம் கரம் கோர்த்த
நாள் முதல்....
கற்றுத் தந்த
கல்வியை மட்டுமல்ல
கண்ணியமான உங்களையும்
இதயமெனும் பொக்கிஷத்தில்
பொன் எழுத்துக்களால்
பொதித்துள்ளோம்.....

நேசமான பொழுதுகளில்
நேசிப்புக்களையும்....
பாசமான நேரங்களில்
பண்புகளையும்....
கற்க வேண்டிய வகுப்பறையில்
கல்விதனையும்...
கள்ளமில்லாமல் தந்தீர்

கதை பேசும் பொழுதுகளில்
எம்முடன் உற்ற தோழியாய்....

கோபம் கொள்ளும் நேரங்களில்
தந்தையாய்...

நேசம் காட்டும் தருணங்களில்
நல்ல அன்னையாய்.....
"அத்தனை பரிணாமம்"
எம் வகுப்பாசிரியருக்கு!!
வியந்து தான்
போகின்றோம் நாம்.....

வகுப்பறை பாடத்தை மட்டுமல்ல
வாழ்க்கைப் பாடத்தையும்
கற்றுத் தந்தீர்
நல்ல ஆசானாய்....

கற்க மறந்த மாணவரையும்
கற்பித்தீர்....
கள்ளமில்லா எம் பிஞ்சுகளை
நேசித்தீர்....
"கனிவான
ஆசிரியை நிப்லாவே".......
வானவிலின் வண்ணங்களை
வர்ணமயமாக்கி....
வார்த்தைகள் பல கோர்த்தெடுத்து
பிஞ்சு மகள் ஆலாவின்
அன்பான வாழ்த்தோசை.

**ஆலா றிகாஸ்**
தரம் 4
அறபா முஸ்லிம்
ஆரம்பப் பாடசாலை
வெலிகம

# இளைப்பாறல்

அப்பாவும்
அம்மாவும்
அவதிப்பட்டனர்
நோயினால்

அறிவு தெரிந்த
வயதில் இருந்து
கடுமையாக
உழைத்தாள்

பெற்றோரையும்
சகோதரங்களையும்
வாழவைக்க
எமது மூத்த அக்கா

குடும்பம்
உறுதிபெற்றபோது
இளைப்பாறுகின்றாள்
இப்போ புதைகுழியில்

**குப்பிளான் குமரன்**



# என் கவிதைகளில் தொட்டில்...!

உன் வருகையைத் தடுத்து
வேலி கட்டினாலும் அதை
ஏணியாக்கி அதிலேறி
எட்டிப் பார்க்கின்றாய் !
அது எனக்கு ஏளனமாய் இருக்கிறது

பொறுமை இழந்து – உன்னை
பொறி வைத்து கொல்லவும் மனதில்
தைரியம் வருவதில்லை
முடிவில்லா நீ பண்ணும்
அட்டகாசங்கள் யுத்தம் பண்ணும்
போர் வீரனின் உத்திகளை விட
வித்தியாசமானதே !

என் ஆழ்ந்த உறக்கத்தை
அவதானித்து
சாமத்தில் சமையலறையில்
நீ பண்ணும் ஆதிக்கத்தை
அடிக்க முடியவில்லை

அதிலும் அதி உச்சமாய்
சேமித்து வைத்த என்
கவிதைகள் பிரசுரமான
பத்திரிகைகளை
பக்குவமாய் கிழித்து எடுத்து
உன் குஞ்சுகளுக்கு என் கவிதைகளில்
தொட்டில் பண்ணியதுதான்

பூனை புக இயலாத பொந்துகளில்
நீ இருந்தாலும் சமயத்தில்
பூனையிடம் பிடிபட்டு மரணித்தாலும் கூட
அர்த்தமில்லாமல் போர்களில்
செத்து மடியும் மனிதர்களை விட
உன் மரணம் ஒரு உயிரின்
உணவுக்காகவேனும்
உபயோகமாகிறது !



முற்பணம் முடிந்து – நான்
பெட்டி படுக்கையுடன்
வீட்டைக் காலிபண்ணி
புறப்படுகையில் உன்னை
பிரிதல் போல்
ஒரு நெருடல் நெஞ்சில் பட்டாலும்
இந்த வாடகை வீட்டில் உன்
சொந்த வீடு என்பதை
புரிந்துகொண்டு
நான் பயணமாகிறேன்
இன்னோர் வாடகை வீட்டுக்கு...!

**சி. எம். சங்கர்**
பண்டாரவளை

# நாள் தொலைவிலில்லை

என் மக்களின்
உதிரத்தின் வேகம் அறிவாயோ
உணர்வுகளின் வீச்சு புரியுமா
அவர்களின் இந்த மலைகள் பற்றிய
பார்வையை உன் துருப்பிடித்த
புதிய மூளை அறியுமா?

அவர்களது சிரிப்பு கவலை
உழைப்பு ஏக்கம் என
அத்தனையையும் விற்று
தின்கிறாய் நீ!

இந்தத் தேசக்காற்றைத்
தோளில் போட்டுக்கொண்டு திரியும்
அவர்களின் நடையைப்
பற்றி அறிவாயோ நீ!

இந்த மலைகளிடையே
ஒரு சூரியப்பகலில்
நடந்திருப்பாயா?

ஒரு நள்ளிரவில் அதைக்
கடந்திருப்பாயா?

கல்லையும் மண்ணையும் உருக்கு
லைத்து வடித்த
வியர்வையின் வாசனையை
நுகர்ந்து இருப்பாயா?
காப்புக்காய்த்திருக்கும் அவர்களது
கைகளையேனும் தொட்டு
இருப்பாயா?

கோடிப்பக்கத்தில் வீசும்
சிறுநீர் வீச்சத்தில்
மூச்சடக்கி வாழும்
வாழ்க்கையைப் பார்த்திருப்பாயா?
முருங்கை அல்லது
சவுக்குமரத்தடியில் அமர்ந்து
அவர்கள் பேசும்
கதைகளைக் கேட்டிருப்பாயா?
அந்திப் பொழுதுகளை
ரம்மியமாக்கும்
அந்தக் கதைகள்தான்
உனக்குப் புரியுமா?

ஓர் இரவாவது என் மக்கள் வாழும்
லயக் காம்பராவில்
உறங்கியிருப்பாயா நீ?
அங்கிருந்தே
நூற்றாண்டுகளைக் கடக்கும்
அவர்களது வாழ்க்கையை
எழுதுவாயா நீ?
அவர்களது துயரப்
பாடல்களைப் பாடுவாயா?

மலையை இடித்து
மண்ணை வடித்து
மரத்தை நாட்டிய
வரலாற்றை உன்னால்
பேச முடியுமா?

அவர்களை ஓடாத
நதிகளைப்போல
வைத்திருக்க நினைக்கிறாயே!
அவர்களிலிருந்து, அவர்
துயர் கேட்டு
கண்ணீர் முட்டி
உதிரம் கொதித்து
அவர்களது
விடுதலையைப்பாட
நான் தலைமையேற்கும் நாள்
தொலைவிலில்லை!



**சு.தவச்செல்வன்**
(சாயப்பட்ட வரிகள்
கவிதை நூலில் இருந்து)

திருச்செந்தூரில்

# கந்த சஷ்டி திருவிழா நவம்பர் 02இல் ஆரம்பம்

## உரை நிகழ்த்துகிறார் ஆறு திருமுருகன்





தமிழ்நாடு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கந்த சஷ்டி திருவிழா எதிர்வரும் நவம்பர் மாதம் 02ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக திருக்கோயில் இணை ஆணையர், செயல் அலுவலர் சு. ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

02ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை அதிகாலை 1.00 மணிக்கு நடைதிறக்கப்பட்டு 1.30 மணியளவில் விஸ்வரூப தரிசனமும் தொடர்ந்து உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடைபெற்று காலை 5.30க்கு அருள்மிகு ஜெயந்தி நாதர் யாகசாலைக்கு புறப்படுதல் காலை 9 மணிக்கு உச்சி கால அபிஷேகமும் பிற்பகல் 3.30க்கு சாயரட்சை தீப ஆராதனை என்பனவற்றுடன் வழமையாக ஆன்மிக அருளுரைகளும் தங்கரத பவனி சண்முக அர்ச்சனை என்பனவும் இடம்பெறும்

சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகரும் ஆன்மீக அருளுரையாளருமான ஆறு திருமுருகன் அவர்களின் ஆன்மிக சொற்பொழிவு நவம்பர் 02ஆம் திகதி முதல் 07 திகதி வரை தேவஸ்தான சண்முகவிலாஸ் கலையரங்கில் நடைபெறும். லண்டன் V. யோகநாதன், தனது தந்தையார் நினைவாக இந்த ஆன்மிக அருளுரையை ஏற்பாடு செய்து பல வருடங்களாக அனுசரணை வழங்கி வருகிறார். நவம்பர் 7 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சுவாமி சூரசம்ஹாரத்திற்கு எழுந்தருளி சூரசம்ஹாரம் கடற்கரையில் நடைபெறும். 8ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு அம்பாள் தபசுக்கு புறப்படுவார். மாலை 6 மணிக்கு சுவாமிக்கும் அம்பாளுக்கும் மாலை மாற்று விழா நடைபெற்று அன்று இரவு திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.

அதேவேளை பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை மிகத் திறம்பட நடத்தியமைக்காக இலங்கை இந்து சமய கலாசார பணிப்பாளர் அனிருத்தன் மற்றும் இலங்கை வாழ் முருக பக்தர்கள் சார்பாக அமைச்சர் பி.கே. சேகர் பாபுவுக்கும் அறநிலையத்துறை ஆணையாளர் பி.என். ஸ்ரீதருக்கும் அறநிலையத்துறை உயர் அதிகாரிகளுக்கும் நன்றிகளும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

–எச். எச். விக்கிரமசிங்க

# 3 நிமிடம் 18 நொடிகளில் 140 பெருக்கல் கணக்குகள்

## சோழன் உலக சாதனை படைத்த சிறுமி ஸீனத்



(ரீ.எல்.ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறூப் நிருபர்)

காத்தான்குடியில் வசித்து வரும் முஹமட் பஸ்லி மற்றும் ஸமீலா ஆகியோரின் மகள் 9 வயதான ஸீனத், சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் 3 நிமிடங்க்ள 18 நொடிகளில் 140 பெருக்கல் கணக்குகளுக்கு அபாகஸ் முறை மூலம் தீர்வெழுதி உலக சாதனை படைத்தார்.

இந்த நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் அமைந்துள்ள மீரா பாலிகா தேசிய பாடசாலையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு தலைமையேற்றார் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் த.இன்பராசா. முதன்மை விருந்தினர்களாக காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையின் அதிபர் .அஷ்ஷெய்க் எம்.மன்சூர் மற்றும் ஷிப் அபாகஸ் அமைப்பின் இலங்கை நாட்டின் தலைவர் றிஷாட் ரஹீம் போன்றோர் பங்கு கொண்டு உலக சாதனை படைத்த சிறுமியை பாராட்டி சிறப்புரையாற்றினார்கள். சிறப்பு விருந்தினர்களாக ஷிப் அபாகஸ் அமைப்பின் அபிவிருத்தி முகாமையாளர் இன்ஷாப் நவாஸ்



மற்றும் காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையின் துணைத் தலைமை ஆசிரியர் திருமதி.நிருஷினி பிரதீபன் போன்றோர் உலக சாதனைச் சிறுமியை வாழ்த்தி உரையாற்றினார்கள். சோழன் உலக சாதனை படைத்த சிறுமி ஸீனத்திற்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம், அடையாள அட்டை மற்றும் பைல் போன்றவை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் த. இன்பராசா, திருகோணமலை மாவட்டத் தலைவர் தனராஜ், மட்டக்களப்பு மாவட்டப் பொதுச் செயலாளர் சிவ வரதகரன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களான பர்சான் ஆகியோர் வழங்கிப் பாராட்டினார்கள். இந்த நிகழ்வை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் மற்றும் பீபல்ஸ் ஹெல்பிங் பீபில்ஸ் பவுண்டேஷன் போன்ற நிறுவனங்கள் இணைந்து நடத்தியிருந்தன.







வருடாவருடம் வெவ்வேறு நாடுகளில் நடைபெறும் *Hair, Make up & Beauty Olympics* போட்டி இந்த வருடம் 28ஆவது தடவையாக கம்போடியாவில்நடைபெற்றது. 19நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இதில் பங்குபற்றினார்கள். இந்தத் தடவை இந்தப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த 7 தமிழ் அழகுக் கலைஞர்கள் முதல் தடவையாக பங்கு பற்றினார்கள். அங்கு நடைபெற்ற மணப்பெண் அலங்காரப் போட்டியில் எமது நாட்டைச் சேர்ந்த அனித்தா விநயகாந்தன் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது

# இன்று தனது 26ஆவது அகவையில் கால் பதிக்கும் சக்தி தொலைக்காட்சி

**1998 ஒக்டோபர் 20ஆம் திகதி இலங்கையில் தொடங்கப்பட்ட முதல் தனியார் தமிழ் தொலைக்காட்சி என்ற பெருமையைக் கொண்ட சக்தி தொலைக்காட்சி, கடந்த 26 ஆண்டுகளாக தமிழ் பேசும் சமூகத்திற்காக முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழ் பேசும் மக்களின் கலாசாரத்தைப் பாதுகாத்து வளர்ப்பதில் பெருமளவு பங்களிப்பு செய்துள்ளது.**

**திறமைகளை ஊக்குவிக்கும் தேடல் நிகழ்ச்சிகள்**

சக்தி தொலைக்காட்சி தன்னுடைய திறமைச் செயல்முறை நிகழ்ச்சிகளை வழிகாட்டியாகக் கொண்டு தமிழ் பேசும் பண்பாட்டினை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல முன்னோடி நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளது. சக்தி சூப்பர்ஸ்டார் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பாட்டுப் பாடவா, இளைய கானம், ரேடியோ சூப்பர் ஸ்டார், சூப்பர் ஸ்டார், ஜூனியர் சூப்பர் ஸ்டார், சக்தி இசை இளவரசர்கள், இசை மகாயுத்தம் மற்றும் சமீபத்தில் "சக்தி கிரவுன்" போன்ற நிகழ்ச்சிகள் நாட்டின் தமிழ் இசைத் தரத்தை உயர்த்தும் வகையில் பங்களிப்பு செய்து வருகின்றன. இதன் மூலம் இலங்கையின் தமிழ் இசைத் துறைக்கு பாரிய பங்களிப்பு செலுத்துவது மாத்திரமன்றி இதுவரை அதிகமான இசைத்தொகுப்புகள் மற்றும் காணொலித்தொகுப்புகள் வெளியிட்ட பெருமையும் சக்தி தொலைக்காட்சிக்கே உரித்தானதாகும்.

"ஓ போடு" என ஆடல் கலையை நேசிக்கும் மக்களுக்கு ஆரம்பிக்கப்பட்ட ஆடல் நிகழ்ச்சி பின் நாட்களில் பாரம்பரிய ஆடல் செழுமையை உள்ளீர்த்து பாரம்பரிய போட்டி நிகழ்ச்சியாக "திமி தகதா" எனும் பெயரில் ஒளிபரப்பப்பட்டது. அவை பின்நாட்களில் நாட்டினது அனைத்து பாகங்களையும் இணைக்கும் நோக்கில் குழுப் போட்டி நிகழ்ச்சியாக *"Shakthi Classical Dance star"* எனும் பெயரில் இரு பருவங்களாக நடைபெற்றது.

இலங்கை மக்களிடையேயான பேச்சுவன்மையை பலப்படுத்தும் முகமாக "களம்" நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு அவை பத்து பருவங்களாக பாடசாலை மாணவர்களின் விவாதத்திறனை சமூகத்திற்கு அடையாளப்படுத்தும் நிகழ்ச்சியாக வியாபித்திருந்தது. பின்னர் தமிழ் செழுமையை அதிகம் உள்ளீர்க்கும் முகமாக தமிழ் பேராசான்களின் வழிநடத்தலில் "சக்தி தமிழோசை" இரு பருவங்களாக விரிவடைந்தன.

மாணவர்களின் தகவலறிவு, சமயோசிதம் மற்றும் பேச்சுத்திறனை மேம்படுத்தும் நோக்கில் அதிக பொருட்செலவில் "அறிவு", பஞ்சதந்திரம், *"The Debater"*, *"Econ Icon"* போன்ற நிகழ்ச்சிகளும், பார்வையாளர்களை அறிவுடனும், அவதானத்துடனும் போட்டியிட வைத்து மிகப்பெரும் பணப்பரிசில்களை வழங்கி வெற்றியாளர்களாக ஆக்கும் மஹா லட்சாதிபதி, வெல்லலாம் வாங்க, *"Grand Master"* போன்ற நிகழ்ச்சிகளையும் சக்தி தொலைக்காட்சி திட்டமிட்டு வழங்கியது.

இலங்கையின் தனித்துவம் மிளிர வேண்டும் என்ற நோக்கம் சக்தி தொலைக்காட்சிக்கு ஆரம்பத்திலிருந்து இருந்ததனால் இந்திய இலங்கை கூட்டுத்தயாரிப்பில் மறைந்த மாபெரும் நடிகை மனோரம்மா மற்றும் நம் நாட்டின் மறைந்த கலை ஜாம்பவான்களான மரிக்கார் இராமதாஸ், உபாலி செல்வசேகரன் மற்றும் கலைஞர் சந்திரசேகரன் போன்றோரும் பங்குகொண்ட வா வாத்யாரே வா தொலைக்காட்சி நாடகத்துடன் சக்தியின் நம்மவர் படைப்பின் ஒளிபரப்பு ஆரம்பமாகி பின்னர் மீண்டும் மீண்டும் கோமாளிகள், நிஜத்தின் நிழல், சின்னத்திரை, சக்தி திரைக்கூடம் என இன்று வரையில் பல தொலைக்காட்சி நாடகங்களும் வெள்ளித்திரைப் படங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நடிக நடிகைகள் மாத்திரமன்றி திரைப்படைப்புத்துறையின் பல திறமையானவர்களும் இனங்கானப்பட்டு இன்றுவரையிலும் தம் துறையில் பங்குகொள்கின்றனர். சமய ஒற்றுமைக்கு ஊக்கமளிக்கும் விதமாக, சக்தி தொலைக்காட்சி பல சமய நிகழ்ச்சிகளை நேரலையாக ஒளிபரப்பி வருகிறது. அதில் பல இஸ்லாமிய போட்டி நிகழ்ச்சிகள் ரமழான் காலங்களில் ஒளிபரப்பப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கையின் அரசியல் நிலைமைகள் குறித்த ஆழமான விபரங்களை வழங்கும் மின்னல் சமர், எதிரொலி, புதிய பாதை போன்ற நிகழ்ச்சிகளின் வழியாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் விழிப்புணர்வுக்கு பாரிய பங்களிப்பையும் சக்தி தொலைக்காட்சி வழங்குகிறது .

**மனிதநேய உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரணம்**

சக்தி தொலைக்காட்சி வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம், சுனாமி நிவாரணம் போன்ற பேரிடர் காலங்களில் ஆற்றிய உதவிகள் இன்றும் மக்களால் நினைவுகூரப்படுவது குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் தொடரப்படும் "கம் மத்த" எனும் மனித நேய செயற்திட்டம் பாதிக்கப்பட்ட மக்களின் துயரறிந்து செயற்படும் மிக உத்தமமான செயற்திட்டம் என்ற சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இவை தவிர்த்து சமூக விழுமியங்களுக்காய் அதிகம் சேவையாற்றும் மாமனிதர்களை இனம்கண்டு கௌரவப்படுத்தும் பல விருது வழங்கும் செயற்திட்டங்களையும் சக்தி தொலைக்காட்சியானது வழி நடத்தி வந்துள்ளது.

**எதிர்காலத்திற்கான உறுதிமொழி**

சக்தி தொலைக்காட்சி தனது 26ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் இந்த நேரத்தில், இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்காக அவர்களின் கலாசாரத்தைப் பாதுகாக்கும் புதிய முயற்சிகளை, பூகோள மாற்றங்களை உள்வாங்கி தொடர்ந்து முன்னெடுக்க உறுதி பூண்டிருக்கிறது.

ஹசீம்...




மாவனல்லை 'IDEAL' ஏற்பாட்டில் சிறார்களின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாவனல்லை ந யா வ லை யை ச் சேர்ந்த மூன்று வயது சிறுமி M.S.F.Zoha தனக்குரிய பதக்கத்தையும், சான்றிதழையும் அதிதியிடமிருந்து பெற்றுக் கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

# முஸ்லிம் மஜ்லிஸ்: 80 வருட பயணம்



நிர்வாகக் கட்டம், பொறியியல் பீடம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர்களின் கலாசாரம் மற்றும் தனித்துவத்தை இருள்வானில் உடுக்கள் போல மிளிரச்செய்ய 1944 ஆம் ஆண்டு SLM. ஷாபி மரைக்கார் மற்றும் S.A. இமாம் ஆகியோரின் தூரநோக்கின் விளைவாக உருவாக்கப்பட்டதே பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் எனும் வரப்பிரசாதம். இதன் வளர்ச்சிக்கு பல முட்பாதைகள் தடைக்கற்களாக தொடர்ந்து வந்தாலும் அவற்றையெல்லாம் சிறந்த தலைமைத்துவத்தாலும் தியாகத்துடனான விடாமுயற்சியாலும் கைகோர்த்து கடந்து இவ்வருடம் எண்பது ஆண்டு கால பயணத்தை எட்டியுள்ளமை வியந்து புகழ வேண்டிய சாதனையாகிறது.

காலங்கள் மாறிச் சென்றாலும் நவீனம் என்ற பெயரில் நாகரிகம் வளர்ந்த போதிலும் இஸ்லாமிய மார்க்கத்தின் தூய்மையை பல்கலைக்கழக மாணவர்களிடையே பாதுகாக்க வேண்டும் மற்றும் பல தரப்பட்ட துறைகளிலும் அவர்களை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் தொடர்ந்தும் இயங்கி வரும் எமது மஜ்லிஸ், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தலைமைத்துவத்திற்கு மிக முக்கியமான முன்னுதாரணமாக திகழ்கிறது. அதாவது முஸ்லிம் மஜ்லிஸின் தலைமைத்துவத்தின் கீழ் கிட்டத்தட்ட ஒன்பது துறைகளுக்கும் தனித்தனியாக உப மஜ்லிஸ்களை நிர்வகிப்பது மட்டுமல்லாமல் பொருத்தமான ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. இதில் சிறப்பான விடயம் என்னவென்றால் மஜ்லிஸ் வழங்கும் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் இன, மத வேறுபாடின்றி அனைத்து சமூகத்திற்கும் வழங்கப்படுகின்றது. எனவே எமது முஸ்லிம் மஜ்லிஸின் இந்த தனித்தன்மையானது அனைவராலும் போற்றப்படக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது.

பல்கலைக்கழக வாழ்க்கையில் முஸ்லிம் மாணவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு இது உறுதுணையாக இருப்பதோடு கல்வி, விளையாட்டு, ஆன்மிகம், சமூக சேவை என பல்வேறு துறைகளில் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதில் முஸ்லிம் மஜ்லிஸ் முக்கிய பங்கு வகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் கலாசார விழாக்கள், கருத்தரங்குகள், மதச் சொற்பொழிவுகள் போன்றவை மூலம் மாணவர்களிடையே ஒற்றுமையையும், பரஸ்பர புரிதலையும் வளர்க்க மஜ்லிஸ் முயன்று வருகிறது. இதன் பெயர் சுட்டிக் காட்டும் நிகழ்வுகளான *'Toward Success'*, *'Edu Voyage'* மற்றும் *'Pera Adventour'* பாடசாலை மாணவர்களின் கல்வியிலும் கூட கரிசனை காட்டுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவை மாத்திரமல்லாமல் 'இன்ஷிரா' எனும் சஞ்சிகையூடாக மாணவர்களின் திறமைகளை உலகறியச்செய்கிறது.

பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பள்ளிவாசலின் பராமரிப்பு, ரமழான் மாதத்தில் நோன்பு திறப்பு மற்றும் ஸஹர் ஏற்பாடுகள், ஹஜ் யாத்திரை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என முஸ்லிம் மாணவர்களின் ஆன்மிக வாழ்க்கையிலும் மஜ்லிஸ் முக்கிய பங்கு வகிக்கிறது. அதே நேரத்தில், பல்கலைக்கழக நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட்டு, முஸ்லிம் மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் கவனம் செலுத்தி வருகிறது.

சமூக சேவை நடவடிக்கைகளிலும் முஸ்லிம் மஜ்லிஸ் முன்னணியில் உள்ளது. இயற்கை பேரழிவுகளின் போது நிவாரணப் பணிகள், இரத்த தான முகாம்கள், கிராமப்புற மக்களுக்கான மருத்துவ முகாம்கள் என பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்களில் பலர் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்துள்ளனர். அவர்களது அனுபவங்களையும், அறிவுரைகளையும் தற்போதைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான தளமாகவும் முஸ்லிம் மஜ்லிஸ் விளங்குகிறது.

எதிர்காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வதும், அதே நேரத்தில் பாரம்பரிய மதிப்புகளை பாதுகாப்பதும் முஸ்லிம் மஜ்லிஸின் முக்கிய நோக்கமாக உள்ளது.

இவ்வாறாக, கடந்த 80 ஆண்டுகளாக பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களின் வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கமாக விளங்கி வரும் முஸ்லிம் மஜ்லிஸ், எதிர்காலத்திலும் தனது பணியை மேலும் விரிவுபடுத்தி, புதிய உயரங்களை அடைய உறுதி பூண்டுள்ளது.

எம்.ஆர்.எ·ப். ரிப்னா,
எம்.எ·ப் .எ·ப். ரிமாசா,
டீ.எம் .யமீன்
படம்: மொஹமட் பஸால்

## மஞ்சரி சிறுகதை

# மனிதாபிமானம்

"மகன் எழும்புங்க. மடைம் ஆயிட்டு. சுபஹுக்கு பள்ளிக்குப் போகணும்" என்ற எனது உம்மாவின் சத்தம் கேட்டு மெல்ல எழுந்தேன். அடித்துப் போட்ட உடலைப் போன்று உடல் முழுக்க அசதி ஒரு தொற்று நோயாய் அப்பியிருந்தது. மீண்டும் மீண்டும் எழும்புமாறு தாய் குடைச்சல் கொடுத்துக் கொண்டேயிருந்தாள். இன்று செய்வதற்கு ஏகப்பட்ட வேலைகள் மீதமிருந்தன. ஒரு வாரத்துக்கு முன்பே திட்டமிட்டதைப் போன்று முதல் வேலையாக ஹப்புத்தளை பிரதேசத்துக்குச் செல்ல வேண்டும். அறையின் மின்குமிழை ஒளிரச் செய்து விட்டு, சுவரில் தொங்கியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான்.

கடிகார முட்கள் நான்கரை மணியை காட்டிக் கொண்டிருந்தது. நானும் எழுந்து சென்று தேவைகளை முடித்துக் கொண்டு வுழு செய்து கொண்டு பள்ளிக்குச் சென்றேன். சுபஹ் தொழுகையை இமாம் ஜமாத்தாக தொழுது விட்டு இன்று ஹப்புத்தளையில் இருக்கும் என் உறவினர் வீட்டுக்கு செல்ல வேண்டி இருப்பதால் துஆ முடிந்தவுடன் வீடு திரும்பி விட்டேன். ஒவ்வொரு நாளும் சுபஹ் தொழுதுவிட்டு வீடு திரும்பும் போதும், வீட்டில் தேநீர் தயாராக இருக்கும். அன்றைய நாளும் தேநீரை அருந்தி விட்டு சற்று நேரம் தாயுடனும் தந்தையுடனும் பயணத்தை பற்றி பேசிவிட்டு, என் அறைக்குச் சென்றேன்.

பயணத்திற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொண்டு நானும் தயாராகிக் கொண்டு "உம்மா, வாப்பா போய் வாரேன். துஆ செய்யுங்க" என்று சொல்லி விட்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்து விட்டேன். நேரம் 5:30 கடந்திருந்தது. அம்பாறை நோக்கி செல்லும் பஸ் ஒன்று வரவே அதில் ஏறிக் கொண்டேன். ஏறியதும் வந்த யோசனை "எப்படி போய்ச் சேரப் போகிறேனோ அவ்வளவா சிங்களமும் தெரியாது. எத்தனை மணி ஆகுமோ?" என்ற சிந்தனைதான்.

எவ்வளவுதான் பஸ்ஸில் போய் பழக்கம் இருந்தாலும், ஒவ்வொரு முறையும் போகும்போதும் முதல் முறை போகும் உணர்வு தான் வரும்; பயம் சந்தோஷம் ஜன்னலோர இருக்கை இயற்கை காற்று முகம் எல்லாம் புழுதி நெரிசல்புதிய முகங்கள் தூக்கம் இப்படி அதன் உணர்வுகளே சற்று அலாதியானவை. அம்பாறையில் இருந்து பண்டாரவளைக்கு சரியாக அதிகாலை 6:15 க்கு ஒரு அரசுப் பேருந்து செல்லும்.

அதை எப்படியாவது அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், அவ்வளவு அவசரமாக இன்றைய நாளில் என் தயாரிப்புகள் எல்லாம் இருந்தன. அம்பாறையை அடையும் போது நேரம் 6:30 ஐ தாண்டி விட்டிருந்தது. ஆம், நீங்கள் நினைப்பது போலவே, பஸ்ஸைத் தவற விட்டுவிட்டேன். என்ன செய்வது என்று அறியாமல் தரிப்பிடத்தில் இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.



அப்போது என் அருகில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதர் "எங்கயன் போகப் போறீங்க?" என்று கேட்டார்.

நான் "ஹப்புதளைக்குப் போகப் போறேன்" என்றேன். "அப்படியா இங்கினக்கிருந்து 7:15 க்கு இன்னொரு பஸ் ஈக்கிது. அது பாணந்துறைக்கு போகுது, அதுல போய் வெள்ளவாயல எறங்கி அங்கினயிருந்து ஹப்புதளைக்கு பஸ் எடுங்க" என்றார். எனக்கு ரொம்ப சந்தோஷம்.

நானும் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு அவருடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தேன். சரியாக 7:10 க்கு பஸ் வந்தது. நானும் அவருக்கு போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு பஸ்ஸில் ஏறிக்கொண்டேன்.

பஸ் 7:15 க்கு பயணத்தை ஆரம்பித்தது. நானும் வெள்ளவாயவிற்கு டிக்கெட் எடுத்து விட்டு, மூன்று பேர் உட்காரக் கூடிய இருக்கையில், ஜன்னலோரமாய் பார்த்து உட்கார்ந்து கொண்டேன். பஸ்ஸும் தன் பாட்டிற்கு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

இருபக்கமும் காடு, நடுவே தார் வீதி. கண்ணுக்கு எட்டும் தூரத்திற்கு வாகனங்களே இல்லை, பச்சை மரங்களெல்லாம் சட்டென என்னை மறுத்து, கோபித்து புறந்தள்ளுவது போல், ஒரு உணர்வு; இது தனிமையின் அடையாளம் என்பதை, காற்றின் வருடல் கொண்டு புரிந்து கொண்டேன்.

பேருந்து சியபலாந்துவவைக் கடந்து செல்லும்போது இடையில், ஒரு அரசு தரிப்பிடத்தில் நின்றது. அப்போது ஒரு தாய் தன் இரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் குழந்தையுடன் ஏறிக்கொண்டாள் அத்தாய். என் அருகில் இருக்கும் இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

பஸ் சிறிது தூரம் செல்கையில் குழந்தை அழத் தொடங்கி விட்டான், அத்தாய் தனது கையில் இருந்த கைப்பையில் இருந்து ஒரு பால் பக்கட்டை எடுத்து, அக்குழந்தைக்கு அருந்தக் கொடுத்தாள்.

அவனும் அதை அருந்தினான். சற்று நேரத்தில் அத்தாய் அக் குழந்தையை கொஞ்சம் வைத்துக் கொள்ளுமாறு சிங்களத்தில் என்னிடம் கேட்டாள்.

நானும், சரி என்று தலை அசைத்து விட்டு, அக் குழந்தையை வாங்கிக் கொண்டேன். அவனுமோ என் மடியில் உட்கார்ந்து கொண்டு ஜன்னலூடே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான், அவன் என்னிடம் நன்கு பழக்கப் பட்டு விட்டான். சிறிது நேரத்தில் தூக்கம் வரவே அந்த தாய், அதைப் பார்த்துவிட்டு எனக்கு சிரமமாய் இருக்கும் என்று சொல்லி விட்டு குழந்தையை கேட்டு வாங்கிக் கொண்டாள்.

நானும் என்னை அறியாமல் நன்கு அயர்ந்து உறங்கி விட்டேன். சிறிது நேரம் கழித்து முழிப்பு வரவே விழித்துக் கொண்டேன். அப்போது அருகில் இருந்த அக்குழந்தையை பார்த்தேன், அவனுமோ தான் அருந்தியிருந்த பால் முழுவதையும் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று அவன் எடுத்த வாந்தி அவனுடைய தாயின் ஆடை முழுவதும் பட்டுவிட்டது. அவள் மிகவும் சிரமப்பட்டு கொண்டிருந்தாள்.

அவளுடைய கைப்பையை திறந்து, கைக்குட்டையை எடுத்து குழந்தையை சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

அவனோ அழுது கொண்டிருந்தான், அவள் அவனை என்னிடம் தந்துவிட்டு பின்னர் தன்னுடைய ஆடையை சுத்தம் செய்து கொண்டிருந்தாள். அத்தாய் தன் பயணத்திற்கு ஒரே ஒரு கைப்பையை மாத்திரமே கொண்டு வந்திருந்தாள்.

அதில் அக்குழந்தைக்கு ஒரு ஜோடி ஆடை இருந்தது போலும், அதை எடுத்து தன் குழந்தைக்கு ஆடையை மாற்றி விட்டாள், ஆனால் அவள் தான் அழுக்குப் பட்ட ஆடையுடனேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அது அவளுக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியது. பஸ்ஸில் இருந்தவர்களுக்கு வாந்தியின் துர்வாடை வீசவே அவளை சற்று ஏளனமாக பார்த்தார்கள். அருகில் இருந்த எனக்கு அவளின் நிலை மிகுந்த பரிதாபத்தை உண்டு பண்ணியது.

பஸ் மொனராகலை மத்திய பேருந்து நிலையத்தை சென்றடைந்தது. அங்கே பஸ் அரை மணித்தியாலத்திற்கு நிற்கும் என்று பஸ் கண்டக்டர் கூறிவிட்டார். பஸ் நின்றவுடன் என் கண்கள் சுற்று முற்றும் இருந்த சாப்பாட்டுக் கடைகளையே தேடியது, அவ்வளவு பசி வயிற்றை வாட்டி வதைத்து கொண்டிருந்தது.

கடைக்குச் சென்று ஏதும் வாங்கிச் சாப்பிடுவோம் என்று பஸ்ஸிலிருந்து இறங்கினேன்.

பேருந்தில் என் இருக்கைக்கு பின் இருக்கையில் ஒரு முஸ்லிம் குடும்பம் உட்கார்ந்து கொண்டு வந்தது.

அதில் தாயுடனும் தந்தையுடனும் சேர்த்து அவர்களது இரு பிள்ளைகளும் வந்திருந்தார்கள். நானும் பஸ்ஸிலிருந்து கீழே இறங்கி சுற்று முற்றும் ஏதாவது முஸ்லிம் ஹோட்டல் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது அம் முஸ்லிம் தாய் என் அருகில் இருந்த அந்த சிங்கள தாயின் கையைப் பிடித்துக் கொண்டு எங்கோ அழைத்துச் சென்று கொண்டிருந்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

நானும் ஒரு முஸ்லிம் ஹோட்டலுக்கு சென்று பரோட்டாவும் கறியும் வாங்கி சாப்பிட்டு விட்டு குளிர்பானம் ஒன்றையும் அருந்திவிட்டு வெளித் தேவைகளையும் முடித்து விட்டு பஸ்ஸில் வந்து ஏறிக் கொண்டேன்.

அப்போது அங்கே நான் கண்ட காட்சி எனக்கு சற்றே ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. முஸ்லிம் தாய் தன்னிடம் இருந்த தன்னுடைய ஆடையை கொடுத்து அதை அந்த சிங்களத் தாய்க்கு அணிவித்திருந்தாள், இருவரும் என்னைக் கண்டவுடன் புன்னகைத்து விட்டு, அத்தாய் அவளின் குழந்தையை என்னிடம் தந்துவிட்டு முஸ்லிம் தாயுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

அன்றைய நாள் அங்கு நான் கண்டது தாய்மையை அல்ல, மாறாக மனிதாபிமானத்தின் உயிர் நாடியை...

**ஹனீன் பைறூஸ்**
அல்ஹக்கானிய்யா அரபுக் கல்லூரி

# 'நான் முகிலாகிறேன்'

## பர்ஹானா அப்துல்லாஹ்வின் பாரசம் சொட்டும் கவிதை நூல்



"காதலில் விழுந்தவர்கள்
கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்
நான் கவிதையில் விழுந்து காதலாகிக் கொண்டிருக்கிறேன்!
வார்த்தைகளால் வாழ்க்கையை அழகுபடுத்தும் கலை கவிதை.
வார்த்தைகள் கவிதைகளாய்க் கோலமிடும் போதில்
ஒரு பண்டிகையின் கொண்டாட்டம் உள்ளத்தில்!
சந்தோஷப் பூக்களை தினம் என் வாசலில் கொண்டு வந்து சேர்க்கின்றன இந்தக் கவிதைகள்.
எனக்கு ஒரு பூமாலை செய்கிறார்கள்.
எனக்கோ கவிதைகளே பூமாலைகள்.
இதோ இந்தக் கவிதைகளில் என் சந்தோசங்கள்.
நான் நானாகவே வாழ்கிறேன் நீதான் என் சந்தோஷம் என்கிறேன்.
கவிதை கரகோஷம் செய்கின்றது!"

என்று எழுதும் பர்ஹானா அப்துல்லாஹ்வின் கவிதைத் தொகுப்பொன்று அண்மையில் ( செப்டெம்பர் 2024) வெளிவந்திருக்கின்றது.

ஈழத்துக் கவிதை இலக்கிய வெளியில் இரண்டு தசாப்தங்களாக இயங்கி வருகின்ற பர்ஹானா அப்துல்லாஹ், 'மக்கொனையூரான்' என்ற புனை பெயரிலும் எழுதுபவர். "நிசாந்தம்" என்ற பெயரில் ஏலவே 2021இல் கவிதை நூலொன்றைத் தந்திருக்கும் அவரின், இரண்டவது நூல் இது " நான் முகிலாகிறேன்". 72 பக்கங்களில் 61 கவிதைகளை உள்ளடக்கிய கவிதைத் தொகுப்பு.

"நான் முகிலாகிறேன்...
காற்றுடைக்க கலைந்து விடும் நீர்க்குமிழியாய் இன்று
காற்றினை உதைத்து விட்டு
இதோ அங்கு மிங்குமாய் அசைகிறேன்
பெருமலையின் மேற்பரப்பில் மோதிக் கொண்ட போதும்
மேலே மேலே பறக்கிறேன்! கனதிகளை தேக்கி பின்னொரு பொழுதில் மழையெனப் பொழிந்து விடுகிறேன் ..
அமைதி அடைகிறேன்
நான் முகிலாகிறேன்..
நான் மகிழ்வாகிறேன்..

நல்லதொரு படிமமாக அமைந்த தலைப்பில் உணர்வுகளின் வெளிப்பாடாகி வரும் கவி வரிகள் மனதில் இன்பமளிக்கின்றன.

பொருள் வடிவம், வெளிப்பாட்டு வடிவம் என்று பிரித்துப் பார்ப்பது அவசியமில்லாமல் பொருளுக் கேற்ற வெளிப்பாட்டு வடிவத்தைப் பெற்றுக் கொண்டு, பீறிடுகின்றன அவரின் கவிதைகள்..

"தாயே.. என்.. நேசமே...
என் பேரண்டப் பெருவிடியல்..
பேரன்புப் பெரும் புதையல்
கண்ணிமைக்குள் கவலை யடக்கும் வித்தைகள் தெரிந்தவள்
தன்னுறக்கம் தொலைத்தாலும் பிள்ளை உறங்க வைக்க விழிப்பவள்
அன்பையே ஆகாரமாக்கி அனுதினமும் தருபவள்!"

என்று, அவர் தாய் பற்றிக் கவிதை தருகிறார்.

முதல் இரண்டு வரிகளிலேயே மேலும் சொல்லத் தேவையற்றவாறு தாயை, தாய்மையை முழுமையாக நமக்குள் ஊடு கடத்திவிடுகிறார் பர்ஹானா.

பேரண்டப் பெருவிடியலாகவும் பேரன்புப் பெரும் புதையலாகவும் தாயை உருவகித்துச் சிலாகிப்பது அவரது கவித்துவச் சிறப்பை எடுத்தியம்புகிறது.

கவிதை வடிவத்திலும், வெளிப்பாட்டு முறையிலும் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வாசகரை ஈர்க்க முற்படும் பர்ஹானா, வாய்மொழிப் பாடற் கூறுகளைக் கையாண்டும் வாசகரை நெருங்குகிறார்.

"ஆராரோ பாடி நான் வளர்த்த புள்ள
யார் யாரோ போல என்ன தவிக்க வைத்த புள்ள என் வாழ்க்கை உனக்காக வாழ்ந்தேனே புள்ள உன் வாழ்க்கை நீ வாழ எனைக் கதற விட்டாயே புள்ள
சொத்து சுகம் அத்தனையும் தந்தேனே புள்ள பெத்தவள பாரமெண்டு துரத்திட்டியே புள்ள
பஞ்சுக்கால் நோகுமெண்டு தூக்கி தூக்கி வளர்த்தேன் புள்ள
நெஞ்சு பொறுக்கு தில்ல நான் ஏங்கித் தவிக்கிறேன் புள்ள.
பெத்தவளை மறந்து நீயும் போனாயே புள்ள தெனமும் உன் நெனைப்புதான் வந்து அழுகிறேன் புள்ள
பொத்தி பொத்தி தங்கம் எண்டு வளர்த்தேனே புள்ள
கத்தி கத்தி அழுகிறேன் எனைப் பார்க்க மாட்டாயோ புள்ள"

பிள்ளையினால் கைவிடப்பட்ட ஒரு தாயின் புலம்பலாக வடிக்கப்பட்டிருக்கும் அக்கவிதை நமது மனங்களை உருகச் செய்து விடுகிறது.

புதுக் கவிதை எழுதுபவராக மட்டுமல்லாமல் யாப்பமைதி குன்றாத கவிதைகள் தருபவராகவும் இத்தொகுப்பு மூலம் பர்ஹானாவை அடையாளப்படுத்த முடிகிறது.

"இதயத்தில் தூய்மையை நலமாக நுழைத்து இலக்கோடு சரியான பாதைகள் வகுத்து தீமைகளை அள்ளிப் புறந்தள்ளி எரித்து
தீபமாய் எழுகிறாள் அறியாமை இருள் கிழித்து!
அகப்பையை ஏந்துமிரு கரங்களை சேர்த்து அவளும் தன்னினத்தின் மொழிகளை கோர்த்து அவனியில் தடம் பதிக்கிறாள் எழுத்துகளால் ஈர்த்து
அவளுக்குப் பாடுவோம் நாம் நல் வாழ்த்து!"
(நான் உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்)

இவ்வாறு, இயைபுத் தொடைபெற்ற வரிகளில் பெண்ணை வாழ்த்திப் பாடுகிறார் பர்ஹானா.

"தாய்மொழியாய் வாய்த்தது செந்தமிழ் எனக்கு வாய்மொழிய வழிந்தோடும் சுவைத்தேன் அடுக்கு தாயவளின் நேசம் தான் என்றும் உனக்கு
தூயதமிழில் எழுதுவதே என் சீரிய இலக்கு!"
( இன்பத் தமிழ் தேனருவி)

என்று, தாய்மொழிப் பற்றை எதுகைச் சிறப்போடும், இயைபுத் தொடை அழகோடும் தரும் சொல்வளம் கொண்ட கவிஞராக இன்பத்தமிழ் தேனருவி என்ற கவிதைமூலம் தன்னை நிரூபிக்கிறார் அவர்.

இந்து சமுத்திர முத்தென மிளிர்வதெம் தாய்நாடு சிந்தையில் சீரிய மானிடர் வாழும் செந்நாடு வளங்கொழி செழுமையின் தாயகம் இந்தத் தேன் நாடு
நலமென நீர் வளம் பொங்கிடும் பொழில் திருநாடு

**நூல் : நான் முகிலாகிறேன்**
**நூலாசிரியர் : பர்ஹானா அப்துல்லாஹ்,**
**முகவரி : பைத்துஸ் ஸாலிஹா,**
**இந்திரிலிகொடை, மக்கொனை.**
**விலை: ரூபா 500/-**

(17ஆம் பக்கம் பார்க்க)

பாவேந்தல் பாலமுனை
பாறூக்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
## இல: 143



திரு/திருமதி.செல்வி ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ........................................
........................................
........................................

........................ ........................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 143
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 143

### இடமிருந்து வலம்

1. பெரும் பணக்காரன்
4. ஒரு தமிழ் மாதம்
7. எஞ்சியிருப்பது (திரும்பியுள்ளது)
8. பாடல்வகை
9. இதிலிருந்துதான் அரிசி பெறப்படுகின்றது (திரும்பியுள்ளது)
11. வீட்டின் உள்ளே பிரிக்கப்பட்டிருக்கும் பகுதி
12. உண்மை அல்ல (திரும்பியுள்ளது)
14. இரங்கத்தக்க நிலையில் உள்ள ஒருவரைக் குறிப்பிடும் சொல்
16. மகள்
18. பயிரிடப்படாமல் இருக்கும் விவசாயத்துக்குரிய நிலம்
19. மனைவி
20. அதிக பால் தரும் உயர் இன மாட்டை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
21. உடலில் எலும்புடன் இணைந்த பகுதி (திரும்பியுள்ளது)
22. முதியோரை இப்படியும் அழைப்பர். (குழம்பியுள்ளது)
23. காலின் அடிப்பகுதி (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. ஒரு பறவை
2. மன்மதனின் மனைவி
3. கடல்வாழ் உயிரினம் (தலைகீழ்)
4. விடியும் வேளை
5. இதுவும் ஒரு நிறம்
6. மயானத்தில் சடலத்தை எரிப்பதற்கான அமைப்பு
10. கடலும் கடல் சார்ந்த இடமும்
11. ஆண் என்றோ பெண் என்றோ சொல்ல முடியாத நபர்
13. ஒருவருடைய வெறுப்பு அல்லது மனக்குறை
14. இந்த மன்னன் ஒரு கொடை வள்ளல்
15. நன்றி உணர்வு அல்லது மாறாத பற்று
16. தித்திப்பான சுவை (குழம்பியுள்ளது)
17. வினா (தலைகீழ்)
18. துணையற்ற நிலை
21. வழி (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 142

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. நடுநிலை
4. குருதி
6. வம்சம்
7. மதிப்பு
9. மிகுதி
10. நதி
12. தோசை
13. நினைவு
15. பாரதம்
17. ஆடி
18. குமுதம்
21. ஆத்திரம்
22. தடை

**மேலிருந்து கீழ்**

1. நட்பு
2. நிம்மதி
3. திவலை
4. கும்மி
5. தித்திப்பு
8. நப்பாசை
11. பனை
12, தோரணம்
13. நித்தம்
14. முடிவு
16. தகுதி
19. ஆம்
20. வடை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 142

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ.150.00 |
|---|---|---|
| **கே. தர்மரட்ணம்**<br>பதுளை வீதி,<br>கரடியனாறு | **எம்.எம். சஷாத்,**<br>76/சீ/1 அல்- ஹம்ரா வீதி,<br>மருதமுனை | **எம்.எம். கலீல்,**<br>53 ED, மத்திய வீதி<br>மருதமுனை 03 |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ். தமிழ்மலர்,** பாண்டிருப்பு.
2. **என்.எஸ். ரஜீவ்,** மன்னார்.
3. **பி. பேரின்பராஜா,** மட்டக்களப்பு.
4. **ஆர். சந்திரமலர்** இறக்குவானை.
5. **ரஜினி புண்ணியமூர்த்தி** மட்டக்களப்பு.
6. **ஆர். சசிகுமார்.** மடடக்களப்பு.
7. **சின்னையா செல்வராஜா,** கொழும்பு 11.
8. **எஸ்.எச்.எம். ஜிப்ரி,** உக்குவளை.
9. **எப். ஆர். ஏ. ஷக்கூர்** மடவள பஸார்.
10. **என்.கே. வேணி** பலாங்கொடை.

# பெயர்ப் பட்டியலை தேர்தலுக்கு முன்னர்... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

ஊடகங்களில் பரப்பியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் மதுபான சாலைக்கான அனுமதிகளை பெற்று விற்பனை செய்ததாக சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டன.

அவற்றினை மறுத்துள்ள சிறிதரன் தனக்கு அவதூறு ஏற்படுத்தும் விதமாக பொய்யான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பரப்பிய நபர்களுக்கு எதிராக "சைபர் க்ரைம்" பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அதன் அடிப்படையில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மதுபான சாலைகளுக்கான அனுமதிகளை பெற்றவர்கள் தொடர்பிலான பட்டியல் தம்மிடம் உள்ளதாகவும், அவற்றினை வெளியிடுவதாகவும் தேசிய மக்கள் சக்தியினர் கூறி வந்தனர்.

ஜனாதிபதி தேர்தலும் முடிவடைந்து, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று மூன்று வாரங்களுக்கு மேல் கடந்துள்ள போதிலும் ஏன் அந்த பட்டியலை வெளியிடப்படவில்லை என கேள்வி எழுப்பப்படுகிறது.

**பட்டியலை வெளியிட ஏன் தாமதம் ?**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன், மதுபான சாலைகளுக்கான அனுமதிகளை பெற்றவர்கள் அல்லது அதற்கான சிபாரிசுகளை வழங்கியவர்கள் பெயர்ப் பட்டியலை ஜனாதிபதி உடனடியாக வெளியிட வேண்டும் எனக் கோரி வருகின்றார்.

ஊழலற்ற நேர்மையான அரசாங்கத்தை தாம் அமைப்போம் என மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை காப்பாற்றும் முகமாக மதுபான சாலை அனுமதிப் பத்திரம் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டு, மக்களின் நம்பிக்கையை காப்பாற்ற வேண்டும் என அவர் கோரியுள்ளார்

அதேவேளை "தேர்தல் காலத்தில், முன்னைய அரசாங்கத்திடம் மதுபான சாலைக்கான அனுமதிகளை பெற்றுக்கொண்டவர்களின் விபரங்கள் தம் வசம் உண்டு எனவும் அதனை வெளியிடுவோம் என கூறியவர்கள் ஏன் இன்னமும் அதனை வெளியிடவில்லை? அவ்வாறு பெயர்ப் பட்டியலை வெளியிடாது இருப்பது, சந்தேகத்தைத் தருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மதுபான சாலைக்கான அனுமதிகளை பெற்றவர்களின் பெயர் விபரங்களை வெளியிட்டு, அவர்களை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அதேவேளை பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தாம் யாரும் மதுபான சாலைக்கான அனுமதியை பெறவில்லை என சத்திய கடதாசி முடித்து தர சொல்லுகிறோம். நான் யாருக்கும் மதுபான சாலைகளை பெற்றுக்கொடுக்கவோ, எனது பெயரில் பெறவோ இல்லை என சத்திய கடதாசி முடித்துள்ளேன்.

அது போல ஏனையவர்களும் சத்திய கடதாசி முடித்து தரட்டும்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் கீத்நாத் காசிலிங்கம் யாழில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் மதுபான சாலைகளை பெற்றுக்கொண்ட அல்லது அதற்கான சிபாரிசு கடிதங்களை வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை ஜனாதிபதி வெளியிட்டால், நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் அது தாக்கத்தை ஏற்படுத்தும்.

அவ்வாறு பெயர்ப் பட்டியல் தேர்தல் காலத்தில் வெளியாகும் போது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும். வாக்களிப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆனால் மக்கள் புதிய ஜனாதிபதியிடம் எதிர்பார்ப்பது, நேர்மையான ஊழலற்ற ஆட்சியை, மக்களின் எதிர்ப்பார்ப்பை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டால் பட்டியலில் உள்ள சிலர் பாராளுமன்றில் இருக்கலாம். பாராளுமன்றம் சென்றவர்கள் சென்றவர்களாகவே இருப்பார்கள். ஆகவே தான் தேர்தலுக்கு முன்பாக பெயர்ப் பட்டியலை வெளியிட வேண்டும் என பலரும் எதிர்பார்க்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பை ஜனாதிபதி பூர்த்தி செய்வாரா ?




# இஸ்ரேல் – ஹமாஸ் போரை... (12 ஆம் பக்க தொடர்)

அதே சமயம் இஸ்ரேலுக்கு எதிரான ஹமாஸின் போர் முயற்சிகளை இயக்குவதில் முகமது சின்வார் ஒரு பெரிய பங்கை ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தலைமைக்கான தெரிவில் பலரது பெயர்களும் சுழலுகின்றது.

தற்போது ஹமாஸின் தலைமை பேச்சுவார்த்தையாளராக இருக்கும் அல்ஹயாவைத் தவிர, மேலும் சில ஹமாஸ் தலைவர்களும் ஹமாஸின் அரசியல் பணியகத்தின் தலைவராக பதவியேற்க உள்ளனர். இஸ்மாயில் ஹனியேஹ்வுக்கு முன்னர் போராளிக் குழுவை வழிநடத்திய முன்னாள் ஹமாஸ் தலைவர் காலித் மெஷால் போட்டியாளர்களில் ஒருவர் என்று அறிக்கை குறிப்பிடுகிறது. அவருடன், ஷுரா கவுன்சிலின் தற்போதைய தலைவரான முகமது தர்விசும் உள்ளார்.

காசாவில் போர் தொடங்கியதில் இருந்து ஏற்கனவே பல மூத்த தலைவர்களை ஹமாஸ் இழந்துள்ளது. லெபனானின் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா, லெபனானின் ஹமாஸ் தலைவர் பதா ஷெரிப், ஹிஸ்புல்லாவின் உயர் மட்ட தலைவர் அலி கராக்கி, ஹிஸ்புல்லாவின் மத்தியசபை துணைத்தலைவர் நபில் கௌக், ஹிஸ்புல்லா ட்ரோன் பிரிவின் தலைவர் முகமது ஸ்ரூர், ஹிஸ்புல்லாவின் ஏவுகணை பிரிவின் தலைவர் இப்ராஹிம் குபைசி, ஹிஸ்புல்லா நடவடிக்கைகளின் தளபதி இப்ராஹிம் அகில் என ஏறத்தாழ 14 முக்கிய தலைவர்களை காசா போரின் ஓராண்டுகளில் ஹமாஸ் மற்றும் அதன் அணி இழந்துள்ளது.

இந்த வரிசையிலேயே ஹமாஸ் தலைவர் சின்வாரின் மரணமும் அவதானிக்கக்கூடியதாகும். இது ஹமாஸிற்கு சக்திவாய்ந்த அடியாகும். சின்வாரின் நீக்கம் ஒரு தலைமை வெற்றிடத்தையும் அதன் அணிகளில் அதிக குழப்பத்தையும் ஏற்படுத்தக்கூடும் என எடைபோடுகின்றார்கள்.

பல மூத்த தலைவர்களின் இழப்பு, புதியவர்கள் முன் அரங்குகளுக்கு வருவதற்கான வழியேற்படுத்தும். இது ஹமாஸிற்கான தோல்வியையே உறுதி செய்கின்றது. எனினும், இது அமைதிக்கான வழி ஏற்படுத்துமா என்பதில் சந்தேகங்களே காணப்படுகின்றது.

சின்வாரின் சாம்பலில் இருந்து என்ன வகையான ஹமாஸ் எழும்பும்? ஒருபுறம், ஹமாஸ் மற்றும் காசாவிற்கு எதிரான இஸ்ரேலிய பேரழிவு பிரசாரம், எதிர்காலத் தலைவர்களுக்கு மிகவும் வலிமையான, உறுதியான எதிரியை எதிர்கொள்வதால் ஏற்படும் ஆபத்துகளைப் பற்றிய ஒரு பாடமாகும். ஹமாஸ் அதன் அமைப்பை மீண்டும் ஒருங்கிணைத்து மீண்டும் கட்டியெழுப்பவும் அதன் ஆதரவில் ஏற்பட்ட சரிவை மாற்றியமைக்கவும் அவ்வப்போது பயனடையும். மறுபுறம், எதிர்கால ஹமாஸ் தலைவர்கள் எதிர்ப்பை இரட்டிப்பாக்கலாம்.

சின்வாரின் தலைமையின் கீழ் ஹமாஸ் இஸ்ரேலை கடுமையாக தாக்கியது. பாலஸ்தீன பிரச்சினையை மீண்டும் அரசியல் வரைபடத்தில் வைத்து, இஸ்ரேலின் சர்வதேச நற்பெயரை சேதப்படுத்தியது.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவது இந்த வெற்றிகளை பின்னுக்குத் தள்ளக்கூடும். பல தலைவர்கள் மற்றும் போராளிகளின் இழப்பு மற்றும் பல பாலஸ்தீன குழந்தைகள் மற்றும் பிற போராளிகளின் மரணத்திற்குப் பிறகு, அமைப்பு உறுப்பினர்களுக்கும் பழிவாங்கும் தாகம் உள்ளது. இது எந்தவொரு வகையிலும் போரின் தொடர்ச்சியையே உறுதி செய்கின்றது.

எனவே, மரணங்களும் குருதிகளும் யுத்தத்தின் பொதுவானது என்பதை ஓராண்டு நீடிக்கும் இஸ்ரேல்–ஹமாஸ் போர் ஏற்றுக்கொண்டுள்ளமையையே களநிலவரங்கள் உறுதி செய்கின்றது.

போருக்கு வெளியே உள்ள மேற்கு நாடுகள், தமது அரசியல் நலன்களை இலக்கு வைத்து, சமாதானத்திற்கான அழைப்பை விடுக்கின்ற போதிலும், போர்க்களத்தில் உள்ள இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இறுதி விளைவை நோக்கி பயணிப்பதாகவே புலப்படுகின்றது.

தலைவர்களின் மரணங்களும், மக்கள் மீதான ட்ரோன் தாக்குதல்களும் சமாதானத்துக்கான அழைப்பை தீர்மானிக்கப் போவதில்லை என்பதையே சமகால நிலவரங்கள் உறுதி செய்கின்றது.

இருதரப்பும் இறுதிவிளைவில் அமைதியை காணும் முனைப்பிலேயே போரை நகர்த்தி செல்கின்றது.

## 'நான் முகிலாகிறேன்'...

(16 ஆம் பக்கம் தொடர்)

மங்கள மலர்கள் எங்கும் மலரும் பூக்காடு
திங்களின் ஒளியில் மின்னிடும் அலைகடல் சூழ்நாடு

(தேசமே என் நேசமே) என்று, சந்த நயம் தரும் கவித்துவ வரிகளாலும் சுவைஞர்களை ஈர்க்கிறார் கவிஞர். பூங்காவனம் சஞ்சிகை ஆசிரியர் ரிம்ஸா முஹம்மத், அரும்பு சஞ்சிகை ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆகியோர் நூலுக்கு அணிந்துரை, பின் அட்டைக் குறிப்பு என்பவற்றை வழங்கியுள்ளார்கள்.

"கவிதை நதியில் கால் நனைத்து, கவிதைப் பூவில் தேன்குடித்து, கவிதை வானில் சிறகடிக்கும்" பர்ஹானா அப்துல்லாஹ்வின் "நான் முகிலாகிறேன்" கவிதை நூல், 'நிசாந்தம்' கவிதை நூலின் நீட்சியாக அமைந்திருப்பதோடு அவரின் இற்றைப்படுத்தலையும், கவித்துவம் தொடர்பான அவரின் புரிதல்களையும், வளர்ச்சிப் போக்கையும் ஆற்றலையும் இனம் காட்டுகிறது என்று துணிந்து கூறலாம். நூலாசிரியருக்கு நமது வாழ்த்துகள்.


# விலைமனு கோரல்

நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE)

**தம்புள்ளையில் உள்ள SLBFE மாவட்ட நிலையத்தின் தற்போதுள்ள கூரை மற்றும் கூரை இணைக்கப்பட்ட கட்டமைப்பை புதுப்பித்தல் மற்றும் திருத்துதல்**

தலைவர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லையின் சார்பாக, திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவர், தம்புள்ளையில் உள்ள மாவட்ட மையத்தின் கூரை மற்றும் கூரையுடன் தொடர்புள்ள கட்டமைப்பு என்பவற்றின் புனரமைப்பு மற்றும் திருத்தம் செய்வதற்கு உகந்த மற்றும் தகுதியான தரப்பினரிடமிருந்து சீல் செய்யப்பட்ட விலைமனுக்களை கோருகிறார்.

**பணியின் நோக்கம்**

தம்புள்ளையில் உள்ள SLBFE மாவட்ட நிலையத்தின் தற்போதைய கூரை மற்றும் கூரை இணைக்கப்பட்ட கட்டமைப்பை புதுப்பித்தல் மற்றும் திருத்துதல்.

புனரமைப்பு பணிகளில் ஏற்கனவே உள்ள மரக்கட்டைகளால் கட்டப்பட்ட கலிகட் ஓடுகளைக் கொண்ட கூரையை கட்டமைப்புடன் அகற்றுதல், ஏற்கனவே உள்ள எஸ்பெஸ்டஸ் கூரையின் சிதைந்த பகுதிகளை அகற்றுதல், சுவர் விரிசல்களை சீர்செய்தல் மற்றும் புதிய மரக்கட்டமைப்பு மற்றும் அஸ்பெஸ்டஸ் கூரையுடனான புதிய கூரையை அமைத்தல், புதிய அஸ்பெஸ்டஸ் கூரைக்கு நிரந்திடுதல் மற்றும் மழைநீர் வடிந்தோடும் கட்டமைப்பு ஆகியவற்றை அமைத்தல் என்பன அடங்குகிறது.

குறித்த இடம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மாவட்ட நிலையம், இலக்கம் 03, நிஸ்ஸங்க மாவத்தை, தம்புள்ளையில் அமைந்துள்ளது. நிர்மாணப்பணிக்கான காலம் 90 நாட்களாகும். மொத்த செலவு மதிப்பீடு ரூ.18 மில்லியன் (வெட் தவிர்த்து).

1. தேசிய மட்ட போட்டி அடிப்படையில் விலைமனு மேற்கொள்ளப்படும்
2. ஒப்பந்தத்திற்கு தகுதி பெற, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலிடப்பட்டிருக்கக்கூடாது மேலும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

CIDA பதிவு கட்டாயம்.

விசேடமாக : கட்டிட நிர்மாணம்

தரம் : முக்கிய ஒப்பந்ததாரர்கள் - CIDA தரம் C5 ஐ விட குறைவான அல்லது அதற்கு இணையாக

3. **தகுதி பெறுவதற்கு பின்வரும் தகுதித் தேவைகள் உள்ளடங்கும்.**
   - ✓ கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்ட நிர்மாணப் பணிகளின் சராசரி ஆண்டு மதிப்பு குறைந்தபட்சம் ரூ. 18 மில்லியன்.
   - ✓ இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்சத் தொகை ரூ. 10 மில்லியன்.
   - ✓ கடந்த 5 ஆண்டுகளில் 10 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுள்ள குறித்த பணிக்குச் சமமான ஒரே ஒப்பந்தம் மற்றும் கட்டுமான அனுபவம் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற, முகாமையாளர், கொள்முதல் பிரிவு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியில் பணிநாட்களில் காலை 09.00 மணி முதல் 15.00 மணி வரை மேலே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 21.10.2024 முதல் 11.11.2024 வரை 09.00 மணி முதல் 15.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத கட்டணம் ரூ. 5,000.00. செலுத்தி எழுத்து மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பித்து, ஆங்கில மொழியில் முழுமையான விலைமனு ஆவணங்களை பெறலாம்.
6. சீல் செய்யப்பட்ட விலைமனுவின், மேல் இடது மூலையில், "தம்புள்ளையில் உள்ள SLBFE மாவட்ட நிலையத்தின் தற்போதைய கூரை மற்றும் கூரை இணைக்கப்பட்ட கட்டமைப்பை புதுப்பித்தல் மற்றும் சரிசெய்தல்" எனக் குறிப்பிட்டு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலுள்ள முகாமையாளர் (கொள்முதல்) தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் 12.11.2024 அன்று 11.00 மணி அல்லது அதற்கு முன்னதாக இட வேண்டும். தாமதாக அளிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்கப்படாது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக (SLBFE) தலைவருக்கு அனைத்து அல்லது ஏதாவது விலைமனுவை நிராகரிக்க அல்லது விலைமனுவின் ஒரு பகுதியை மட்டும் ஏற்க உரிமை உள்ளது.
7. அனைத்து விலைமனுக்களுடனும் 12.11.2024 முதல் 25.02.2025 வரை செல்லுபடியாகும் 200,000.00 பெறுமதியாக விலைமனு பாதுகாப்பு தொகை அளிக்கப்பட வேண்டும். (விலைமனுக்கள் செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 28 நாட்கள்)
8. விலைமனுவுக்கு முந்தைய கூட்டம் 01.11.2024 அன்று 11.30 மணிக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மாவட்ட நிலையம், இல 03, நிஸ்ஸங்க மாவத்தை, தம்புள்ளை எனும் விலாசத்தில் நடைபெறும்.

தலைவர்,
கொள்முதல் குழு,
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,
இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்ல.

SLSI ISO 9001

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு**



# மக்கள் வங்கி

## ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2025

### தலைமை அலுவலகம் மற்றும் சகல பிராந்திய தலைமை அலுவலகங்கள்

கட்டிடங்களின் நிர்மாணம், புதுப்பித்தல்கள் மற்றும் கட்டிடங்களுக்கான மாற்றங்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளிப்புற அலங்கார வேலைகளுடன் தொடர்புடைய வேலைகள் இன்னும் பலவற்றிற்காகவும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நிறுவனத்துடனான (CIDA) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவிற்கு உட்பட்டதாக இருப்பின் கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் ஏனைய விஷேடத்துவ வேலைகள் தொடர்பான அவர்களின் விண்ணப்பங்களுக்கேற்றவாறு ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்யப்படுவார்கள். (பெயர் பலகைகள், தரைக்கம்பளம் பதித்தல், ஒளித்தடுப்புக்கள் மற்றும் திரைச்சீலை வேலைகள் நீங்கலாக அனைத்து விண்ணப்பதாரிகளும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவிற்கான திருப்திகரமான ஆவணச் சான்றை அவர்களின் விண்ணப்பங்களுடன் வழங்கல் வேண்டும்).

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய தலைமை அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

| | அலுவலகம் | தொடர்பிலக்கம் | முகவரி |
|---|---|---|---|
| 01. | தலைமை அலுவலகம் - பொறியியல் சேவைகள் திணைக்களம் | 011-2481373/011-2473206 | இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02. |
| 02. | பிராந்திய அலுவலகம், அம்பாறை | 063-2222516/063-2222332 | இல. 96A, டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை, அம்பாறை |
| 03. | பிராந்திய அலுவலகம், அநுராதபுரம் | 025-2223035 | இல. 75, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம் |
| 04. | பிராந்திய அலுவலகம், பதுளை | 055-2222165/055-2222342 | இல. 24, ஆர்.எச். குணவர்தன மாவத்தை, பதுளை |
| 05. | பிராந்திய அலுவலகம், மட்டக்களப்பு | 065-2222652/065-2222653 | இல. 25/1, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு |
| 06. | பிராந்திய அலுவலகம், காலி | 091-2223563/091-2227697 | இல. 22, கீழ் டிக்சன் வீதி, காலி |
| 07. | பிராந்திய அலுவலகம், கம்பஹா | 033-2231901/033-2222325 | இல. 131, கண்டி வீதி, பெலும்மஹர, முதுன்கொட |
| 08. | பிராந்திய அலுவலகம், ஹம்பாந்தோட்டை | 047-2220901/047-2220902 | தங்காலை கிளை (2ஆம் தளம்), இல. 146A, மாத்தறை வீதி, தங்காலை |
| 09. | பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம் | 021-2222601/021-2228602 | இல. 82, கண்ணாத்திட்டி வீதி, யாழ்ப்பாணம் |
| 10 | பிராந்திய அலுவலகம், களுத்துறை | 038-2232438/038-2241596 | இல. 341, காலி வீதி, பாணந்துறை |
| 11 | பிராந்திய அலுவலகம், கண்டி | 081-2234283/081-2228383 | இல. 17, தலதா வீதி, கண்டி |
| 12 | பிராந்திய அலுவலகம், கேகாலை | 035-2222300/035-2222396 | இல. 14, வின்சென்ட் விக்கிரமசிங்க மாவத்தை, கேகாலை |
| 13 | பிராந்திய அலுவலகம், குருநாகல் | 037-2222572/037-2222453 | இல. 03, வத்ஹிமி வீதி, குருநாகல். |
| 14 | பிராந்திய அலுவலகம், மாத்தளை | 066-2222032/066-2224841 | இல. 76, தர்மபால மாவத்தை, மாத்தளை |
| 15 | பிராந்திய அலுவலகம், மாத்தறை | 041-2226481/041-2222822 | இல. 215, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை |
| 16 | பிராந்திய அலுவலகம், மொனராகலை | 055-2276347/055-2277105 | இல. 99, வெள்ளவாய வீதி, மொனராகலை |
| 17 | பிராந்திய அலுவலகம், நுவரெலியா | 052-2222555/052-2234036 | இல. 40, பார்க் வீதி, நுவரெலியா |
| 18 | பிராந்திய அலுவலகம், பொலன்னறுவை | 027-2224404/027-2225760 | பிரதேச செயலகக் கட்டிடத்தொகுதி, இல. 325, புதிய நகரம், பொலன்னறுவை |
| 19 | பிராந்திய அலுவலகம், புத்தளம் | 032-2253301/032-2255142 | இல. 79, மாரவில வீதி, நாத்தாண்டிய |
| 20 | பிராந்திய அலுவலகம், இரத்தினபுரி | 045-2223084/045-2221510 | இல. 54, சரத் முத்தெட்டுவேகம மாவத்தை, புதிய நகரம், இரத்தினபுரி |
| 21 | பிராந்திய அலுவலகம், திருகோணமலை | 026-2222815/026-2226815 | இல. 128, கண்டி வீதி, திருகோணமலை |
| 22 | பிராந்திய அலுவலகம், வன்னி | 024-2222972/024-2225054 | இல. 9, 1/1, ஸ்டேஷன் வீதி, வவுனியா |
| 23 | பிராந்திய அலுவலகம், கொழும்பு வடக்கு | 011-2344982-5 | 2ஆம் தளம், இல. 11, டியூக் வீதி, கொழும்பு-11 |
| 24 | பிராந்திய அலுவலகம், கொழும்பு தெற்கு | 011-2387068/011-2384069 | 1ஆம் தளம், இல. 11, டியூக் வீதி, கொழும்பு-11 |
| 25 | பிராந்திய அலுவலகம், கொழும்பு கிழக்கு | 011-2812260/011-2852898 | இல. 177A, ஹைலெவல் வீதி, நுகேகொட. |
| 26 | பிராந்திய அலுவலகம், கொழும்பு மேற்கு | 011-2180465/011-2180468 | இல. 71, மொரட்டுவ வீதி, பிலியந்தல |

2024 ஒக்டோபர் 22ஆம் திகதியிலிருந்து 2024 நவம்பர் 07ஆம் திகதி வரையும் வங்கியின் சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ரொக்கப் பணத்தில் 5,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், மக்கள் வங்கியின் தலைமை அலுவலக பொறியியல் சேவைகள் திணைக்களம் (பொறியியல் சேவைகள்) பிரதான முகாமையாளர் அல்லது இயைபுடைய பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய விதிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

2024ஆம் ஆண்டிற்காக பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் 2025ஆம் ஆண்டிற்கு பதிவு செய்துகொள்வதற்காக மீள்விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்து சான்றளிக்கும் ஆவணங்களை தபாலுறையொன்றில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025'' எனக் குறிப்பிடப்பட்டு 2024 நவம்பர் 08ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் கட்டிடங்கள் பொறியியல் சேவைகள் தலைவர் / பிராந்திய முகாமையாளரை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

**கட்டிடங்கள் பொறியியல் சேவைகள் தலைவர்,
மக்கள் வங்கி,
பொறியியல் சேவைகள் திணைக்களம்,
6ஆம் மாடி, தலைமை அலுவலக கட்டிடம்,
இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு-02.
தொலைபேசி: 2481373/2473206**

www.peoplesbank.lk

PEOPLE'S BANK
Pride of the Nation

# 20 க்கு ஆதரவாக வாக்களித்தவர்களை இணைத்துக்... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆனால், இருபதாவது திருத்தச் சட்டத்திற்கு வாக்களித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள், எமது கட்சியினூடாக மீண்டும் தேர்தலிலே களமிறங்குவதற்கான வாய்ப்பை வழங்காதிருக்க எமது கட்சி ஏகமனதாக தீர்மானித்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தயார் என்று எனது கட்சியின் தலைவர் ரிசாட் பதியுதீன், தெளிவாக கூறியிருந்தார். ஆனால், இருபதாவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களித்தவர்கள் எவரும் அதற்குள் வரக்கூடாது என்கின்ற கண்டிப்பான ஒரு விடயத்தை அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதனாலேயே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் அதைச் செய்ய முடியாமல் போனது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, இந்த தீர்மானத்தில் மிக தெளிவாக செயற்பட்டது.

அதாவது, இந்த நாட்டுக்கு மாற்றத்தையும் அரசியலில் புதிய கலாசாரத்தையும் என்ன தவறுகள் செய்தாலும் அதே தலைகளே மீண்டும் மீண்டும் இம் மக்களுக்கு தலைவராக வேண்டும் என்ற மனநிலையிலிருந்து மாற வேண்டும் என்ற திடமான தீர்மானத்தில் இருந்ததனால்தான் இந்த வேலைத் திட்டம் சாத்தியமற்றுப் போனது.

**கேள்வி : உங்களுடைய கட்சியைச் சேர்ந்த பல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறிவிட்டார்களே இது கட்சிக்கு இழப்பாக அமையாதா?**

அவர்கள் வெளியேறினார்கள் என்பதிலும் பார்க்க படிப்படியாக வெளியேற்றப்பட்டார்கள் என்பதுதான் வாஸ்தவம். எமது கட்சி அந்த தீர்மானங்களை எடுக்கும் நேரத்தில் எனது கட்சியினுடைய தலைவர் இந் நாட்டின் கடந்த கால ஆட்சியாளர்களினால் மிகவும் துன்புறுத்தப்பட்டார். அவருக்கெதிராக பல வழக்குகள் பதியப்பட்டன. இக் காலகட்டத்திலேயே கட்சியிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளித்தார்கள். முக்கியமாக ஜனாஸா எரிக்கும் போது, எமது சமூகத்தின் இறந்த உடலை அடக்குவதைக் கூட அவர்களால் சாதிக்க முடியாமற் போனது.

அவ்வாறான சர்ச்சைக்குரிய நபர்கள் துடைத்தெறியப்பட்டு, புதிய முகங்களுக்கு அந்த சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என கட்சி சார்ந்த எங்களுடைய வாக்காளர்களிடத்தில் நாம் வேண்டிக்கொள்கின்றோம். முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கட்சியினுடைய அந்தஸ்தும் மரியாதையும் தற்போது உயர்ந்திருக்கிறது

**கேள்வி : நீங்கள் கடந்த காலங்களில் அமைச்சராக செயற்பட்டுள்ளீர்கள் . ஆனாலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்கள் மத்தியில் இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலுள்ளன. அதேபோன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்து சமூகத்துக்கும் இருப்பது போன்று முஸ்லிம் சமூகத்துக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மை.

நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, மிக நீண்ட நாட்களை சமூக நல்லிணக்கத்துக்காக செயற்பட்டுள்ளேன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உதாரணமாக எல்லை ரீதியான தீர்மானங்களும், காணி ரீதியான பிரச்சினைகளும் தான் இந்த மாவட்டத்திலே நீறு பூத்த நெருப்பாக இருக்கிற பிரச்சினையாகும். இது தொடர்பில் கடந்த காலத்தில் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் மிகவும் தெளிவாக நான் கதைத்திருக்கிறேன். இம் மாவட்டத்தில் உள்ள சகல கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து, ஒரு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்படவேண்டிய விடயமே அன்றி ஒப்பாரி வைத்து இதனை சாதிக்க முடியாது என்பதுதான் எனது நிலைப்பாடு.

மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்ற பொழுது தமிழர்களுக்கு அது புது பிரச்சினையாக வந்து விடவும் முடியாது. அல்லது தமிழர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றபோது முஸ்லிம்களுக்கு அது புது பிரச்சினையாக வந்து விடவும் கூடாது. மாவட்டத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு பொது முடிவுக்கு வருவதாலேயே இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் பிரச்சினை, அரசியலுக்காக பயன்படுத்தப்படுகின்றது.விரும்பியோ விரும்பாமலோ இந்த இரண்டு சமூகங்களும் இங்குதான் வாழ வேண்டியுள்ளது. இங்குதான் மரணிக்க வேண்டியுள்ளது. எனவே அந்தந்த பிரதேசத்திலுள்ள அரசியல் தலைவர்களுக்கும் ஒரு தார்மீக பொறுப்பு உள்ளது.


சுகாதார அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

தேசிய போட்டி ரீதியான விலை கோரல் - (NCB)

**02 எண்ணிக்கையான புத்தம் புதிய SAMPLING BOOTHS வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக்காண்பித்தல்**

**கேள்வி இல: SPMC/PD/04/2024 - 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்**

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024-11-11ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை 02 எண்ணிக்கையான புத்தம் புதிய Sampling Booths வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பொருள் | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|
| 1 02 எண்ணிக்கையான புத்தம் புதிய Sampling Booths வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | ரூபா 3,500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2024-10-21ஆம் திகதி முதல் 2024-11-08ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீளளிக்கப்படாத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024 ஒக்டோபர் 30ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் Sampling Booths பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அன்றைய தினமே அமைவிடத்திற்கான விஜயம் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது 2024-11-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் கலந்துகொள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
7. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - உற்பத்திகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 0112-637574)

''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையதளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.**
**தொலைபேசி இல.: (00)94-11-2635353/(00)94-11-2637574**
**மின்னஞ்சல்:** chairman@spmc.gov.lk
**இணையதளம்: www.spmc.gov.lk**


## கையறுநிலையில் காணாமல்... (02 பக்க தொடர்ச்சி)

அவர்கள் எப்படிச் சிந்திக்கிறார்கள்? அவர்களுடைய சிந்தனை சரியானதா? அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமானதா? அது சாத்தியங்களை உண்டாக்கக் கூடியதா? அல்லது அவர்கள் தொடர்ந்தும் தோற்கடிக்கப்படுவார்களா? அப்படியென்றால் அவர்களுடைய சிந்தனையிலும் போராட்டத்திலும் யாராவது இடையீடுகளை செய்திருக்கிறார்களா? அப்படியென்றால் அவர்கள் யார்? அவர்கள் என்ன நோக்கத்திற்காக அப்படிச் செய்கிறார்கள்? என்பதையிட்டு நாம் சிந்திக்க வேண்டும். அது இந்தப் போராட்டத்துக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நாங்கள் செய்கின்ற பேருதவியாக அமையும்.

ஓ.எம்.பி என்பது சர்வதேச நாடுகளின் வலியுறுத்தலின் அடிப்படையில் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிவதற்கான ஒரு ஏற்பாடு. அது பிராந்திய ரீதியாக அமைக்கப்பட்டு இந்த விவகாரங்களைக் கையாளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது எவ்வளவு தூரம் நற்சாத்தியங்களை அளிக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் தேசிய மொழிகள் அமுலாக்கம், தேசிய ஒருமைப்பாடு, இன ஐக்கியம், பகைமறப்பு, மீளிணக்கம், நல்லிணக்கம் போன்ற கருத்து நிலைகளுக்கான ஏற்பாடுகளும் கட்டமைப்புகளும் இவ்வாறே உருவாக்கப்பட்டன. ஆனால், அவை எதுவும் நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் செயற்படவில்லை. அதாவது நம்பிக்கைக்குரியனவாக மாறவில்லை. எனவே அந்த அனுபவங்களில் அடிப்படையில் ஓ.எம்.பியையும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மறுதலிக்க முற்படுவதில் நியாயமுண்டு. செயற்படாத, பயன்தராத ஓ.எம்.பியை எதற்காக ஏற்க வேண்டும்? என்று அவர்கள் கருதியிருக்கக் கூடும். ஆனாலும் இதைக்குறித்து ஒரு திறந்த உரையாடலின் மூலம் பொது முடிவொன்றை எட்டியபிறகு போராட்டத்தை நடத்தியிருக்கலாம்.

சரியோ தவறோ பாதிக்கப்பட்டோருடைய குரலையே முதன்மைப்படுத்த வேண்டும். இந்தப் பத்தியாளரைப்பொறுத்தவரையில் இந்தப்போராட்டத்தையும் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய விசயத்தையும் அவர் வேறு விதமான கண்ணோட்டத்திலேயே பார்க்கிறார்.

அவரைப்பொறுத்தவரையில் காணாமலாக்கப்பட்டோரின் விடயத்துக்கு ஒரு நீதியான தீர்வு நியாயமான முறையில் முன்வைக்கப்பட வேண்டும். அதற்கு முதற்கட்டமாக உண்மைகள் பேசப்படவும் உண்மைகள் உணரப்படவும் வேண்டும் என வலியுறுத்துகிறார்.

இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் எவரையும் கண்டறியக் கூடிய சூழலும் சாத்தியங்களும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இதை வெளிப்படையாகப் பேசுவதற்கு அரசும் தயாரில்லை. தமிழ்த்தலைமைகளும் தயாரில்லை. ஊடகங்களும் தயாரில்லை. சமூகத்திலுள்ள எவரும் தயாரில்லை. இது முதல் குற்றம். முதல் தோல்வி. முதல் அநீதி. உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டும் அதைச் சொல்லத் தயங்குவது அநீதியன்றி வேறென்ன? உண்மையைச் சொன்னால் அதையிட்டுத் தமது அரசியலுக்கான பாதிப்புகள் உண்டாகலாம் என்ற லாப நட்டக் கணக்கே அறிந்த உண்மையை மறைப்பதற்குக் காரணமாகும்.

அடுத்தது, அப்படி உண்மையைச் சொல்லிக் கொண்டு அடுத்த கட்டமாக இரண்டு விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒன்று காணாமலாக்கப்பட்டோர் பற்றிய விசாரணைகளை அதற்குரிய அடிப்படைகளோடு ஆரம்பிப்பது. இரண்டாவது, பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பை அரசு வழங்குவது. இதை நோக்கி அரசாங்கத்தை வலியுறுத்துவதும் அழுத்தம் கொடுப்பதுமாகும். இதைப்பற்றி இந்தப் பத்தியாளர் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு விரிவாக எழுதி விட்டார் என்பதை இங்கே நினைவூட்டுவதற்கு விரும்புகிறார். மேற்குறிப்பிட்ட அடிப்படையிலேயே இந்த விடயம் அணுகப்பட வேண்டும்.

அதுவே நற்சாத்தியங்களுக்கான கதவுகளைத் திறக்கும். மற்றப்படி பாதிக்கப்பட்டோர் காலம் முழுவதும் வற்றாத கண்ணீரோடு வாழ நிர்ப்பந்திக்கப்படுவது கொடுமை. அவர்களுடைய கண்ணீரில் தங்களுடைய அரசியலுக்குத் தண்ணீர் வார்க்க முற்படுவது கொடுமையிலும் கொடுமையாகும். அது மாபெரும் அநீதி.


# உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் (IBMBB),

**கொழும்பு பல்கலைக்கழகம்**

## மூலக்கூற்று உயிர் விஞ்ஞான பேராசிரியர் அல்லது சிரேஷ்ட பேராசிரியர் பதவி வெற்றிடம்

பொருத்தமான தகைமையுள்ள மற்றும் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து மூலக்கூற்று உயிர் விஞ்ஞான பேராசிரியர் அல்லது சிரேஷ்ட பேராசிரியர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் 19.11.2024 வரை கொழும்பு பல்கலைக்கழக உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான அனைத்து தகவல்களும் **www.ibmbb.lk** இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**சிரேஷ்ட உதவி பதிவாளர்,**
**உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல்**
**நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம்**
**இல 90, குமாரதுங்க முனிதாச மாவத்த,**
**கொழும்பு - 03**
**20.10.2024**


## ஈழத்து கலைஞர்களுக்கு உரிய... (10 ஆம் பக்க தொடர்ச்சி)

**கேள்வி : இத்திரைப்படத்தில் நடித்த நடிகர்களை பற்றி குறிப்பிடமுடியுமா?**

பதில் : இந்த படத்தில் நடித்த நடிகர்களை பொறுத்தவரையிலே பிரதான நடிகராக மைக்கல் தங்கதுரை நடித்திருப்பார். அவர் ஏற்கனவே இந்தியாவில் சில திரைப்படங்களில் நடித்து பிரபலமானவர். கதாநாயகி இலங்கையை சேர்ந்த கவிப்பிரியா. கவிப்பிரியா இலங்கை ஊடகத்துறையில் பிரசித்தி பெற்று விளங்கிய ஒருவர். கவிப்பிரியா இந்த ஆரகன் திரைப்படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகியது எங்களுக்கும் பெருமை. ஏனென்றால் நாங்களும் இலங்கையை சேர்ந்த தயாரிப்பாளர்கள் கவிப்பிரியாவின் அறிமுகம் எங்களுக்கும் பெருமையை தேடி தந்திருக்கிறது.

**கேள்வி : இலங்கையை விட்டு இந்தியாவுக்கு சென்று தயாரிப்பை மேற்கொண்டதன் நோக்கம் என்ன?**

பதில் : இது எங்களிடம் பலரும் வினவுகின்ற வினா. இது இந்தியாவில் நாங்கள் செய்கின்ற முதல் தயாரிப்பு. சினிமா சார்ந்த, கலை சார்ந்த சில அனுபவங்களை நாம் இந்தியாவில் பெற வேண்டி இருந்தமையினால் அங்கே சென்று தயாரிப்பை மேற்கொள்ள வேண்டி வந்தது. இருந்தபோதிலும் நாம் இலங்கையையும் இலங்கை கலைஞர்களையும் மறந்துவிடவில்லை. அவர்களுக்கான சரியான களத்தையும் வாய்ப்பையும் நாம் அடுத்து வரும் படைப்புக்களில் நிச்சயமாக வழங்குவோம். எம் கலைஞர்களை தட்டிக்கொடுத்து ஊக்கமளிக்க வேண்டிய கடமை எமக்கும் இருக்கின்றது என்பதை நாம் மறந்து விடவில்லை


காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
OFFICE ON MISSING PERSONS

# ஆட்சேர்ப்பு

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது 2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

அப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆர்வமுள்ள மற்றும் அனுபவமுள்ள தொழில் நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அழைக்கின்றது.

பதவி வெற்றிடங்கள் மற்றும் மேலதிக தகவல்களுக்காக

https://www.moj.gov.lk என்ற இணைய பக்கத்தை அணுகவும்

Home> Departments & Institutes> Instiutions>Office on Missing Persons

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி: **05.11.2024**

**தலைவர்,**
**காணாமல் போன நபர்களின் அலுவலகம்,**
**இல. 40, 03ஆவது மாடி, புத்கமுவ வீதி,**
**ராஜகிரிய**
**தொலைபேசி: 011-2861431 தொலைநகல்: 011-2861450**



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

## எல்பிட்டிய, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மேம்பாடு

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு கேள்விமனுக்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சார்பில், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனு பிணை (ரூபா) | தேவையான CIDA தரம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) | ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொடர்பு இலக்கம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| T - 1 5 - IE-2024 | எல்பிட்டிய - கைத்தொழில் சபையில் மேல்நிலை நீர் தொட்டியில் நிர்மாணம் - கட்டம் II (கொள்ளளவு 120000 லீ.) | 6,000/- | 250,000/- | C5 மற்றும் C4 | 25 மில். | தலைவர், பெறுகை அலுவலகம் - IDB இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை தொ.பே.:- 011 260 7004 | 2024.11.05 அன்று பி.ப. 2.30 |
| T - 1 6 - IE-2024 | எல்பிட்டிய - கைத்தொழில் சபையில் குழாய் கட்டமைப்பு மற்றும் குழாய் கூடத்தின் நிர்மாணம் (கட்டம் II) | 6,000/- | 125,000/- | C6 மற்றும் C5 | 15 மில். | தலைவர், பெறுகை அலுவலகம் - IDB இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை தொ.பே.:- 011 260 7004 | 2024.11.05 அன்று பி.ப. 2.30 |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (ஹேடீ) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படுவதோடு 04/2013(ii) மற்றும் 03/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்தப் பெறுகையின் மதிப்பிடப்பட்ட செலவு 50 மில். ரூபாவுக்கு உட்பட்டுள்ளவரை பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனுக்கள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியான நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடனான (CIDA) தரத்துக்காக கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் இந்தப் பதிவு ஒப்பந்தத் திகதியில் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, வழங்கல் பிரிவு பணிப்பாளர் நாயகத்திடம் (வழங்கல்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 9.00 மணி தொடக்கம் 15.00 மணிக்கு இடையே எந்த ஒரு வேலை நாட்களிலும் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்தில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்க முடியும். தொடர்பு இலக்கங்களானது 011 2607004 (பிரதிப் பணிப்பாளர் வழங்கல்கள்) அல்லது 011 2632157 (பணிப்பாளர், கைத்தொழில் சபை)
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 6,000.00 ரூபாவை செலுத்தி சாதாரண வேலை நாட்களில் 09.00 மணி மற்றும் 15.00 மணிக்கு இடையே 2024 ஒக்டோபர் 22 ஆம் திகதி தொடக்கம் 2024 நவம்பர் 04 ஆம் திகதி வரை மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, பெறுகைக் குழு, தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்களை (அசல் மற்றும் நகல்) 2024 நவம்பர் 05 ஆம் திகதிக்கு குறிப்பிடப்பட்ட இறுதித் திகதியில் 2.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், பெறுகைக் குழு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது சேர்த்தல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மொரட்டுவை, கட்டுபெத்த, காலி வீதி, இல. 615, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தலைவர், பெறுகை அலுவலகத்தில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெயர் மற்றும் கேள்விமனு இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
7. விலைமனுக்களை ஏற்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட கடைசி திகதி அல்லது எந்த ஒரு நீடிக்கப்பட்ட காலத்தில் இருந்தும் 90 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,**
**இல. 615, காலி வீதி,**
**கட்டுபெத்த, மொரட்டுவை.**

**தொ./ தொலைநகல் - 011-2607004**

# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்

2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளின் கீழ், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிப்பதற்கான விதப்புரையினைப் பரிசீலிப்பதற்குப் பொருத்தமான தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகின்றது.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது பதினைந்து வருடங்கள் அனுபவத்தைக் கொண்ட சட்டத்தரணியாக இருக்கவேண்டுமென்பதுடன் குற்றவியல் சட்ட நடவடிக்கைமுறைகளில் காத்திரமான அறிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் -**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
- உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்
- பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படும் திகதியின்போதுள்ளவாறாக ஐம்பத்தி ஐந்து (55) வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது
- தகுதிவாய்ந்தவராகவும், நேர்மைமிக்கவராகவும், நெறி வாய்மைமிக்கவராகவும் சிறந்த நன்மதிப்புடையவராகவும் இருத்தல் வேண்டும்
- பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவியேற்பதற்கு முன்னர் ஊதியம் பெறும் ஏனைய சகல பதவிகளையும் கைதுறந்தவராக இருத்தல் வேண்டும். எனினும், ஏதேனும் ஊதியம் பெறும் பதவியை வகிக்கின்ற ஆளொருவர், அத்தகைய பணிப்பாளர் நாயகப் பதவியை ஏற்பதற்கு முன்னர் அத்தகைய ஊதியம் பெறும் எல்லாப் பதவிகளையும் கைதுறந்தால், பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுவதற்காகப் பரிசீலிக்கப்படலாம்

  எவ்வாறாயினும், எந்த ஓர் அரசாங்க அதிகாரியினையும் பணிப்பாளர் தலைமையதிபதியை மாற்றுப் பதவி அடிப்படையில் பதவிக்கு அமர்த்துவதை இந்த ஏற்பாடுகள் தடுக்காது:
- பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவியேற்க முன்னர் நடைமுறையிலிருக்கும் எழுத்திலான சட்டங்களின் கீழ் அவரது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனப்படுத்த வேண்டும் மற்றும்
- பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவியேற்க முன்னர், நியமிக்கப்படும் திகதியின்போதுள்ளவாறாக அவருடைய அக்கறைகளின் பகிரங்க வெளிக்கூறலை அவர் அரசியலமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும், ஆளொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களில், பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படுவதற்கு, அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி பதவியை தொடர்ந்து வகிப்பதற்குத் தகுதியற்றவராக்கப்படுவார்

- குற்றப்பணமொன்றினால் மட்டும் தண்டிக்கப்படற்பாலதானவொரு தவறல்லாத குற்றவியல் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;
- தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தினால் கடனிறுக்க வகையற்றவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;
- சித்தசுவாதீனமற்றவராகவிருப்பின் அல்லது சித்தசுவாதீனமற்றவராக மாறின் அல்லது இச்சட்டத்தின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலற்றவராக இருப்பின்;
- அத்தகைய ஆளின் கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குரிய குற்றவாளியாகவிருப்பின்;
- இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனது கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறின்;
- ஏதேனும் அரசியற் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவராக இருப்பின் அல்லது அவ்வாறான பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின்; அல்லது
- தேர்தல்களுக்கு ஏற்புடையற்பாலனவான முறையான சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்படும் சனாதிபதித் தேர்தல்களின், பாராளுமன்றத் தேர்தல்களின், மாகாண சபைத் தேர்தல்களின் அல்லது எவையேனும் உள்ளூராட்சித் தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை அல்லது உறுப்பாண்மையை வகிப்பின் அல்லது வகித்திருப்பின்

விண்ணப்பதாரிகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, அவர்களின் விண்ணப்பத்தினைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர்.

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

பாராளுமன்ற இணையதளத்தில் (www.parliament.lk), CIABOC இற்கான பணிப்பாளர் தலைமையதிபதி நியமனம் எனப் பெயரிடப்பட்டுள்ள துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல் படிவம் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2024 ஒக்டோபர் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு:** கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக **"இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமனம்"** எனச் சுட்டிக்காட்டவும்.

அரசியலமைப்புப் பேரவையின் உத்தரவின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2024 ஒக்டோபர் 13 ஆம் திகதி.**

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

| பாவனையாளர் சேவை நிலையம் / கிளை அலுவலகம் | விலைக்கோரல் இலக்கம் பெறுகையின் தலைப்பு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டிய விபரங்கள் | விலைக்கோரல் விபரங்கள் | எதிர்பார்க்கும் வாடகை / குத்தகை ஒப்பந்தக் காலம் | விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் / நேரம் |
|---|---|---|---|---|
| மொரட்டுவ | மொரட்டுவ மத்தியமயப்படுத்தப்பட்ட பராமரிப்புப் பிரிவிற்கு கட்டிடத்துடன் கூடிய காணியொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவையாகவுள்ளது. LECO/24/NCB/PR4/364 | மொரட்டுவ மத்தியமயப்படுத்தப்பட்ட பராமரிப்புப் பிரிவின் பயன்பாட்டிற்கு வாடகை அல்லது குத்தகைக்கு கட்டிடத்துடன் கூடிய காணியொன்று தேவையாகவுள்ளது. கட்டிடம் 1,200 சதுர அடிக்குக் குறையாமலும், 02 அறைகள் உட்பட வசிக்கும் அறை, பேன்ட்றி, உணவு அறை, 2 மலசலகூடங்கள், குளியலறை, கராஜ் மற்றும் ஏனைய சகல வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>இந்த இடப்பரப்பு புதிய காலி வீதி, எகொட உயன, பழைய காலி வீதி, ஹொரேதுடுவ பாலம் மற்றும் கட்டுபெத்த சந்தி பிரதேசத்திற்குள் பிரதான வீதிக்கு முகப்பாக மற்றும் அண்மையில் அமைந்துள்ள நீர், மின்சாரம், வடிகாலமைப்பு, தொலைபேசி மற்றும் 3 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதிகளுடன் 20 அடிக்குக் குறையாத பிரவேச பாதையைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>காணி சுமார் 30 பேர்ச் பரப்பளவைக் கொண்டதாகவும் காணியைச் சுற்றி மதிலொன்று இருந்தால் மிகவும் உசிதமாகும். | இரண்டு வருடங்கள் | 2024-11-05 பி.ப. 2.00 மணி |
| சீதுவ | சீதுவ பாவனையாளர் சேவை நிலையத்திற்கு வாடகை அல்லது குத்தகைக்கு கட்டிடத்துடனான காணியொன்று தேவையாகவுள்ளது. LECO/24/NCB/PR4/365 | சீதுவ பிரதேசத்தில் 5,500 சதுர அடி கொண்ட கட்டிடத்துடனான இடமொன்றை இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் தேடுகின்றது. பிரதான வீதிக்கு முகப்பாக அல்லது அண்மையில் தண்டுகம பாலம் முதல் கட்டுநாயக்க 18ஆம் மைல் கல் வரையான பிரதேசம் விரும்பத்தக்கது. கட்டிடத்திற்கான பிரவேசப் பாதை 20 அடிக்குக் குறையாத அகலத்தைக் கொண்டதாகவும் மற்றும் கனரக வாகனங்கள் செல்ல பொருத்தமானதாகவிருத்தல் வேண்டும். நீர், மின்சாரம், வடிகாலமைப்பு, தொலைபேசி மற்றும் சுமார் ஐந்து வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய வசதிகள் இடப்பரப்பில் இருக்க வேண்டும். காணி சுமார் 40 பேர்ச் பரப்பளவைக் கொண்டதாகவும் காணியைச் சுற்றி மதிலொன்று இருந்தால் மிகவும் உசிதமாகும். | இரண்டு வருடங்கள் | 2024-11-05 பி.ப. 2.00 மணி |

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024-11-05ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் திறக்கப்படுதல், விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து இடம்பெறும். விலைமனுதாரரால் இந்தப் பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவத்தில் உள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்தப் பெறுகைக்கான கேள்விப் படிவங்களை www.leco.lk (''கேள்வி அறிவித்தல்'' பகுதி) இணையதளத்தில் அல்லது www.promise.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து அல்லது 011-2371637 எனும் இலக்கத்தின் ஊடாக LECO பிரிவைத் தொடர்புகொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மற்றும் நேரத்திற்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். (தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்கள், விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரத்திற்கு முன் இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்திற்குக் கிடைத்தல் வேண்டும்.)

இடத்தில் உரிமையாளர்கள் மட்டும் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானால் தயவு செய்து மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவின் தலைவரை 011-2371600 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளவும்.

PROCUREMENT NOTICE
www.leco.lk

**பொது முகாமையாளர்,**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

Repeat Your Ad For Better Offers

## கல்வி அமைச்சு
## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET)

# சூரிய சக்தி முறைமைகளைப் பொருத்துவதற்காக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்குரித்தான தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் கூரைகளை வாடகை அடிப்படையில் வழங்குதல்

**செயற்றிட்ட முன்மொழிவுகளைக் கோருதல்**

சூரிய மின் (Grid tied roof top Solar PV system) உற்பத்தி முறைமையைப் பொருத்துவதற்காக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்குரித்தான 35 தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் கூரையை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து 2024-12-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை செயற்றிட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன. இந்தக் கல்லூரிகள் தொடர்பான விபரங்களை www.dtet.gov.lk எனும் திணைக்கள இணையதளத்திலிருந்து அல்லது 0713290690 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறிய துறையில் அனுபவம் உள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் அவர்களின் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு அழைக்கப்படுகின்றனர். கல்லூரி இடப்பரப்பைப் பரீட்சித்துப் பார்த்ததன் பின் ஒவ்வொரு கல்லூரிக்காகவும் வெவ்வேறாக செயற்றிட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்குத் தேவையான ஆவணங்களை 2024-10-20ஆம் திகதி முதல் 2024-11-15ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிலிருந்து (இரண்டாம் மாடி) மூவாயிரம் இலங்கை ரூபாவை (ரூபா 3,000.00) மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை மக்கள் வங்கி நகர மத்திய கிளையில் பேணப்படும் 176-10001-3-9026228 எனும் கணக்கிலக்கத்திற்கு ''பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்'' எனும் பெயரில் செலுத்தி, 2024-10-20ஆம் திகதி முதல் 2024-11-15ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணிக்கிடையிலான எந்தவொரு நேரத்திலும் அந்த பற்றுச்சீட்டை கணக்குப் பிரிவிற்குச் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### முன்மொழிவுப் பிணை

இலங்கையில் செயற்படும் எந்தவொரு வர்த்தக வங்கியொன்றில் அல்லது ரொக்கப் பணமாக ஒரு கல்லூரிக்கு ஒரு இலட்சம் இலங்கை ரூபா (ரூ. 100,000.00) வீதம் முன்மொழிவுப் பிணை முறியொன்று சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். 2025-03-31ஆம் திகதி வரை முன்மொழிவுகள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் 2025-04-29ஆம் திகதி வரை முன்மொழிவுப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.

முன்மொழிவு நிறுவனம் அல்லது நபர் தமது முன்மொழிவுகளை 2024-10-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு ஒப்படைத்தல் வேண்டும். முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் நேரம் (2024-12-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி) நிறைவடைந்ததன் பின் உடனடியாக முன்மொழிவுகள் திறக்கப்படும். முன்மொழிவாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் முன்மொழிவுகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

முன்மொழிவுகளைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பில் முன்மொழிவாளரினால் செய்யப்படும் செலவுகளுக்கு இந்தத் திணைக்களம் பொறுப்பு கூறாது.

### விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம்

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-11-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு திணைக்களத்தின் இரண்டாம் மாடியில் உள்ள கூட்ட மண்டபத்தில் இடம்பெறும்.

முன்மொழிவாளர்களுக்குத் தேவையான மேலதிக தகவல்களை தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளரிடமிருந்து 0713290690 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

எந்தவொரு வேளையிலும் கிடைக்கப்பெற்றுள்ள ஒரு செயற்றிட்ட முன்மொழிவு அல்லது பல முன்மொழிவுகள் அல்லது அனைத்து முன்மொழிவுகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,**
**த.பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு - 10.**

## லங்கா சதொச — விலைமனுக்களுக்கான அழைப்பு

# லங்கா சதொச லிமிடெட்டில் பயன்படுத்தப்பட்ட நெய்த கோணிப்பைகள்/ வலை சாக்குகள்/ பொலித்தீன்/ அட்டைப்பெட்டி விற்பனை

கேள்வி இலக்கம் : LSL/PRO/09/09/Selling Cardboard, Gunny, Sack/2024

லங்கா சதொச பேலியகொடை களஞ்சியத்தில் பயன்படுத்தப்பட்ட நெய்த கோணிப்பைகள்/ வலை கோணிப்பைகள்/ அட்டைப்பெட்டி மற்றும் வலைச் சாக்குகளை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் தரப்புகளிடமிருந்து லங்கா சதொச லிமிடெட் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது.

உருப்படிகள் பின்வருமாறு :

| உருப்படி விபரம் |
|---|
| 20kg கோணிப்பை (Gunny) |
| 25kg கோணிப்பை (Gunny) |
| 50kg கோணிப்பை (Gunny) |
| 20kg வலைச் சாக்கு (Mesh Sack) |
| 25kg வலைச் சாக்கு (Mesh Sack) |
| 15kg நெய்த கோணிப்பை (Woven Sack) |
| 25kg நெய்த கோணிப்பை (Woven Sack) |
| 50kg நெய்த கோணிப்பை (Woven Sack) |
| அட்டைப்பெட்டி (Cardboard) |
| சவர்க்காரப் பைகள் (Soap Bags) |
| பொலித்தீன் (Polythene) |

மேல் குறிப்பிடப்பட்ட உருப்படிகளை **2024 ஒக்டோபர் 21ம் திகதி தொடக்கம் 2024 நவம்பர் 07**ம் திகதி வரை பேலியகொடை, நவலோக வீதி, நகர அபிவிருத்தி நிர்வாக களஞ்சிய வளாகம், இல. 44/1, பேலியகொடை திரும்பப் பெறும் களஞ்சியத்தில் வார நாட்களில் மாத்திரம் பரீட்சிக்க முடியும்.

இந்த ஏலம் சம்பந்தமான கூட்டம் 2024 நவம்பர் 04 ம் திகதி அன்று பிற்பகல் 03.00 மணிக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடைபெறும். ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் **500.00** ரூபா (மீளளிக்கப்படாத கட்டணத்தைச்) செலுத்தி **2024 ஒக்டோபர் 21ம் திகதி தொடக்கம் 2024 நவம்பர் 07**ம் திகதி வரை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் தொகுதி உட்பட விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய ஆவணங்களை கீழ் குறிப்பிட்டுள்ள முகவரியில் பெற முடியும்.

**Lanka Sathosa Limited, 3rd Floor, Procurement Division,**
**No.27, CWE Secretariat Building, Vauxhall Street, Colombo 02.**

அனைத்து விண்ணப்பதாரர்களும் **25,000.00** ரூபா (மீளளிக்கப்படும்) பிணை வைப்பு ஒன்றை செலுத்தி மேலுள்ள முகவரியில் காசாளருக்கு வைப்புச் செய்த பின் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (நீலப் பிரதி) குறித்த விண்ணப்பத்துடன் இணைந்து சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பற்றுச்சீட்டுகள் இணைக்கப்படாத கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

கூறுவிலைகளை **2024 நவம்பர் 07ம் திகதி மு.ப. 10.30** அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது விலைக்கேட்புப் பெட்டியில் (Tenter Box) இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/09/09/Selling Cardboard, Gunny,Sack/2024"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட டெண்டர்தாரர் மேற்கோள் காட்டப்பட்ட விலைக்கு VAT வரி செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்வதற்கு, தயவுசெய்து உதவி மேலாளர் தொ.பேசி இல - 070 1560428 தொடர்புகொள்ளவும்.

இந்த ஒப்பந்தம் தொடர்பான இறுதி முடிவு லங்கா சதொச லிமிடெட், தலைவரினால் எடுக்கப்படும்.

**லங்கா சதொச லிமிடெட்,**
**இல. 27, CWE செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch
Acc. No. 000000377

## மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIMS)
## பேராதனை பல்கலைக்கழகம்
# பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

பேராதனை பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமான தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கட்டளை சட்டத்திற்கு அமைய பணிப்பாளரானவர் நிறுவகத்தின் முழுநேர அதிகாரியாகவும், முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும், முதன்மை கல்விசார் அதிகாரியாகவும், நிறுவகத்தின் கணக்கியல் அதிகாரியாகவும் இருப்பார். பணிப்பாளரானவர் நிறுவகத்தின் பதவிநிலை உறுப்பினராகவும், முகாமைத்துவ சபையின் தலைவராகவும், நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கை சபைகளின் பதவிநிலை உறுப்பினராகவும் இருப்பார். இந்தப் பதவிக் காலம் மூன்று வருடங்கள் என்பதோடு, விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும், விண்ணப்ப இறுதித்திகதிக்கு 63 வயதிற்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்ப்பார்க்கப்படும் விண்ணப்பதாரர், குழு சான்றிதழ் அல்லது மருத்துவ சிறப்புக்களில் முனைவர் பட்ட (PhD அல்லது நிகரான) தகைமைகளைக் கொண்டிருத்தல் வெண்டும். கல்விசார் அமைப்பொன்றை நிருவாகப்படுத்தலின் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். மேலும், விண்ணப்பதாரி பல்துறை கல்விசார் சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்கு தேவையான ஆளிடைத் திறன்களை கொண்டுள்ளவராகவும், நிறுவகத்தினால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை உணர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கான பொறுப்பினையும் கொண்டிருப்பார்.

பணிப்பாளரானவர் இப்பதவிக்கு பொருந்தக்கூடிய சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

I. பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரியின் முழுமையான சுயதரவு.
II. நிறுவகத்தின் அபிவிருத்திக்கான சுய தொலைநோக்கு அறிக்கை மற்றும் விண்ணப்பதாரி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் சாதிக்க திட்டமிட்டுள்ளவை பற்றிய சுருக்கப்பட்டியல்.
III. இப்பதவிக்கு விண்ணப்பதாரியானவர் நியமிக்கப்படுமிடத்து அவர் பணியாற்றும் அரசசேவை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட தாபனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் தொழில் வழங்குநரிடமிருந்து அவர் விடுவிக்கப்படுவார் என்பதற்கான ஒரு கடிதம்.

விண்ணப்பமானது உதவிப்பதிவாளர், மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம், கெட்டம்பே, பேராதனை என முகவரியிடப்பட்டு, **2024 நவம்பர் 20ஆம் திகதி பி.ப. 3.30 க்கு அல்லது அதற்கு முன்னராக** வந்தடையும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “பணிப்பாளர் பதவி, மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம்” என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, மேலுள்ள ஆவணங்கள் மற்றும் வேறு எந்த ஒரு ஆவணங்களையும் PDF வடிவத்தில் மென் பிரதிகளில் ar@pgims.pdn.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2024 ஜனவரி 01 ஆம் திகதியிடப்பட்ட 01/2024 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட முறையை பின்பற்றி தேர்வு மேற்கொள்ளப்படும். பணிப்பாளர் பதவியின் நியமன நடைமுறை தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

மேலதிக விபரங்களுக்கு, சாதாரண அலுவலக நேரங்களில் 081 - 2389757 என்ற தொலைபெசி இலக்கத்தினூடாக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவக உதவிப் பதிவாளரை தொடர்புகொள்ளவும்.

**உதவிப் பதிவாளர்**
**மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம்**
**பேராதனை பல்கலைக்கழகம்**
**2024 ஒக்டோபர் 20**

---

SriLankan Airlines

## விலைமனுக் கோரல் அறிவிப்பு
## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட்

விலைமனுக் கோரல் எண்: 202432047
மறுசுழற்சி செய்யப்பட்ட பொலித்தீன் (LDPE) ஒற்றை தாள்களின் (இணைப்புகள் அற்ற ஒற்றை தாள்) வழங்கல் மற்றும் விநியோகம்

விலைமனுக் கோரல் படிவங்களை 2024 அக்டோபர் 20 முதல்
**https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices**
என்ற இணையதளத்திலிருந்து நேரடியாகப் பதிவிறக்கம் செய்யலாம்.

விலைமனுக் கோரல் முடியும் திகதி: 2024 நவம்பர் 12

**நிறுவன கொள்முதல் குழுத் தலைவர்,**
**துறைமுகம், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு**

---

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# விலைமனு கோரல்

நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## அலுவலக கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் பெறுவதற்கான விலைமனு கோரல்

கொரிய வேலை வாய்ப்புகளுக்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கணினிப் பரீட்சை நிலையத்தை நடத்துவதற்கு பிரதான அலுவலகத்திற்கு (பத்தரமுல்லை மற்றும் பன்னிபிட்டிய) அருகில் அமைந்துள்ள 10000 சதுர அடி கொண்ட கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெறுவதற்காக திறந்த விலைமனு கோரப்படுகிறது.
கட்டிடங்கள் தொடர்பில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள்.

1. 02 பரீட்சை மண்டபங்கள் இருக்க வேண்டும். (ஒரு மண்டபம் சுமார் 3500 சதுர அடியில் கணினி அடிப்படையிலான பரீட்சை வைப்பதற்கு ஏற்றது)
2. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 02 காத்திருப்பு அறைகள் இருக்க வேண்டும். (சுமார் 400 சதுர அடி)
3. ஒவ்வொரு தேர்வு அறைக்கும் 02 உபகரண களஞ்சிய அறைகள் இருக்க வேண்டும். (சுமார் 100 சதுர அடி)
4. கட்டிடம் குளிரூட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.
5. தேர்வுக் கூடங்களில் போதிய கழிப்பறை வசதிகள் இருக்க வேண்டும்.
6. கட்டிடத்திற்குள் கூடுதல் மின் திறனைப் பெற மின்மாற்றி இருக்க வேண்டும்.

**அலுவலக வளாகம்**

- பாதுகாப்பு சாவடியொன்றை கட்டுவதற்கு இடவசதி இருக்க வேண்டும்
- கட்டிடத்தை சுற்றி வாயிலுடன் கூடிய மதில்சுவர் இருக்க வேண்டும்
- தினமும் குறைந்தது 05 வாகனங்களை நிறுத்த இடம் இருக்க வேண்டும்.
- ஊழியர்கள் மற்றும் வெளி தரப்பினர் பயன்படுத்துவதற்கு சுமார் 04 கழிவறைகள் தனியாக இருக்க வேண்டும்.
- தேர்வுக்கு வரும் நபர்களுக்கு கட்டிடத்திற்குள் தரித்திருப்பதற்கு இடவசதி இருக்க வேண்டும். (சுமார் 200 சதுர அடி)
- நேரடி நீர் குழாய் இணைப்புடன் தனியான நீர் மீட்டர் மற்றும் சுமார் 2,000 லிட்டர் தண்ணீரை சேமிக்கும் திறன் கொண்ட தண்ணீர் தொட்டிகள் இருக்க வேண்டும்.
- பொதுப் போக்குவரத்து மூலம் எளிதில் சென்றுவரக் கூடிய வணிகப் பகுதியில் கட்டிடம் அமைந்திருக்க வேண்டும்.
- மூன்று கட்ட மின்சாரம் கொண்ட தனியான மின்சார மீட்டர் இருக்க வேண்டும். மின்தடை ஏற்பட்டால் பயன்படுத்த குறைந்தபட்சம் ஒரு ஜெனரேட்டரை (200 KWA) வைத்திருப்பது மேலதிக தகைமையாகும்.
- நிலையான தொலைபேசி வசதி இருப்பது மேலதிக தகைமையாகும்.
- பிரதான மின் விநியோக பலகையுடன் கூடிய முதன்மை மின்சுற்று அமைப்பில் மின்விசிறிகள் மற்றும் பிற பாகங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
- கட்டிடம் தெரிவு செய்யப்பட்ட அறிவிப்பு கிடைத்த பின்னர் கட்டிட பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு 2 வாரங்களுக்குள் கட்டிடத்தை கையளிக்க வேண்டும்.
- முறையான நீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு கொண்ட கட்டிடமாக இருக்க வேண்டும்.
- பணியகத்தின் தேவைக்கேற்ப அறைகளை பகிர்வு செய்வதற்கான சாத்தியப்பட வேண்டும்.
- அவசர நிலைமையில் கட்டிடத்தை விட்டு வெளியேறுவதற்கான கட்டமைப்பு மற்றும் கதவுகள் இருக்க வேண்டும்
- அலுவலகத்தை பராமரிப்பதால், சம்பந்தப்பட்ட கட்டிடம் அமைந்துள்ள பகுதி அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு இடையூறு இல்லாத அருகில் வசிப்பவர்களால் அலுவலக செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத இடத்திலும் இருக்க வேண்டும்.
- கட்டிட வளாகங்கள் குளிரூட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.
- மல்டிமீடியா வசதிகள், ஒலிபெருக்கிகள் பயன்படுத்த வசதிகள் இருக்க வேண்டும்.
- கட்டிடத்தில் தீயணைப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டிருக்க வேண்டும். அவசர நிலைமையில் தீயணைப்பு இயந்திரங்கள் மற்றும் மீட்புக் குழுக்களால் எளிதில் சென்றடையக்கூடிய இடத்தில் அமைந்திருக்க வேண்டும்.
- குத்தகைதாரர் விண்ணப்பிக்கும் மாதாந்த வாடகை அரசாங்கத்தின் மதிப்பீட்டப்பட்ட தொகைக்கு உட்பட்டு செலுத்தப்படும். (குறைந்தபட்ச தொகை)

2. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நகல் பிரதிகளை கட்டிட உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டும்.
   1. விளைப்பட்டியலுடன் பணியகம் வழங்கிய கேள்வி மனு ஆவணம்.
   2. மாத வாடகைத் தொகையைக் குறிப்பிடும் கடிதம்.
   3. வரிக்கு உட்பட்ட சொத்தின் சரியான முகவரி.
   4. கட்டிட உரிமையாளரின் உரிமைப் பத்திரம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்.
   5. சொத்து தொடர்பான ஆவணம்.
   6. சான்றளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டம் (சம்பந்தப்பட்ட கட்டிடத் திட்டம் A4 அளவின் நகல் அல்லது A3 அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும்).
   7. குத்தகைதாரரின் பெயர்/ முகவரி/ தேசிய அடையாள எண் மற்றும் அதன் தெளிவான நகல்.
   8. கட்டிட உரிமையாளரின் தொலைபேசி எண்.
   9. இணக்கச் சான்றிதழ்
   10. கடந்த 6 மாதங்களில் பெறப்பட்ட மின்சாரம், தொலைபேசி, வரிப்பணம் போன்றவற்றின் நகல்
   11. குத்தகைக்கு வழங்க உத்தேசித்துள்ள சொத்துக்கான உரிமைப் பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் அது சட்டத்தரணி ஒருவரினால் தயாரிக்கப்பட்டு அவரது பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பத்தரமுல்ல, கொஸ்வத்தை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், 2வது மாடி, கொள்முதல் பிரிவு 11.11.2024 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக விலைமனுப் பெட்டியில் இட வேண்டும். உங்கள் விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில், "வாடகை அடிப்படையில் / குத்தகை அடிப்படையில் கட்டிடத்தின் கொள்முதல் செய்தல். PR/02/04-01(85) என குறிப்பிடப்பட வேண்டும்.
பணியகத்தின் கொள்முதல் குழு எந்த விண்ணப்பத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை கொண்டுள்ளது.மேலும் கொள்முதல் குழுவின் முடிவே இறுதியானது. அரசு மதிப்பீட்டாளரின் அறிக்கைகளுக்கு உட்பட்டு தேர்வுகள் செய்யப்படும். மீளப்பெற முடியாத ரூ.1000.00 பிரதான அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெறப்பட்ட ரசீது முகாமையாளர்- கொள்முதலிடம் சமர்ப்பித்து விலைமனுவை பெற வேண்டும்.
(பணம் செலுத்துவதற்கு நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் வர வேண்டும்) டெண்டர் ஆவணங்கள் 21.10.2024 முதல் 08.11.2024 வரை அலுவலக நேரத்தில் (காலை 9.00 - மாலை 03.00 மணி வரை) பெற முடியும்.

**தலைவர் - திணைக்கள கொள்முதல் குழு**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/ தொலைநகல்: 2880550/ 2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு**

---

## பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை விமானப்படை

# விலைமனுக்கோரல்

**இலங்கை விமானப்படையில் BELL 212 ஹெலிகொப்டரினை புதுப்பிப்பதற்கான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் (RECOVERY OF BELL 212 HELICOPTERS)**

1. பாதுகாப்பு அமைச்சின் சார்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு விமானப்படையின் செயலாளருக்கு **"இலங்கை விமானப்படைக்கு சொந்தமான இலங்கை விமானப்படையில் இலங்கை விமானப்படையில் BELL 212 ஹெலிகொப்டரினை புதுப்பிப்பதற்கான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல்** (PURCHASE OF SPARES TO RECOVERY OF BELL 212 HELICOPTERS)" செய்வதற்கு தகுதி மற்றும் தகைமைகளைக்கொண்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. கொள்முதல் விபரங்கள் பின்வருமாறு.

| தொ இல | கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | மனு பாதுகாப்பின் பெறுமதி மற்றும் காலம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | மனு முடிவடையும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | AHQ/24/FS/-BELL/1031 | Purchase of Spares to Recovery of SUH -565 Bell 212 Helicopter for the Sri Lanka Air Force | 2025.04.01 ரூ5,000,000.00 | 2024.12.02 | 60,000.00 | 2024.12.03 1030 மணி |
| 02 | AHQ/24/FS/-BELL/1032 | Purchase of Spares to Recovery of SUH -563 Bell 212 Helicopter for the Sri Lanka Air Force | 2025.04.29 ரூ8,750,000.00 | 2024.12.02 | 70,000.00 | 2024.12.03 1100 மணி |

2. மனுக்கோரலானது **சர்வதேச மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (ICB)** இடம்பெறும்.
3. ஆர்வமுள்ள மனுதாரர்கள், **செயளாலர், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர,** மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கொள்முதலுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை **2024.10.21** ஆம் திகதி முதல் வேலை நாட்களில் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக்கள் வழங்கப்படும் கடைசி திகதி வரை வார வேலைநாட்களில் 1000 மணி முதல் 1500 மணி வரை **தலைமை நிதி அதிகாரி 1, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே** எனும் முகவரியில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியினால் ஆன முழு ஆவணத் தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் அலுவலக நாட்களில் **1000 மணி முதல் 1500 மணிவரை கொள்முதல் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டையில் (தொலைபேசி: +94112390719, தொலைநகல்: +94112390720, மின்னஞ்சல் : (procurement@defence.lk)** மூலமாக **இலவசமாகப்** பரீட்சித்துக்கொள்ள முடியும். மீள்ச் செலுத்தப்படும் கட்டண முறையானது பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட மனு முன்மொழிவுகள் டெண்டர் அடையாள எண்ணைக் குறிப்பிட வேண்டும், மேலே குறிப்பிட்டுள்ள **பந்தி** 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் மற்றும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு விரைதூதர் சேவை மூலமாக கையளிக்கப்படுதல் வேண்டும் தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளத் தேர்வுசெய்யும் மனுதாரர்கள் / மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில், மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் நேரத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். நேரிலோ அல்லது நிகல்நிலை மூலமாக ஏலங்கள் முடிந்தவுடன் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். கால எல்லை முடிவடைந்த பின்னர் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

   **கொள்முதல் கிளை,**
   **2 ஆம் மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
   **ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே,**
   **இலங்கை.**

5. அனைத்து மனுதாரர்களும், மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட மதிப்பு மற்றும் கால எல்லைக்கான முதல் எழுத்துப்பூர்வ கோரிக்கையின் படி மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற மனு பத்திரம் மூலம் பணப் பரிமாற்றம் செய்யக்கூடிய மனு பிணையினை சமர்ப்பிக்க வேண்டும். மனுப் பாதுகாப்பு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதத்துடன் **"பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்"** க்கு அனுப்பப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு உத்தரவாதத்தின் மாதிரி நகல் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல் - 2006 இல் வெளியிடப்பட்டது.
6. மனுதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு இலங்கை விமானப்படையின் பின்வரும் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

   **பிரதான கொள்முதல் அதிகாரி,**
   **கொள்முதல் பிரிவு,**
   **LL2 மாடி, இலங்கை விமானப்படைத் தலைமையகம்,**
   **இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
   **ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.**

   **தொலைபேசி: +94112347694, +94112441044 (நீட்டிப்பு 11902)**
   **தொலைநகல்: +94112441553,மின்னஞ்சல்: cpd@slaf.gov.lk, acpot@slaf.gov.lk**

தலைவர்,
நிலையான அமைச்சரவை நியமனக் கொள்முதல் குழு,
பாதுகாப்பு அமைச்சு

---

The Housewives' companion
Classifieds on
VAARAMANJARY




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

நவக்கிரக நாயகர்களின் முதல்வரான சூரியன் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் இருக்கிறார். தூரதேசப் பயணங்களின் மூலம் உங்களுக்கு நன்மை உண்டாகும். செலவுகள் அதிகரித்து பணப் பற்றாக்குறை ஏற்படும். அதே நேரத்தில் எப்படியாவது பண வரவு இருக்கும். சந்திரனின் நகர்வு மிக சாதகமாக இருக்கின்றது. வியாபாரம் விருத்தி அடையும். செவ்வாய் 3,4 ஆம் இடத்தில் அமர்ந்திருக்கிறார். அரசாங்க வேலைகளில் எச்சரிக்கையாக இருங்கள். காரியத் தடைகள் ஏற்பட்டாலும் கவலைப்பட வேண்டாம். புதன் 7 ஆம் வீட்டில் இருக்கிறார்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சூரிய பகவான் உங்கள் இராசிக்கு 6 ஆம் வீட்டில் இருக்கிறார். ஏதோ ஒரு காரணத்தால் பாதிக்கப்பட்ட மனநிம்மதி மீண்டும் கிடைக்கும். உறவினரிடத்தில் இருந்த மனத்தாங்கல் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். சந்திரனின் சஞ்சாரங்கள் இந்த வாரத்தில் அனுகூலமான பலன்களே தரும். செவ்வாய் 2,3 ஆம் வீட்டில் இருக்கிறார். தொழிலுக்கு போட்டியாக விரோதிகள் தோன்றுவார்கள். குடும்பத்தில் குழப்ப நிலை நிலவும். கவலையால் உடல் நலம் பாதிக்கப்படும். புதன் 6 ஆம் வீட்டில் இருக்கிறார்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

சூரிய பகவான் 5 ஆம் இடத்தில் அமர்ந்திருக்கிறார். வியாபாரத்துக்காக நண்பர்களின் உதவியை நாடுவீர்கள். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பொருளாதார உயர்வு உண்டாகும். சந்திரனின் நகர்வு ஏற்ற இறக்கமான பலன்களையே தரும். செவ்வாய் 1,2 ஆம் வீட்டில் இருக்கிறார். மனைவி பிள்ளைகளுக்காக தாராளமாக நகைகள் வாங்கலாம். கட்டுமானத் தொழில் சிறப்பாக நடைபெறும். பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். புதன் 5 ஆம் வீட்டில் இருக்கிறார். வேலை செய்கின்ற இடத்தில் கெட்ட பெயர் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

சூரிய பகவான் உங்கள் இராசிக்கு 4 ஆம் வீட்டில் இருக்கிறார். உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்கவேண்டும். உறவுகளைப் பேணுவதில் அக்கறை காட்டுங்கள். தேவையில்லாத விரோதங்கள் உண்டாகலாம். சந்திரனின் இடமாற்றங்கள் தொழிலில் ஏற்ற இறக்கமான பலன்களையே தரும். செவ்வாய் 1,12 ஆம் இடத்தில் இருக்கிறார். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவி செய்வார்கள். ஏதோ ஒரு காரணத்தால் திருமணத்தடை ஏற்படும். விரோதிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகள் விலகும். புதன் 4 ஆம் வீட்டில் இருக்கிறார். பண வரவு அதிகரிக்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

உங்கள் இராசிநாதன் 3 ஆம் இடத்தில் இருக்கிறார். பணத்தட்டுப்பாடு காரணமாக தடுமாற்றம் அடைவீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு மருத்துவச் செலவு செய்யவேண்டி வரும். சந்திரனின் சஞ்சாரங்கள் தொழிலுக்கு ஏற்றத்தைக் கொடுக்கும். செவ்வாய் 11,12 ஆம் வீட்டில் இருக்கிறார். அக்கறையோடு தங்க நகைகள் வாங்குவீர்கள். மனைவி மக்களால் மணச்சங்கடம் அடைவீர்கள். புதன் 3 ஆம் இடத்தில் இருக்கிறார். எதிர்ப்பைக் காட்டியவர்கள் உரிய நேரத்தில் உதவி செய்வார்கள். கடன் தொல்லைகள் நீங்கும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

சூரியன் 2 ஆம் இடத்தில் இருக்கிறார். தந்தையாரின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். எதிர்பார்த்த இடங்களில் இருந்து உதவி கிடைக்க தாமதமாகும். புது நண்பர்களால் உங்கள் தொழிலுக்குத் தேவையான நன்மை உண்டாகும். சந்திரனின் சஞ்சாரம் தொழிலுக்கு தேவையான உதவிகளை பெற்றுத்தரும். செவ்வாய் 10,11 ஆம் இடத்தில் இருக்கிறார். தன்னைவிட தாழ்ந்த ஒருவரிடம் கீழ்ப்படிந்து நடக்க நேரிடும். உங்களுக்கு எதிரானவர்களின் பலம் கூடும். மன சஞ்சலம் அதிகமாகி தூக்கம் கெடும். புதன் 2 ஆம் இடத்தில் இருக்கிறார். உத்தியோகம் பார்க்கும் இடத்தில் உயர்வு உண்டாகும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

உங்கள் இராசியில் சூரியன் இருக்கிறார். காரியத் தடைகள் உண்டாகும். மறைமுக எதிர்ப்புகளை முறியடிக்க வேண்டிய நிலை ஏற்படும். சந்திரன் நகர்வுகள் அவ்வளவு சாதகமாக இல்லை. செவ்வாய் 9,10 ஆம் இடத்தில் இருக்கிறார். நண்பர்களும் விரோதியாக மாறுவார்கள். தேவையில்லாத அலைச்சலால் விரைய செலவு உண்டாகும். வியாபாரம் மந்தமாக நடக்கும். புதன் 1 ஆம் வீட்டில் இருக்கிறார் உறவினர்களின் ஆதரவு இருக்காது. உறவைப் பேணுவதில் கவனமாக இருங்கள். ஏமாற்றங்களும் பொருள் இழப்பும் ஏற்படலாம். குரு பகவான் 8 ஆம் இடத்தில் இருக்கிறார். மனக்கவலைக்கு மருந்து தேடுவீர்கள்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

சூரியன் 12 ஆம் வீட்டில் இருக்கிறார். தாயார் உடல்நிலை பாதிக்கப்படலாம். அனாவசியமான அலைச்சலால் மன நிம்மதி கெடும். சந்திர பகவான் தொழிலுக்கு உதவியாக இருப்பார். செவ்வாய் 8,9 ஆம் இடத்தில் இருக்கிறார். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். ஆடை ஆபரண பிராப்தி உண்டாகும். புதன் 12 ஆம் இடத்தில் இருக்கிறார். ஏக்கத்தோடு இருந்தவர்களுக்கு மக்கள் பேறு உண்டாகும். தடைபட்ட காரியங்கள் கைகூடிவரும். பந்தயங்களில் அமோக வெற்றி கிடைக்கும். குரு 7 ஆம் வீட்டில் இருக்கிறார். தள்ளிப்போன திருமணம் சிறப்பாக நடக்கும். பொருளாதாரத்தில் அபிவிருத்தி உண்டாகும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

சூரியன் 11 ஆம் வீட்டில் இருக்கிறார். பணத்தட்டுப்பாடு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். வெளிநாட்டு பயணங்களை சில நாட்கள் விலக்குவது நல்லது. சந்திரன் தொழிலுக்கு நன்மையைத் தருவார். வசீகரமான பேச்சால் வாடிக்கையாளர்களைப் அதிகரிப்பீர்கள். செவ்வாய் 7,8 ஆம் இடத்தில் இருக்கிறார். எதிர்பாராத வகையில் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் நடக்கலாம். குடும்பத்தில் பிடிவாதத்தைக் காட்டாதீர்கள். புதன் 11 ஆம் இடத்தில் இருக்கிறார். துணிந்து எந்தக் காரியமும் செய்வீர்கள். காதலில் வெற்றி ஏற்படும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சூரியன் 10 ஆம் வீட்டில் இருக்கிறார். சகோதர சகோதரிகளால் பண விரயம் ஏற்படும். உங்கள் வார்த்தையைக் குடும்பத்தில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். வீண் வம்புகள் ஏற்படாமல் எச்சரிக்கையாக இருங்கள். செவ்வாய் 6,7 ஆம் இடத்தில் இருக்கிறார். வேலை இடத்தில் அவ்வளவு உற்சாகம் இருக்காது. உங்களுக்கு எதிராக விரோதிகள் சுறுசுறுப்பாக இயங்குவார்கள். குரு பகவான் 5 ஆம் வீட்டில் இருக்கிறார் வியாபாரம் அவ்வளவு சிறப்பாக நடக்கும். சாதுரியமாக திட்டம் போட்டு எதிரிகளின் சதி செயலை முறியடிப்பீர்கள். சுக்கிரன் 11 ஆம் வீட்டில் இருக்கிறார்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

சூரியன் 9 ஆம் வீட்டில் அமர்ந்திருக்கிறார். இந்தக் காலகட்டத்தில் நண்பர்களின் உதவி கிடைக்கும். விரோதமாக இருந்தவர்களும் நட்புப் பாராட்டி நல்ல காரியங்கள் செய்வார்கள். பொருள் சேர்க்கை உண்டாகி மன நிம்மதி அடைவீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். அதற்கு சந்திர பகவான் வழி வகுத்துக் கொடுப்பார். செவ்வாய் 5,6 ஆம் வீட்டில் இருக்கிறார். வெளிநாட்டு பயணங்கள் வெற்றிகரமாக அமையும். புதிய ஆதரவு பெற்று வியாபாரத்தைப் அதிகரிப்பீர்கள். இல்லத்திலும் வெளியிலும் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடக்கும். புதன் 9 ஆம் வீட்டில் இருக்கிறார்.

## மீனம்

**(பூரட்டாதி 4 ஆம் பாதம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

பார்வையால் பலன்களை அள்ளித்தரும் குரு பகவானை அதிபதியாகக் கொண்ட மீன ராசி அன்பர்களே.... சூரிய பகவான் உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் அமர்ந்திருக்கிறார். அரசாங்க காரியங்களில் எச்சரிக்கையாக இருங்கள். அதிகரிகளால் தொல்லை உண்டாகலாம். வீண் அலைச்சலால் பண விரயம் ஏற்படும். வெளியில் அதிக சிரமங்கள் இருந்தாலும் குடும்பத்தில் உதவியும் ஆதரவும் கிடைக்கும். நிலவின் கருணையால் சலசலப்பு இல்லாமல் குடும்பத்தை கொண்டு செல்வீர்கள்.

# வண்ண வண்ண கோவில்கள்




காலை பத்து மணிக்குக் கீழே காரோடு நிற்பதாக வேலாயுதம் கைபேசியில் சொன்னதும், நாங்கள் மூவரும் மாடியிலிருந்து கீழே இறங்கி வெளியே காரோடு நின்ற அவரைச் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டு அவர் காரில் ஏறினோம். கார் வேகமாக நகரங்களைத் தாண்டி ஓடியது. போகிற வழியில் தேநீர் குடிக்கக் காரை நிறுத்தினார் வேலாயுதம். தேநீர் குடித்துக் கொண்டே பேசினோம். அவர் ரியூனியன் பற்றி சில விபரங்களைச் சொன்னார்.

“ரியூனியனில் தமிழர் தொகை இரண்டு லட்சமாகும். இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய, பெரிய ஆலயங்கள் இருக்கின்றன. இவற்றில் முப்பது ஆலயங்கள் பழமையானவை. எங்காவது தீவில் கரும்பு ஆலைப் புகைபோக்கி இருந்தால் அங்கு ஒரு கோயில் கட்டாயம் இருக்கும். பிரெஞ்சு ஆட்சிக் காலத்தில் பாண்டிச்சேரியிலிருந்தும், தமிழ்நாட்டிலிருந்தும் வந்த தமிழ்த் தொழிலாளர்கள் தமது அடையாளத்தை நிலைநாட்டவே இக்கோயில்களை கட்டினார்கள். சென்ற நூற்றாண்டில் ஒவ்வொருவரும் தங்கள் பெயரோடு பிரெஞ்சில் பெயர் வைக்க வேண்டிய சூழல் இருந்தது. இது பிரெஞ்சு நிர்வாகத்தோடு தொடர்பு கொள்ள வைத்திருக்கலாம். எனக்கு வைக்கப்பட்ட பெயரே ALAIN MARDAVE VELAYUTHAM. இன்று அத்தகைய நிலை இல்லை. எது எப்படியோ ரியூனியனில் உள்ள கோயில்கள் எங்கள் அடையாளமாக. எங்களுக்குப் பாதுகாப்பாய் இருந்தது. எங்கள் தந்தையார் கோயில் தர்மகர்த்தா சொந்தமாக கோயில் கட்டினார். அது திரௌபதி கோயில், காளி கோயில்.”

திரௌபதி கோயிலில் போய் இறங்கினோம். அங்கு மாரியம்மன், ஹனுமான், பெரிய கருப்பு சாமி, கிருஷ்ணா, காத்தவராயன், அர்ச்சுனா ஆகியோருக்கு வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றன. காளி கோயிலோடு மதுரைவீரன், முன்னீஸ்வரன், காத்தவராயன், பெரியகருப்பு சாமி, ஐயனார் ஆகியோரை வழிபட சிறு கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. காளி கோயிலில் ஆடு, கோழி என்பன பலி கொடுக்கப்பட்டு சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆயிரம் ஆடுகள், 4000 கோழிகள் பலி கொடுக்கப்பட்டன. தற்போது அதன் தொகை குறைந்தபோதும் பலியிடுவது தொடர்கிறது.

கோயிலையெல்லாம் சுற்றிப் பார்த்த போது தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கும் சிற்பிகளைக் கண்டேன். அவர்கள் தாங்களாகவே சமைத்து உண்டு தங்கள் பணியினைச் செய்து வருகிறார்கள். அவர்களோடு பேசினேன்..

''இங்கு வாழ்க்கை எப்படிப் போகிறது?''

''வாரத்தில் ஆறு நாளும் வேலை, ஞாயிறு விடுமுறை. அன்று எங்களுக்கான பொருட்களை வாங்கிக் கொள்வோம். அருமையான தீவு. நல்ல மக்கள். ஆன்மிகத்தில் அதிகமான நம்பிக்கை. தமிழக கிராமத்தில் தெய்வ வழிபாடு எப்படி செய்தார்களோ அவ்வாறே இங்கும் செய்கிறார்கள். கிராம தெய்வ வழிபாடு இங்கு அதிகமாக இருக்கிறது.''

''உங்களின் பொழுது போக்கு?''

''மொபைல் போனில் படம் பார்ப்போம். பேசுவோம். பாட்டுக் கேட்போம். இங்கு தமிழ்ப்படம் ஓடுகிற தியேட்டர்கள் இல்லை. எனவே தியேட்டரில் தமிழ்ப்படம் பார்க்க முடியாது! தமிழ் பத்திரிகைகள் இல்லை. தமிழ்த் தொலைக்காட்சி இல்லை. ஆனாலும் எங்கள் பணியைச் செய்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் பிரான்சிலும் கோயில்களில் சிற்ப வேலைகள் செய்திருக்கிறோம். அமைதியான தீவு, ஆனால் இங்கு பொருட்களின் விலை அதிகம்..''



கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஒரு இடத்தில் உட்கார்ந்து வேலாயுதத்தோடு உரையாடலைத் தொடங்கினேன்.

''உங்கள் குடும்பம் பற்றி சொல்லுங்கள்..''

''எனக்கு இரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள். என் மனைவி மேற்குவங்காளத்தைச் சேர்ந்தவள். காதல் திருமணம். என்னைப்போலவே பல தமிழர்கள், தெலுங்கு, மராட்டிய, இந்திப் பெண்களைத் திருமணம் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து பெண்ணைத் திருமணத்திற்காகக் கொண்டு வருவது சுலபமானதல்ல..''

“பிள்ளைகளின் பெயர்கள்?”

“மகன்கள் பெயர் கிருஷ்ணா, கிரிதரன். மகளின் பெயர் தணிகை.”

“வீட்டில் பேசும் மொழி..”

“கிரியோல்..”

“தமிழ் எனக்குப் பேசவோ எழுதவோ வராது. பிரெஞ்ச், ஆங்கிலம் தெரியும்..”

“உங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ்..”

“தமிழ் படித்தார்கள். ஆனால் தமிழ் பேச வராது. தமிழில் பேச இங்கு யாருமில்லை. கல்வி பிரெஞ்சில், பேச்சு மொழி கிரியோல். தமிழில் யாரோடு பேசுவது? மொரீசியஸ் போலவே தமிழ் பேச்சுமொழியாக இங்கில்லை. ஆனால் தமிழ் படிக்க முடியும். அது சம்பந்தமான விபரங்களைத் தரும் ஒரு பேராசிரியரை உங்களுக்கு அறிமுகம் செய்கின்றேன்..” என்ற வேலாயுதம் அப்போதே கைபேசியில் பேசினார்.



அவர் பேசியது கிரியோல் மொழி என்பதால் எங்களுக்குப் புரியவில்லை.

காரில் நாங்கள் ஏறியதும் பேராசிரியர் திரும்ப அழைப்பதாகச் சொன்னார். கார் ஓடியது. அந்தச் சிறிய மலையில் ஏராளமான வீடுகள் இருந்தன. ஒரு வீட்டின் முன்னே காரை நிறுத்திய வேலாயுதம், “இது என்னுடைய வீடு. உங்களுக்குப் பகல் உணவு காத்திருக்கிறது” என்றார்.

நாங்கள் மூவரும் வீட்டினுள் நுழைந்தோம். வேலாயுதத்தின் மனைவி, மகன் ஆகியோர் எங்களை வரவேற்றார்கள். வேலாயுதத்தின் மனைவி பெங்காலியாக இருந்த போதும் வீட்டில் தமிழ் மணமே வீசியது..

உணவு மேஜையில் ஏராளமான உணவு வகைகள். இதற்கு முன் என்னையோ, மற்றவர்களையோ அறியாதவர்கள். ஆனால் விருந்தோம்பலுக்கு உதாரணமாய் இருந்தார்கள். விருந்துக்கும் உபசரிப்புக்கும் நன்றி தெரிவித்து மறுபடியும் காரில் ஏறினோம். கார் ஓடியது. சில நிமிடங்களில் சிறிய நாளங்காடி முன்னே நின்றது. இங்கே ஏன் நிற்கிறது? என்ற எண்ணத்தோடு நாளங்காடி உள்ளே நுழைந்தோம். அங்குதான் நாளங்காடிக்கு வந்ததற்கான பதில் கிடைத்தது.

“இது எங்களின் சூப்பர்மார்க்கட். இதை நடத்துவது என் மகள் தணிகை..” என்ற வேலாயுதம் தணிகையை அறிமுகம் செய்து வைத்தார். தணிகை பல்கலைக்கழகத்தில் படித்தாலும் வர்த்தகம் செய்வதில் அதிக விருப்பம் கொண்டவர்..

''பெண்களும் வர்த்தகத்தில் இருக்கலாமே! புகழ்பெற்ற பெப்ஸிகோலா நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாக இருந்த இந்திரா நூயி என்ற இந்திரா கிருஷ்ணமூர்த்தி ஒரு பெண்தான். சென்னையைச் சேர்ந்தவர். உலகின் நூறு சக்தி வாய்ந்த பெண்களில் ஒருவர். 2015 மற்றும் 2017இல் உலகின் சக்தி வாய்ந்த பெண்களில் இரண்டாம் இடத்தில் இருந்தவர்'' என்று சொல்லிவிட்டு தணிகைக்கு வாழ்த்து கூறினேன்.

அப்போது வேலாயுதத்துக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. பேசி முடித்த அவர், ”இன்று இரவு பேராசிரியை சுப்பராயன் காவிரி லோகாம்பாள் உங்கள் மூவரையும் வீட்டில் சந்திக்க அழைத்துள்ளார். என் மைத்துனர் சில இடங்களைச் சுற்றிக் காட்டிவிட்டு பேராசிரியை வீட்டில் இறக்கி விடுவார்” என்றார்.

வேலாயுதத்திடமிருந்து விடை பெற்றுக் கொண்டு மறுபடியும் காரில் ஏறினோம். காரை ஓட்டிய மைத்துனருக்குத் தமிழ் தெரியாது. ஆங்கிலமும் சரளமாக வரவில்லை. பிரெஞ்ச் நன்றாக வரும். ஆங்கிலம் எல்லா இடமும் ‘செல்லும்’ என்பதில் உண்மை இல்லை. உலகின் பல நாடுகளில் பிரெஞ்ச் மட்டுமே பேசப்படுகின்றது. அங்கு ஆங்கிலத்திற்கு மதிப்பே இல்லை..

மலைப்பகுதியில் சிறிய, சற்றுப்பெரிய கோயில்களுக்கு வேலாயுதத்தின் மைத்துனர் மார்டேயஸ் தேவதர்சனா கூட்டிப் போனார். அவையெல்லாம் கரும்புத் தோட்டத் தொழிலாளர்கள் கட்டியது. மிகப்பெரிய கோயில்கள், ரியூனியனின் தலைநகரை ஒட்டிய நகரங்களில் இருக்கின்றன. அவற்றில் சிவசுப்ரமணியன் கோயில், சிவசண்முகநாதர் கோயில், மகாகாளிகாம்பாள் கோயில், பத்ரகாளி கோயில், நரசிம்ம பெருமாள் கோயில், அஷ்டலக்ஷ்மி கோயில், வைரமன் காளிகாம்பாள் கோயில் என்பன முக்கியமானவை. இக்கோயில்கள் வண்ணமயமான உயரமான கோபுரங்களுடன் கட்டப்பட்டுள்ளன. இவை இன்று ரியூனியனின் வெளிநாட்டுப் பயணிகளின் சுற்றுலாவில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

அவ்வாறு போகிற வழியில் தூரத்தில் சிலையைக் கண்டு அங்கு போய்ப் பார்த்தபோது, அது திருவள்ளுவர் சிலை என்பது தெரிந்தது. எப்போதோ வைத்த சிலை. திருவள்ளுவர் என்ற எழுத்து தெளிவாகத் தெரிந்தது. .ஏனைய எழுத்துகள் நிறம் மங்கி கவனிப்பாரற்று இருப்பதைக் காட்டியது..கரும்புத் தோட்டம் செழித்திருந்த போது வைத்த சிலையாக இருக்கலாம்.

2018இல் ரியூனியன் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் டாக்டர் கலைசெல்வம் சண்முகம் சென்னையில் நடந்த ஒரு கருத்தரங்கில் உரையாற்றியபோது, ‘தொடக்கத்தில் கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களுக்குக் கிறிஸ்தவப் பெயர்களை அன்றைய பிரெஞ்ச் நிர்வாகம் வைத்தது. அவர்களின் பிள்ளைகளுக்கு ஞானஸ்தானம் செய்ய வைத்தது. ஆனால் அவர்கள் தங்கள் சமயத்தைக் கைவிடவில்லை. வெளியே கத்தோலிக்கர்களாகவும் உள்ளே இந்துக்களாகவும் (PUBLIC CATHOLIC AND PRIVATELY HINDU) வாழ்ந்தார்கள். அதனால் ரியூனியனின் முக்கிய நகரங்களில் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. பல கோயில்களுக்கு தமிழகத்தில் இருந்து பூசை செய்ய குருக்களை வரவழைத்திருக்கிறோம். ஆனால் சில கோயில்கள், இந்தக் குருக்கள் மூலம் பணம் தேடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்று தெரிவித்தார்.

பேராசிரியை லோகாம்பாளும் அவருடைய கணவரும் எங்களை வரவேற்றார்கள். அவர்களோடு மகன் அக்ஸாவும் இருந்தார். பேராசிரியையின் குடும்பத்தினர் பாண்டிச்சேரியிலிருந்து குடிபெயர்ந்தவர்கள். ரியூனியனின் பல்கலைக்கழகத்தில் பிரெஞ்ச் மொழி பேராசிரியை. அப்பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பகுதியின் ஒருங்கிணைப்பாளர். ஆனால் தமிழில் சரளமாகப் பேச முடியவில்லை.... எங்களை அறிமுகம் செய்து கொண்டு பேசத் தொடங்கினோம்..

“தமிழ்க்கல்வி இருக்கிறது. தமிழில் படிக்கலாம். மாணவர்கள் தமிழ் படிக்கிறார்கள். ஆனால் அவர்களால் தமிழில் பேச முடியவில்லையே ஏன்?” என்று கேட்டேன். “பிரெஞ்சின் ஆட்சியில் இருந்த ரியூனியன் இன்றும் பிரெஞ்ச் நிர்வாகத்திலேயே இருக்கிறது.

பிரெஞ்ச் அரச மொழி மட்டுமல்ல; கல்வி மொழியும் கூட. எங்கள் குடும்பம் மட்டுமல்ல பெருவாரியான குடும்பங்கள் பாண்டிச்சேரியிலிருந்து இங்கு வந்தவை. பாண்டிச்சேரியில் இருந்தபோது அவர்கள் பிரெஞ்சைப் படித்தார்கள். அந்தப் பிரெஞ்ச் மொழி இங்கு வாழ உதவியாக இருந்தது. மொரீசியசில் முதல் தலைமுறையினரிடம் இருந்த தமிழ் அதற்கடுத்த தலைமுறையினரிடம் குறைவாகவே இருந்தது. இப்போதைய தலைமுறை தமிழ் படிக்கிறது. தமிழில் பேசாது. இங்கு அப்படியல்ல முதல் தலைமுறையே பிரெஞ்ச் மொழியோடு நேசமாய் இருந்ததால், இன்றைய தலைமுறைக்கு தமிழ் அந்நிய மொழியாகிப் போனது” என்றார் பேராசிரியை லோகாம்பாள்.. அதன் பின்னர் மதியழகன், “மலேசியாவில் இப்போதைய தமிழர்களின் மூதாதையர்கள் தமிழ் பேசியே வந்தார்கள். இன்று மூன்று தலைமுறையாயும் அங்கு தமிழ் இருக்கின்றதே! மொரீசியஸ், ரியூனியன் ஆகிய தீவுகளுக்கு வந்தவர்கள் தமிழோடு வந்திருப்பார்கள். ஆனால் தமிழ் இல்லையே ஏன்?” என்று கேட்டார்.

“மொரீசியஸ், ரியூனியன் ஆகியவை தமிழகத்திலிருந்து தொலைவில் உள்ளவை. தகவல் தொடர்பு அன்று கடிதத் தொடர்பு மட்டுமே. எனவே தமிழகத்தோடு தொடர்பே இல்லை. இங்குள்ளவர்களுக்கு. ரியூனியன் பிரெஞ்ச் ஆதிக்கத்தில் உள்ளவை. மொரீசியஸ் பிரெஞ்ச், ஆங்கில ஆதிக்கங்களில் இருந்தவை. இரு நாட்டிலும் பிரெஞ்ச் மொழி இருந்தது. ஆனால் இந்த இரு நாடுகளிலும் கிரியோல் மொழி பல்லின மக்களின் தொடர்பு மொழியாகி அதுவே பேச்சு மொழியாகிவிட்டது.

ரியூனியனிலும் கிரியோலே பேச்சு மொழி. தமிழ் பேச சூழல் இல்லை. தமிழ் பேசுபவர்களும் இல்லை. எனவே தமிழ் இங்கு அந்நியமாகி விட்டது.

ஆனாலும் தமிழில் பேச பல்வேறு முயற்சிகள் நடக்கின்றன. என்னைப் பொறுத்தவரை இரு தீவிலும் பேச்சுத் தமிழ் பயிற்சி கொடுக்க வேண்டும்” என்று பதிலளித்தார் பேராசிரியை லோகாம்பாள்.

தொடர்ந்து அவரோடு பேசியதில், மொரீசியஸை விட இங்கு வாழ்க்கைத் தரம் அதிகம். பிரெஞ்ச் நிர்வாகத்தினால் அரச சேவைகள் இலகுவாக இருக்கிறது. பிரான்ஸைப் போலவே சராசரி சம்பளம் இங்கு கொடுக்கப்படுகிறது.

வேலை இல்லாதோருக்கு வேலை தேடும் வரை பணம் கொடுக்கப்படுகின்றது. சட்டம் ஒழுங்கு சரிசமமாக இருக்கிறது. மதம், இனம் ரீதியாக எவரையும் ஒதுக்க முடியாது.” போன்ற விபரங்கள் தெரிய வந்தன.

பேச்சு முடிந்ததும் அளவான, சுவையான இரவு உணவைப் பரிமாறினார்கள். உணவை முடித்துக் கொண்டு புறப்பட்ட போது லோகாம்பாள் சொன்னார்.. “எங்கள் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர் சோமேஸ்வரன் நாளை சந்திக்க வருவார்.

அவர் ஈழத்தைச் சேர்ந்தவர். நல்ல தமிழ் பேசுவார். அவரிடம் உங்களின் தொலைபேசி, இருப்பிட முகவரி கொடுத்துள்ளேன்.”

அதைக் கேட்டதும் எனக்குள் மகிழ்ச்சி. தமிழில் பேசும் ஒருவரைச் சந்திக்கப் போகிறோமே! உடனே நண்பர் மதியழகனைப் பார்த்துச் சொன்னேன்.. “ரியூனியனில் தமிழில் பேசும் ஒருவரைச் சந்திக்கவில்லையே என்று கவலைப்பட்டீர்களே. நாளை தமிழில் பேசும் பேராசிரியரைச் சந்திக்கப் போகிறோம்.”

“அப்படியா? அவர் யார்?”

“ஈழத்தைச் சேர்ந்தவர். பெயர் சோமேஸ்வரன்.. ”இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வட்டுக்கோட்டையில் பிறந்தவர். யுத்தத்தின் காரணமாக 1985இல் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் தஞ்சம் புகுந்தார். 1992இல் ரியூனியனில் குடியேறினார். யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர் பிரெஞ்ச் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்.

தொடரும்...





# படித்ததும் பகர்வதும் 213



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வறுமை ஒழிப்பு!

வறுமை உலகின் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமான வடிவங்களில் பரவி வருவதை அவதானிக்க முடிகிறது. வறுமை நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து அனைத்து தரப்பினரின் கவனமும் ஈர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.



உணவு, உடை, உறைவிடம், சுகாதாரமான குடிநீர் பெறுதல், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப் பெறுதல் போன்ற வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்த நிலைமையே வறுமை எனப்படுகிறது. வறுமையினால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை காரணமாக, வறுமை விரும்பத்தகாத ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது.

பல நாடுகளில், முக்கியமாக வளர்ந்து வரும் நாடுகளில் வறுமை ஒழிப்பு என்பது ஒரு முக்கியமான இலக்காக இருந்து வருகிறது. வறுமைக்கான காரணம், அதன் விளைவுகள், அதனை அளப்பதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பான வாதங்கள், வறுமை ஒழிப்பைத் திட்டமிடுவதிலும், நடைமுறைப் படுத்துவதிலும் தாக்கத்தைக் கொண்டுள்ளன.

எல்லா சமயங்களும், அறநெறிக் கொள்கைகளும் வறுமையை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைச் சிறப்பித்துக் கூறத் தவறவில்லை. வறுமை தனி மனிதனையோ, அல்லது குழுக்களையோ பாதிக்கக் கூடும். வறுமையில் உழல்வது ஒருவரின் மூளைத் திறனை பாதிப்பதாக இருக்கின்றது என இந்தியா, அமெரிக்கா நாடுகளில் நடத்தப்பட்ட இரண்டு ஆய்வுகளின் முடிவுகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. வறுமை வளர்ந்துவரும் நாடுகளில் மட்டுமின்றி வளர்ந்த நாடுகளிலும் கூட பல்வேறு வகையான சமுதாயப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகின்றது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

எமது நாட்டில் வறுமையின் காரணமாக அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாது தவிப்பவர்கள், கடன் தொல்லைகளில் மூழ்கியிருப்பவர்கள், தம் பிள்ளைகளின் கல்வித் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க முடியாமல் தவிப்பவர்கள் என பல வழிகளிலும் ஏழைகள் துன்பப்படுவதைக் காண முடிகிறது.

வறுமையில் வருத்தப்படும் இவர்களுக்கு உதவிக் கரம் நீட்டிட வசதி படைத்தவர்கள் முன்வர வேண்டும். தாராளமாக வாரி வழங்கி அவர்களது வாழ்க்கையை வளமாக்கிட முற்சிக்க வேண்டும். மனிதாபிமானத்தோடு மக்கள் நலன் பேணும் நல்லவர்களாக நாம் மாற வேண்டும். இவ்வாறு செய்வோருக்கு இறையோனின் நல்லருள் மழை நிறைவாகப் பொழியும் என்பதில் சந்தேகமில்லை.

## சிந்தனை செய் மனமே

### அப்பாவும் மகளும்!

தன் மகளை சில விசயங்களுக்காக அடிக்கடி கடிந்து கொள்ளும் அப்பாவிடம் மகள் கேட்டாள். “ஏனப்பா என்னை இப்படி கண்டிப்புடன் நடத்துகிறீர்கள்? என்னை கொஞ்சம் சுதந்திரமாக விடலாமே”

அப்பாவுக்கு அது சற்று கஷ்டமாகவே இருந்தது. ‘இதை எப்படி இவளுக்கு விளக்கிச் சொல்லிக் கொடுப்பது’ என யோசித்தார். ஆனால் அப்போது அவர் எதுவும் சொல்லவில்லை.

ஒரு நாள் அந்த மகள் தன் அப்பாவிடம் வந்து.



“அப்பா! நான் பட்டம் விட்டு விளையாடப் போகிறேன், நீங்களும் கூட வாங்களேன்” என அப்பாவை அழைத்துக் கொண்டு வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்றாள்.

பட்டத்தை நூலில் கட்டி பறக்க விட்டு மகிழ்ந்தாள். அப்படி மகிழ்ந்திருக்கும் வேளையில் அப்பா மகளிடம் கேட்டார். “பட்டம் மேலே பறக்க, பறக்க அழகாய் இருக்கிறதுதான். ஆனால் அதன் விருப்பம் போல சுதந்திரமாக பறக்க முடியவில்லையே! அதற்கு தடையாய் இருப்பது என்னம்மா?” என்று கேட்டார்.

மகள் பட்டென பதில் சொன்னாள். “இந்த நூல் தான் அப்பா அதை தன் இஷ்டத்திற்கு போகவிடாமல் கட்டி வைத்திருக்கிறது” என்றாள்.

“அப்படியா!” என்று கேட்டு விட்டு அந்த நூலை அப்படியே அறுத்து விட்டார் அப்பா. பட்டமும் தன்னிச்சையாக அங்கும் இங்கும் பறந்தது. ஆனால் சற்று நேரத்திலேயே கிழிந்த காகிதமாய் கீழே விழுந்தது.

அப்போது அப்பா சொன்னார். “மகளே.. இந்த பட்டத்தை தன் இஷ்டபடி பறக்க விடாமல் அந்த நூல் தடுக்கவில்லை. நேரான வழியில், கட்டுப்பாட்டோடு இந்த பட்டம் பறந்து உயரங்களைக் கடக்க இந்த நூல் உதவியாகத்தான் இருக்கிறது. இதே போலத்தான் மகளே! உன் அப்பாவாகிய நானும் இந்த நூல் போலத்தான். நீதான் அந்த பட்டம். நீ என்னுடைய பேச்சை கேட்டு அதன் படி நடந்தால் என் பாதுகாவலுடன் நீ உயர உயரப் பறக்கலாம். அதை விட்டுவிட்டு உன் இஷ்டப்படி மட்டுமே வாழ நினைத்தால் அந்த பட்டம் கிழிந்து காகிதம் ஆனதுபோல உன் வாழ்க்கையும் சீரழிந்துவிடும் மகளே!” என்றவர் மேலும் சொன்னார்,

"மகளே! இப்போது நீ புரிந்திருப்பாய். நான் ஏன் உன்னை கண்டிக்கிறேன் என்று. நூலாகிய என்னை நீ அறுத்து விடாதே.” என்று சொல்லும்போதே மகள் தன் அப்பாவை கட்டி அணைத்துக் கொண்டாள்!

ஆம்! உங்களுக்கு இனிமையாய் தோன்றுகின்ற வழிகள் ஏராளம் இருக்கலாம்.. ஆனால் சரியான வழி காட்டல் இல்லாவிட்டால் அவற்றின் முடிவு விபரீதமாக இருக்கலாம். எனவே பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்வு சிறப்பான வாழ்வாக அமையும். அப்பா அம்மாவின் அன்பும், கண்டிப்பும் இருந்தால் பிள்ளைகளின் வாழ்வு நிச்சயமாக இனிமையாக அமையும்

## புது வரவு

### அஷ்ஃபா அஷ்ரஃப் அலியின் ‘முதல் மழைத்துளிகள்’

புத்தளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அஷ்ரஃப் அலி 1970 களில் கவிதைத் துறைக்குள் நுழைந்தவர். ஆரம்பத்தில் புதுக் கவிதைகளை எழுதிய அவர் பின்னர் யாப்பிலக்கணத்தைக் கற்றுத் தேர்ந்து மரபுக் கவிதைகளை எழுதத் தொடங்கியுள்ளார். நாளடைவில் யாப்பிலக்கணம் தழுவிய கவிதைகள் அவருக்கு வாலாகியமாகிவிட்டதெனலாம். வெண்பா, கலிப்பா, அகவல், வஞ்சிப் பாக்களில் தொடக்கி தாழிசை, துறை, விருத்தமெனத் தொடர்ந்து கும்மி, சிந்து முதலாய யாப்புக்களில் கவிதைகளை எழுதிய அவர் புதுக்கவிதை, குறும்பா, ஹைக்கூ ஆகிய வடிவங்களைக் கையாண்டும் கவிதைகளை ஆக்கியுள்ளார்.



‘முதல் மழைத்துளிகள்’ என்ற மகுடத்தில் நம் கரங்களில் தவழும் இத்தொகுப்பில் பெருமளவில் இடம் பெற்றிருப்பவை யாப்பிலக்கணத்தில் கூறப்பட்டுள்ள பாவகைகளிலும் பாவினங்களிலும் பெரும்பாலானவற்றைக் கையாண்டு கவிதைகளை ஆக்கித் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ள கவிஞர் புதுக்கவிதை, ஹைக்கூ, குறும்பா வடிவங்களில் ஆன கவிதைகளையும் இந்நூலில் இணைத்துள்ளார். என்று பிரபல எழுத்தாளர் கலாபூஷணம் ஜவாத் மரைக்கார் தெரிவித்துள்ளார்.

“கவிஞர் அஷ்ஃபா அஷ்ரஃப் அலியின் முதல் மழைத்துளிகள் புதிய வரவு புத்தளத்தைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாத புத்தம் புது வரவு. பெயருக்கு ஏற்ப ‘முதல் மழைத் துளிகள்’ கவிதைகளின் துளிகள்தான். செய்யுள் வகை இலக்கணக் கவிதைகளில் இருந்து ஹைக்கூ புதுக்கவிதை வரை எல்லா கவிதை வகைகளும் செய்யுள் பாணிகளும் மூலம் தனது ஆர்வத்தையும், முயற்சிகளையும் அஷ்ரஃப் அலி வெளிப்படுத்தியுள்ளார்.” என பேராசிரியர் எம்.எஸ். எம். அனஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலிலிருந்து ஒரு ‘இன்னிசை வெண்பா’ மாதிரியாக

நன்றேசெய் நானிலத்தில் நல்வாழ்வு வாழ்வதெனில்
அன்றே லமர்ந்துநீ ஆங்குறங்கு ! தன்னார்வத்
தொண்டாற்றுந் தொண்டர்க்குத் தொல்லையினைத் தராமல்
ஒன்னா திருந்தே உழல்!

இந்நூல் தரும் ஒரு ‘அறுசீர் விருத்தம்’

மாதும் மதுவும் மனத்தில் நிறைத்து
மகிமை யிழக்காதே
சூதும் களவும் தொடர்வார் வழியின்
சுவடு மிதிக்காதே
தீதாம் எனநீ தெரிந்தா லெதையும்
திரும்பிப் பாராதே
ஓதும் மறைகள் உணர்த்துவ தெல்லாம்
உயர்வா யிதைத்தானே!

நூல்: முதல் மழைத்துளிகள் (கவிதைகள்), ஆசிரியர்: கவிஞர் அஷ்ஃபா அஷ்ரஃப் அலி, முதற்பதிப்பு: ஜூன் 2024, பக்கங்கள்: X + 174, விலை: ரூபா. 850/=, தொடர்புகளுக்கு: 0776048589

## நலமே வாழ்வோம்

### மீண்டும் டெங்கு காய்ச்சல்

நாட்டில் தற்போது நிலவுகின்ற மழையுடன் கூடிய கால நிலையால் மீண்டும் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் காணப்படுவதாகவும், அதனால் டெங்கு நோய் மீண்டும் தலைதூக்கும் அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் கடந்த வாரம் வரை 40,657 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

"ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் மொத்தம் 1,200க்கும் மேற்பட்ட நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும்,




பெரும்பாலான நோயாளர்கள் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்றும், கண்டி, இரத்தினபுரி, மாத்தறை, காலி, மாத்தளை மாவட்டங்களிலும் அதிக தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மழைக் கால நிலைமையால் எதிர்காலத்தில் டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாமெனவும் கூறப்பட்டுள்ளது.

இப்போதைய காலநிலையைக் கருத்தில் கொண்டு, தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் செயல்முறைகளை எல்லோரும் பின்பற்றுதல் புத்திசாலித்தனமாகும்.

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### வீரப் பலகாரங்கள்



ஒரு முறை சுப்பிரமணிய பாரதியார் பொதுக்கூட்டம் ஒன்றில் வீராவேசத்துடன் பேசி முடித்தார். அங்கு கூடியிருந்த மக்கள் அவரது பேச்சை இரசித்துக் கேட்டனர். கூட்ட முடிவில் அந்தக் கூட்ட அமைப்பாளர் பாரதியாரிடம், "தங்களுக்கு என்ன பலகாரம் வேண்டும் ஐயா? சொல்லுங்கள். பையனை அனுப்பி வாங்கி வரச் சொல்கிறோம்." என்றார். உடனே பாரதியார், "எனக்கு வீரப்பலகாரம் வேண்டும் வாங்கி வரச் சொல்லுங்கள்" என்றார். "வீரப்பலகாரமா? அது என்ன? நாம் இதுவரை கேள்விப்படாததாக இருக்கிறதே?" என்று கூட்ட அமைப்பாளர் குழம்பிப் போனார். அங்கிருந்தவர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு விழித்தனர். உடனே பாரதியார், "நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லையா? பஜ்ஜி, மெதுவடை, இட்லி போன்ற பலகாரங்கள் எல்லாம் கோழைப் பலகாரங்கள். பக்கோடா, முறுக்கு, சேவு போன்ற பலகாரங்கள் வீரப் பலகாரங்கள். இவைகளை வாயில் போட்டதும் "நொறுக்கு நொறுக்கு" என்றும் "கடக்கு முடக்கு" என்றும் பல்லுக்கு வீரமான வேலை கொடுக்கும் அல்லவா? எனவே இவை வீரப் பலகாரங்கள்தனே?" என்றார்.

## நொறுக்குத் தீனி

### தலை சிறந்த தம்பதிகள்



கணவன் மனைவியை விட உயர்வாக இருக்க வேண்டிய மூன்று விஷயங்கள்: வயது, அறிவு, பணம். மனைவி கணவனை விட உயர்வாக இருக்க வேண்டிய ஐந்து விஷயங்கள்: அன்பு, சுத்தம், திட்டமிடல், பொறுமை, பிரார்த்தனை. கணவன் மனைவி இருவரும் சமமாக இருக்க வேண்டிய மூன்று விஷயங்கள்: புரிதல், சகித்தல், மதித்தல். இவற்றைப் புரிந்து கொண்டு வறுமையில், துன்பத்திலும் கணவனை நேசித்து பராமரிக்கும் பெண்ணும், முதுமையில் மனைவியை நேசித்துக் காக்கும் ஆணும் தாம் இந்த உலகின் தலை சிறந்த தம்பதிகள்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

மொழிவாணனின் 04

என்னவோ என்னவோ என்வாசம் நானில்லை

# வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னரும்,

சுரங்கவிற்கு வலி அதிகமாகவே இருந்தது!

காலிலும் கையிலும் பெரிய பிளாஸ்டர் போடப்பட்டிருந்ததனால்,

அவனால் அசையக் கூட முடியவில்லை!

இதனால்,

மிகவும் சிரமப்பட்டான்.

அன்று இரவு முழுவதும் அவன் தூக்கமின்றி மிகவும் அவஸ்தைப்பட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

மாற்றிக் கட்டுவதற்கு ஒரு சாரத்தையோ,

போர்த்திக் கொள்வதற்கு ஒரு போர்வையையோ பெற்றுக் கொள்வதற்குக் கூட அவனால் முடியவில்லை!

என்னதான் பிரச்சினைகள் ஏற்பட்டாலும்,

வீட்டிற்கு மட்டும் தெரியப்படுத்துவதில்லை என்ற உறுதியான முடிவுடன் தான் அவன் இருந்தான்.

தன்னுடைய நண்பர்கள் யாருக்காவது அறிவித்தால்,

அவர்கள் உடனே வந்து உதவி செய்வார்கள்.

ஆனால்,

அதற்கும் வழியில்லை

அவன் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனையில் வசதிகள் மிகவும் குறைவாகவே இருந்தன

இவ்வளவு வசதிகள் வந்துவிட்ட பிறகும்,

அந்தப் பகுதி இன்னமும் பின் தங்கிய பகுதியாகவே இருந்தது.

இனவாதம், மதவாதம் தொடர்பாக தனது கருத்துக்கள் எப்படி இருந்தாலும்,

தமிழ்ப் பெண் ஒருத்திதான் அவனைக் காப்பாற்றியிருக்கிறாள்!

ஆனாலும்,

எதிர்பாராத விதத்தில் தான் அவள் அந்த உதவியைச் செய்திருக்கிறாள்.

உண்மையில்,

பார்கவியைப் பற்றி நினைக்கும் போது,

அவனுக்கு வியப்பாக இருந்தது,

தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒரு பெண் பயங்கரவாதியைப் போலவே அவளுடைய செயல்கள் எல்லாம் இருந்தன!

அவளைப் பற்றிய சிந்தனையிலே இருந்த அவனுக்கு,

தலைவலி இன்னும் அதிகமாகியது,

அடுத்து,

விழிகளை மூடிக்கொண்டு அப்படியே கட்டிலில் சாய்ந்தான்!

காலிலும் கையிலும் வலி அதிகமாகவே,

அவனை அறியாமலேயே

மெல்லச் சிணுங்கினான்.

அப்போது,

அவனது நெற்றியிலே யாரோ கை வைப்பதைப் போல் தோன்றியதும்,

திறக்க முடியாமல்

மிகவும் சிரமப்பட்டு,

விழிகளைத் திறந்தான் சுரங்க!

எதிரில்,

மரகதம்.

“ஐயையோ.. என்ன தம்பி இது இப்படி சுடுது டொக்டர் இன்னும் மருந்து குடுக்கல்லியா?” பதறிய படியே கேட்டாள் மரகதம்.

“ம் குடுத்தாங்க!” மெல்ல முணங்கினான் சுரங்க.

“கொஞ்சம் எழும்புங்க?” சொல்லியபடியே,

அவனை மெல்லத்தூக்கி கட்டிலில் அமர வைத்தாள் மரகதம்.

அவள் கொண்டு வந்திருந்த சட்டையை,

மிகவும் சிரமப்பட்டு அவனுக்குப் போட்டு விட்டாள்.

“இதுல சாரம் இருக்கு அதையும் போட்டுக் கொள்ளுங்க தம்பி!” சாரத்தை அவன் மடியில் வைத்தாள்.

சுரங்கவைப் பார்த்துவிட்டு வரும் வரை,

வார்ட்டுக்கு வெளியில் காத்திருந்தாள் பார்கவி.

தான் எங்குபோனாலும் அவளையும் தன்னுடனேயே கூட்டிச் செல்வதுதான் மரகதத்தின் பழக்கமாக இருந்ததனால்தான்,

இங்கேயும் வந்தாள் பார்கவி.

இல்லையென்றால் இந்தப் பக்கம் தலைவைத்துக் கூடப் படுத்திருக்கமாட்டாள் பார்கவி!

வெளியே ஓடிவந்த மரகதம்,

“தம்பிக்கு சரியான காச்சல் மேலெல்லாம் நெருப்பு மாதிரி சுடுது நான் போயிட்டு நர்ஸ்கிட்ட சொல்லிட்டு வாறேன்!” சொல்லியபடியே, நர்ஸ் இருந்த அறையை நோக்கி விரைந்து ஓடினாள் மரகதம்.

அவள் மறைந்ததும்,

மெல்ல நடந்துவந்த பார்கவி,

கொஞ்சம் தள்ளி நின்று,

உள்ளே எட்டிப்பார்த்தாள்.

அப்பாவின் சாரத்தையும் சட்டையையும் அணிந்து கொண்டு கட்டிலில் சாய்ந்திருந்தான் சுரங்க.

அந்த நிலையிலும்,

அவன் ரொம்பவும் அழகாக இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

ஏதோ ஒரு காந்த சக்தி அவனிடம் இருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

வாசலில் நின்று,

தன்னையே பார்த்துக் கொண்டிருந்த பார்கவியை

சுரங்கவும் கவனித்தான்

ஆனாலும்,

அவளுடைய வீட்டுக்கு வந்த நேரத்திலிருந்து,

தனக்கு எதிராகவே செயல்பட்ட அவளை,

அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை!

சிறிது நேரத்திற்குப் பிறகு,

அம்மாவுடன் வந்த நர்ஸ்,

சுரங்கவுக்கு ஏதோ மாத்திரைகளைக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

“அம்மா இனி நீங்க வீட்டுக்குப் போங்கம்மா எனக்காக நீங்க கஷ்டப்பட வேணாம்!” என்றான் சுரங்க.

“கஷ்டத்துல விழுந்த ஒருவருக்கு உதவி செய்ரதுல என்ன தம்பி கஷ்டம் இருக்கப் போவுது ம் தம்பி உங்களுக்கு சாப்பாடு கொண்டு வந்திருக்கேன் நான் தீத்திவிடவா?” அன்புடன் கேட்டாள் மரகதம்.

அவள் இப்படிக் கேட்டதும்,

சுரங்கவின் விழிகள் கலங்கி,

நீர்த்துளிகள் வடிந்தோடியது.

“எதுக்கம்மா உங்களுக்கு வீண் சிரமம் நான் சாப்பிட்டுக் கொள்றேன் நீங்க போங்கம்மா!”

“சரி தம்பி அப்பநான் வாறேன் சொல்லியபடியே அங்கிருந்து வெளியேறினாள் மரகதம்.

வருகின்ற வழியில்,



சுரங்கவைப்பற்றியே பேசிக்கொண்டு வந்தாள் மரகதம். இது, பார்கவியின் உள்ளத்தில் ஒருவித வெறுப்பையே ஏற்படுத்தியது.

“போதும் போதும் அந்த ஆளைப்பத்தியே பேசிக்கிட்டிருக்காம வேற எதைப்பத்தியாவது பேசுங்க!” ஆத்திரத்துடன் கத்தினாள் பார்கவி.

“நீ ஏன்டி இவ்வளவு மோசமா நடந்துக்கிற அந்தத்தம்பி உனக்கு என்ன குத்தம் செஞ்சுது?”

“எனக்கு ஒன்னும் செய்யாட்டியும் அவன் சிங்களவன் என்னோட அப்பாவ கொன்றவர்களோட கூட்டாளி அதனால அவன் எனக்கு எதிரி!”

“இங்க பாரு பாரு உனக்கு ஒன்னு தெரியுமா நம்மோட எதிரிகள நாமும் எதிர்த்துக்கிட்டே இருந்தா நாம நிம்மதியாக வாழவே முடியாது. எந்த நேரம் என்ன நடக்குமோங்கிற பயத்தோடத்தான் வாழணும்!

மரகதம் இப்படிச் சொன்னதும்,

பார்கவி அவளை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

“நீங்க இப்படி மாறுவீங்கன்று நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கல்ல அம்மா!”

“பாரு வைரத்த வைரத்தாலதான் அறுக்கலாம் ஒத்துக்கறேன் ஆனா நெருப்ப நெருப்பால அணைக்க முடியுமா? தண்ணிய ஊத்தித்தானே அந்த நெருப்ப அணைக்கிறோம்.

அம்மா லேசுப்பட்ட அம்மா இல்லேன்னு அவளுக்குப் புரிந்தது!

அவங்க எங்க அடிக்கிறாங்கண்ணும் அவளுக்குப் புரிந்தது.

அதன்பிறகு

அவள் எதுவுமே பேசவில்லை.

வீட்டிற்கு வந்த பிறகும்,

பார்கவியின் மனம் ஒரு நிலையில் இல்லை!ஏதோ ஒருவித கலவரம்.

அது என்னவென்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை!

அம்மாவின் மனமாற்றமும் அதற்கு ஒரு காரணமாக இருக்குமோ?

எது எப்படி இருந்தாலும்,

விரைவில் ஏதோ ஒன்று நடக்கப் போவதை மட்டும் அவள் உள்ளுணர்வு உணர்த்தியது!

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நான்காவது நாளில்,

சுரங்கவின் உடல் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தது.

இந்த நான்கு நாட்களும்,

ஆஸ்பத்திரிக்குச் சென்று அவனைப் பார்த்துவிட்டுத்தான் வந்தாள் மரகதம்

இப்போது,

மரகதத்திற்கு

சுரங்கவின் மீது இனம் புரியாத ஒருவித பாசம் ஏற்பட்டிருந்தது!

“அம்மா” என்று அவன் வாய்நிறைய அழைக்கும் அந்த அழைப்பில்,

அவள் உருகித்தான் போனாள்.

தனக்கு ஒரு ஆண் பிள்ளை இல்லாத குறையைத் தீர்ப்பதற்குத் தான் அவன் வந்திருக்கிறான் என்று அவள் உள்ளுணர்வு கூறியது!

தனது கணவன் கொலை செய்யப்பட்டபோது,

“இந்த இனத்தையே பழிவாங்குவேன்” என்று, அவள் சபதம் செய்தது என்னவோ உண்மைதான்.

ஆனால்,

இன்று என்ன நடந்திருக்கிறது.

இந்த சுரங்கவைப் பார்த்ததிலிருந்து,

அந்தப் பழிவாங்கும் உணர்வே அவளுக்கு மறந்துபோய் விட்டதே!

இப்போது,

பழிவாங்கத் துடிப்பது அவள் அல்ல,

அவள் மகள் பார்கவிதான்.

அவள் மனதை எப்படி மாற்றுவது என்றுதான் மரகதத்திற்குப் புரியவில்லை.

அன்று, ஐந்தாம் நாள்.

தோட்ட ஆபிஸில் அன்று அதிக வேலை இருந்ததனால்,

மரகதத்தால் ஆஸ்பத்திரிக்குப் போக முடியவில்லை!

இதனால்,

அவள் மெல்ல நடந்து,

பார்கவியின் அருகில் வந்தாள்.

“பாரு!” தாழ்ந்த குரலில் அவளை விளித்தாள்

“என்னம்மா?” நிமிர்ந்து அவளைப் பார்த்தாள் பார்கவி.

# சிறுவர் உலகம்

சுகந்தி



**அருளுடைமை: பொருள்நீங்கிப் பொச்சாந்தா ரென்பர்
அருள்நீங்கி அல்லவை செய்தொழுகு வார்**

**தெளிவுரை :**

*அருள் இல்லாதவராய் அறமல்லாதவைகளைச் செய்து நடப்பவர்களை, உறுதிப்பொருளாகிய அறத்திலிருந்து நீங்கித் தம் வாழ்க்கையின் குறிக்கோளை மறந்தவர் என்பார்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 136

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | | 07 | | 08 |
| 09 | 10 | 11 | | 12 | 13 |
| 14 | | 15 | 16 | 17 | |
| 18 | 19 | | 20 | | 21 |
| | 22 | 23 | 24 | | 25 |

பெயர் ..............................

வகுப்பு ..............................

தொலைபேசி இல ..............................

பாடசாலை பெயர் ..............................

வதிவிட முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

**(1) தொடர்ச்சியான மழை பெய்கின்ற காலப்பகுதியில், மலையகப் பிரதேசங்களில் ஏற்படுகின்ற ஆபத்தான இயற்கை அனர்த்தம் இது. மலையின் உயரப் பகுதியில் இருந்து பெருமளவு மணல் சரிந்து வந்து, கீழுள்ள நிலப்பகுதியை மூடிவிடுவதுண்டு. இதன் காரணமாக உயிரிழப்புகளும் உடைமைகளுக்குச் சேதங்களும் ஏற்படுவதுண்டு.**

**(9) மக்கள் அணிந்து கொள்கின்ற ஆபரணங்களில் தங்கத்துக்கு அடுத்தபடியாக பெறுமதிமிக்க உலோகம் இது.**

**(12) சமையல் பாத்திரங்களில் இதுவும் ஒன்று. அக்காலத்தில் களிமண்ணினால் தயாரித்துக் கொண்டார்கள். இக்காலத்தில் உலோகப் பாத்திரங்களே பாவனையில் உள்ளன.**

**(15) மாணவர்களாகிய நீங்கள் அறிவும், நல்லொழுக்கமும் கொண்டவர்களாக உயர வேண்டுமானால் இதுதான் உங்களுக்கு அத்தியாவசியம்.**

**(18) இலட்சங்களின் நூறு மடங்கு. (தலைகீழான சொல்)**

**(22) சில பிரதேசங்களில் சேற்றுநிலங்களில் வாழ்கின்ற புழு போன்ற சிறு உயிரினம் இது. விலங்குகளின் உடலில் ஒட்டிக்கொண்டு அவற்றின் இரத்தத்தை உறிஞ்சி உயிர்வாழும் உயிரினம். (தலைகீழான சொல்)**

### மேலிருந்து கீழ்

**(1) விவசாயத்தில் இந்த உபகரணம் பிரதானமானது. மண்ணை பண்படுத்துவதற்கும், வரம்பு அமைப்பதற்கும், குழிகள் வெட்டுவதற்கும் தேவையான உபகரணம்.**

**(4) இல்லாதோருக்கு வாரி வழங்கும் வள்ளலென்று போற்றப்படும் அக்கால அரசன் இவன். இந்தியாவின் பறம்பு நாட்டை ஆட்சிசெய்த மன்னன். (தலைகீழான சொல்)**

**(8) தரைவாழ் விலங்குகளில் உருவத்தில் மிகப்பெரியது இம்மிருகம்.**

**(11) மட்பாண்டத் தயாரிப்புக்கான மூலப்பொருள். (தலைகீழான சொல்)**

**(12) பாவச்செயல்கள் புரிபவரை இவ்வாறு குறிப்பிடலாம்.**

**(16) முதுகில் மூன்று கோடுகள் கொண்ட பாலூட்டி உயிரினம். எங்கும் காணக்கூடிய உயிரினம். (தலைகீழான சொல்)**

**(19) மழை பெய்யாத வரண்ட காலப் பகுதியைக் குறிக்கும் சொல்.**

**(21) மனிதர்களில் பலர் செய்த நன்றியை மறந்து விடுவதுண்டு. ஆனால் இம்மிருகமோ நன்றி மறக்காமல் வாலை ஆட்டிக் கொண்டே நம்மைத் தொடரும்.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 135

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. இறால் 04. மாரி 07. கலை 10. வலை
13. கவி 18. அன்னம் 22. முதலை

**மேலிருந்து கீழ்**

01. புறா 04. மாலை 07. கலைஞன்
09. முக்கனி 12. குடம்பி 18. அலை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 134

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ.எப். அலீனா**
தரம் 09B, க/ பதிஉத்தீன் மகளிர் வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன். ரம்புக்கன வீதி, கலகெதர.

**2. பரீரா ஹசன்**
தரம் 06, பா. முஸ்லிம் மகளிர் கல்லூரி,
இல. 34, டிவாஸ் லேன், கிரான்பாஸ் வீதி, கொழும்பு 14.

**3. எம்.ஏ. ஆக்கிபா சைனப்**
தரம் 08, அலிப் சர்வதேச பாடசாலை, தர்கா நகர்,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**4. ஆர். ஸம்றக்ஷா**
தரம் 02C, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,
இல. பொற்கொல்லர் வீதி, சங்கத்தானை.

**5. எம்.ஏ. முஹன்னித்**
தரம் 08, அறபா வித்தியாலயம்,
இல. 170A, ஆர்.டீ.எஸ். வீதி, அட்டாளைச்சேனை 08.

குறுக்ெகழுத்துப் போட்டி இல. 136
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# புலரும் புதிர்

இராமபுரம் என்ற ஊரில் நரசிம்மன் சுஜாதா தம்பதியினருக்கு மகனாக பிறந்தவன் தான் அருண். அவன் வீட்டின் ஒரே பிள்ளை, திறமையான மாணவன். பெற்றோர் திருநெல்வேலியில் வாடகை வீடொன்றில் குடி பெயர்ந்தனர். அங்கு பிரபல பாடசாலை ஒன்றில் அவனை சேர்த்தனர்.

இராமபுரத்தில் கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்து வந்த அருணுக்கு தனியாக வந்தது பெருங் கவலையாகவும் சோர்வாகவும் இருந்தது. பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்வதால் அவனுடன் கதைப்பதற்கு யாருமே இல்லை. அருணின் அப்பா, அவன் பிரபலமான பாடசாலையில் கல்வி கற்பதை பெருமையாக கொண்டார். நரசிம்மன் ஒழுக்கத்தில் கண்டிப்பானவர். அருண் பாடசாலை விட்டு வரும்போது அவன் சட்டையில் சிறு தூசு படிந்திருந்தாலும் கூட திட்டுவார். அவர் சொல்லும் நண்பர்களுடன் தான் பழக வேண்டும். ஆடைகளும் அப்பா விரும்புவதை தான் அணிய வேண்டும். அவன் விரும்பி கேட்பது கிடைப்பதில்லை.

தரம் மூன்றில் கல்வி கற்கும் அவன் இவற்றை பெரிதாக பொருட்படுத்தவில்லை. பருவ வயதை அடைந்த போது அப்பா சொல்லும் எல்லா விடயங்களும் அவனுக்கு வெறுப்பையே ஏற்படுத்தியது. தரம் ஒன்று முதல் தோழனாக இருந்து வருபவன் தான் சுரேஷ். சுரேஷின் வீட்டில் அவன் மூத்தப்பிள்ளை அவனுக்கு ஒரு தம்பி, தங்கைகள் என்று உடன்பிறப்புகள் இருந்தனர். அருண் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அவன் வீட்டுக்கு செல்வது வழக்கம். அருணின் அப்பா தான் அவனை அழைத்துச் சென்று விளையாடி முடித்தபின் கூட்டி வருவார். அவ்வளவு கண்ணுங்கருத்துமாக அருணைப் பாதுகாத்தார். அவனுக்கு இது பிடிக்கவில்லை.

ஒரு நாள் தனது மனக் கவலைகளை சுரேஷிடம் கூறினான். "சுரேஷ், உனக்கு வீட்டில் இருக்கும் சுதந்திரம் எனக்கில்லடா, நீ தனியாகத் தானே எங்க வீட்டுக்கு வருகிறாய் போகிறாய் எனக்கு அப்படியில்லடா" என்று வேதனைப்பட்டான்.

அன்று அருண் வழமைப் போல பாடசாலைக்குச் சென்றான். பாடசாலை ஒழுக்காற்றுக் குழுவால் அருணை அழைத்து 'உங்களை மாணவத் தலைவனாக தேர்ந்தெடுத்துள்ளோம். இதற்குக் காரணம் உங்கள் படிப்பு மட்டுமல்ல உங்களின் ஒழுக்கமும் தான்" என்று ஆசிரியர்கள் கூறினார்கள். அருண் மிகவும் சந்தோசப்பட்டான். எனது அப்பா சொல்வது போல இருந்ததாலோ என்னவோ எனக்கு இப்படிக் கிடைத்திருக்கிறது என்று அவனின் உள்மனது கூறியது. ஆனாலும் அவன் அதை வீட்டில் காட்டிக் கொள்ளவில்லை.

இவ்வாறு ஒரு வாரம் கழிந்தது. அருணின் நண்பன் சுரேஷ் ஒரு வாரமாக பாடசாலைக்கு வரவில்லை விசாரிப்பதற்காக வீட்டுக்கு தொலைபேசி எடுத்து கதைத்தான். சுரேஷின் அம்மா, 'சுரேஷ் சுகவீனமுற்று இருப்பதாக தெரிவித்தார்". அன்று மாலை வேளையில் திடீரென்று சுரேஷின் அம்மாவும் அப்பாவும் அருணின் வீட்டுக்கு வந்தனர்.

"சுரேஷை நாம் சுதந்திரமாக விட்டது தப்பாப் போச்சு. நாம் அவனை கவனிக்காமல் விட்டோம். அவன் சில கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து போதைக்கு அடிமையாகி உள்ளான்" என்று தேம்பித் தேம்பி அழுதனர். 'சுரேஷை நாம் கண்டிக்கவில்லை என்று வருந்தினர்.

இதையெல்லாம் ஓர் ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருந்த அருண் நான் எனது அப்பாவைப் பற்றி தப்பாக எடை போட்டு விட்டேனே.

அப்பா என்னை கண்டித்தது நான் தவறான வழியில் செல்லக் கூடாது என்பதற்காகவே என்று நினைக்கும் போதே அவன் கண்கள் கலங்கி விட்டன.

அப்பாவை கட்டியணைத்து தேம்பித் தேம்பி அழுதான். என்னை மன்னித்து விடுங்கள், "நான் உங்களை தப்பாக புரிந்து கொண்டேன் அப்பா". என்றான் அருண்.

பொற்றோரின் கண்டிப்பும் கவனிப்பும் பிள்ளைகளை நல்வழிப்படுத்தவே.

**எம். என். அயான் அஹமட்...**
தரம் 10, (தமிழ்ப் பிரிவு),
ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு.

# இவ்வார மழலை



எஸ். அஷேலி செபினா

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## சிறுவர் சித்திரங்கள்





SAALIHA FAHIM
GRADE 5A, K/ BADI - UDIN MAHMUDH GIRL'S COLLEGE, KANDY

# கரடிகள் பல மாதங்கள் தூங்குவதற்கான காரணம்?

கரடிகள் தூங்கும் போது அவற்றின் இதயம் நிமிடத்துக்கு 10 முறை மட்டுமே துடிக்கிறது. இது சாதாரண உறக்கத்தைக் கடந்த ஒருவித ஓய்வு நிலை. அதனால் தான் கரடிகள் பொதுவாக மிக நீண்ட காலம் தூங்கக்கூடியவையாக காணப்படுகின்றன. பழுப்பு கரடிகள் 8 மாதங்கள் வரைக் கூட தூக்கத்தில் இருக்கும்.



இத்தனை நீண்ட நாட்கள் ஒரு மனிதன் தூங்கினால் எலும்பு வலுவிழந்து, தோல் வறண்டு, தசைகள் சிதைந்து மோசமான நிலை ஏற்படும். ஓலே ஃப்ரோபர்ட் என்ற இருதயநோய் நிபுணர் மற்றும் கரடி ஆராய்ச்சியாளர்களே இதை கண்டு பிடித்துள்ளனர்.

கரடிகள் இரத்தத்தில் காணப்படும் HSP47 என்ற புரதம் கரடிகள் உறங்கும் போது எந்த நோயும் இல்லாமல் பாதுகாத்து கொள்கிறது.

இரத்த அணுக்களின் மீது இருக்கும் இந்த புரதம் இரத்தம் உறைதலுக்கு உதவுகிறது. கரடிகள் தூங்கும் போது இந்த புரதம் இரத்தத்தில் குறைந்துவிடுகிறது.

இந்த புரதத்தை மனிதர்களுக்கும் பயன்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

தொகுப்பு - **ஹரி**

# நிலவில் முதல் மனிதன்

அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் பனிப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் விண்வெளி ஆய்விலும் கடுமையான போட்டியை இரு நாடுகளும் உருவாக்கி வந்தன.

முதல் விண்வெளி பயணத்தை ரஷ்யா நிறைவேற்றியதும், அமெரிக்கா வெகுண்டது. எப்படியேனும் ரஷ்யாவை மிஞ்ச வேண்டும் என்ற அடிப்படையில் நிலவுக்கு மனிதனை அனுப்பி வைக்க முயற்சித்தது. தீவிரமான முயற்சியில் பல கட்ட சோதனைகளுக்குப் பின்னர், 1969ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 16 ஆம் திகதி அப்பல்லோ 11 என்ற விண்வெளி ஓடத்தை அமெரிக்கா ஏவியது. நான்கு நாட்கள் பயணம் செய்த அந்த விண்வெளி ஓடம், அதே ஆண்டு ஜுலை 20ஆம் திகதி சந்திரனில் இறங்கியது. நிலவில் இறங்கும் இந்தத் திட்டத்தில் கட்டளை அதிகாரியாக நீல் ஆம்ஸ்ட்ராங்கும், கட்டளை விமானியாக மைக்கேல் காலின்சும், மற்றுமோர் அதிகாரியாக எட்வின் ஆல்ட்ரினும் சென்றனர்.

மைக்கேல் காலின்ஸ் விண்வெளி ஓடத்திலேயே தங்கிக்கொள்ள, ஆம்ஸ்ட்ராங்கும், ஆல்ட்ரினும் 'ஈகிள்' எனும் சிறிய ரக ஓடத்தில் சந்திரனில் ஜுலை 20ஆம் திகதி இறங்கினர். பின்னர் 6 மணி நேர தாமதத்துக்குப் பிறகு ஜுலை 21ஆம் திகதி நிலவில் இறங்கி உலகையே வியக்க வைத்தனர். ஆல்ட்ரின் சற்றே தயங்க, முந்திக்கொண்ட ஆம்ஸ்ட்ராங் நிலவில் கால் வைத்த முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றார்.

மனிதன் நிலவில் கால் வைத்த வரலாற்று மகத்துவம் அன்று தான் நடந்தது.

# 'மந்திர கல்'

துருக்கியிலுள்ள 'மந்திர கல்' சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் அதிசயமாக காணப்படுகிறது.

இந்த கல் இருக்கும் பழங்கால கோவில், ஹிட்டிட் பேரரசின் தலைநகரான ஹட்டுசாவின் பகுதி என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதே சமயம் அப்போது ஆட்சியில் இருந்த ஹிட்டியர்கள் இனம் இந்த கல்லினை சிலைக்கான தளமாக வைத்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

மத்திய துருக்கியில் ஒரு பழங்கால கோவிலின் அருகில் மென்மையான பச்சை பாறை, இந்த பாறையில் மந்திர சக்திகள் இருப்பதாக ஆதிகாலத்தில் இருந்து இன்றும் நம்பப்படுகிறது.



உள்ளூர் வாசிகளின் கூற்றுப்படி இது மனிதர்களின் கனவுகளை நிறைவேற்றி வைக்கும் கல் என்று சொல்கின்றனர். இந்த கல்லினை 'ஹட்டுசா' என அழைக்கின்றனர். இதுவரை இந்த கல்லின் உண்மையான வரலாறு குறித்து கண்டறியப்படவில்லை. ஆனால் ராஜா அமரும் சிம்மாசனமாகவோ அல்லது பலிபீடமாக அமைந்திருக்க வாய்ப்பு உள்ளதாகவும் கூறுகின்றனர்.

ஹிட்டியர்கள் அதிக ஆன்மிக நம்பிக்கையும் வானியல் அறிவும் உள்ளவர்களாக இருந்திருக்கலாம் என கணிக்கப்படுகிறது. அவர்கள் சூரியனின் திசையில் நேரத்தை அளவிட இந்த கல்லை பயன்படுத்தி இருக்கலாம்.

இந்த பச்சை நிற கல்லின் எடை சுமார் 1000 கிலோ கிராம் என கூறப்படும் நிலையில் இந்த கல் அருகில் உள்ள டாரஸ் மலைகளில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சில நிபுணர்கள் ஊகிக்கின்றனர்.

ஹட்டுசா கல் குறித்த இந்த தகவல்கள் எல்லாம் யூகங்கள் மட்டுமே.

இந்த கல் எப்படி வந்தது என்பதற்கான வரலாற்று ரீதியிலான ஆதாரங்கள் இல்லை.

# சொக்லேட் மலைத் தொடர்

பிலிப்பைன்ஸில் உள்ள 'சொக்லேட் ஹில்ஸ்' கட்டாயம் பார்க்க வேண்டிய இடம். இயற்கை அழகில் உள்ள இந்த மலைத்தொடர் கோடைக் காலத்தில் சொக்லேட் போல மின்னுவதை காண ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

பிலிப்பைன்ஸில் உள்ள போஹோல் என்ற இடத்தில் தான் இந்த சொக்லேட் ஹில் உள்ளது. பிலிப்பைன்ஸின் மூன்றாவது தேசிய புவியியல் நினைவுச்சின்னமாகவும் இது உள்ளது. இந்த குட்டித் தீவின் மையத்தில் அமைந்துள்ள சாய்ந்த மலைகள், வறண்ட காலநிலை காரணமாக சொக்லேட் நிறமாக காணப்படுமாம்.

இந்த சொக்லேட் ஹில்ஸ் சுமார் 20 சதுர மைல்களுக்கு மேல் பரந்து விரிந்துள்ளது. இங்கிருக்கும் மலைத்தொடர்களில் உள்ள தாவரங்கள் சுற்றுலாவாசிகளை கவரும் வகையில் உள்ளன.

2023 மே மாதம் 24ஆம் திகதி அன்று, யுனெஸ்கோ இதை பிலிப்பைன்ஸின் முதல் புவிசார் பூங்காவாக அறிவித்தது. ஏறக்குறைய 23 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ப்ளியோசீன் காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சுண்ணாம்புக் கற்கள் அரிக்கப்பட்டதன் விளைவாக இந்த மலைகள் உருவாகியிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மேலும் இந்த இடத்தில் அதிக சுற்றுலா பயணிகள் வருவதால் இந்த இடத்தை தனியார் நிறுவனங்கள் ஆக்கிரமைத்து கட்டடங்கள் எழுப்புவதாகவும் இதனால் அங்கு உள்ள இயற்கை வளங்கள் அழிவதாகவும் அப் பகுதியில் உள்ள தன்னார்வ அமைப்பாளர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.



# விளையாட்டு



# இலங்கை அணியின் புதிய எழுச்சி

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டி20 தொடரை இலங்கை அணி 2–1 என கைப்பற்றியது சாதாரண ஒன்றல்ல. மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் முன்னர் போல் இல்லாதபோதும் அதன் டி20 அணி எப்போதுமே வலுவானது. சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் டி20 தரவரிசையில் மேற்கிந்திய தீவுகள் அணி 3ஆம் இடத்தில் இருக்கும்போது இலங்கை 08 ஆவது இடத்திலேயே உள்ளது.

அத்தோடு டி20 கிரிக்கெட் வரலாற்றில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக தொடர் ஒன்றை இலங்கை அணி வென்றது இது முதல் முறையாகும். எனவே இந்தத் தொடர் வெற்றி முக்கியமாக பார்க்க வேண்டிய ஒன்று.

இதற்கு இலங்கை அணியில் செய்த மாற்றங்களும் குறிப்பிடத்தக்கது. தொடரின் முதல் போட்டியில் தோற்றதற்கு என்ன அடுத்த இரு போட்டிகளிலும் அணி வலுவான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முதல் போட்டியில் தோற்றதை அடுத்து சுழற்பந்து சகலதுறை வீரர் துனித் வெள்ளாலகே தனது கன்னி டி20 போட்டியில் ஆட அணிக்கு அழைக்கப்பட்டது பெரும் திருப்பம் கொண்டது.

வெள்ளாலகே இரண்டாவது டி20 இல் 163 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய மேற்கிந்திய தீவுகள் அணியில் 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். இதனால் அந்த அணி 89 ஓட்டங்களுக்கே சுருண்டது. மூன்றாது டி20 ஐ பொறுத்தவரை இலங்கை முழு ஆதிக்கம் செலுத்தியது. 163 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய இலங்கை அணி 18 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து அந்த வெற்றி இலக்கை எட்டியது.

குசல் மெண்டிஸுடன் குசல் பெரேராவின் ஆட்டம் டி20 கிரிக்கெட்டுக்கே உரியது. அதிலும் இருவரின் இணைப்பாட்டமே அணிக்கு இலகுவான வெற்றியைத் தேடித்தந்தது. தனிப்பட்ட வீரர்களின் ஆட்டத்தை விடவும் இணைப்பாட்டங்களே அணிக்கு வெற்றியைத் தேடித்தரும் என்பதற்கு இவர்களின் 106 ஓட்ட இணைப்பாட்டம் நல்ல உதாரணம்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டி20 தொடரில் இலங்கை அணி முக்கிய சில மாற்றங்களைச் செய்தே களமிறங்கியது. இதில் மத்திய பின்வரிசையில் பானுக்க ராஜபக்ஷவை இணைத்தது தீர்க்கமாக இருந்தது. இந்தத் தொடரில் அவருக்கு குறிப்பிடும் படியாக ஓட்டங்களைப் பெற வாய்ப்புக் கிடைக்காத போதும் அவர் அணியில் இருப்பது முன் வரிசையை பலப்படுத்தி இருப்பது தெரிகிறது.

பந்துவீச்சில் அதிக சுழற்பந்து வீச்சாளர்கள் பயன்படுத்தப்பட்டது, இலங்கை ஆடுகளங்களுக்கு பொருத்தமாகவாகும். அணியில் விசேட சுழற்பந்து வீச்சாளர்களான வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்‌ஷனவுடன் மேலதிகமாக சரித் அசலங்க, கமிந்து மென்டிஸுடன் துனித் வெல்லாளகேவும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அதிக சுழற்பந்து வீச்சாளர்களில் தங்கி இருப்பது இலங்கைக்கு வெளியில் பெரும் குறையாக மாறுவதற்கு வாய்ப்பு இருந்தபோதும் சுழலுக்கு அமைய அணியைத் தேர்வு செய்வதேன்றால் இலங்கையின் சுழற்பந்து முகாம் வலுவாகவே உள்ளது.

அடுத்த டி20 உலகக் கிண்ணப் போட்டி 2026இல் இலங்கை மற்றும் இந்தியாவிலேயே நடைபெறப்போகிறது. எனவே, அதற்கு ஏற்ப அணியை தயார் செய்வதென்றால் இலங்கை அணியின் போக்கு சரியான பாதையில் உள்ளது.

இதில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய மற்றொரு வீரர் கமிந்த மெண்டிஸ். டெஸ்ட் போட்டிகளில் சர்வதேச அளவில் திரும்பிப் பார்க்க வைக்கும் அளவுக்கு சாதனை மேல் சாதனைகளைப் படைத்து வரும் அவர் டி20 கிரிக்கெட்டிலும் அதற்கு ஏற்பத தன்னை மாற்றிக்கொண்டு ஆடி வருகிறார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் டி20 இல் அவர் துடுப்பாட்டத்தில் 40 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சிலும் அவர் முக்கிய சந்தர்ப்பங்களில் விக்கெட்டுகளை வீழ்த்த உதவுகிறார்.

டி20 கிரிக்கெட்டியில் இலங்கையின் போக்கு சாதகமான பாதையிலேயே அமைந்திருக்கிறது. அதற்கு சனத் ஜயசூரியவின் பயிற்சி உத்திகளும் உதவி இருப்பது ரகசியம் அல்லது.

அடுத்து இலங்கை அணி மேற்கிந்திய தீவுகளை ஒருநாள் தொடரில் எதிர்கொள்கிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி இன்று (20) பல்லேகலவில் பகலிரவுக் போட்டியாக நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது போட்டி ஒக்டோபர் 23 ஆம் திகதியும் மூன்றாவது ஆட்டம் 26 ஆம் திகதியும் நடைபெறுகிறது. அனைத்துப் போட்டிகளும் பல்லேகலவிலேயே நடைபெறும்.

ஒருநாள் அரங்கில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் இதுவரை 64 போட்டிகளில் ஆடியிருக்கும் நிலையில் இலங்கை அணி 30 போட்டிகளிலும் மேற்கிந்திய தீவுகள் 31 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

இதுவே இலங்கை மண்ணில் இரு அணிகளும் சந்தித்தபோது மேற்கிந்திய தீவுகள் ஈடுகொடுத்து ஆடுவதற்கு தடுமாற்றம் கண்டிருக்கிறது. இலங்கை மண்ணில் இதுவரை ஆடிய 17 போட்டிகளில் இலங்கை அணி 12 ஆட்டங்களில் வெற்றி பெற்றிருப்பதோடு மேற்கிந்திய தீவுகள் 3 போட்டிகளிலேயே வென்றது.

டி20 தொடரை வென்ற உற்சாகம் ஒருநாள் தொடரிலும் இலங்கை அணியில் பிரதிபலிக்க அதிக வாய்ப்பு உள்ளது.

இலங்கை அணி கடந்த ஜூலையில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர் ஒன்றை 27 ஆண்டுகளின் பின்னர் வென்றது. தொடர்ந்து டெஸ்ட் தொடரில் ஆடுவதற்கு இங்கிலாந்து சென்ற இலங்கை அணி ஒரு தசாப்தத்தின் பின்னர் இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் போட்டி ஒன்றில் வென்றது.

இதனையடுத்து இந்த மாத ஆரம்பத்தில் நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கையால் 2–0 என முழுமையாக வெல்ல முடிந்தது. இது 15 ஆண்டுகளில் நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை அணி பெற்ற முதல் டெஸ்ட் தொடர் வெற்றியாக இருந்தது. இப்போது மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இலங்கையால் முதல் முறை டி20 தொடர் ஒன்றை வெல்ல முடிந்திருக்கிறது.

இலங்கை அணியின் இந்தப் புதிய எழுச்சி ஒருநாள் தொடரிலும் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.



**எஸ்.பிர்தௌஸ்...**

# ஆஸியை கலக்கும் யாழ்ப்பாண கால்பந்து வீரர்



அடிலெய்டில் சீனாவை 3-1 என்ற கோல் கணக்கில் வென்ற பின்னர் அவுஸ்திரேலியாவின் 2026 உலகக் கிண்ண கனவு உயிர்ப்பித்து இருக்கின்றது. மேலும் இந்த ஆட்டத்தில் ஜொலித்த நிஷான் வேலுப்பிள்ளை உலகரங்கில் மிகப்பெரிய சாதனையை படைத்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்காக சர்வதேச கால்பந்து தொடரில் பங்கேற்கும் முதல் இலங்கை தமிழர் என்ற பெருமையை நிஷான் வேலுப்பிள்ளை பெற்றுள்ளார்.

இந்த ஆட்டத்தில் ஒரு கோல் அடித்து தனது அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார் நிஷான் வேலுப்பிள்ளை. பிஃபா உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் Socceroos (அவுஸ்திரேலிய ஆடவர்) அணிக்கு மிகவும் அவசியமான வெற்றியைத் தேடித்தந்தது தனக்கு மகிழ்ச்சி என நிஷான் கூறுகிறார்.

மேலும் இந்தப் போட்டி பற்றி அவர் கூறியதாவது, "நான் 'ஐடோ' (அணி வீரர் ஐடன் ஓ'நீல்) க்கு பெனால்டிக்கு மேல்முறையீடு செய்வதில் மும்முரமாக இருந்தேன், ஆனால் பந்து என்னிடம் விழுந்தது, நான் 'சரி, அதை ஒரு ஸ்விங் செய்து என்ன நடக்கிறது என்று பாருங்கள்' என்பது போல் இருந்தது.

அதிர்ஷ்டவசமாக, அது வலைக்குள் சென்றது, எல்லா சிறுவர்களும் என்னைச் சுற்றி வருவதைப் பார்ப்பது நன்றாக இருந்தது. மேலும் நாங்கள் ஒரு வெற்றியைப் பெற்றோம் என்பதும் மிகவும் நல்லது" என்றார்.

பிஃபா உலகக் கிண்ண தகுதிச் சுற்று போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்த நிலையில், அணியின் முகாமையாளராக புதிதாக பொறுப்பேற்ற டோனி போபாவிக், சீனாவுக்கு எதிரான போட்டியில் நிஷான் வேலுப்பிள்ளையை சேர்த்தார்.

அவுஸ்திரேலிய அணிக்காக மாற்று வீரராக போட்டியின் 83ஆவது நிமிடத்தில் களம் நுழைந்த நிஷான் அடுத்த 7 நிமிடத்தில் தனது அறிமுக போட்டியில் முதல் சர்வதேச கோலை அடித்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களித்துள்ளார்.

அவர் அவுஸ்திரேலிய அணிக்காக கோல் அடித்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. மேலும், அவர் அணிந்திருந்த 7 எண் கொண்ட ஜெர்சியும் ரசிகர்களை கவர்ந்துள்ளது.

போபோவிக், பந்தில் தனது சொந்த முடிவுகளை எடுக்க "சுதந்திரம்" கொடுத்தார், ஆனால் அவரது தற்காப்பு கட்டமைப்பில் "ஒழுக்கத்துடன்" இருக்க வேண்டும் என்று வேலுப்பிள்ளை கூறினார்.

23 வயதான வேலுப்பிள்ளை யாழ்ப்பாணத்தின் தமிழ் பூர்வீகத்தைக் கொண்ட பெற்றோருக்கு மெல்பேர்னில் பிறந்தவர். சிறு வயதிலேயே கால்பந்தில் ஆர்வம் காட்டிய அவர் 2019 இல் மெல்பேர்ன் விக்டோரியா அணிக்காக தொழில்முறை வீரராக ஒப்பந்தமானார். அடிலெயிட் யுனைடட் அணிக்கு எதிராக 2021 இல் முதல் தொழில்முறை கோலை புகுத்தினார். அது தொடக்கம் அவரது கால்பந்து வாழ்வு ஏறுமுகம் கண்டது.



# விடைபெறுகிறார் நடால்



ரஃபேல் நடால் தனது இரண்டு தசாப்த டென்னிஸ் வாழ்வில் இருந்து ஓய்வை அறிவித்திருக்கிறார். எனவே, நடாலைப் பற்றி தெரியாத ஒரு சில விடயங்களை இங்கு பார்ப்போம். 2002 இல் தொழில்முறை டென்னிஸ் வீரராக பயணத்தை ஆரம்பித்த நடால் ஒரு விளையாட்டு குடும்பத்திலிருந்து வந்தவர். அவருடைய ஒரு மாமா பார்சிலோனாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய நட்சத்திர ஸ்பானிய கால்பந்து வீரர் மற்றும் மற்றொருவர் தொழில்முறை டென்னிஸ் பயிற்சியாளராக இருந்தார்.

அவர் ஆரம்பத்தில் டென்னிஸ் மற்றும் கால்பந்து இரண்டிலும் ஆர்வத்தையும் திறமையையும் வெளிப்படுத்தினார். ஆனால் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கடைசியில் அவர் டென்னிஸை தேர்ந்தெடுத்தார்.

இளைஞர் மட்டத்தில் நடால் ஸ்பெயினை ஜூனியர் டேவிஸ் கிண்ணத்திற்கு அழைத்துச் சென்றார். பின்னர் 2001 இல் தனது 15 வயது மற்றும் 10 மாதங்களில் தொழில்முறை வீரராக அறிமுகமானார். நடாலின் முதல் ஏடிபி போட்டி வெற்றி, 16 வயதை எட்டுவதற்கு சற்று முன்பு, ரமோன் டெல்கடோவுக்கு எதிராக வந்தது. இது ஓர் அழகான கதையின் தொடக்கமாகும். இது தலைமுறைகளுக்கு மீண்டும் மீண்டும் சொல்லப்படும்.

நடால் 2003 இல் ஏடிபி தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள் நுழைந்தபோது அவரது வாழ்க்கையில் ஒரு கூர்மையான உயர்வைக் கண்டார், அப்போதுதான் டென்னிஸ் ரசிகர்கள் அவரது பெயரைக் கவனிக்க ஆரம்பித்தனர். மான்டே கார்லோ மாஸ்டர்ஸின் இரண்டாவது சுற்றில் பிரெஞ்சு ஓபன் சாம்பியனையும், பின்னர் உலகின் 7ஆம் நிலை வீரர் ஆல்பர்ட் கோஸ்டாவையும் தோற்கடித்து டென்னிஸ் உலகை திகைக்கச் செய்தார்.

பிரெஞ்ச் ஓபனில் அறிமுகமாகும் வாய்ப்பை நடால் தவறவிட்டார், ஆனால் விம்பிள்டன் மற்றும் யுஎஸ் ஓபனில் தனது கிராண்ட்ஸ்லாம் பயணத்தைத் ஆரம்பித்தார்.

2004 இல் 3 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ஃபெடரருடன் தனது முதல் சந்திப்பில், நடால் மியாமி ஓபனின் மூன்றாவது சுற்றில் நேர்செட்களில் வென்றதன் மூலம் ரசிகர்களுக்கு சிறப்பான சில காட்சிகளை வழங்கினார்.

2005 ஆம் ஆண்டு ரோலண்ட்காரோஸில் ஃபெடரரை அரையிறுதியிலும், மரியானோ புவேர்டாவை இறுதிப் போட்டியில் தோற்கடித்து தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றது திருப்புமுனையாக இருந்தது. 2005 ஆம் ஆண்டு ஹார்ட் கோர்ட்டில் தனது முதல் வெற்றியை பதிவு செய்ய கனடா மாஸ்டர்ஸ் இறுதிப் போட்டியில் ஆண்ட்ரே அகாஸியை தோற்கடித்து ATP தரவரிசையில் 2ஆவது இடத்திற்கு உயர்ந்தார். அதைத் தொடர்ந்து ஒலிம்பிக் தங்கம் மற்றும் 'கிங் ஒப் களிமண்' பட்டத்தைப் பெற்றார். பின்னர் அசைக்க முடியாத வீரராக அவர் மாறினார்.

அவர் பெற்ற மொத்தப் பட்டங்கள் 95. கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் 22. அதிலும் பிரெஞ்ச் ஒப்பனில் அவரை அசைக்க முடியாது. 2022 வரை அந்தப் பட்டத்தை அவர் 14 தடவைகள் வென்றிருக்கிறார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2024 ஒக்டோபர் 20 ஞாயிற்றுக்கிழமை



ஊடகவியலாளர்
றாசிக் நபாயிஸ்

# வேலைக்கு விண்ணப்பித்த பெண்ணுக்கு 48 ஆண்டுகளின் பின் கிடைத்த பதில்

மோட்டார் சைக்கிள் சாகச வேலை ஒன்றுக்காக விண்ணப்பித்த இங்கிலாந்தின் திசி ஹொட்சனுக்கு 48 ஆண்டுகள் கழித்தே ஏன் அந்த விண்ணப்பத்திற்கு பதில் கிடைக்கவில்லை என்று தெரியவந்தது.

இப்போது 70 வயதாகும் டிசி ஹொட்சனுக்கு அண்மையில் வந்த கடிதத்தை பிரித்தபோது அவரது கண்களை அவரால் நம்ப முடியாமல் இருந்தது. 1976 ஜனவரியில் அவர் அனுப்பிய அதே விண்ணப்பம் உரிய நிறுவனத்திற்குப் போய்ச் சேராமல் தபால் நிலையத்தின் மேசை இடுக்கில் இத்தனை காலம் சிக்கி இருந்திருக்கிறது.

தமக்கு வேலை கிடைக்காதது பற்றி கவலை அடைந்திருந்த போதும் அவருக்கு பின்னர் கிடைத்த வேலை உலகெங்கும் சுற்ற உதவியது.

அந்தக் கடிதம் தனக்கு திரும்பக் கிடைத்தது பற்றி அவர் கூறும்போது 'ஆச்சரியமாக உள்ளது' என்றார். 'என்னை ஏன் வேலைக்கு அழைக்கவில்லை என்பது பற்றி எனக்கு விந்தையாகவே இருந்தது. ஏன் என்பது எனக்கு இப்போது தெரிகிறது.' என்கிறார் ஹொட்சன்.

அனுப்பப்பட்ட கடிதத்தில் 'ஸ்டெயின்ஸ் தபால் அலுவலகத்தினால் தாமதித்து விநியோகிக்கப்படுகிறது. சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் மேசைக்குப் பின்னால் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பு ஒன்றும் எழுதப்பட்டிருந்தது.

யார் இதனைத் திரும்ப அனுப்பினார்கள்? எப்படி எனது முகவரியை கண்டுபிடித்தார்கள்? என்பது எனக்குத் தெரியவில்லை என்கிறார் ஹொட்சன்.








லண்டனில் உள்ள தமது வீட்டிலிருந்து அந்த வேலைக்கு விண்ணப்பித்தது இன்னும் நினைவில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். மோட்டார் சைக்கிளில் சாகசம் செய்பவராக வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது. தினமும் பதில் கடிதத்துக்காகக் காத்திருந்ததாகக் கூறினார் ஹொட்சன்.

ஆனால் ஹொட்சனுக்கு அந்த வேலை கிடைக்காதது வேறு வகையில் அவரது வாழ்வை மாற்றியது. ஆபிரிக்கா சென்ற அவர் பாம்புகளை கையாள்வது மற்றும் குதிரையை பராமரிக்கும் வேலையைப் பார்த்தார்.

விமானம் ஓட்டக் கற்றுக்கொண்ட அவர் ஒரு விமானியாக செயற்பாட்டு விமானப் பயிற்சியாளராக மாறினார்.

# பாதை தெரியாத பயணம்

பிழைப்புக்காக ஆயிரம் மைல்கள் கடந்து வேறு ஊருக்குப் போன சீன நாட்டவர் ஒருவருக்கு புத்தாண்டுக்கு வீடு திரும்ப ரயில் டிக்கெட் வாங்குவதற்கு பணமில்லை. வேறு வழியில்லாமல் சைக்கிளை மிதித்துக் கொண்டே வீடு சென்றுவிடலாம் என்று பயணிக்க ஆரம்பித்தார்.

அது ஒரு அசாதாரணமான பயணம் என்றாலும் போகின்ற வருகின்றவர்களிடம் வழிகேட்டு பயணத்தை தொடர்ந்தார் அந்த ஏழை மகன். இத்தனைக்கும் அவருக்கு வீதி சமிக்ஞைகள், பெயர் பலகைகளைக் கூட வாசிக்கத் தெரியாது. ஒரு குருட்டு தைரியத்தில் தான் பயணத்தைத் தொடர்ந்தார்.



அதாவது கிழக்கு மாகாணமான ஷங்டொங்கில் இருந்து வடக்காக 1,000 மைல்களுக்கு அப்பால் தனது சொந்த ஊர் இருக்கும் ஹெய்லொங்ஜியாங் மாகாணத்திற்கு அவர் பயணத்தை ஆரம்பித்து 30 நாட்கள் கடந்திருந்தது.

என்ன பரிதாபம் என்றால் அவர் இத்தனை காலமும் சைக்கிளை மிதித்திருப்பது சரியாக தனது ஊர் இருக்கும் திசைக்கு எதிர்த் திசையான தெற்கை நோக்கியாகும். சரியாக சீனாவின் மத்திய கிழக்கு மாகாணமான அன்ஹுயில் வைத்து வீதிக் காவலில் இருக்கும் ஒரு பொலிஸாரிடம், 'ஹெய்லொங்ஜியாங் மாகாணத்திற்கு எவ்வளவு தூரம் போக வேண்டும்?' என்று கேட்டார்.

அப்போது பொலிஸ்காரர் மேலும் கீழும் பார்த்தார். அப்போது அந்த நபர் 300 மைல்கள் தவறான திசையில் வந்திருக்கிறார். அத்தனை தூரத்தில் ஒருவர் கூட சரியான பாதையை சொல்லவில்லை.

கடைசியில் அந்தப் பொலிஸார் மற்றும் கூடியிருந்தவர்கள் எல்லோரும் பணம் சேர்த்து அவரை ரயில் வண்டியில் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள்.

# இன்னும் ஒரே இடத்திலா?



நீங்கள் இன்னும் ஒரே இடத்தில் நின்றுகொண்டு இருப்பதாக நினைக்கிறீரா?

ஆனால் நீங்கள் இருக்கும் பூமியானது சூரியனை வினாடிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் சுற்றுகிறது. எமது சூரியன் எமது பால்வெளி மையத்தை வினாடிக்கு 250 கிலோமீற்றர் வேகத்தில் சுற்றுகிறது. எமது பால்வெளியானது பிரபஞ்சத்தில் வினாடிக்கு 600 கிலோமீற்றர்கள் வேகத்தில் நகர்கிறது. நீங்கள் இதனை வாசிக்க தொடங்கியது தொடக்கம் 3,000 கிலோமீற்றர்கள் பயணித்துவிட்டீர்கள்.

அடியே நம்ம வீட டுக்குள்ள எவனோ திருடன் இருக்கிறான். சீக்கிரம் ஓடி வா! அட குடிச்சிட்டு கண்ணாடி முன் போய் நிற்காம போய் படு...!



தலைவருக்கு டொக்டர் பட்டம் கொடுத்தது தப்பா போச்சு....
ஏன்...?
அவரை மேடைக்கு பேச அழைத்தால், ஒப்ரேஷன முடிச்சிட்டு வாரேன் என்று சொல்லுறார்.....



100 கோடி ரூபா ஊழல் மோசடி செய்ததாக நீங்க சொன்னதுக்கு எதிர்கட்சித் தலைவர் உங்க மேல வழக்கு போடப் போறார்...?
ஏன்......? நான் தப்பாக ஒண்ணும் சொல்லல்லையே
நான் சொன்னது உண்மைதானே...
அவர் ஊழல் மோசடி செய்தது 100 கோடி ரூபா இல்லையாம்...200 கோடி ரூபாவாம்.... நீங்க குறைச்சி சொல்லிட்டீங்க என்று தான் வழக்கு போடப்போறார்.



ஜெயில் வாழ்க்கை தலைவரை ரொம்ப மாத்தி டிச்சி...!
எப்படி சொல்ற....?
இப்ப தோட்ட வேல செய்றது... சாப்பிடுறது.... எல்லாம் டயிமுக்கு செய்றாரே.....?



உங்க வீட்டுக்கு விருந்தாளிங்க வந்தா எப்படி சாப்பிட்ட உடனே கிளம்பிடுறாங்க?
சாப்பிட்டு முடிஞ்ச உடனே பில்லை கொடுக்கிறமில்லையா....?



மன்னர் ஏன் பேஸ்புக்கில் போலி எக்கவுண்ட் வைச்சிருக்கிறார்?
மகாராணி போஸ்ட் போட்டால் கொமண்ட் போடுவதற்காம்



கல்யாண அல்பத்தில எல்லாருடைய படமும் சின்னதா இருக்கே....
அவசரத்தில பாஸ்போர்ட் படப்பிடிப்பாளரை கூட்டிக்கிட்டு வந்திட்டாங்களாம்.



கண் ஆபரேஷன் பண்றதுக்கு முன்னால சூரியனை வணங்க சொல்றீங்களே! ஏன் டாக்டர்?
"கண்"கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பண்ண முடியாது இல்ல! அதுக்கு தான்!



அந்தப் பையனை எங்க கூட்டிட்டு போறீங்க?
சாணம் பிடிக்கிற கடைக்கு. அவன் புத்தி ரொம்ப "மழுங்கி"ப் போச்சாம்.



தலைவர் ரொம்ப வித்தியாசமான ஆளா இருக்கிறாரே...!
எப்படி சொல்ற...?
முடிவெட்ட போறேன்னு சொல்லிட்டு அவரு வீட்டில இருப்பாரு....அவரோட டோப்பாவை கொண்டு போய் ஒருவரை முடி வெட்டிட்டு வரச் சொல்'லுவாரு...



ஏண்டா மெதுவா லெட்டர் எழுதுற?
எங்க அம்மாவுக்கு "வேகமா" படிக்க வராது. அதான்!





தேர்தல்ல படுதோல்வி அடைந்ததுக்கு நம்ம தலைவர் அறிவியல் ரீதியா என்ன காரணம் சொல்றாரு?
தேர்தலில் மண்ணை கவ்வியதற்கு புவியீர்ப்பு விசைதான் காரணம் ன்னு சொல்றார்!

# அங்கீகாரங்கள் இன்றி ஆளுமைகள் இல்லை

## லுணுகலை மண்ணின் முதல் இஸ்லாமியப் பெண் ஊடகவியலாளர் பாத்திமா சிஹானா



இயற்கை ரம்யங்களின் அதிசயங்கள் பல நிறைந்த ஊவா மாகாணத்தில் 1997 டிசம்பர் 23 ஆம் திகதி சித்தி பாய்ஸா காமீன் , மர்ஹூம் முகமது சலீம் நௌபர் தம்பதியினரின் நான்கு பிள்ளைகளில் மூத்த மகளாக பிறந்தவரே பாத்திமா சிஹானா.

காமின் வம்சத்தின் இரண்டாம் தலைமுறையின் முதல் செல்லப் பிள்ளையாக பிறந்த இவள், அக்குடும்பத்தின் ஒரு இளவரசியே.

ஒரு கூட்டுக் குடும்பத்தின் அரவணைப்பில் வளரும் போதே சுதந்திர சிட்டாக வளர்ந்தவள். சொற்களை கோர்த்து மழலை மொழி பேசத் துவங்கிய போதே பாலர் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய தன் தாயின் சகோதரியுடன் பாலர் பாடசாலை சென்றவள் இவள்.

துடிப்பும் குறும்பும் மிக்க இவளுடைய ஆரம்பப் பிரிவு கற்கைகள் பதுளை மாவட்டம் பண்டாரவளை சேர் ராசிக் பரீட் தேசிய பாடசாலையிலும், லுணுகலை அல் அமீன் முஸ்லிம் கல்லூரியிலும் இனிதே கரைகண்டது. ஆரம்பப் பிரிவு கற்கும் பொழுதே, புலமைப் பரிசில் பரீட்சையின் பின்



னரான இடைக்கால பிரிவில், கணினி அறிவின் மீது இருந்த மோகத்தால் அடிக்கடி பாடசாலை கணினிக்கூடத்தை சுற்றி வருவதை அவதானித்த ராசிக் பரித் தேசிய பாடசாலையின் அந்நாள் கணினிப் பிரிவு பொறுப்பாசிரியர் ஏ குலசேகரன் ஆசிரியர் இவளின் வயதை கூட கணக்கில் எடுக்காது Microsoft Office கற்கை நெறியை தொடர்வதற்காக அனுமதி வழங்கினார். தனது பத்து வயதிலேயே பாடசாலையின் சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுடன் இணைந்து மைக்ரோசாப்ட் ஒபீஸ் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த இவர், பாடசாலை மட்டத்திலான மென்பொருள் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இடைநிலை பிரிவு தொடக்கம் உயர்தரம் வரை தன் கல்வி நடவடிக்கைகளை மத்திய மாகாணம் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தொடர்ந்தார்.

தான் கற்ற பாடசாலைகளில் இவரின் பல்துறை சார்ந்த திறமைகளால் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தை பெற்றுக் கொண்டார்.

பாடசாலை நாட்களில் பேச்சுப்போட்டி, கவிதை போட்டி, விஞ்ஞான புனை கதை போட்டி, மேடை நாடகம், விவாதம், போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வெற்றியும் பெற்றுள்ளார். புத்தகப் புழுவாக இல்லாமல் தன் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு இவள் பின் தங்கவில்லை.

பாடசாலைக்குள் மாத்திரமில்லாமல் பிற பாடசாலைகளுக்கு இடையே நடைபெறக் கூடிய பேச்சுப்போட்டியில் தனக்கென ஒரு பெயரைப் பதித்தவர்.

உயர்தர பிரிவு காலப்பகுதியில் தனது பாடசாலையில் சுற்றாடல் குழுத் தலைவராகவும் இஸ்லாமிய சங்கத்தின் உப தலைவராகவும், பாடசாலை ஊடக குழு, பாடசாலை தமிழ் சங்கம், பாடசாலை விஞ்ஞானப் பிரிவு குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் செயற்பட்டுள்ளார்.

பாடசாலை நாட்களில் திருமதி ஷாமிலா மஹரூப் ஆசிரியையின் வழிகாட்டல் அளப் பெரியது என்று இவர் கூறுவார்.

சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளை பெற்ற இவர், தனது உயர் தரத்தை விஞ்ஞான பிரிவில் கற்று

தற்பொழுது இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பிரிவில் இளங்கலை மாணவியாக காணப்படுகின்றார்.

அது மாத்திரமின்றி சர்வதேச திறந்த பல்கலைக்கழகத்தில் உளவியல் பிரிவில் இளங் கலை, இஸ்லாமியத் துறை டிப்ளோமா கற்கை நெறி ஆகியவற்றையும் தனியார் உயர் கற்கை நிலையம் ஒன்றில் உளவியல் மற்றும் உளவியல் ஆலோசனை கற்கை நெறி என்பவற்றை தொடர்ந்து வருகின்றார்.

டிப்ளோமா இன் கம்யூனிட்டி இன் இங்கிலீஷ் சர்ட்டிபிகேட் இன் மைக்ரோசொப்ட் ஓஃபீஸ் ஆகிய கற்கை நெறிகளை பூர்த்தி செய்துள்ளார்.

இவருடைய பள்ளிப்பருவத்தில் இவருக்கு அமைந்த ஒரு பெரும் வரமே ஞாயிறு அஹதியா பாடசாலை. 2009 தொடக்கம் 2013 வரையான காலப்பிரிவில் கண்டி தென்னகும்புர அஹதியா பாடசாலையின் அதிபராக கடமை ஆற்றிய மர்ஹூம் ராசிக், மற்றும் ஆசிரியை கரீனா கலீல் ஆகியோர் நூலாசிரியர் ஷிஹானா நௌபர் வாழ்க்கையில் சந்தித்த பொக்கிஷமான இரு நபர்கள்.

அஹதியா இடைநிலை சான்றிதழ் பரீட்சை, அஹதியா இறுதி தேசிய சான்றிதழ் பரீட்சை ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற இவர் . இலங்கை மத்திய அகதியா சம்மேளனத்தினால் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறைகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற ஒரு அஹதியா ஆசிரியராக பத்து வருட காலமாக கடமையாற்றி வருகின்றார்.



கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட பலாங்கொடை ரியாதுல் ஜன்னா அஹதியா பாடசாலையில் இருந்து முதல்முறையாக இடைநிலைப் பரீட்சைக்கு தோன்றிய மாணவர்களை குறுகிய காலத்தில் பரீட்சைக்காக தயார்படுத்தியது மாத்திரமன்றி பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களையும் சிறந்த பெறுபேறுகளில் சித்தி அடைய வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தாருல் ஆயிஷா பெண்கள் அரபி பாடசாலையில் விஞ்ஞான பாட தன்னார்வ ஆசிரியராகவும், தான் கற்ற பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இஸ்லாம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான இரண்டு வருட கால தன்னார்வ ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவருடைய கற்கை நெறிகள் ஒரு புறம் இருக்க ஊடகப் பிரிவின் மீது இருந்த ஆசை ஆர்வம் அத்துடன் இணைந்த அவருடைய திறமை அவரை ஊடகத்தின் பால் ஈர்த்தது.

ஊவா சமூக வானொலி மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் மூன்று மாத கால ஊடக கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளார். அதனைத் தொடர்ந்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் கந்துரட்ட முஸ்லிம் சேவையில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதற்கான வாய்ப்பு, இலங்கை மத்திய அஹதியா சம்மேளனத்தின் உப தலைவர் ஏ யு எல் எம் அஸ்வர், கந்துரட்ட முஸ்லிம் சேவையின் பொறுப்பாளர் ஏ ஏ எம் ரலிம் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இவருக்கு அமைந்தது. சுவனத்து சிட்டுகள்,விழித்திரை ஆகிய நிகழ்ச்சிகளை இவர் தொகுத்து வழங்கியுள்ளார்.





கே. ஈஸ்வரலிங்கம்...✍
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

(05 ஆம் பக்க பார்க்க)

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல்






கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் கோமதி சரவணன், திருமதி பிரமிளா பிரதீபனுடன் இணைந்து பிரசுரித்த மலையகத்தின் முதல் நூலான "கோப்பிக் கிருஷிக்கும்மி" பற்றி பிரமிளா பிரதீபன் உரையாற்றியதுடன், மிக விரைவில் வெளிவரவிருக்கும் மகாவம்சத்தின் 6 ஆவது தொகுதிக்கான தமிழ் மொழிபெயர்ப்பு பற்றிய அறிமுகத்துடன், "மகாவம்சம் : அறிதல், தெளிதல், புரிதல்" என்ற தலைப்பிலான உரையினை சரவணன் நிகழ்த்தினார்.

# அகரம் சைவ பொதுப்பணி மன்றத்தின் நவராத்திரி பூஜை









அகரம் சைவ பொதுப்பணி மன்றத்தின் நவராத்திரி பூஜை மன்ற காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்பூஜையில் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் அறநெறி மாணவர்களின் பஞ்ச புராணம், சகலகலாவல்லி மாலை, மற்றும் நவராத்திரி பாடல்கள் இடம்பெற்றன. மாணவர்களுக்கு பிரசாதங்களும் கற்றல் உபகரணங்களும் உறுப்பினர்களால் வழங்கப்பட்டன.

## அங்கீகாரங்கள் இன்றி... (04 ஆம் பக்கம் தொடர்ச்சி)

மங்கையர் திடல் எனும் இவரது நிகழ்ச்சி எதிர்காலத்தில் ஒலிபரப்பாக உள்ளது .

ஸ்கை தமிழ் ஊடகத்தின் சப்ரகமுவ மாகாண ஒருங்கிணைப்பாளராக இணைந்து கொண்ட இவரின் திறமைகளை இனம் கண்டு கொண்ட ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பாளர் ஜே எம் பாசித் , சகோதரி ஷிஹானா நௌபரை ஆசிரியர் குழு உறுப்பினராக, துணிந்தெழு சஞ்சிகையின் உதவி ஆசிரியராக நிர்வாகக் குழு உறுப்பினராக பணிபுரிய வைத்து அவருக்கான ஊடகத்துறை சார்ந்த அனுபவங்களை வழங்கியதன் மூலம் தற்பொழுது ஸ்கை தமிழ் செய்திப் பிரிவின் செய்தி ஆசிரியராகவும் செய்தி வாசிப்பாளராகவும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளராகவும் கடந்த மூன்று வருட காலமாக தொழிற்பட்டு வருகின்றார்.

தான் கற்ற ஊடகக் கல்வி அனைவருக்கும் பயன்படும் வகையில் ஸ்கை தமிழ் ஊடகத்தில் எங்கள் பள்ளிக்கூடம் என்னும் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கான அறிமுகத்தை சஞ்சிகையிலும் பாடசாலை மாணவர்களுக்கான ஊடகம் தொடர்பான இலவச செயலமர்வுகளையும் செய்து வருகின்றார். இதுவரை கிட்டத்தட்ட 12 செயலமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

பாடசாலை காலம், ஊடகத்துறை பயணம் என்பவை இவ்வாறு அமைய, விஞ்ஞான புனை கதை, கவிதைகள் எழுதும் பழக்கத்தை கொண்டிருந்ததால் , இவருடைய மாற்றம் எனும் முதல் கவிதை விடிவெள்ளி பத்திரிகையில் வெளியானது. 2019 ஆம் ஆண்டு தனது முதலாவது கவிதை நூலை பேராதனை சர்வ கலாசாலை மண்டபத்தில் வெளியிட்டார்.

அது மாத்திரம் இன்றி சாதாரண தர விஞ்ஞான பாடத்திற்கான கடந்த கால வினாக்களுக்கான விளக்க உரை, விஞ்ஞான புனை கதை நூல் ஆகியவற்றையும் எழுதியுள்ளார். அஹதியா பாடசாலை மாணவர்களுக்கான இடைநிலை சான்றிதழ் பரீட்சைக்கான பரீட்சை வழிகாட்டி நூல் ஒன்றையும் விரைவில் வெளியிட உள்ளார்.

அங்கீகாரங்கள் இன்றி ஆளுமைகள் உருவாவதில்லை, தனது பிறந்த ஊரும் ஆரம்பக் கல்வியை கற்ற இடமும் ஆன லுணுகலை மண்ணின் முதல் இஸ்லாமியப் பெண் ஊடகவியலாளர் எனும் பெயர் வழங்கப்பட்டு கடந்த வருடம் பாடசாலையின் முத்து விழா கொண்டாட்டத்தின் போது கௌரவிக்கப்பட்டார். அத்துடன் தனது ஊரின் முதலாவது இளம் பெண் எழுத்தாளரும் இவர் ஆவார்.

சர்வதேச மனித உரிமைகள் பேரவையும் சர்வதேச பௌத்த சம்மேளனமும் இணைந்து, 'தேசிய கலை அரண்' அமைப் பின் ஏற்பாட்டில் "வாழும்போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப் பொருளில் தேசியகலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கவியருவி லங்கா புத்திர தேசபந்து கௌரவ நாமம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பெற்றோர், குடும்பத்தவர், தான் சந்தித்த சிறந்த ஆசான்கள், நண்பர்கள் என்பவர்களை தாண்டி இன்று இவ்விடம் வரை பயணிப்பதற்காக தன் வாழ்க்கைத் துணையாக கரம் பற்றிய நிஸ்லான் நிசார்தீன், ஒரு சிறந்த துணையாகவும், வழிகாட்டியாகவும், நல்ல நண்பனாகவும் வாழ்வில் எல்லா கட்டங்களிலும் உறுதுணையாக இருக்கின்றார்.

ஒரு மாணவியாக , ஒரு ஆசிரியராக,, ஒரு எழுத்தாளராக, ஒரு ஊடகவியலாளராக , ஒரு இல்லத்தரசியாக தொடரும் இவரது பயணத்தில் சிறகின் மொழி என்னும் தனது கவிதை தொகுப்பு நூலின் இரண்டாம் பதிப்பை கடந்த 19ஆம் திகதி இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கேட்போர்கூடத்தில் ஸ்கை தமிழ் விருது விழாவில் ஒரு அங்கமாக வெளியிட்டு வைத்தார்.

# ஊடகவியலாளர் றாசிக் நபாயிஸின் "அனர்த்தங்களும் நாமும்"

தென்கிழக்கின் அம்பாறை மாவட்டத்தில் கைத்தறியும் கடல் வளமும், கல்வியாளர்களும் இலக்கியமும் எழுத்தும், கலையும் என பல்துறையில் அழகு சேர்க்கும் அழகிய கிராமமான மருதமுனை எனும் கிராமத்தில் உள்ள எஸ்.எம் வீதியில் வசிக்கும் ஓய்வு பெற்ற அதிபர் அப்துல் றகுமான் அப்துல் றாசிக் ஆதம்பாவா ஹயறுன்நிஷா தம்பதிகளின் மூத்த புதல்வரான ஊடகவியலாளரும் சமூகப்பணியாளருமான நபாயிஸ் என அறியப்படும் ஏ.ஆர். அஹமட் நபாயிஸ் ஒரு பட்டதாரியாவார்.

இவர் தனது ஆரம்ப மற்றும் உயர் தரக் கல்வியினை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பெற்றதோடு தனது தொழில்வாண்மையான உயர் கல்வியினை (2005/2006) ஆம் ஆண்டு கொழும்பு சமூக சேவைக் கல்லூரியில் சமூகப்பணி உயர் டிப்ளோமாவையும் (2017/2018) ஆம் ஆண்டு அதே கல்லூரியில் சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார்.

2015ஆம் ஆண்டு இந்தியா காமராஜர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் முதுமானி கற்கை நெறியையும் பூர்த்தி செய்துள்ள இவர் கொழும்பு மாஸ் மீடியா நிறுவனத்தில் ஊடகவியல் மற்றும் ஒளிபரப்புத் துறை தொடர்பான டிப்ளோமாக்களையும் கொழும்பு மனித உரிமைகள் நிறுவனத்தில் மனித உரிமை தொடர்பான டிப்ளோமா, கிழக்கு பல்கலைக்கழகத்தில் அனர்த்த முகாமைத்துவ சான்றிதழ், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெண்களும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான டிப்ளோமா, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இளைஞர் அபிவிருத்தி பணியில் டிப்ளோமா பூர்த்தி செய்துள்ள இவர் சமூக தொழில்நுட்ப கற்கைகள் நிறுவனத்தில் அனர்த்த முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் அலுவலக முறை தொடர்பான டிப்ளோமா என பல டிப்ளோமா பாடநெறிகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

தனது ஆரம்ப காலம் முதல் சமூக சேவையில் ஆர்வம் மிக்கவராக இருந்து வந்ததினால் இன்றும் பல சமூக சேவைகளை முன்நின்று செய்து வருவது இவரின் சிறப்பு இயல்பாக நோக்கப்படுகிறது. கிராம, பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் பல்வேறு சமூக முன்னேற்ற அமைப்புக்களில் ஸ்தாபகராகவும் உயர்பீட உறுப்பினராகவும் நிர்வாகியாகவும் அங்கத்தவராகவும் பல்வேறு அமைப்புகளில் இணைந்து சேவையாற்றி வரும் இவர் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் ஊடகப் பணியில் இணைந்து தன்னை ஒரு ஊடகவியலாளராகவும் சமூகப்பணியாளராகவும் அடையாளப்படுத்தியதுடன் 2009ஆம் ஆண்டு அகில இலங்கை சமாதான நீதவனாகவும் சத்தியப்பிரமாணம் செய்து மக்கள் பணி செய்து வருகின்றார்.



முதுமாணிப் பட்டதாரியான இவர் அரச தொழிலில் 12 வருடகாலமாக கல்முனை, சாய்ந்தமருது மற்றும் நிந்தவூர் பிரதேச செயலகங்களில் அனர்த்த நிவாரண அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றியதுடன் தற்போது கல்முனை பிரதேச செயலகத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வருகின்றார்.




தனது அரச தொழிலுக்கு முன்னர் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களில் சேவையாற்றிய நூலாசிரியர் பலரது நன்மதிப்பைப் பெற்றதுடன் அவரது சமூக சேவைக்காகவும் ஊடக செயற்பாட்டிற்காகவும் பல்வேறு அமைப்புக்கள் அவருக்கு சாமஸ்ரீ, தேச கீர்த்தி, ரத்னதீப, தேச அபிமானி, கீர்த்தி ஸ்ரீ மற்றும் சமூக சாகரம் போன்ற பட்டங்களையும் வழங்கி கௌரவித்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினராகவும் சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் உறுப்பினராகவும் இருந்து சேவையாற்றி வரும் இவர் கெபிட்டல் தொலைக்காட்சியின் கல்முனைப் பிராந்திய செய்தியாளராகவும் தினகரன் பத்திரிகையின் மருதமுனை விஷேட நிருபராகவும் தமிழன் பத்திரிகையின் மருதமுனை நிருபராகவும் ஊடகப்பணியாற்றி வருகிறார்.




1982 மே மாதம் 26ஆம் தேதி மருதமுனையில் பிறந்த றாசிக் நபாயிஸ் 2000ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் தேசிய பத்திரிகைகளுக்கு கவிதைகள் எழுதியதனூடாக எழுத்துலகில் கால் பதித்தார். இலங்கை தேசத்தில் அதிகமான முன்னணி இலக்கிய வித்தகர்களையும் ஆளுமைகளையும் கொண்ட கிழக்கில் இவரது எழுத்துக்களும் அன்றைய நாட்களில் தனக்கான இடத்தை பிடிக்கத் தவறவில்லை. அதன் வெளிப்பாடாக பாடசாலை மாணவனாக இருந்த றாசிக் நபாயிஸ் 2000ஆம் ஆண்டு உயர்தரம் கற்கும் போதே பொது அறிவுத் தொகுப்பு எனும் நூலை வெளியிட்டு தன்னை நூல் ஆசிரியர்கள் பட்டியலில் இணைத்து கொண்டார்.

அது மட்டுமின்றி யூரோ நாணயம் அறிமுகம் உலகை வந்தடைந்த போது "யூரோ நாணய அறிமுகத் தொகுப்பு" எனும் நூலையும் 2001ஆம் ஆண்டு பாடசாலை மட்டத்தில் வெளியிட்டு ஆசிரியர்கள், மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்றார்.



அப்போதெல்லாம் அவருக்கு உறுதுணையாக இருந்த மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த மர்ஹூம் ஏ.எம்.ஏ சமது நினைவுபடுத்தப்பட வேண்டியவர்.

நபாயிஸின் தந்தை ஓய்வு பெற்ற அதிபர் அப்துல் றகுமான் அப்துல் றாசிக் தனது மகனை வாசிகசாலையின் பக்கம் நாட்டம் கொள்ள அறிவுறுத்தியமையும் அப்போதைய ஊடக கலாசாரத்தின் மீது அவர் கொண்ட அதீத தீவிரத் தன்மையையும் கண்டுகொண்ட அவருடைய தந்தையார் 2007ஆம் ஆண்டு தந்தையின் வழிகாட்டலுடன் ஊடகத்துறைக்குள் பகுதி அளவில் நுழைந்தார்.

றாசிக் நபாயிஸ் மருதமுனை பிரதேசம் அடங்கலாக பல்வேறு பிரதேசங்களின் பொதுப் பிரச்சினைகள், சம்பவங்கள், சடங்குகள் சம்பிரதாயங்கள் மற்றும் நிகழ்வுகள் என தனது எழுத்துக்களினால் உயிர் கொடுத்து 17 ஆண்டுகள் போட்டி, பொறாமை, கழுத்தறுப்புகள் கடந்து இன்று வெற்றிகரமான ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் தன்னை நிரூபித்துள்ளார்.

(07 ஆம் பக்க பார்க்க)



ஏ.எல்.எம்.ஷினாஸ்...
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்ய லட்சுமி தத்துவ கோவிலில் சிறப்பு இசை அரங்கம்







கொழும்பு வெள்ளத்தை ஸ்ரீ ஐஸ்வர்ய லட்சுமி தத்துவ கோவிலில் நடைபெற்ற வருடாந்த மகத்துவத்தின் சிறப்பு இசை அரங்கத்தில் “திருப்புகழ் கானவாரிதி” சிவஸ்ரீ P. சம்பந்தக் குருக்களின் (பாண்டிச்சேரி, தமிழ்நாடு), சிறப்பு இசைக் கச்சேரி நவராத்திரி காலத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு பக்கவாத்தியமாக வயலின் வாசுகி சுவாமிநாதன் சர்மா மற்றும் மிருதங்கம் “மிருதங்க கலாவித்தகர்” சு. அரவிந்த சுப்ரமணிய சர்மா, “மிருதங்க கலாவித்தகர்” சு. அனந்த நாராயணன் சர்மா மற்றும் மிருதங்க வித்வான் பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா நிகழ்ச்சியினை சிறப்பித்து வழங்கி இருந்தனர்.



# ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயம் முதலாம் இடம்









அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டி மற்றும், அகில இலங்கை கர்நாடக நடனம் போட்டி அண்மையில் புத்தளம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டிகளில் புத்தளம் தெற்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட ,பு/ ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து பங்கு பற்றிய மாணவர்கள் அனைத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதில், தனிநடனத்தில் க.ம துஷாயினி 1ம் இடத்தையும், தனி இசைப் போட்டியில் எஸ்.சஷ்டிகா ,சு. கிதுர்நிதா 1ம்இடத்தையும், நாட்டார் பாடல் போட்டியில் 1ம் இடத்தையும் , குழு நடனத்தில் 1ம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மற்றும் சமூகத்துக்கும் நன்மதிப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். இவர்களை அதிபர், ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர்.

**(உடப்பு குறூப் நிருபர்)**

## ஊடகவியலாளர் றாசிக் நபாயிஸின்... (06 ஆம் பக்க தொடர்ச்சி)

தனது 17 வருட கால ஊடகப்பணியில் பயணிக்கும் றாசிக் நபாயிஸ் இதுவரையும் 70 க்கும் மேற்பட்ட கட்டுரைகளை தேசிய பத்திரிகைகளில் எழுதியதோடு அதில் 23 சமூகம் சார் கட்டுரைகளை தேர்ந்தெடுத்து 2022ஆம் ஆண்டு "ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி" எனும் கட்டுரை தொகுப்பு நூல் ஒன்றையும் 2023ஆம் ஆண்டு மருதமுனையில் உள்ள சமாதான நீதிபதிகள் பலரை ஒன்று திரட்டி அவருடைய தகவல்களை தொகுத்து "மருதமுனை சமாதான நீதிபதிகள்" எனும் நூலையும் மருதமுனை ஆவணக்காப்பகத்தின் வெளியீடாக தனது பிறந்த மண்ணில் வெளியிட்டு வைத்தார்.

"மருத நியூஸ்" நிறுவன ஸ்தாபராகவும் "மருதமுனை ஆவணக்காப்பகம்" நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் இருந்து செயற்படும் றாசிக் நபாயிஸ் எழுத்தின் மீது தீரா காதல் கொண்ட ஒருவராக இருக்கின்றார் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். அரச பணியாளர், எழுத்தாளர், ஊடகவியலாளர் என்பதையெல்லாம் கடந்து தான் ஒரு சமூக சேவையாளர் என்பதை றாசிக் நபாயிஸ் எப்பொழுதும் முன்னிறுத்த தவறுவதில்லை அதன் வெளிப்பாடாக பல அரச சார்பற்ற நிறுவனங்களில் சுமார் பத்து வருடங்கள் கடமையாற்றி பல சமூக சேவை திட்டங்களை முன்னெடுத்து மக்களுக்கு உதவிகள் செய்தார்.

அரச பணியாளராக 2002 ஆம் ஆண்டு கல்முனை பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுனராக இணைக்கப்பட்ட றாசிக் நபாயிஸ் ஒரு வருடத்தின் பின்னர் அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தராக நிரந்தர நியமனம் பெற்று கல்முனையில் பிரதேச செயலகத்தில் 09 வருடங்கள் கல்முனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி மாறுதல் பெற்று சாய்ந்தமருது பிரதேசத்தில் ஒரு மாத காலங்கள் சேவை செய்து பின்னர் கல்முனை பிரதேச செயலகத்திற்கு

இடமாற்றப்பட்டு மீண்டும் 2022 ஆம் ஆண்டு நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு இரண்டு வருடங்கள் கடமையாற்றிய நிலையில் மீண்டும் கல்முனை பிரதேச செயலகத்திற்கு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அபிவிருத்தி உத்தியோகராக இணைக்கப்பட்டு கடமையாற்றி கொண்டிருக்கிறார்.

பல முக்கிய அமைப்புகள் பலதினதும் கௌரவங்களையும் பாராட்டுக்களையும் பெற்ற றாசிக் நபாயிஸ் பிரதேச மக்களினால் நன்றாக அறியப்பட்ட ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் சமூக சேவையாளராகவும் திகழ்ந்து வருகின்றார். நவமணி, தமிழ்த்தந்தி, மெட்ரோ நியூஸ், தமிழ் மிரர் மற்றும் விடிவெள்ளி அடங்கலாக பல்வேறு பத்திரிகைகளில் எழுதி வந்த றாசிக் நபாயிஸ் தமிழன் பத்திரிகையின் மருதமுனை நிருபராகவும் தினகரன் பத்திரிகையின் மருதமுனை விஷேட நிருபராகவும் பல செய்திகளை, கட்டுரைகளை எழுதிவரும் இவர் இது வரையும் பொது அறிவுத் அறிமுகத் தொகுப்பு, யூரோ நாணய அறிமுகத் தொகுப்பு, ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி, மருதமுனை சமாதான நீதிபதிகள், அழைப்போம் பயன் பெறுவோம் எனும் 05 நூல்களைத் தந்த இவர் தனது ஆறாவது நூலான அனர்த்தங்களும் நாமும் எனும் நூலை 2024/10/19ஆம் திகதி எழுத்துலகிற்கு சமர்ப்பிக்கிறார்.

றாசிக் நபாயிஸ் எழுத்துத் துறையில் தனக்கென ஒரு இடத்தை நிலைநிறுத்திக் காட்டியுள்ளார். இவரது எழுத்துத்துறை பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்.

# விடாமுயற்சிக்கு வந்த சோதனை

அஜித், இப்போது மகிழ் திருமேனி இயக்கும் விடாமுயற்சி மற்றும் ஆதிக் இயக்கும் 'குட் பேட் அக்லி'ஆகிய திரைப்படங்களில் நடித்து வருகிறார். விடாமுயற்சி படத்தின் ஷூட்டிங் சில மாதங்களாக லைகா நிறுவனத்தின் பொருளாதார பிரச்சனை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் மீண்டும் தொடங்கி நிறைவடைந்துள்ளது.படத்தில் அஜித்தோடு, அர்ஜுன், ஆர்வ, த்ரிஷா, ரெஜினா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவாளராகப் பணியாற்ற அனிருத் இசையமைக்கிறார். இந்நிலையில் இந்த படம் தீபாவளியை முன்னிட்டு அக்டோபர் 31 ஆம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சமீபத்தில் ஒரு விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அர்ஜுன் விடாமுயற்சி திரைப்படம் டிசம்பரில் வெளியாகும் என அறிவித்துள்ளார்.

ஆனால் அனிருத் இப்போது அளித்திருக்கும் பேட்டி ஒன்றில் "விடாமுயற்சி படம் பொங்கலுக்கு வரும் என்று நினைக்கிறேன்." எனக் கூறியுள்ளார். ஏற்கனவே குட் பேட் அக்லி திரைப்படம் ஏப்ரல் மாதத்துக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.





# டிராகனி'ல் இணைந்தார் அனுபமா பரமேஸ்வரன்

டிராகனி'ல் இணைந்தார் அனுபமா பரமேஸ்வரன்

இயக்குநர் பிரதீப் ரங்கநாதன், 'லவ் டுடே' படம் மூலம் நடிகராகவும் பிரபலமானார். இவர், அடுத்து நடிக்கும் படத்தை 'ஓ மை கடவுளே' அஸ்வத் மாரிமுத்து இயக்கி வருகிறார். இந்தப் படத்துக்கு 'டிராகன்' என்று தலைப்பு வைத்துள்ளனர்.ஏஜிஎஸ் நிறுவனம் சார்பில் கல்பாத்தி அகோரம், கல்பாத்தி எஸ்.கணேஷ், கல்பாத்தி சுரேஷ் தயாரிக்கின்றனர்.

கிரியேட்டிவ் தயாரிப்பாளராக அர்ச்சனா கல்பாத்தி இருக்கிறார். இந்தப் படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.இந்தப் படத்தில் நாயகியாக அனுபமா பரமேஸ்வரன் இணைந்துள்ளார். மிஷ்கின், கே.எஸ்.ரவிகுமார் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். படப்பிடிப்பு பெரும்பாலும் முடிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையே, விக்னேஷ் சிவன் இயக்கும் 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' என்ற படத்திலும் பிரதீப் ரங்கநாதன் ஹீரோவாக நடித்து வருகிறார்.



# கவினுக்கு வந்த நிலை

தமிழ் சினிமாவின் வெற்றிகரமான இயக்குனராக உருவாகியுள்ள நெல்சன் சமீபத்தில் ஒரு திரைப்பட நிறுவனத்தை தொடங்கிய அதன் முதல் படமாக கவின் நடிப்பில் பிளடி பெக்கர் என்ற படத்தைத் தயாரித்துள்ளார்.

சிவபாலன் முத்துக்குமார் இயக்கத்தில், ஜென் மார்ட்டின் இசையில் உருவாகும் இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வருகின்றன. இந்தப் படம் தீபாவளிக்கு ரிலீஸ் ஆகலாம் என சொல்லப்படுகிறது.இந்த படம் தீபாவளியை முன்னிட்டு அக்டோபர் 31 ஆம் திகதி ரிலீஸாகவுள்ளது. இதையடுத்து படத்தின் ப்ரமோஷன் பணிகள் நடந்து வரும் நிலையில் கவின் அளித்த ஒரு நேர்காணலில் "இந்த படத்துக்காக பிச்சைக்காரன் கெட்டப் போட்டுக்கொண்டு ஒரு அக்காவிடம் சென்று 'சாப்பிட்டு ரெண்டு நாள் ஆச்சு' என சொல்லி பிச்சைக் கேட்டேன். அவர் 20 ரூபாய் போட்டார். அப்போதுதான் எனக்கு நம்பிக்கை வந்தது.

ஷூட்டிங் செல்லலாம்
என் ே றன் "
எனக் கூறி
யு ள்
ளார்.

# சூர்யாவுடன் போட்டி போடும் அசோக் செல்வன்

அசோக் செல்வன் ப்ளூ ஸ்டார் பட வெற்றியை தொடர்ந்து பொன் ஒன்று கண்டேன் படத்தில் நடித்திருந்தார். இப்படம் நேரடியாக தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டது. இதையடுத்து தற்போது நோஹா ஆபிரஹாம் இயக்கத்தில் கேங்க்ஸ் என்ற வெப் தொடரில் நடிக்கிறார். இத் தொடருக்கு செளந்தர்யா ரஜினிகாந்த் ஷோ ரன்னராக பணியாற்றுகிறார்.

இதனிடையே 'எமக்குத் தொழில் ரொமான்ஸ்' என்ற தலைப்பில் ஒரு படம் நடித்து முடித்துள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குநர் பாலாஜி கேசவன் இயக்கியுள்ளார். அஷோக் செல்வனுக்கு ஜோடியாக அவந்திகா மிஸ்ரா நடித்துள்ளார். திருமலை தயாரிக்கும் இப்படத்திற்கு நிவாஸ் கே பிரசன்னா இசையமைக்கிறார்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் கடந்த மார்ச்சில் வெளியானது. இந்த நிலையில் இப்படத்தின் ரிலீஸ் திகதி வெளியாகியுள்ளதாக தெரிகிறது. அதன்படி நவம்பர் 15ஆம் திகதி வெளியாகவுள்ளதாக புது போஸ்டர் சமூக வலைத்தளங்கலில் வெளியாகி வைரலாகி வருகிறது. சூர்யா நடிப்பில் சிறுத்தை சிவா இயக்கத்தில் உருவாகி வரும் கங்குவா படம் நவம்பர் 14 ஆம் திகதி வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.



# லப்பர் பந்து மீது வழக்கு



மலையாள நடிகை ஒருவர் ஹேமா கமிட்டி அறிக்கை வெளியானதை அடுத்து எம்.எல்.ஏ. மற்றும் நடிகர் முகேஷ், ஜெயசூர்யா, இடவேள பாபு உள்ளிட்ட 6 நபர்கள் மீது பாலியல் புகார் முன்வைத்தார். இதில் முகேஷ், இடைவேளை பாபு ஆகியோர் சிறப்பு புலனாய்வு குழு அதிகாரியால் கைது செய்யப்பட்டு பின்பு பிணையில் வெளியே இருக்கின்றனர்.

இந்த நிலையில் அந்த மலையாள நடிகை யூடியூப் சேனலில் தன்னைப் பற்றி அவதூறு கருத்துகள் கூறி வருவதாக நடிகைகள் சுவாசிகா, பீனா ஆண்டணி மற்றும் நடிகர் மனோஜ் ஆகியோர் மீது நெடும்பாசேரி காவல் துறையில் புகார் கொடுத்துள்ளார்.

இதனடிப்படையில் அவர்கள் மூன்று பேர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு தற்போது சிறப்பு புலனாய்வு குழுவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

பீனா ஆண்டணி மற்றும் மனோஜ் ஆகியோர் கணவர் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல் சுவாசிகா 2009ல் வெளியான வைகை படம் மூலம் தமிழில் கதாநாயகியாக அறிமுகமானார். பின்பு கோரிப்பாளையம், சாட்டை, அப்புச்சி கிராமம் உள்ளிட்ட படங்களை தொடர்ந்து சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற லப்பர் பந்து படத்தில் நடித்திருந்தார்.

# இட்லி கடையில் நித்யா மேனன்



ப வ ர் பாண்டி மற்றும் ராயன் ஆகிய படங்களை இயக்கிய தனுஷ் அடுத்து புதுமுகங்களை வைத்து 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்தின் ஷூட்டிங் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து தனுஷ் மீண்டும் இட்லி கடை என்ற படத்தை இயக்கி நடிக்கிறார். இந்தப் படத்தின் ஷூட்டிங் தேனி உள்ளிட்ட தனுஷின் சொந்த ஊர்ப் பகுதிகளில் தொடங்கி நடந்து வருகிறது.இந்தப் படத்தில் பல முன்னணி நடிகர்கள் நடித்து வருகின்றனர். படத்தில் ராஜ்கிரண், சத்யராஜ், நித்யா மேனன் மற்றும் அருண் விஜய் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடிக்க உள்ளதாக சொல்லப்படுகிறது. கடந்த 20 நாட்களுக்கும் மேலாக தேனி மற்றும் ராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் நடந்து வந்த நிலையில் இப்போது படக்குழு சென்னை திரும்பியது.தற்போது மீண்டும் பொள்ளாச்சியில் மீண்டும் ஷூட்டிங் தொடங்கியுள்ள நிலையில் நடிகை நித்யா மேனன் படக்குழுவோடு இணைந்துள்ளார். ஏற்கனவே இவர் தனுஷுடன் இணைந்து நடித்த திருச்சிற்றம்பலம் படத்துக்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருதைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அன்புக்கு முன்னால் எவ்வளவு கோடி சம்பாதித்தாலும் அது ஈடாகாது



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரான ஜெயம் ரவிக்கும் அவர் மனைவி ஆர்த்திக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இப்போது விவாகரத்துக்கு ரவி விண்ணப்பித்துள்ளார். ஆனால் ஆர்த்தி தரப்பில், தன்னிடம் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக ரவி இந்த முடிவை எடுத்துள்ளார் என சொல்லப்பட்டது.

இதையடுத்து ஜெயம் ரவி தரப்பில் இருந்து ஆர்த்தி மற்றும் அவரது அம்மா சு ஜா தா ஆகியோர் மீது சில குற்றச்சாட்டுகளை வைத்துள்ளதாக சொல்லப்படுகிறது. அதில் ஜெயம் ரவிக்கு என்று தனி வங்கிக் கணக்குக் கூட இல்லையாம். ஆர்த்தியோடு சேர்ந்து ஜாய்ண்ட் அக்கவுண்ட் இருந்துள்ளது. அதனால் ஜெயம் ரவி தன்னுடைய கிரெடிட் கார்ட் போன்றவற்றைப் பயன்படுத்தி பொருட்கள் வாங்கினால் உடனே ஆர்த்திக்கு மெஸேஜ் சென்றுவிடுவாம். அவர் உடனே போன் செய்து எங்கே இருக்கிறீர்கள்? என்ன ஷாப்பிங் செய்தீர்கள் எனக் கேட்பாராம். இதனால் அவருடைய தனிப்பட்ட சுதந்திரம் பறிபோய்விட்டதாகவும் என அவர் சொன்னதாக எல்லாம் சொல்லப்பட்டது.

இந்நிலையில் இப்போது மும்பைக்குக் குடியேறி பிரதர் படத்தின் ப்ரமோஷன் நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தி வருகிறார் ஜெயம் ரவி. ஒரு நேர்காணலில் பேசிய அவர் "மக்கள் எனக்கு சினிமாவில் ஒரு இடத்தைக் கொடுத்துள்ளார்கள். என்னிடம் பணம் இல்லை என்றால் நான் வருத்தப்பட மாட்டேன். பணம் இல்லை அவ்வளவுதான் என்று சென்றுவிடுவேன். கைகால் இருக்கு, திறமை இருக்கு. மக்கள் கொடுத்த அன்புக்கு முன்னால் எவ்வளவு கோடி சம்பாதித்தாலும் அது ஈடாகாது" எனக் கூறியுள்ளார்.

# 4 மணி நேரம் சிக்கித் தவித்த ஸ்ருதி ஹாசன்



தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் கவனம் செலுத்தி வரும் ஸ்ருதி ஹாசன், கடந்த ஆண்டு டிசம்பரில் வெளியான பிரபாஸின் சலார் படத்தில் நடித்திருந்தார். இப்படத்தை அடுத்து, 'தி ஐ' (The Eye), ஹாலிவுட் படத்தை கைவசம் வைத்துள்ளார். இப்போது ரஜினி லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகும் கூலி படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் ஸ்ருதி ஹாசன், விமான நிலையத்தில் தவிப்பதாக தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அந்த பதிவில், "நான் சாதாரணமாக குறை கூறும் நபர் அல்ல. ஆனால் இன்டிகோ நிறுவனத்தினர், குழப்பத்தில் அவர்களை அவர்களே விஞ்சிவிட்டார்கள். கடந்த நான்கு மணிநேரமாக எந்த தகவலும் இல்லாமல் நாங்கள் விமான நிலையத்தில் சிக்கித் தவிக்கிறோம். தயவுசெய்து உங்கள் பயணிகளுக்கு ஒரு சிறந்த வழியைக் கண்டு பிடிக்க முடியுமா?" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து இன்டிகோ நிறுவனம் சார்பில் அவருக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. அந்த பதிவில், "விமானம் தாமதமானதால் ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகிறோம். நீண்ட நேரம் காத்திருப்பது எவ்வளவு சிரமமாக இருக்கும் என்பதை நாங்கள் முழுமையாக புரிந்துகொள்கிறோம். மும்பையில் நிலவும் வானிலை காரணமாக விமானங்கள் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த காரணிகள் எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் விமான நிலையக் குழு வாடிக்கையாளர்களுக்கு உதவவும் அவர்களின் வசதியை உறுதிப்படுத்தவும் தங்களால் இயன்றதைச் செய்கிறது என்பதை நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்கிறோம்" என குறிப்பிட்டுள்ளனர்.

# ஜீவா – பிரியா பவானி சங்கர்

ஜீவாபிரியா பவானி சங்கர் நடித்திருக்கும் சயின்ஸ் பிக்ஷன் த்ரில்லர், 'பிளாக்'. பொடென்ஷியல் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் பாலசுப்ரமணி இயக்கி இருக்கிறார். இந்தப் படத்தில் நடித்திருக்கும் பிரியா பவானி சங்கரிடம் பேசினோம்.

"நிறைய த்ரில்லர் கதைகளைப் பார்த்திருப்போம். அதுல இருந்து வேறுபட்ட படமாக இது இருக்கும். இந்தப் படத்தை புது முயற்சின்னும் சொல்லலாம். 'டிமான்ட்டி காலனி' ஷூட்டிங் நடந்த அதே நேரத்துலதான் இந்தப் படத்தோட ஷூட்டிங்கும் நடந்தது.

படம் ஆரம்பிச்சு 5 நிமிஷத்துக்குப் பிறகு நானும் ஜீவாவும் தான் முழுவதும் வருவோம். கணவன் மனைவியா நடிச்சிருக்கோம். ஒரு இரவுல நாங்க ரெண்டு பேரும் எதிர்கொள்கிற பிரச்சினைதான் கதை.

**த்ரில்லர் கதைன்னா, இரவுல நடக்கிற மாதிரிதான் இருக்கும். இதுவும் அப்படித்தானா?**

அப்படித்தான். ஒரே இரவில் நடக்கும் கதை. ராத்திரி ஆரம்பிச்சு காலையில முடியறது மாதிரி திரைக்கதை இருக்கும். முழு கதையும் சென்னையில தான்நடக்குது. அதனால ஊர் அடங்கினதுக்குப் பிறகு ஷூட்டிங்கை தொடங்கி விடிஞ்சதும் முடிச்சிருவோம். இரவு ஷூட்டிங், புது அனுபவமா இருந்தது.

**ஜீவாவோட உங்களுக்கு இது 2 வது படம்**

முதல்ல 'களத்தில் சந்திப்போம்' படத்துல நடிச்சோம். அப்ப இருந்தே அவர் நண்பர். அவரை எல்லோருக்குமே பிடிக்கும். அவரை பிடிக்காதவங்க யாரும் இருக்க மாட்டாங்க. இந்தப் படத்துல மொத்த கதையும் எங்களைச் சுற்றி தான் நடக்கறதால, எங்களுக்குத் தான் காட்சிகள் அதிகம். அதனால ஜாலியா நடிச்சோம். நான் அறிமுகமானதே புது இயக்குநர் படத்துலதானே. 'மேயாத மான்' பண்ணும்போது ரத்னகுமார் அறிமுக இயக்குநர் தான். இன்றைக்கு புது இயக்குநர்கள் நிறைய திறமையோடும், சினிமா பற்றி நல்லா புரிஞ்சுகிட்டும் தெரிஞ்சுகிட்டும் வர்றாங்க. ஸ்கிரிப்டை நம்பிதான் நடிக்கப் போறோம். புது இயக்குநருக்கு ஏதாவது சிக்கல் இருக்குதுன்னா, மற்றவங்க அதை சரி பண்ணிடுவாங்க. அதனால புதியவர்கள் இயக்கத்துல நடிக்கிறதுல எந்த கஷ்டமும் இல்லை.



# இளமையை தக்க வைக்க இதை செய்யுங்கள்



நாம் அனைவருமே இளமையாகவே இருக்க ஆசைப்படுவோம்.. குறைந்த பட்சம் சருமத்தையாவது நன்றாக பராமரிக்க முயல்வோம்.. ஒருவரை பார்த்தால் அவர் எந்த வயது? என்று பார்த்தாலே யாருக்கும் தெரியக்கூடாது என நாம் அனைவருமே வெளியிலே போகும்போது ட்ரெஸ் பண்ணுவோம் அல்லவா?

அப்படி உங்களை பார்த்து யாரவது, பார்த்த மாதிரியே இருக்கிங்களே என சொன்னால், உங்கள் இதயத்தில் மகிழ்ச்சியை உணர்கிறீர்கள், இல்லையா? இதன் மூலம், உங்கள் தோலில் எப்போதும் வயது தொடர்பான பிரச்சினைகள் வராமல் தடுக்க வேண்டுமானால், இனிமேல் இவற்றை ஃபாலோ பண்ணுங்கள்...

ஆரோக்கியமான சருமத்தை எப்போதும் பராமரிக்க சன்ஸ்கிரீனைப் பயன்படுத்துவது அவசியம். சன்ஸ்கிரீன் சருமத்தில் உள்ள கரும்புள்ளிகளை நீக்குவது மட்டுமின்றி, சுருக்கங்கள் வராமல் தடுக்கவும், சரும பொலிவை அதிகரிக்கவும் உதவுகிறது. எனவே, வெளியே செல்லும் போது மறக்காமல் சன்ஸ்கிரீனைப் பயன்படுத்துங்கள். SPF 30க்கு மேல் சன்ஸ்கிரீனைப் பயன்படுத்துவதில் கவனமாக இருங்கள். இதேபோல், சன்ஸ்கிரீன் நீர் சார்ந்த மற்றும் கனிம அடிப்படையிலான இரண்டு வடிவங்களில் வருகிறது. உங்கள் சரும நிறத்துடன் பொருந்தக்கூடிய சன்ஸ்கிரீனைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிக அளவில் சாப்பிடுவது சருமத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க நல்லது. பழங்கள் மற்றும் காய்கறிகளை சாப்பிடுவது, குறிப்பாக வைட்டமின் சி நிறைந்தவை, இளமையான சருமத்தை பராமரிக்க உதவும். சுருக்கங்களைத் தடுப்பதிலும், சருமத்தின் பொலிவைத் தக்கவைப்பதிலும் இது மிகவும் நன்மை பயக்கும். எனவே, ஆரஞ்சு, அவகேடோ மற்றும் ப்ரோக்கோலி அனைத்தையும் உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

சருமத்தின் நெகிழ்ச்சித்தன்மையை பராமரிக்கவும், சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்திருக்கவும், இளமையாக இருக்கவும் நிறைய தண்ணீர் குடிப்பது அவசியம். சாதாரண நீரைக் குடிப்பது நல்லது. சர்க்கரை பானங்களை தவிர்ப்பது சரும ஆரோக்கியத்தையும் பராமரிக்க உதவும்.

தினமும் ஏதேனும் ஒரு எண்ணெயைக் கொண்டு சருமத்தை மசாஜ் செய்தால் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். இது சரும செல்களுக்கு போதுமான ஆக்ஸிஜனை வழங்குகிறது. இது நல்ல தோல் நிறத்தைப் பெறவும், சுருக்கங்களை நீக்கவும், சருமத்தை இளமையாக வைத்திருக்கவும் உதவுகிறது. புரதம் புரோட்டீன் நிறைந்த உணவுகளை தொடர்ந்து சாப்பிடுவது தோல் தசைகளை வலுப்படுத்த உதவும். இது சருமத்தில் ஏற்படும் சுருக்கங்களைத் தடுக்க உதவும். அதேபோல இளமையை பராமரிக்கவும் உதவுகிறது. ஈரப்பதமாக்குங்கள் சருமத்தை நன்கு ஈரப்பதத்துடன் வைத்திருப்பது அவசியம். இல்லையென்றால் சருமம் வறண்டு, சரும பிரச்சனைகள் ஏற்படும். இதனால் சருமம் முதிர்ந்த தோற்றத்தை ஏற்படுத்தும்.

நல்ல ஆரோக்கியத்திற்கும் நல்ல சருமத்திற்கும் தூக்கம் அவசியம். போதுமான தூக்கம் இல்லையென்றால், சருமத்தில் சுருக்கங்கள் மற்றும் கரும்புள்ளிகள் தோன்றும். எனவே, தூக்கம் முக்கியமானது.

**கவனிக்க வேண்டிய மற்ற விஷயங்கள்**

1. அதிக காரமான, புளிப்பு, காரம் மற்றும் இனிப்பு உணவுகளை சாப்பிடுவது சரும ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. இடையில் ஒரு நல்ல ஃபேஸ் பேக்கைப் பயன்படுத்துவது சருமத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

2. செரிமான பிரச்சினைகளை உண்டாக்கும் உணவுகளை முடிந்தவரை தவிர்க்கலாம்.

3. இவை சருமத்தை வறட்சியடையச் செய்யும். ரசாயனங்கள் கொண்ட தோல் பராமரிப்புப் பொருட்களை தவிர்க்கவும். முடிந்தவரை இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தி உங்கள் சருமத்தை கவனித்துக் கொள்ளுங்கள்.

# அன்பு வம்பாக மாறினால்!



**அன்பகத் தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று.**

அகத்தில் அன்பில்லா உயிர் வாழ்க்கை என்பது, கடினமான பாறையிலும் வெப்பத்திலும் மரம் துளிர்வதைப் போன்றது.

அன்பே உயிர்களின் அடித்தளம் எனலாம். ஆம் அன்பினாலே இந்த உலகம் இயங்குகிறது. இங்கு யாரோ ஒருவர் யாரின் மீதோ வைக்கும் அன்பு அல்லது யாரிடமோ இருந்துப் பெறும் அன்பு இயக்கம் சரிவர நடக்க உதவுகிறது.

அன்பு (Love) என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கும் நிலையாகும். பொதுவாக அன்பு வலுவாகவும், நேர்மறையான அனுபவமாகவும் அமைகிறது.

மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றை குறிக்கும் நல்லொழுக்கத்தை அன்பு கொடுக்கிறது. மேலும், மற்றொருவரின் நன்மைக்காக பரிபூரணமான அக்கறையும் தன்னலமற்ற விசுவாசம் கொண்ட ஒரு ஒழுக்கமான மனநிலைக்கு அன்பு நம்மை மாற்றுகிறது.

ஒருவர் தன் தாயின் மீது கொண்ட அன்புக்கும், தன் காதலியிடம் கொண்டுள்ள அன்புக்கும், ஒரு வகையான உணவின் மீது கொண்டுள்ள அன்புக்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதால் அன்பின் ஒருசில பரிமாணங்கள் மாறுபடுகின்றன.

ஒருவருடன் நெருக்கமாக இருக்கும் அன்பு என்பது ஒருவருடன் உடல் ரீதியான தொடர்புடன் இருப்பது அல்ல...

நெருக்கம் என்பது மனம் சார்ந்த விடயம். தன் மகிழ்ச்சியை யாரிடமும் பகிர்ந்து கொள்ள எல்லோராலும் முடியும்.

மனக்கசப்பு, மனக் காயங்களை நம்பிக்கை கொள்ளும் உறவிடமே வெளிப்படுத்திட முடியும். அந்த நம்பிக்கை ஒருவர் செலுத்தும் அன்பே முடிவு செய்கிறது.

இக்கட்டான சூழ்நிலையில் தேடும் நம்பிக்கையான அன்பு ஆறுதலாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒருவரை நம்புவது என்பது தனக்கு பாதுகாப்பாக தேடும் இடமாக கருதுகிறார்கள்.

தங்கள் ஆழ்ந்த அச்சங்கள், பாதுகாப்பின்மை மற்றும் பாதிப்புகளை ஒருவர் செவி கொடுத்து கேட்கும் சந்தர்ப்பத்தில் உலகின் மிகவும் மகிழ்ச்சியான நபராக தன்னை நினைத்துக் கொள்கிறார்கள். நிம்மதியும் அடைகிறார்கள்.

நம்பிக்கைக்கும் அன்பிற்கு ஏங்கிய உள்ளத்திற்கு நம்பிய நபரின் அன்பு ஏடாகூடமாக மாறும் வேளை சங்கடத்தில் தள்ளுகிறது.

உங்கள் இதயத்திற்கு ஒரு மென்மையான மலராக இருந்தவர்கள் அது முள்ளாய்க் குத்தும் வேளை தடுமாறி போகிறார்கள்.

தங்கள் உள் எண்ணங்கள், மற்றும் தங்கள் வலி, தங்கள் கடந்த காலம் பற்றிய இடத்தில் வெளிப்படையாக இருக்க முடிந்த அவர்களால் உங்களின் அன்பு இடையூறாக மாறும் வேளை மெதுவாக ஒதுங்கி நிற்க யோசிக்கிறார்கள். வாழ்க்கை என்று அழைக்கப்படும் இந்த அழகான பயணத்தில் சில சமயங்களில் கடினமான சூழ்நிலையில் அனைத்து உயர்வு தாழ்வுகளிலும் தனித்து செல்ல முற்படுகிறார்கள்.

ஒருவர் மீது செலுத்தும் அன்பு வம்பாகவும், தொல்லையாகவும் மாறிடும் வேளை அந்த அன்பே உபத்திரம் தரும் நிலைக்கு தள்ள "பிரச்சினை ஏன்" என்று விலக ஆரம்பிக்கிறார்கள்.

பெற்றோர் பிள்ளை உறவில் தன் பிள்ளைகள் மீதான அக்கறை, அன்பு அதிகம் என்று அவர்களில் சுயசிந்தனையைக் கட்டுப்படுத்துவது உடன் பிறப்பின் மீது அன்பு என்கிறப் பெயரில் கட்டுப்பாடுகளை திணிப்பது, அதேபோல் கணவன், மனைவி காதலர்கள் நடுவே வரும் அன்பின் தொல்லை

"எப்போதும் என்னை நினைக்க வேண்டும், நான் நினைக்கும் நேரம் கதைக்க வேண்டும்" என்று அவர்களின் மனநிலை வேலைப் பளு தெரியாமல் தொந்தரவு செய்வது, என்றோ காதல் மயக்கத்தில் சொல்லும் வார்த்தைகளை நடைமுறை படுத்த நிர்ப்பந்தம் செய்வது போன்ற பிடிவாதம் செய்யும் அன்பு வம்பினை உருவாக்குது மட்டுமல்லாது பிரிவையும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்பின் நெருக்கம் எப்போதும் உண்மையாக, பாதுகாப்பான, நம்பிக்கை கொடுக்கும் உணர்வைத் தருவதாக இருக்க வேண்டும்.

காரணம் உண்மையான நெருக்கம் இதயம் மற்றும் ஆன்மாவிலிருந்து வரவேண்டும். ஆன்மாவில் இருந்து வரும் அன்பானது எப்போதும் விட்டு செல்லத் தயங்கும்.

இன்று நம் இளையவர்கள் மத்தியில் குடும்பம் தரும் அன்பின் தாக்கம் அவர்களின் மனதை தொடவில்லை என்பதாலோ காரணம் தெரியா தற்கொலைகள்அதிகரித்துவருகின்றன.

அளவான அக்கறையான அன்பினால் எந்த ஒரு தவறான செயல்களும் நடைபெற மனம் இடம் கொடுக்காது.

அதனால் மற்றவர்கள் மீது அன்பு செலுத்தும் போது ஆளுமை செய்வது, அவர்களின் உரிமையைப் பறிப்பது, அடக்கி ஆள்வது, அன்பாலே தொந்தரவு செய்வது போன்ற அகங்காரம் மிக்க செயல்களை தவிர்த்து உண்மையான அக்கறையுடன் நம்பிக்கையுடன் அன்பு செலுத்துவோமாயின் நிச்சயம் அந்த அன்பு சுகமே.

அன்பு சுகமாக இருப்பதும் சுமையாக மாறுவதும் நாம் செலுத்தும் விதத்திலேயே உள்ளது.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# டென்மார்க் அரசின் உயர் கல்வி விருதை பெற்ற வஸந்த்

டென்மார்க் அரசினால் வழங்கப்படும் சிறந்த விரிவுரையாளருக்கான அதி உயர் கல்விக்கான தேசிய விருதை யாழ் பூர்வீகத்தைக் கொண்ட தமிழரான வஸந்த் செல்லத்துரை பெற்று சாதனை படைத்துள்ளார். டேனிஸ் மகாராணி மேரி எலிசபெத் ஐந்து லட்சம் டேனிஸ் குறோணர்களுக்கான பணப்பரிசையும், 2024 ன் சிறந்த விரிவுரையாளர் என்ற விருதினையும் வழங்கிக் கௌரவித்தார். இலங்கையை சேர்ந்த ஒரு தமிழர் முதல் தடவையாக இப்பரிசை பெற்றது சிறப்பம்சமாகும். மூன்று முழு நீள திரைப் படங்களில் தலைமைப் பாத்திரத்தில் நடித்து, படத் தொகுப்பு, இசையமைப்பு, வர்ணக்கலவை என்று பல துறைகளில் பணியாற்றிய அனுபவங்கள் வஸந்த் செல்லத்துரையின் பணியில் பெரும் துணை புரிந்தன. அந்த அனுபவங்கள் டிஜிற்றல் மூலமான கற்பித்தலில் வஸந்த் செல்லத்துரைக்கு பெரிதும் துணை புரிந்தன.



தனி மனிதராக இயக்கும் டிஜிற்றல் வகுப்பறைகளை உருவாக்க இவருடைய திரைத்துறை அனுபவங்கள் பெரும் துணை புரிந்துள்ளதாக தெரிவிக்கிறார்.



கல்வியானது வகுப்பறையில் கடைசி மாணவன் வரை எட்டித்தொடுகின்ற போதுதான் அதன் பயணம் வெற்றி பெறுகிறது. அந்த இலக்கை அடைய நவீன டிஜிற்றல் கருவிகளை எப்படி சிறப்புறப் பயன்படுத்துவதென்பதே இவரின் சாதனைகளில் மிக முக்கியமானதாகும்.

திரைக்கதை ஒன்றை கூர்மையாகவும், திறமையாகவும் எடுத்துரைப்பில் முனைவர் பட்டம் பெற்ற இவர், ஒரு திரைக்கதையை ரசிகர்கள் இலகுவில் புரியும்படி எடுத்துரைப்பது போலத்தான் வகுப்பறைக் கல்வியும் என்கிறார்.

அதனுடைய சிக்கலான பகுதிகளை பிரித்து எளிமைப்படுத்தி, திரைப்படம் போல புரிய வைப்பது எப்படி, அதற்காக உதவக்கூடிய டிஜிற்றலின் நுட்ப நுட்:பாந்திரங்கள் எவை.. அந்த வெற்றி வழியைக் கண்டு பிடிப்பதுதான் இவருடைய முக்கிய தேடல். அந்தத் தேடலின் வெற்றிதான் இன்றைய போட்டிச் சந்தை உலகில் ஒரு நாட்டை விரைவாக வெற்றிபெறச் செய்யும். கடும் போட்டி மிகு சர்வதேச சந்தையைக் கைப்பற்றுவதும், நாட்டின் உற்பத்திகளை உலகம் முழுவதும் எப்படி சிறந்த முறையில் சந்தைப்படுத்துவதும் எப்படியென்பது பல நாடுகளின் இடையறாத தேடுதலாக இருக்கிறது.. அந்தத் தேடலுக்கான சரியான பதிலை கண்டு பிடிப்பதும், அதன் வழி மாணவர்களுக்கு எடுத்துரைப்பதும் இவருடைய முதன்மை விரிவுரைப்பணியாகும். அந்தப் பணியை மிகச் சிறப்பாகவும், காத்திரமாகவும் செய்த வஸந்த் செல்லத்துரை டென்மார்க்கின் சிறந்த விரிவுரையாளர் விருதை வென்றுள்ளார்.



இவரது கட்டுரைகள் பல டென்மார்க்கிற்கு வெளியில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் போற்றப்படுகிறது. அவுஸ்திரேலியா மெல்பர்னில் உள்ள ஆர்.எம்.ஐ.ரி பல்கலைக்கழகத்தில் இவருடைய எடுத்துரைப்பு முறை பாராட்டப்பட்டு, அந்த கல்வி நிறுவனத்தால் விஞ்ஞானியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார். அதைத் தொடர்ந்து நியூசிலாந்து பல்கலைக்கழகத்திற்கும் நேரடியாக சென்று அந்த நுட்பத்தை விளக்கியுள்ளார்.

ஒரு விடயத்தை சரியாக எடுத்துரைப்போமானால் நான்கு சுவர்களைக் கொண்ட வகுப்பறையை தாண்டி டிஜிற்றல் நம்மை உலக அரங்கிற்கு கொண்டு செல்லும். அதன் வெற்றியே இன்றைய உலக மயமாக்கலுக்கான நவீன கற்கைத் தொழில் நுட்பமாகும் என்கிறார்.

மேலும் அரங்கில் கருத்துரைத்த வஸந்த் செல்லத்துரை டென்மார்க்கின் புகழ் பெற்ற எழுத்தளர் எச்.சி ஆனர்சனின் அழகற்ற அன்னம் என்ற கதையை உதாரணம் காட்டிப் பேசினார். அதந்தக் கதையில் அழகற்ற அன்னமொன்று சக பறவைகளால் ஒதுக்கப்பட்ட அன்னம் ஒன்று தன்னுடைய போராட்டத்தால் புதிய அழகு பெற்று அன்னங்களின் அரசி ஆக மாறுகிறது. அதுபோலத்தான் அகதிகளாக வந்த நாமும் நமது இடையறாத அறிவியல் போராட்டத்தால் இந்த இடம் நோக்கி உயர்ந்துள்ளோம். கல்வி அழகே அழகென்ற தமிழ் பழமொழிக்கு இணங்க இந்த அதி உயர் விருதை டென்மார்க் மகாராணியாரிடமிருந்து பெறுகிறேன். இது புலம் தமிழர்களின் வாழ்வில் ஒரு வெற்றி அடையாளம் என்றார்.

# கலைஞர்களுக்கு லங்கா புத்ர, தேசபந்து கௌரவம்









தேசிய ரீதியில் பல்துறை கலைஞர்களுக்கு லங்கா புத்ர, தேசபந்து கௌரவம்

சர்வதேச மனித உரிமை அமைப்பு பேரவை மற்றும்

சர்வதேச பௌத்த சம்மேளனம் ஆகியோரின் அனுசரணையுடன் கண்ணகி கலாலயம், ஐக்கிய சுயத்தொழில் வியாபாரிகள் சங்க கலை அரண்,

தேசிய கலை அரண் ஏற்பாட்டில் நாள் முழுவதுமாக கொழும்பு (BMICH) பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பல்துறை கலைஞர்கள் பலர் நாடளாவிய ரீதியில் கலை, ஊடகம் , சமூக சேவை பல பிரிவுகளுக்கு உட்பட்டு "வாழும் போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப்பொருளில் கௌரவிக்கப் பட்டனர்.









இந்நிகழ்வில் 500 பேர் தமது துறைசார் சாதனைகளுக்காக இரண்டு கட்டங்களாக பிரித்து காலை முதல் மாலை வரை கௌரவிப்பு நிகழ்வு மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.



இந்நிகழ்வை நடத்த சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரதீப் சார்ல்ஸ் தமது முழு பங்களிப்பையும் வழங்கி நிகழ்வு சிறப்பாக நடந்து முடிய பெரிதும் உறுதுணையாக இருந்தார்.

இந்நிகழ்வுக்கான பிரதம அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொழில் சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரியவும் தமிழ் கலைஞர்கள் மட்டுமன்றி ஏனைய கலைஞர்கள் தொடர்பாகவும் தாம் தொடர்ந்து அவதானம் செலுத்துவதாக குறிப்பிட்டிருந்தார்.

"கண்ணகி கலாலயம்" மற்றும் தேசிய கலை அரண் மிக குறுகிய நாட்களில் இவ்விழாவை திட்டமிட்டு நடத்தி முடித்திருந்தனர்.

முக்கியமாக விருதுகள் விலை போவதை தடுக்கவும் கலைஞர்களுக்கு தக்க நேரங்களில் கௌரவம் வழங்க வேண்டும் என்பதே "கண்ணகி கலாலயம்" தேசிய கலை அரண் கலைஞர்களின் கோரிக்கை.

"வாழும் போதே வாழ்த்துவோம்" தொடர்ந்து இவ்வாறான விழாக்களை செய்ய வேண்டும் சமூகத்தின் மத்தியிலும் கலைஞர்களைப் பற்றி விழிப்புணர்வு வரவேண்டும் என்பதே இதன் நோக்கம். தொடர்ந்தும் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளை செய்யவும் இவர்கள் திட்டங்களை முன் வைத்தனர்.

தகவல் A.K.இளங்கோ

# தொழிலுறவும், தொழில் கொள்கையும் தொடர்பான வதிவிட செயலமர்வு








ஜப்பானிய சர்வதேச தொழில்மன்றத்தின் (JILAF) ஆதரவுடன் (14.10.2024) இரண்டு நாள் வதிவிட செயலமர்வு கொழும்பு ஹோட்டல் ரேணுகா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தொழில் கொள்கையும், தொழிலுறவும் எனும் தலைப்பிலான இச்செயலமர்வின் முதல் நாளான அங்குரார்ப்பண வைபவத்தில் இ.தொ.கா. பிரதம ஆலோசகரும், சட்டத்தரணியுமான கா.மாரிமுத்து உரையாற்றினார். தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஜப்பானிய சர்வதேச தொழில்மன்றத்தின் ஆலோசகர் Kogikogure இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேசிய தொழிற்சங்க ஐக்கிய முன்னணி, ஸ்ரீ லங்கா இலங்கை தொழிலாளர் தேசிய சங்கம், இலங்கை முதலாளிமார் சம்மேளனம் தொழில் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த செயலமர்வில் 30 பங்குதாரர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கனடா கவிஞர் கபிலேஷுக்கு திருச்சியில் பாராட்டு








கனநாட்டிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு தனது குடும்பத்தாருடன் வருகை தந்திருந்த கவிஞர், இசையமைப்பாளர் , சமூக சேவகர் என பன்முகத்திறமை கொண்ட கபிலேஷுக்கு திருச்சிராப்பள்ளி பிரீஸ் ரெசிடென்சியில் நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது . இந்நிகழ்வு, நந்தவனம் இதழின் ஆலோசகர் ரொட்டேரியன் கே. சினிவாசன் தலைமையில் இளம் எழுத்தாளர் நித்தியாவின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. திருச்சி பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் ஹாஜி முகம்மது அபுபக்கர் சித்திக் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் விஜிபி நிறுவனங்களின் மேனாள் தலைவர் இரா. தங்கையா, மனநல ஆலோசகர் திருமதி இலட்சுமி நந்தகுமார் , ரொட்டேரியன் சசிகலா செல்வராஜ், ரொட்டேரியன் அனிதா டேவிட், ரொட்டேரியன் ராம், திரைப்பட இயக்குநர் கண்மணிராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கவிஞர் கபிலேஷ் ஏற்புரை வழங்கினார். இவர் பேசும்போது. நான் கனடா நாட்டில் 25 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். ஒரு கவிஞனாக பயணத்தைத் தொடங்கிய நான் இசையின் மீது கொண்ட ஆர்வத்தால் 50 பாடல்களுக்கு இசையமைத்ததோடு 5 திரைப்படங்களுக்கும் இசையமைத்துள்ளேன், தமிழ்நாட்டில்உள்ள திரைத்துறையைச் சார்ந்த இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான், இசைஞானி இளையராஜா , நடிகர் சரத்குமார், நடிகை ராதிகா, பாடகர் பால சுப்பிரமணியன் உட்பட பல திரைப்பிரபலங்களை கனடாவுக்கு அழைத்து பாராட்டு விழாவும், இசை நிகழ்ச்சியையும் நடத்தியிருக்கிறேன். ஆனால, எனக்கு முதன்முதலாக திருச்சியில் நந்தவனம் குழுவினர் பாராட்டு விழா நடத்தியது வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவமாக இருக்கிறது. பல்வேறு துறைகளில் ஆளுமை மிக்கவர்கள் நிரம்பியுள்ள இந்த சபையில் நான் பாராட்டுப்பெறுவதை எண்ணிப் பெருமைப்படுகிறேன் என்று மனம் நெகிழ்ந்து ஏற்புரையாற்றினார்.

முன்னதாக இனிய நந்தவனம் மாத இதழின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்க இனிய நந்தவனம் மக்கள் தொடர்பாளர் பா.தனபால் நன்றி கூறினார், தொழிலதிபர், அரிமா முகம்மது சஷி, முனைவர் ஜா. சலேத், எழுத்தாளர் டாயான மெர்சி உட்பட திருச்சியின் தமிழ் ஆர்வலர்கள் ரோட்டரி உறுப்பினர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மலையகத்தின் ஆவணக்காப்பாளர் கலாபூஷணம் சுப்பையா ராஜசேகரன்



நுவரெலியா மாவட்டத்தின் தலவாக்கலைப் பிரதேசத்தில் வட்டக்கொடையினை பிறப்பிடமாகக் கொண்டவரே கலாபூஷணம் சுப்பையா ராஜசேகரன். மலையகத்தின் ஆவணக்காப்பாளரான சுப்பையா ராஜசேகரன் பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், நாடக கலைஞர் எனப் பல ஆளுமைகளை தன்னகத்தே கொண்டவர். ராஜசேகரன் தனது ஆரம்பக் கல்வியினை ஹட்டன் கொன்வென்ட் பாடசாலையில் ஆரம்பித்ததுடன், அதனைத் தொடர்ந்து சில காலம் நு/ வட்டகொட தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றுள்ளார்.1960களுக்குப் பின்னர் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் இணைந்து உயர்தரம் வரையான தனது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். எழுத்துலகில் சுப்பையா ராஜசேகரன் என அறிமுகமாகயிருந்தாலும், வட்டகொட பிரதேச மக்களின் மத்தியில் சண்முகம் சேர் எனும் சுட்டுப்பெயரோடு வாழ்ந்து வருகின்றார்.

சுப்பையா ராஜசேகரன் எனும் பெயரிலேயே பத்திரிகைகளில் ஆரம்பகாலம் முதல் இன்று வரை பல கட்டுரைகளை எழுதி வருகின்றார். இவரது படைப்புகள் அனைத்துமே மலையக சமூகம் சார்ந்ததாகக் காணப்படுவதுடன், மலையகம் பற்றி பலராலும் அறியப்படாத பல உண்மை சம்பவங்களையும், வரலாறுகளையும் தனது எழுத்தின் வழியாக வெளியுலகத்திற்கு அறியச் செய்து வருகின்றார். ஆரம்பக் காலத்தில் இலங்கையின் குறிப்பிட்ட தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் ஒளிபரப்பப்பட்ட நேர்காணல் நிகழ்ச்சியில் இந்திய வம்சாவளிகள் யார்? என்ற வினா எழுப்பப்பட்ட பொழுது அதற்கு மலசலக் கூடத்தினை சுத்தம் செய்யவும் வாசற் கூட்டவும் வந்தவர்களே இந்திய வம்சாவளிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அளிக்கப்பட்ட பதில் ராஜசேகரனுக்கு பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியதாகவும், அதனைத் தொடர்ந்து தென்னிந்திய வம்சாவளிகளைப் பற்றிக் கேவலமாக எண்ணுபவர்களுக்கு மத்தியில் தனது மலையக மக்கள் வாழ்வியலின் பெருமைகளை உலகறியச் செய்ய வேண்டுமென எண்ணங்கொண்டு மலையகம் சார்ந்து தனது படைப்புகளை எழுத ஆரம்பித்துள்ளார். அதற்கு ஆயுதமாக ஆரம்பத்தில் முகநூலை பயன்படுத்தியதுடன், மலையகத்தின் பல வரலாற்று அம்சங்களை வெளியுலகிற்கு அடையாளப்படுத்தியும் வருகின்றார்.

மலையக மக்களின் வாழ்க்கை வரலாற்றினையும், மலையக சமூகம் சார்ந்த பிரச்சினைகளைவெளிப்படுத்துவதுமே இவரது இலக்காக அமைந்துள்ளது. குறிப்பாக தென்னிந்திய வம்சாவளிகளின் இலங்கை வருகை மற்றும் அவர்கள் மத்தியமலை நாட்டில் குடியமர்த்தப்பட்டு கோப்பி பயிரிடப்பட்ட காலம் முதற்கொண்டு தேயிலை பயிர்ச்செய்கையின் வரலாறு போன்ற பல விடயங்களை நூலாக இயற்றி வருகின்றார்.



**ராஜசேகரனின் படைப்புக்கள்:**

தனிமரம் (நாவல்), கங்காணி மற்றும் துரைமார் யுகம் நூல்,

கோப்பி யுகம் எனும் பெயரில் ஐந்து பாகங்களாக நூலொன்றினையும் இயற்றி வருகின்றார்.

1600 தொடக்கம் 1864 வரையான காலப் பகுதியில் கோப்பி பயிரிடப்பட்ட காலம் மற்றும் அதனுடைய அழிவு முதற்பாகமாகவும்,1864 தொடக்கம் 1900 க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் தேயிலைப் பயிர்ச்செய்கையின் ஆரம்பம் இரண்டாம் பாகமாகவும்,1900 தொடக்கம் 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த காலப் பகுதி மூன்றாம் பாகமாகவும்,1948க்கு பின்னர் மலையக மக்களிடமிருந்து குடியுரிமை பறிக்கப்பட்டமை நான்காம் பாகமாகவும், 1964க்கு பின்னரான காலம் முதல் 2010 வரையான காலம் ஐந்தாம் பாகமாகவும் இயற்றியுள்ள அவர், தனது விடாமுயற்சியின் மூலம் கோப்பி யுகம் நூலினை இயற்றி வருகின்றார்.



தனது வீட்டிலேயே சிறு நூலகமொன்றினையும் அமைத்துள்ள ராஜசேகரன், மலையகத்தின் மூத்த எழுத்தாளரான சி.வி வேலுப்பிள்ளையின் படைப்புகள் பலவற்றை சேகரித்து வைத்துள்ளார். சி.வி வேலுப்பிள்ளைப் பற்றி முழுமையான வரலாற்றினை அறிந்து வைத்துள்ளதுடன், அவரின் புகைப்படங்களை தன்வசம் ஆவணப்படுத்தி பாதுகாப்பாக வைத்துள்ளார். இவற்றுடன் ஆங்கில மொழியில் அமைந்துள்ள சி.வியின் பல உன்னதமான கவிதைகள் மற்றும் கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்ப்பும் செய்து வருகின்றார்.

மலையக சமூகத்தில் இஸ்லாமிய இனத்தினர் பெறும் முக்கியத்துவத்தினை "மலையக மக்களும் இஸ்லாமிய உறவுகளும்" என்னும் தலைப்பில் பத்திரிகையில் தொடர் கட்டுரையாகவும் எழுதியுள்ளார். அத்துடன் மலையகத்தவர்களுக்காக விதிக்கப்பட்டிருந்த சட்டங்களைப் பற்றியும் தொடர் கட்டுரை எழுதி வந்துள்ளார்.

மலையகத்திற்கேயுரிய பல நாட்டுப்புற அம்சங்களை, குறிப்பாக மலையக மக்களின் வாழ்வியல் முறைகளை பறைசாற்றக்கூடிய கூத்துக்கள், நாட்டார் கலைகள், பழமொழிகள், விடுகதைகள் என்பவற்றினைத் தேடி ஆராய்ந்து அவற்றினை நூலாகவும் தொகுத்து வருகின்றார். அத்துடன் மலையகம் சார்ந்த 4500 நாட்டார் பாடல்களையும் தொகுத்து வைத்துள்ளார். இவரது பிரதான நோக்கமே மலையகத்தின் பெருமைகளைப் பேசுகின்ற அம்சங்களை என்றுமே கைவிடாமல் பேணிப் பாதுகாத்தலே ஆகும். இவற்றுடன் மலையகத்தின் வரலாற்றினை வெளிப்படுத்தக் கூடிய வகையிலான கிட்டத்தட்ட 9000 புகைப்படங்களை சேகரித்து வைத்துள்ளார்.



ராஜசேகரனின் இத்தகைய சேவைகளுக்காக, 1993 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்ட சபை மூலம் தமிழ் சாகித்திய விருது வழங்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு மத்திய மாகாண தமிழ் சாகித்திய விருது, சமூக சேவைகள் துறைக்காக வழங்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் அரச விருதும் வழங்கப்பட்டுள்ளது. 2020ம் ஆண்டு இந்தோ சிலோன் நட்பு அமைப்பின் மூலமாக மலையகத்தின் சிறந்த ஆவணக்காப்பாளர் எனும் விருதினையும் பெற்றுள்ளார். இவற்றுடன் 2024 ஆகஸ்ட் மாதம் மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட உலகத்தமிழ் கலை இலக்கிய மாநாட்டில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மலையகத்தின் சிறந்த ஆவணக்காப்பாளரான சுப்பையா ராஜசேகரனுக்கு மலையகத்தின் விக்கிப்பீடியா என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவர் மலையகத் தமிழ் மக்களின் கலை, கலாசாரம், பாரம்பரிம், பண்பாடு என அம் மக்களின் வாழ்க்கை முறைச் சார்ந்த அனைத்து வரலாற்று தகவல்களையும் விரல் நுனியில் வைத்திருக்கின்றார்.

தனது இல்லத்தினையே நூலகமாக பராமரித்து வருகின்ற ராஜசேகரனிடம் மலையகம் பற்றி காணப்படாத நூல்கள் மற்றும் ஆவணங்கள் என்று எதுவுமில்லை. அத்துடன் மலையகத்தின் வரலாறு குறித்து முகநூலில் தனது கருத்துக்களை பதிவிடுகின்ற பொழுது Old is gold என குறிப்பிடுகின்ற வழக்கத்தினையும் இவரிடம் காணலாம். நிகழ்ந்து முடிந்த விடயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றார்களே!, இனி நிகழவிருக்கின்ற விடயங்களைப் பற்றி பேசுவாரில்லையே! எனப் பலரும் குறிப்பிடுவதுண்டு. எனினும் கடந்து வந்த விடயங்களை மீண்டும் நினைவு கூருதல் என்பது சிறந்த விடயமாகும். குறிப்பாக எமது மலையக சமூகம் கடந்து வந்த 200 வருட கால வரலாற்றுப் பாதையினை மீட்டிப் பார்த்தல் என்பது எளிதான விடயமல்ல. கலாபூஷணம் சுப்பையா ராஜசேகரன் மலையகத்தின் வரலாற்றுச் சார்ந்த ஆவணங்களை பாதுகாத்து வருவது பெருமைக்குரிய விடயமொன்றாகும். மலையக மக்களின் வாழ்வியலை உலகறியச் செய்து வருகின்ற இம் மகானின் சேவை தொடர வேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

சுப்ரமணியம் காயத்திரி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

தொடர்புகளுக்கு:
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
Whatsap: 0714901181





# நோபல் பரிசு: ஹான் காங் எனும் எதிரெழுத்து



உலகின் உயர் விருதான நோபல் பரிசு பலதுறைகளுக்கும் வழங்கப்படுவது போல் இலக்கியத்துக்கான நோபல் பரிசும் வழங்கப்படுகிறது.2024ஆம் வருடத்துக்கான விருதினை தென்கொரிய எழுத்தாளர் Han Kang வென்றிருக்கிறார்.மறுசொல் நோபல் பரிசாளர் ஹான் காங்கை வாழ்த்துகிறது.

'உலக இலக்கியம்'என்ற பெருஞ்சொல்லாடலின் கீழ் மேலாதிக்க சக்திகளின் கைகளில் இலக்கியத் தீர்மானம் அல்லது இலக்கிய இயங்கியல் மையப்புள்ளி இருக்கும் சூழலில் தென்கொரியாவை நோக்கி விருது நகர்ந்திருப்பது மிகுந்த அவதானிப்புக்குரியது.

இவ்வாண்டுக்கான விருது பரிந்துரைப்பில் பலரின் பெயர்கள் இருந்தபோதும் தென்கொரிய எழுத்தாளர் விருதாளராகி இருக்கிறார்.

தமிழில் ஹான் காங் பெரிதும் அறிமுகமாகவில்லை எனினும் அவரது 'மரக்கறி' நாவல் சமயவேல் தமிழில் மொழிபெயர்ப்பு எழுத்தாக 2020 வந்திருக்கிறது.

ஹான் காங் தென்கொரியாவில் க்வான்ஜூவில் பிறந்தவர்;இப்போது 53 வயது.துவெகரேரியன்,ஹ்யூமன் எக்ஸ்ட், வைட்புக், ஐ டு நொட் பிட் பெயாவெல்,கிரீக் லெசன்ஸ், வி டு நொட் போன்றவை இவரது எழுத்துக்கள்; ஆழ்ந்த இலக்கியங்களை வாசகரருகே கொண்டு சேர்ப்பதில் இவருடைய எழுத்துக்கு வலிமை இருக்கிறது.

இவ்வாண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசுப் பட்டியலில் சீனப் பெண் எழுத்தாளுமை Can xue, அவுஸ்திரேலியா ஆளுமை yorald murnane,மற்றும் Haruki murkamy,ஆகியோரின் பெயர்கள் இருந்தன.கடந்த ஆண்டு நோபல் பரிசு நோர்வேயைச் சேர்ந்த ஜான் ஃபோஸ் வசமாகியிருந்தது. இம்முறை அதனை ஹான் காங் தன்வசமாக்கியிருக்கிறார். இலக்கியத்துக்கான அதியுயர் விருது ஆரோக்கியமான உலக இலக்கியத்தை அல்லது இலக்கிய உலகை உருவாக்க வேண்டுமென்பது எதிர்பார்ப்பேயாகும்.




# கே.கணேஷ் ஒரு சகாப்தம்



கே.கணேஷ் என அறியப்பட்ட இலக்கிய ஆளுமையின் நூற்றாண்டு நினைவு கொள்ளப்படுகிறது.

இலங்கை இலக்கியப்புலம் காலத்தால் மறக்க முடியாத இலக்கிய மனிதர்களை வரலாற்றில் தந்திருக்கிறது. அத்தகையோரில் குறிப்பிடும்படியானவர் கே.கணேஷ்.

இலங்கையில் செறிவடைந்த முற்போக்கு இயக்கத்தின் முன்னோடி ;இந்திய முற்போக்கு இயக்கத்தின் பங்காளி; இன்னொரு புறம் உலகளவில் முற்போக்கு இயக்கச் சாதனையாளர்களோடு கை கோத்திருந்தவர் கணேஷ்.இந்தப் பின்புலம் கணேஷை ஆளுமையாளராக நிமிர்த்தியது.

இந்திய அறிஞர்களான கே.ஏ.அப்பாஸ், முல்க் ராஜ் ஆனந்த், ஆகியோருடனான தொடர்பும், ரஷ்ய, உக்ரேனில் அறிஞர் தொடர்பும் இத்தகைய ஆளுமைச் செறிவை இவருக்குத் தந்தது.

கே.கணேஷ் படைப்பு வழியில் இரு தளங்களில் இயங்கினார். சுய படைப்பிலக்கியவாதியாகவும்,மொழிபெயர்ப்பாளராகவும் இயங்கிய இவரது இலக்கிய வெளி வீச்சமானது.

கவிதை,சிறுகதை, கட்டுரையென எழுத்துத் தளத்தில் இயங்கிய கணேஷின் எழுத்துக்கள் நூலுருவாகுமெனின் புதிய வாசிப்புக்கும், ஆய்வுக்கும் வழியமையும்.

மொழிபெயர்ப்பில் ஆழவேரூன்றி அகல எழுந்தவர் கே.கணேஷ்.

லூசுன் முதல் முல்க் ராஜ் ஆனந்த் என இருபத்து மூன்று கனதியான மொழிபெயர்ப்பு பனுவல்களைத் தந்திருக்கிறார்.

இவை தமிழ் இலக்கியப்புலத்தின் சிறந்த அறுவடைகளெனலாம்.

இது கே.கணேஷ் நூற்றாண்டு(19242024) அவர் குறித்த விரிவான தேடலும், ஆய்வுகளும்,கதையாடல்களும் மேலெழ வேண்டியது காலத்தின் தேவை.

அன்னாரின் நூற்றாண்டு நினைவுகளில் இத்தகைய பணிகள் நிகழ்ந்தாக வேண்டும்.

## Bigg Boss: முரண்களின் வெல்லுமை




தொலைக்காட்சி அலைவரிசைகள் வரிசை போட்டு பல்வகை போட்டிகளை காட்சிப்படுத்தி வருகிறது. தமிழில் தென்னிந்திய அலைவரிசைகள் அதிகம் புதிய புதிய நிகழ்ச்சிகளை நடத்துகிறது.இவற்றுள் Bigg Boss குறிப்பிடும்படியான அவதானம் பெறுகிறது.

இதற்கான காத்திருப்பும் பொழுதுபோக்கு வெளியில் அதிகம். தொடர். ஏழு வரை கமல்ஹாசன் தொகுத்தளித்தார்.எட்டாவது தொடர் விஜய் சேதுபதி வசமானது. பதினெட்டு போட்டியாளர்கள் 'வீட்டுக்குள் விளையாடுகிறார்கள்'.

இந்நிகழ்ச்சி பிரமாண்டமானது. தொடரில் வெல்லப்போவது யாரென்ற எதிர்பார்ப்பு நூற்றியாறு நாள் நீளமுடையது.

நேயர்களின் வாக்களிப்பு பெறுமானத்தையொட்டிய இப்போட்டி ஏற்பாட்டுப் பிரமாண்டங்களைத் தாண்டி 'டாஸ்க்'களை வெற்றிகரமாக நிறைவு செய்யும் விளையாட்டு வகை இது.

வாழ்க்கை அனுபவம்,குழு ஒருமைப்பாடு,திறன் வெளிப்பாடு என்பவற்றின் ஊடாக கட்டமைக்கப்படுகிறது. உண்மையில் வாழ்க்கை பற்றிய கருத்தியல், கல்வி,சமூக அரசியல்,பண்பாடு,வாழ்வுக்கான முன்மாதிரியற்ற நிலையிலான பண்புகளை பிக்பொஸ் கொண்டிருப்பதாக உணரமுடிகிறது.

இதுவொரு சின்னத்தனமான முரண்களின் சமர் என்பதாகவே கருத முடிகிறது.

# மூத்தம்மா



தமிழ்க்கவிதை வெளியில் மற்றொரு அனுபவத் தொடராக நீள் கவிதைகள் இடம் கொள்கின்றன. முஸ்லிம் சமூக வாழ்வியலை, உறவு நிலை நினைவுகளை, மீட்டுவதாக கனடாவிலிருந்து இனியன் இசாறுதீனின் "மூத்தம்மா என் முழு வசந்தம் "நீள் கவிதை அமைகிறது.

தமிழில் நவீன கவிதை வெளியை அப்துல்காதர் லெப்பை "செய்னம்பு நாச்சியார் மான்மியம் "எழுதித் தொடங்கினார்.அதன் தொடர்ச்சியாக இன்னும் கவி வெளி நீள்கிறது.

இனி இசாறுதீனின் 'மூத்தம்மா என் முழு வசந்தம்' நினைவுகளை மறு சொல் வாசகருக்குப் பரிமாறுகிறோம்...

அ.

என் உம்மாவின் உம்மா
எனக்கு மூத்தம்மா
அரிச்சுவடி
படித்தாளோ என்னவோ
செல்வாக்கிலும்
சொல்வாக்கிலும் எங்களை
சொக்கவைத்த செல்லப்பாட்டி
அவ்வைப்பிராட்டி மாதிரி
ஓர் அருந்தமிழ்ப்பாட்டி
கண்ணுக்கும் காதுக்கும்
பேரழகி இலைகளைக்
காயப்படுத்தாத மலர்மாதிரி
வறுமையிலும் செம்மையாய்
வாழ்ந்து காட்டிய மூதாட்டி
முகைதீன் பிச்சை
முகம் பதித்த முத்திரை
பேறுபெற்ற ‘பொன்னிம்மா’
பேருக்கேற்ற பவளமுத்து
தோளில் சுருக்குப்பை
கையில் ஊன்றுகோல்
தலையில் முடிவெள்ளை
தித்திக்கும் கவியரசி
அன்பறத்திலும்
அறிவறத்திலும்
முறைபோகிய ‘அந்த’
மூதாட்டிக்கு
சமூகம் வழங்கிய பெயர்
பெருமாட்டி
கழுத்திலிருந்து பாதம் வரை
வெள்ளைச்சேலை
உடுத்திய கிழவி
கையுறை அணிந்தால்
கரம் நிறம்கூடத் தெரியாது
பள்ளிக்கே
போகாதவள் அறிந்த
பாஷைகளோ மிக அதிகம்
ஆடுகோழி அத்தனையும்
அவள் சொல்படிதான்
நடக்கும்
பேரன்பேத்திகளைக் கண்டால்
புதிதாய்ப் பிறப்பெடுத்தவள்
மாதிரி
புளகித்துப்போவாள்
அந்த மூதாட்டி
என் செல்லக் குறும்பில்
சினம் கொள்ளா பாட்டி
என் சின்னச் சின்ன
சரசங்களில்
இதம் காண்பாள்
ஏகாந்தத்தின்
இனிமையில்
சிறகடிப்பாள்
செல்வத்தில் செழித்த
சேனையூர்ச் சீமாட்டி
என் நல்வாழ்வின் நதிமூலம்
எளிமையில் கொழித்த
பெரும்சிகரம்
என்ன தவம் செய்தேனோ
இன்னமும் எனக்குள்
அவளைத்தான் தரிசிக்கிறேன்
மூத்து முதிர்ந்த
மூதாட்டி என்பவள்
எல்லோர்க்கும் ஒரு முதுசம்
எனக்கோ வாழ்வின் வசந்தம்
பறவைகளின்
பாஷையறிந்த பெருமாட்டி
அவளே எனக்கு தாய்மொழி
ஈந்த தமிழாசான்
அவள் மடி என்
முதலாவது பள்ளிக்கூடம்
அவளது வெள்ளைச்சேலை
எனக்கு பள்ளிச்சீருடை
அன்றாடம் நடத்தினாள்
எனக்கொரு
திண்ணைப்பள்ளிக் கூடம்
‘கேட்டால் பிச்சை
கொடுத்தால் தர்மம்’
என்பாள் கிழவி
அவள்
பஞ்சதந்திரக் கதைகள்
சொன்னதில்லை
பஞ்சத்தைச் சமாளிக்கும்
கதைகளைத்தான்
சொல்லித் தந்தாள்
மூத்தோர்சபையில்
முழங்கால்மேல்
கால் போட்டுக்கொண்டு
யார் இருக்கக் கண்டாலும்
நான் நினைத்துக்கொள்வேன்
‘அன்போடு கண்டிக்க
அவர்களுக்கொரு பாட்டி
இல்லையோ?’ என்று
நான் வெளியூர்
போகும்வேளை
என்னை வழியனுப்பி
வைப்பதில் தெரிந்தது
என்மேல் கொண்ட
அவளது அக்கறையும்
அளவற்ற பிரார்த்தனையும்
நான் இருமும்போது கூட
அவளது தொண்டைதான்
அடைத்துக்கொள்ளும்
பருகும்போது நீர்
‘புரையேறுவது’ மாதிரி
எப்போதாவது என் வாப்பா
என்னை அடிக்கத் துரத்தினால்
என் பாட்டிதான்
எனக்குப் பாதுகாப்புவலயம்
அவள் தந்த கசாயம்
அப்போது கசந்தது
ஏனோ அது
இப்போது இனிக்கிறது?
அவளது கைவைத்தியத்தால்
எங்கள் வீட்டுப்பக்கம்
வராமல் போனது
பல தொற்றுநோய்கள்
விடிகாலை பாட்டி
வெற்றிலைபாக்கை
இடித்தால்
என் தூக்கம்
குழம்பிவிடும்
ஆனால் அதுதான்
எனக்குப் பள்ளியெழுச்சி

**(மூத்தம்மா வருவாள்)**

# கறுப்பு காந்தி நெல்சன்....



ஆபிரிக்காவில் இந்திய வம்சாவளியினர் அதிகமாக வசித்தது தென்னாபிரிக்காவில்தான். தென்னாபிரிக்க இந்தியர்கள் தமிழ், தெலுங்கு, ஹிந்தி என்று பல மொழிகள் பேசினாலும் ஆங்கிலம்தான் அவர்களின் பிரதான தொடர்பு மொழியாக இருந்தது. தெற்காசியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்களும் இந்தியர்கள் என்ற பொதுப்பெயருடனேயே அழைக்கப்பட்டனர். இந்தியர்களை போலவே ஆசியர்கள் சிலரும் கூலிகளாக ஆபிரிக்காவினுள் புகுந்தனர். ஆபிரிக்காவின் பிரதமராக ஜேன் கிறிஸ்டியன் ஸ்மட்ஸ் என்பவரே பதவியில் அமர்ந்து இந்தியர்களையும் ஆபிரிக்க கறுப்பினர்களையும் அடிமைகளாக நடாத்திக் கொண்டிருந்தார். தென்னாபிரிக்கா வெள்ளையர்களின் பூமி என்று வாதிட்டு பூர்வீக ஆபிரிக்க கறுப்பர்களை புறக்கணித்த பிரதமர் ஸ்மட்ஸினை மண்டேலா வெறுப்புடன் நோக்கினான். ஸ்மட்ஸின் கருத்துக்களை மண்டேலா கடுமையாக எதிர்த்தான். ஸ்மட்ஸ் கொண்டுவந்த புதிய சட்டத்தினால் இந்தியர்கள் ஆபிரிக்காவில் நினைத்த பகுதிகளில் சுதந்திரமாக தொழில் நடத்த முடியாது. விருப்பப்பட்ட பகுதிகளில் நிலம் வாங்கிவிட முடியாது. அவர்களுக்கென்று தனிப்பகுதி ஒதுக்கித் தரப்படும். (ஆபிரிக்கர்களுக்கு சேரிகள் ஒதுக்கப்பட்டது போல) அவற்றில்தான் இந்தியர்கள் வசிக்கவும் உழைக்கவும் முடியும் என்று அதில் கூறப்பட்டது.

இந்தியர்கள் இச் சட்டத்தினால் பொங்கி எழுந்தனர். டிரான்ஸ்வால் இந்தியன் காங்கிரஸ் எனும் அமைப்பு அரசாங்கத்தை எதிர்க்கத் தொடங்கியது. அமைப்பின் தலைவர் டாக்டர் டாடூ இந்தியர்களை திரட்டத் தொடங்கினார். நேட்டல் இந்திய காங்கிரஸ் அமைப்பின் தலைவர் ஜி.எம். நாயக்கரும் போராட்டத்தில் இணைந்து கொண்டார்.

அடுத்த இரு ஆண்டுகளுக்கு இந்தியர்கள் இப் போராட்டத்தை கைவிடவில்லை. கட்சி உறுப்பினர்கள், இளைஞர்கள், அனுதாபிகள் என்று தொடங்கிய போராட்டத்தில் பெண்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் என்று பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டு வலுவேற்றினர். டாடூவும் நாயக்கரும் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தை ஆதரித்த ஏராளமான இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இந்தியர்களின் போராட்டத்தை தார்மீக ரீதியில் ஆதரித்தது. தலைவர் ஜுமா பொதுக்கூட்டங்களில் இந்தியர்களின் நிலைப்பாட்டை வெளிப்படையாக ஆதரித்தார். மண்டேலாவும் இளைஞர் அணியில் இருந்த மற்ற நண்பர்களும் போராட்டத்தின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியையும் வியப்புடன் கண்காணித்தனர். மண்டேலா இந்தப் போராட்டத்தால் தனிப்பட்ட முறையில் ஈர்க்கப்பட்டான். இப் போராட்டம் வெற்றியடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் தன் இந்திய நண்பர்களுக்கு ஆதரவளித்தான்.

போராட்டம், புரட்சி என்றிருந்த மண்டேலாவின் மனதில் எவிலினின் நினைவுகள் வந்து போய்க் கொண்டே இருந்தன. எவிலின் அமைதியான அழகுப் பதுமை. அவள் குழந்தையாக இருக்கும் போதே தந்தையை இழந்து பன்னிரெண்டாவது வயதில் தாயையும் இழந்து சிசுலுவின் அரவணைப்பிலேயே வளர்ந்து வந்தவள். சிசுலுவும் தாய் தந்தை இல்லாத தங்கையை தந்தையின் ஸ்தானத்தில் நின்று வளர்த்து ஆளாக்கினான். அண்ணனும் தங்கையும் பாசத்தில் ஒருவரையொருவர் மிஞ்சிக்கொண்டனர். இவர்களின் பாசப் பிணைப்பைக் கண்ட மண்டேலா வியந்து போனான்.

அப் பாவையின் பதுமை முகம் அவனை பந்தாடியது. அவன் உள்ளத்தை துண்டாடியது. ஆம் மண்டேலாவின் மனதில் காதல் எனும் விதை வேர் விடத் தொடங்கி இருந்தது. எவிலினின் நினைவுகள் அவன் மனதை சுகமாக வருடிவிட்டது. அவ் ஆண்மகனின் ஆக்ரோஷமான உள்ளத்தையும் அவளின் மென்மையான உணர்வுகள் திருடிவிட்டது. அவளுடன் ஆவலுடன் பழகிய நாட்களையும் பேசிய வார்த்தைகளையும் மீட்டிப் பார்ப்பது அவன் மனதுக்கு இதமளித்தது. புரட்சிப் போராட்டங்களுக்கு மத்தியில் அவன் மனம் வரட்சிப் பாதையில் சோர்வடையாமல் இருக்க எவிலினின் நினைவுகள் நீரோட்டமாக செழிப்பூட்டியது. அவன் உள்ளத்தை கொஞ்சம் களிப்பூட்டியது.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# ராஜகுமாரி படத்தில் எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்த இலங்கை திரைப்பட நடிகை தவமணி தேவி

கே. தவமணி தேவி இலங்கைத் திரைப்பட நடிகை. 1940களில் பல தமிழ்த் திரைப்படங்களில் நடித்தவர். யாழ்ப்பாணத்தில் இணுவிலில் பிறந்து கொழும்பில் வளர்ந்தவர். இவரின் தந்தை கார்த்திகேசு, ஒரு பிரபலமான வழக்கறிஞர். பெற்றோரின் விருப்பப்படி இவர் சிறு வயதிலேயே சென்னைக்குக் குடிபெயர்ந்தார்.

சென்னையில் இருக்கும் போது அவர் பரத நாட்டியம், கர்நாடக இசை முறையாகப் பயின்றார். இதனால் இவருக்கு தமிழ்த் திரைப்படங்களில் பாடி நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 1937 இல் தனது 15வது வயதில் திரைப்படத்துறையில் நுழைந்தார். அந்தக் கால கட்டத்திலேயே காற் சட்டையுடன் துணிச்சலாக நடிக்க வந்த பெண்மணி.

இவரது முதல் படம் சதி அகல்யா மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் 1937 ஆம் ஆண்டில் வெளிவந்தது. முதல் படத்திலேயே அகலிகை வேடத்தில் கதாநாயகியாக அறிமுகமானார். படமும் சிறந்த வரவேற்பைப் பெற்றது. இவர் நடித்து 1941 இல் வெளிவந்த வனமோகினியும் பெரும் வெற்றி பெற்றது. த ஜங்கிள் பிரின்செசு என்ற ஹாலிவுட் திரைப்படத்தைத் தழுவி எடுக்கப்பட்ட இத்திரைப்படத்தில் டொரத்தி லமூர் நடித்த வேடத்தில் தவமணி தேவி நடித்தார். மூலப் படத்தில் லமூர் உடுத்திய அவாய் நாட்டுப் பாணியிலான சாரத்தையே

**இவரது முதல் படம் சதி அகல்யா மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் 1937 ஆம் ஆண்டில் வெளிவந்தது. முதல் படத்திலேயே அகலிகை வேடத்தில் கதாநாயகியாக அறிமுகமானார்.**



தவமணி தேவியும் உடுத்தி நடித்திருந்தார். இப்படத்தில் இடம்பெற்ற 10 பாடல்களில் பெரும்பாலானவற்றை இவரே பாடியிருந்தார். இவரது பாடல் திறமையால் இவர் "சிங்களத் துக் குயில்" என அழைக்கப்பட்டார். 1941 இல் வெளியான வேதவதி (சீதா ஜனனம்) என்ற படத்தில் சீதை பாத்திரத்தில் கதாநாயகியாக நடித்தார். 1946 ஆம் ஆண்டில் வெளிவந்த வித்யாபதி இவரது மற்றொரு வெற்றிப் படம். இப்படத்தில் தேவதாசி மோகனாம்பாள் என்ற வேடத்தில் தவமணி தேவி நடித்திருந்தார்.

இந்தத் திரைப்படத்தில் மேற்கத்திய பாணியிலான இவரது நடனங்களும் பாடல்களும் இடம்பெற்றிருந்தன. கலைஞர் மு. கருணாநிதியின் வசனத்தில் 1947 இல் வெளிவந்த ராஜகுமாரி திரைப்படத்தில் எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்தார். இது இவருக்கு பெரும் புகழையும் வெற்றியையும் ஈட்டிக் கொடுத்தது. தவமணி தேவிக்கு ராஜகுமாரி திரைப்படத்தில் நாயகனை மயக்கும் ராணி வேடம்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

இவரின் மெய்ப் பாதுகாவலராக சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர் நடித்திருந்தார்.

தவமணி தேவி 1962 ஆம் ஆண்டில் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த கோடிலிங்க சாஸ்திரி என்பவரைக் காதலித்து மணந்து கொண்டார். திருமணத்தின் பின்னர் திரைப்படத் துறையை விட்டு முற்றாக விலகி ஆன்மீகத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். இராமேஸ்வரத்தில் தனது இறுதிக் காலத்தைக் கழித்த அவர் தனது 76வது வயதில் 2001 பெப்ரவரி 10 இல் காலமானார்.

இவர் நடித்த திரைப்படங்கள் சதி அகல்யா (1937), சகுந்தலை (1940), சியாம் சுந்தர் (1940), வேதவதி (சீதா ஜனனம்) (1941), வனமோகினி (1941), கிருஷ்ணகுமார் (1941), பக்த காளத்தி (1945), ஆரவல்லி சூரவல்லி (1946), வித்யாபதி (1946), ராஜகுமாரி (1947), நாட்டிய ராணி (1949)

# சிங்களத் திரைப்படத் தயாரிப்பில் டிஸ்கோ ராஜா பவுண்டேஷன்












டிஸ்கோ ராஜா பவுண்டேஷன் சிங்களத் திரைப்படமொன்றை தயாரிக்கவுள்ளது. அதில் இலங்கையிலுள்ள தமிழ் சினிமா, நாடக கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளதாக இந்தத் திரைப்படத்தை தயாரிக்கவுள்ள டிஸ்கோ ராஜா பவுண்டேஷனின் ஸ்தாபகரும் தலைவருமான டிஸ்கோ ராஜா தெரிவித்தார். அதற்கான பூஜை கடந்த சனிக்கிழமை கொழும்பு, பொரளையிலுள்ள ருகுணுகலா மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் தமிழ், சிங்கள கலைஞர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# அவரகொட்டுவ அறநெறி வாணி விழாவில் நமக்காக நாம் அமைப்பு







வத்தளை, அவரகொட்டுவ ஸ்ரீ சர்வ சித்தி விநாயகர் ஆலய அறநெறி பாடசாலையில் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் அனுசரணையில் வாணி விழா சிறப்பு பூஜை நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் நமக்காக நாம் அமைப்பினர் கலந்து கொண்டனர். நமக்காக நாம் அமைப்பின் தலைவர் ச.கணேசன், செயலாளர் சொ.மகேந்திரன் ஜேபி, இணைத்தலைவர் புஸ்பராஜ், பொருளாளர் கலையழகன், தலைமை ஒருங்கிணைப்பாளர் இரா.கமலேஸ்வரன், அமைப்புச் செயலாளர் உதயகுமார், இணை ஒருங்கிணைப்பாளர் தேசபந்து அ. கிஷோகுமார் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள். இவர்கள் அறநெறி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஒரு தொகுதி புத்தகப்பைகளை அன்பளிப்பாக வழங்கியதுடன், போட்டிகளில் பங்குபற்றிய மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.